# நீலப்படம்

லக்ஷ்மி சரவணக்குமார்



# நீலப்படம்

லஷ்மி சரவணகுமார்

Neelapadam – A Novel in Tamil by Lakshmi Saravanakumar

Copyright © 2020 by Lakshmi Saravanakumar

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Email: lachudreams@gmail.com

சாருநிவேதிதாவுக்கு.

முன்னுரை

ஒவ்வொரு நாவலை எழுதுவதற்கும் முன்பாக வாழ்வைக் குறித்த சுயபரிசோதனைகளை செய்து கொள்வது வழக்கம். இதை இப்போது எழுதத்தான் வேண்டுமா என்கிற தயக்கங்களுக்கும் கேள்விகளுக்கும் உரிய பதில்கள் கிடைக்கும் வரை ஒரு நாவலை நான் எழுதத் துவங்குவதில்லை. நீலப்படம் ஒரு நடிகையின் கதையாக எழுததுவதற்காக துவங்கப்பட்டதல்ல, குழந்தைகளின் மீதான வன்முறைகளை அதன் வலிகளைத்தான் எழுதத் துவங்கினேன். ஆனந்தி, ஜோபி, பாபு எல்லோரும் தற்செயலாக அந்தக் கதையில் வந்து இணைந்து கொண்டவர்கள் அவ்வளவே. சிறுவயதில் பாலியல் வல்லுறுவுகளுக்கு உள்ளாகி குரூரமான பால்யத்தைக் கடந்து வந்த ஆனந்தி அந்த வலிகளிலிருந்து கடந்து வந்த தன்னைப் போலவே இன்னொரு குழந்தையைப் பார்க்கும்போது என்னவாகிறாள் என்கிற கதைக்கு நான் சேர்த்துக்கொண்ட கிளைக்கதைகள்தான் அவள் நடிகையாக பரிணமித்ததும் அதில் வெவ்வேறு மனிதர்கள் வந்துபோனதும்.

இப்போது நிதானமாக யோசிக்கையில் என் எல்லா நாவல்களிலும் தொந்தரவுக்குள்ளான பால்யத்தின் வலிகள் தொடர்ந்து வந்தபடியே இருக்கிறது. இதை திட்டமிட்டுத்தான் செய்கிறேனா என்றால் நிச்சயமாக இல்லை. தொடர்ந்து அதை எழுதுவதன் வழியாய் கடந்த காலத்தின் துயர்மிக்க நினைவுகளிலிருந்து துண்டித்துக் கொள்ள விரும்புகிறேன். எனது மற்றநாவல்கள் கொண்டாடப்பட்ட அளவிற்கு இந்த நாவல் கொண்டாடப்படவில்லை என்கிற வருத்தம் எனக்குண்டு. நாவலின் தலைப்பே அனேகருக்கு வாங்குவதற்கு அல்லது வாசிப்பதற்கான ஒரு தயக்கத்தைக் கொடுத்திருக்கலாம். கூடுதலாக ஒரு நீலப்பட நடிகையின் கதை என சிலர் எழுதியதும் அந்தத் தயக்கத்தை அதிகப்படுத்தியதற்கு காரணமாக இருந்திருக்கலாம், ஆனால் ஆபூர்வமாக சில தருணங்கள் இந்த நாவலில் இருப்பதை வாசித்த நண்பர்கள் புரிந்து கொண்டது மகிழ்ச்சியளித்தது. ஆனந்த விகடனில் பெண்கள் வாசிக்க வேண்டிய முக்கியமான நூல்களில் இந்த நாவலுக்கும் ஒரு முக்கிய இடம் கொடுத்தது. இப்போது கிண்டிலின் வழியாய் வெளியிடும் போது முற்றிலும் புதிய வாசகர்களுக்கு இந்த நாவல் சென்று சேருமென நம்புகிறேன்.

லஷ்மி சரவணகுமார்.

प्रारूप V/FORM V

नियम 35 (1) देखिए/Sec. Rule 35 (1)

भारत सरकार/GOVERNMENT OF INDIA

# केन्द्रीय फिल्म प्रमाणन बोर्ड/CENTRAL BOARD OF FILM CERTIFICATION

यह प्रमाणपत्र केवल थियेटर में प्रदर्शित करने बावत विधिमान्य है

THIS CERTIFICATE IS VALID FOR THEATRICAL RELEASE ONLY

क्रमांक No. **0357**

भाग-I / Part-I

**DIL/17/2013-HYD Feature**

प्रमाणपत्र सं
Certificate No. **DIL/3/10/2013-HYD**

तारीख
Dated **18/02/2013**

श्रेणी
Category

**व**

**A**

केवल वयस्क वीडियो
**ADULTS ONLY** **Novel**

फिल्म
Film: **நீலப்படம்**
**(தமிழ்)(கலர்)(சினிமாஸ்கோப்)**

Duration **129:00** min:sec

निम्नलिखित **परीक्षण समिति** के सदस्यों द्वारा परीक्षण के पश्चात तथा उक्त **परीक्षण समिति** की सिफारिशों पर बोर्ड एतद्द्वारा यह प्रमाणित करता है कि पीछे संलग्न भाग –2 में उपदर्शित काट–छांट और उपान्तरों के अधीन **फिल्म केवल वयस्कों के लिये निर्बन्धित सार्वजनिक प्रदर्शन हेतु उपयुक्त है।**

After examination of the film by the members of the **Examining Committee** mentioned below and on the recommendations of the said **Examining Committee**, the Board hereby certifies that the film is fit for **public exhibition, restricted to adults only,** subject to excisions and modification listed in part II on the reverse :

1. GANGULA ARUNA
2. K. VIDYASAGAR
3. PAIDIRAJU GARIKINA
4. Y. PRABHAVATY
5. **A. DHANALAKSHMI ( E.O. )**

यह और प्रमाणित किया जाता है कि उपरोक्त बोर्ड द्वारा अधिरोपित काट–छांट और उपान्तरों को वास्तव में कार्यान्वित किया गया है।

Further certified that the excisions and modifications imposed by the Board have actually been carried out.

आवेदक का नाम
Name of the Applicant G.UMARANI,MANLY FILMS ENTERTAINMENTS,VISHAKHAPATNAM

निर्माता का नाम
Name of the Producer G.UMARANI,MANLY FILMS ENTERTAINMENTS,INDIA

अध्यक्ष
For Chairman

**(A. DHANALAKSHMI)**
**Regional Officer,**
**CBFC,HYDERABAD**

# DISCLAIMER



**‘smoking causes cancer; smoking kills.’** புகைப்பிடித்தல் புற்று நோயை உண்டாக்கும்; உயிரைக் கொல்லும்.



**‘liquor drinking is injurious to health.’**

மது அருந்துதல் உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

“குடி, புகை, புணர். நூறு வருடங்கள் உடல் அழுகி வாழ்வதற்கல்ல, கொண்டாடவே வாழ்க்கை.”

- ஆனந்தி.

ஆனந்தி தான் இயக்கி நடிக்க இருக்கும் திரைப்படத்திற்கு அவளே வரைந்து கொண்ட ஸ்டோரி போர்டின் சில பக்கங்கள்.

**1994** ஜனவரியில் வெளியான



ஆனந்தியின் முதல் படத்தில் கதாநாயகியின் தங்கை வேடம் அவளுக்கு.

நான்காவது படத்தில் முக்கிய கதாநாயகியாக வளர்ந்து இதுவரை நாற்பத்தி எட்டு வயது வந்தோருக்கான படங்களில் நடித்திருக்கிறாள்.

சில வெகுஜன படங்களில் நடிக்க வாய்ப்பு வந்த போதும் மறுத்துவிட்டாள். தற்போது தனது வாழ்க்கையின் பிண்ணனியில்

ஒரு திரைப்படத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் இருக்கிறாள்.




1
2
3
EYE OPENS
FLASHING RED LIGHTS (SLOW STROBE)
(RED LIGHT SHADING)
LIGHT FLASHES OFF
SHUT EYE
5
CAMERA ON SIDE
CHARACTER IN BED
6
POWER
MAIN
MAKE LESS MEAN LOOKING, MORE PRETTY
SHIT
LIGHTS TURN OFF
CAMERA ROTATES
CAMERA MOVES BACK
LIGHTS GLOW RED
4
7
ANOTHER VIEW
POWER CUT TO MAIN REACTOR
QUARANTINE FAILURE
EVACUATION ORDERED 0800
QUARANTINE ORDERED EFFECTIVE 0100
GOOD MORNING, THE TIME IS
09:23
DIRECTIVE: DETERMINE SITUATION
REPORT TO ATRIUM ROOF BY 0900
FULL COOPERATION OF CIVIL
SHIT.
GETS OUT OF BED

# கடலூர் மத்திய சிறைச்சாலை.

(முக்கிய கைதிகளுக்கான பிரிவு – பெண்கள் வளாகம். )

அகன்று விரிந்த சிறைச்சாலையின் நுழைவு வாயில்களைத் தாண்டி கால் வைத்ததுமே அங்கிருந்த வறண்ட ஒளி மங்கிய கட்டிடங்கள், இரும்புக் கம்பியிட்ட ஜன்னல்கள் மற்றும் ஒட்டுமொத்தமாக நிலவிய இறுக்கமான சூழல் அவளை மூச்சுத் திணறச் செய்தன. உடலுக்குள் ஒரு நடுக்கம் ஊடுருவியது. தானும் இப்படி சிறைக்குள் வருவோமென்பதை ஒருபோதும் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. இதற்கு முன் கைதியாய் ஆனந்தி எந்தப் படத்திலும் நடித்ததில்லை. இந்தச் சூழலுக்குள் தன்னை எப்படி இருத்திக் கொள்வதென்கிற குழப்பம். அவளுடன் வந்த காவலர்களுக்கும் சிறைச்சாலை மருத்துவருவக்கும் தன்னைப் போலவே தினம் சிலரைப் பார்த்துப் பழகிப் போயிருக்கலாம், இயல்பாக பேசிக்கொண்டு வந்தனர். பனிக்காலத்தின் குளிர் நிரம்பிய மாலை நேரத்தில் கடலூர் மத்திய சிறைச்சாலைக்குள் தனக்கு ஒதுக்கப்பட்ட அறை நோக்கி நடந்தபோது, கறுத்த இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் மௌனமாய் விலங்குகளைப் போல் பதுங்கிப் பார்த்த பெண்களின் முகங்கள் அச்சுறுத்துவதாய் இருந்தன.

இவளுக்கான தனியறைக்கு வந்து சேர்ந்தபோது முழுமையாக இருள் சூழ்ந்திருக்க, சிறையின் பிரம்மாண்டமான சோடியம் விளக்குகளின் வெளிச்சம் இடைவெளியின்றி நிரம்பியிருந்தது. சிறை மருத்துவர் பணி முடிந்து போக வேண்டிய அவசரத்தில் வெறுமனே நாடி பார்த்துவிட்டு “உங்களுக்கு வேற எதுவாச்சும் வேணும்னா நீங்க எங்கிட்ட கேக்கலாம்.?” என்றார். அமைதியாய் யோசித்தாள். வெளி உலகின் மீது நாட்டம் கொள்ளாத ஒருவர் சாய்ந்து கொள்ள இந்த அறை போதும் தான். ஆனால் உறங்குவதுதான் பிரச்சனை. இரவுகளில் கொஞ்சமாகவேனும் மதுவருந்தாமல் அவளால் உறங்க முடியாது. அதை எப்படி மருத்துவரிடம் கேட்பது? ”டாக்டர் எனக்கு நைட் தூக்கம் வராது.

ஸ்லீப்பிங் பில்ஸ் ஏதாச்சும் குடுத்தீங்கன்னா நல்லா இருக்கும்." அவள் சொல்ல வந்ததைப் புரிந்து கொண்ட மருத்துவர் "நீங்க என்ன கேக்க வர்றீங்கன்னு புரியுது. டோண்ட் ஒர்ரி.... நான் காஃப் சிரப் குடுத்துவிடறேன். குடிச்சிட்டுப் படுத்தா தூக்கம் வரும்." அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டவர், இரும்புக் கதவைக் கடந்து வளாகத்தில் நடந்தார். வாசலில் நின்றிருந்த பெண் காவலர் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போக, தனித்து விடப்பட்ட அறையில் அமைதியாய் ஒரு ஓரமாய் உட்கார்ந்துகொண்டாள்.

பண மோசடி செய்ததாக புகார் இருக்கிறதென சில நாட்களுக்குமுன் ஒரு வழக்கறிஞர் அவளை மொபைலில் அழைத்திருந்தார். "நான் யாருகிட்டயும் காசு வாங்கி ஏமாத்தலையே ஸார்." விசயம் புரியாமல் கேட்டாள். "நீங்க படம் இயக்கப் போறதா சொல்லி கடலூர்ல இருக்கற ஒரு டிஸ்ட்ரிபியூட்டர் கிட்ட நாலு மாசத்துக்கு முன்னால பணம் வாங்கினீங்க இல்லையா?"

"ஆமா வாங்கினேன்."

"அதான். நீங்க படத்த பாதில நிறுத்திட்டதால பணம் குடுத்த பார்ட்டி இப்போ வட்டி கூட வேணாம் அசல் வேணும்னு கேக்கறாரு."

"ஸார்... படத்த நிறுத்தல. சின்ன பிரேக் எடுத்துருக்கோம். ரெண்டு மாசமாத்தான வட்டி குடுக்கல. வேற ஒருத்தர் கிட்ட ஃபைனான்ஸ் கேட்டு இருக்கேன். வந்ததும் குடுத்தடறேன்."

"இல்லம்மா அது சரியா வராது. நீங்க அக்ரிமெண்ட்லயே மூணு வாசம் மட்டுந்தான் அவகாசம் கேட்டு இருக்கீங்க. பணத்தக் குடுங்க, இல்லைன்னா அப்பறம் உங்களுக்குத்தான் சங்கடம்.."

திடீரென நாற்பது லட்சத்திற்கு என்ன வழி? பதில் சொல்ல முடியாமல் நின்றவளின் காலுக்குக் கீழிருந்த ஒரு துண்டு நிலம் பிளந்து, தான் அதல பாதாளத்தில் விழுந்து கொண்டிருப்பதைப் போலிருந்தது அவளுக்கு. "சரி ஸார்... ரெண்டு நாள்ல ஒரு அமவுண்ட் நான் செட்டில் பன்றேன். அப்பறம் கொஞ்சம் அவகாசம் குடுத்தார்னா பேலன்ஸயும் குடுத்துடறேன்..." பேசத் துவங்கியபோது இருந்த வேகம் முடிக்கும் போதில்லை. அன்றைய தேதியில் வங்கிக் கணக்கில் மூன்று லட்ச ரூபாய்க்கும் குறைவாகத்தான் இருந்தது. வேறு நிலப்பத்திரங்களுமில்லை. இந்தச் சூழ்நிலையில் தன்னை நம்பி இத்தனை பெரிய தொகையைக் கொடுப்பவர் வேறு யார் கொடுக்க முடியும்?

இரண்டு நாட்களுக்குப் பின் பெயருக்கு பதினைந்து லட்ச ரூபாய்க்கு ஒரு காசோலை கொடுத்தாள். வெள்ளிக்கிழமை என்பதால் அந்த காசோலை வசூலாக மூன்று நாட்களாவது ஆகும். அதற்குள் யாரிடமாவது பணமாக வாங்கிக் கொடுத்து சமாளித்துவிடலாம் என்பது அவள் எண்ணம். கூடுதலாக மூன்று நாட்கள் அவகாசம் கிடைத்தும் கூட பதினைந்து லட்சத்தை அவளால் புரட்டமுடியவில்லை. அந்த காசோலை திரும்பி வர, பணம் கொடுத்தவருக்கு இவள் மீது இரக்கம் காட்டவோ கூடுதலாக சில நாட்கள் காத்திருக்கவோ விருப்பமில்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் பிடிவாரண்ட் வாங்கி கைது செய்ய காவல்துறையும் தயாராக இருந்தது. இன்று பிற்பகல் அவள் வீட்டில் வைத்து அவளைக் கைது செய்தபோது அத்தனை வருடங்களில் ஒருபோதுமில்லாமல் அங்கு காவலர்கள் வந்ததால் ஃபிளாட்டில் இருந்த எல்லோரும் ரகசியமாய் எட்டிப் பார்த்தனர். சிலருக்கு அவள் விபச்சார வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்கிற எண்ணம். ஆனந்தி கையிலிருந்த அலைபேசியையும் பர்ஸையும் சக்தியிடம் கொடுத்துவிட்டு யாரையும் பார்க்காமல் அவசரமாக கீழே வந்து காருக்குள் உட்கார்ந்து கொண்டாள்.

பத்து நாட்களாக பணம் புரட்ட வேண்டுமென்பது குறித்து இருந்த எந்த மன அழுத்தமும் இல்லை. ஆக இறுதியாய் என்ன செய்துவிடப் போகிறார்கள். சில நாட்களுக்கு சிறை. நாளை இது செய்தியாகும். தன் மீது பரிதாபப்படும் அல்லது மோகம் கொண்டிருக்கும் யாரோ ஒருவர் நிச்சயம் வந்து மீட்கக்கூடுமென திடமாக நம்பினாள். கடலூர் நீதிமன்றத்திற்கு வரும் வரை அவள் யாரிடமும் பேசிக்கொள்ளவில்லை. வழியில் காவலர்கள் தேநீர் குடித்தபோதுகூட தனக்கு வேண்டாமெனச் சொல்லிவிட்டாள். நீதிமன்றத்திற்கு வருவது புதிதில்லை என்பதால் அவளிடம் பதட்டமில்லை. பொதுவான சில அடையாள விசாரணைகள் முடிந்து நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்த போது அன்றைய செய்தித் தொலைக்காட்சிகளின் மாலை நேர தலைப்புச் செய்தியாக இருந்தாள்.

அந்த அறையின் சுவர் முழுக்க கோடுகளும் எழுத்துக்களுமாய் கிறுக்கப்பட்டிருந்தது. சில ஓவியங்களும் கூட. நீண்ட ஆண் குறி வரைந்து அதற்கு மேல் அதைவிடவும் சிறியதாய் ஒரு உடலை வரைந்திருந்தனர். அந்த உடலின் தலைக்கு மேலாக எண்பதுகளில் பிரபலமாக இருந்த ஒரு நடிகரின் பெயரைப் பார்த்தாள். சிரிப்பு வந்தது. நிஜம் தெரியாத யாரோ ஒரு அப்பாவிப் பெண் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும். அப்பாவியாய் இருக்க வாய்ப்பில்லை.

முக்கியஸ்தர்களுக்கான அறையென்பதால் நிச்சயம் இருப்பதிலேயே ஆகக் கழிசடையான யாரோ ஒருவள் வந்து சென்றிருக்க வேண்டும். இங்கிருந்து வெளியேறிப் போகும் நாள் வரை என்ன செய்யலாம்? இதே போல் சுவர் முழுக்க கிறுக்கலாமா? மின்விசிறியும், குழல் விளக்கும் அறையின் ஓரத்திலேயே மல ஜலம் கழிக்க சின்னதொரு துளையுமாய் அவள் பதினான்கு வயதிற்கு முன்பு வாழ்ந்த இடத்தை விடவும் சிறப்பானதாகவே இருந்தது அந்த அறை.

'தாயே தெய்வம், நல்லதே நடக்கும்', 'பாப்பா உன் நெனப்பாவே இருக்குடா', 'ஜெய் சாய்ராம். சாய்ராம்'. இன்னும் நிறைய வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதை அழுக்கிற்கு மத்தியில் தேடித் படித்தாள். நிறைய ஆண்குறிகளும், சில பெண்ணுறுப்புகளும் வெவ்வேறான தோற்றத்தில் வரையப்பட்டிருந்தன. ஒரு பெண்ணுறுப்பின் மீது கரப்பான் பூச்சி தாபத்தோடு ஊர்ந்து வந்து சரியாய் அதன் மேலேயே நின்று கொண்டது. எவ்வளவு நேரம் அதேயிடத்தில் நிற்குமெனப் பார்த்தாள். கதவு திறக்கப்படும் சத்தம். கன்விக்ட் வார்டர் பெண்ணொருத்தி போர்வை மற்றும் காஃப் சிரப்புகளோடு சிரித்தபடி உள்ளே வந்தாள். அவளுக்குப் பின்னால் கதவைத் திறந்து விட்ட பெண் காவலர் ஓரமாக நின்றிருந்தாள்.

“இந்தாங்கம்மா. டாக்டர் குடுக்க சொன்னாரு...” பெட்ஷீட்டையும் சிரப்பையும் வாங்கிக் கொண்டாள். பெட்ஷீட்டுக்குள் எதுவோ தட்டுப்படுவது போலிருக்க கன்விக்ட் வார்ட்டரைப் பார்த்தாள். ”எல்லாம் நீங்க கேட்டதுதான் உள்ள இருக்கு. குடிக்க தண்ணியும் டம்ளரும் மண்பானைல இருக்கு. இன்னைக்கு முதல் நாளுங்கறதால நைட்டு உங்களுக்கு இங்க சாப்பாடு குடுத்திருக்க மாட்டாங்க. சமாளிச்சுக்கங்க.” ஆனந்தி போர்வையை விலக்கிப் பார்த்தாள். மலிவான பிராந்தி. வெளியேதான் அது மலிவு. இங்கு அதற்கு மிகப்பெரிய விலை. அதை பிளாஸ்டிக் டப்பாவில் அடைத்துக் கொடுத்திருந்தார்கள். சிறைக்குள் கண்ணாடி பாட்டில்களுக்கு அனுமதி இல்லை. “ரொம்ப தாங்க்ஸ்ங்க.... எப்பிடித் தூங்கப் போறனோன்னு பயந்துட்டு இருந்தேன்.” நன்றியோடு வார்டரைப் பார்த்தாள். ”உங்களுக்கு என்ன வேணுமோ கேளுங்க. கெடைக்கும். எல்லாத்துக்கும் காசுதான். போறப்போ அப்பிடியே எங்களயும் கவனிச்சிட்டுப் போங்க.” பெண் காவலர் சொல்ல ஆனந்தி சரியெனத் தலையாட்டினாள். அவர்கள் இருவரும் கதவைப் பூட்டிவிட்டுச் சென்றார்கள்.

துயர்மிக்க அன்றைய பகலின் எல்லா அவமானங்களையும் மறக்கச்

செய்யும
மருந்தொன்று கையில் கிடைத்துவிட்ட நிம்மதியில் ஆனந்தி பானையிலிருந்து
தண்ணீர் எடுத்து வந்து உட்கார்ந்தாள். வலிமிக்க இந்த நாளில் கிடைத்திருக்கும்
இது வெறும் மதுவல்ல, மருந்து கூட அல்ல, கடவுளின் தீர்த்தம். நம்பாமல்
போனாலும் இதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். தண்ணீர்
குறைவாக சேர்த்து முதல் பாதி மதுவைக் குடித்தபோது உடல் எரிந்தது.
நிதானமாகக் குடிக்க முடியாதளவிற்கு எரிச்சல். ஒரே மடக்கில் குடித்து விட்டு
வைத்தாள். மதுவின் அடர்த்தியில் கண்கள் சிவந்து போயின. சாப்பிட
எதுவுமில்லாததால் மறுபடியும் கொஞ்சம் தண்ணீரை மட்டும் குடித்தாள்.
அமைதியாய் இருந்தாள். எதைப்பற்றியும் நினைக்காதிருக்க முயன்றாள்.
பலனேதும் தராத அந்தச் சூழலுக்குள் கரைந்து போகவேண்டும்.
நினைவுகள் முற்றிலுமாக அழிந்து போக வேண்டும். ஞாகம் தான்
மனிதர்களின் எதிரி. கடந்த காலம் இல்லாத மனிதன் எல்லாச்
சூழ்நிலையிலும் வாழத் தகுதியானவனாக இருக்கிறான்.
மிச்சமிருந்த மதுவையும் முன்பைப் போலவே வேகமாய்க் குடித்து
முடித்தபோது உடல் இலகுவாகி இருந்தது.

இந்த இரவை இரவென்று சொல்ல முடியாது, ஏனெனில் இங்கு நிலவு இல்லை, நட்சத்திரங்கள் இல்லை, வானம் இல்லை. அவளேதான் இப்போது இரவின் வடிவம். இந்தச் சுவர்களும் இந்த அறைக்குள் இவளுக்கு முன்பாக இருந்து சென்றவர்களின் கதைகளும் தான் இப்போது இரவு. இரவின் எல்லா உருவங்களாகவும் மாறிக்கொள்ளும் தன்மை கதைகளுக்குண்டு. ஏனெனில் இரவைப் போலவே கதைகளும் ரகசியமானவை.

சந்தோசங்களை நினைத்துக் கொள்ளாதிருக்க மறதிக்குப் பழக
வேண்டியிருக்கிறது. குடித்திருந்த மது பல வருடங்கள் மறந்து போயிருந்த
எல்லாவற்றையும் அவள் முன் பேருரு கொண்டு நிறுத்தியது.
நினைக்க ஏதுமில்லையென்கிற நிலையை அவள் அடைய வேண்டுமாயின் இந்த ஒரு இரவு எங்கனம் சாத்தியம்? நினைவுகளின் மீதான தாக்குதல் நிகழ்ந்த இந்த
நாள் ரத்தக்கறை படிந்த ஒன்றாகவே மாறிப்போனது. உடல் ரீதியான
எந்தவிதமான தாக்குதலையும் எதிர்கொள்ள முடிந்த அவளால்

சுயவதையை
எதிர்கொண்டிருக்க முடியவில்லை. தன் வாழ்க்கையில் ஒருபோதும் செய்யாத
துர்செயல் ஒன்றை செய்ய அவள் மனம் விழைந்தது. ‘ஏன் நாம் கடவுளை
வழிபடக்கூடாது?’ சுவற்றின் கிழக்கு மூலையில் அமர்ந்து கண்களை
மூடிக்கொண்டாள். தனக்கும் கடன் பாக்கி இருப்பதாகச்
சொல்லி பிராதுக் காகிதங்களோடு கடவுளும் ஏதாவதொரு நீதிமன்றத்தில்
நின்றுகொண்டிருப்பதைப் போல் தோன்ற அவசரமாக கண்களைத் திறந்து
பார்த்தாள். இரண்டு மணி முடிந்து மூன்று மணியாகிவிட்டதற்கான சங்கு
அடித்தது. பாராவிற்கு இருந்த காவலர்கள் மாறும் நேரம் போல.
அதுவரையிலும் பணியிலிருந்த காவலர் கிளம்பிச் செல்ல புதிதாக ஒருவர்
வந்தார்.

பேசுவதற்கு அருகில் ஒருவருமில்லை என்கிற ஏக்கம் இத்தனை
வருடங்களில் இல்லாது மனமெங்கும் எழ, அம்மாதான் நினைவுக்கு வந்தாள்.
எத்தனையோ பேருடன் வாழ்ந்தும் மரணம் வரையிலும்
தனியானவளாகவே இருந்தாள். வாழ்வின் மீதான தீராத ஆசைகளோடு
மரித்துப் போகிறவர்கள் தேவதைகளாய் உலாவக்கூடுமென்றால் அம்மா
இப்போது தன்னோடுதான் இருக்கக் வேண்டும். அவளைக் குறித்து
நினைத்துப் பார்த்துக் கொள்ள ஆனந்தியிடம் ஒன்றுமில்லை, சில
வருடங்களுக்கு முன் எழுதிய கடிதத்தைத் தவிர. இதே போல்
நெருக்கடிமிகுந்த ஒரு இரவில் மதுவருந்தியபின் எழுதிய அந்தக் கடிதத்தின்
வரிகளை நினைவுக்குக் கொண்டு வந்தாள். அசதியும், களைப்பும் அழுத்த
கண்கள் பாதி திறந்திருந்த நிலையிலேயே உறங்கிப் போனாள்.

# ஆனந்தி தன் அம்மாவிற்கு எழுதிய கடிதம்.

அம்மா...

’தேவ்டியா’ என்ற வார்த்தையை முதல் முறையாக எனக்கு அறிமுகப்படுத்தியது நீதான். இப்போது வரையிலும் ஊரில் உன்னைப் பற்றியதான நினைவுகள் எல்லோருக்கும் அப்படியாகத்தான் இருக்கின்றன. அந்த வார்த்தையில் இருந்த வசீகரம் சிறு வயதிலேயே எனக்குப் பிடித்திருந்ததால் அது சொல்லக் கூடாத வார்த்தையென்றோ அந்த வார்த்தைக்கானவர்கள் அருவருப்பானவர்கள் என்றோ எனக்குப் படவில்லை. சரியாகக் கணக்கிட்டு சொல்வதானால் பதிமூன்று வயதிற்குள்ளாக பதிணெட்டு நபர்களை அப்பாவென நான் கூப்பிட்டிருக்கிறேன். அவர்கள் அத்தனை பேருக்கும் முகமும் உடலும் தான் வேறானதாக இருந்ததே தவிர தேவைகள் ஒன்றாகத்தான் இருந்தது.

விடுமுறைக்கு வந்த மிலிட்டரிக்காரனோடு நீ சேர்ந்து வாழ்ந்தது முழுதாக ஒரு மாதம். எப்போதும் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாறும்போது எனக்குக் தர்மசங்கடமாய் இருக்கும். இனி அந்த பழைய அப்பாவை எங்காவது சந்திக்க நேர்ந்தால் எப்படிக் கூப்பிடுவது? உனக்கு இதுமாதிரியான எந்தக் குழப்பங்களும் இருந்திருக்கவில்லை. உன்னால் எல்லோரையும் மிக இயல்பாக காதலிக்க முடிந்தது. அவர்கள் புறக்கணிக்கும் போது எந்தப் புகார்களும் இல்லாமல் அவர்களிடமிருந்து விலகி இருக்கவும் செய்தாய். பாதி இரவிற்கு மேல் மது வாங்குவதற்காக மிலிட்டரிக்காரன் நம் வீட்டிற்கு வந்தபோதுதான் உனக்கும் அவனுக்குமான முதல் சந்திப்பு நிகழ்ந்ததென நினைக்கிறேன்.

அதற்கு முன்பு சில மாதங்கள் ஒரு ஒயின் ஷாப் ஓனரின் வீட்டில் நாம் வாழ்ந்தோம். வெளித்தோற்றத்திற்கு முரட்டு மனிதராகத் தெரிந்தாலும் அந்த அப்பா நல்ல மனிதர். இன்னும் சொல்லப்போனால் அப்பாக்களிலேயே அவர் ஒருவர் தான் உன்னை அடித்துத் துன்புறுத்தாதவர். ஆனால் அவருக்கு உன் மீது பெரிய ஆர்வங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் உன்னைப் பற்றிப் பேசுகிறார்களே என்பதால் ஒரு பெருமைக்காக உன்னுடன் இருக்க விரும்பினார். தினமும் இரவு உன்னுடன் உறங்கி எழும் சந்தோசம்

அவருக்குப் போதுமானதாய் இருந்ததே தவிர உன்னுடலை ஆராதிக்கத் தெரியவில்லை. நீ அதையும் சகித்துக் கொண்டுதான் இருந்தாய். அவர் மனைவி உடலில் கெரசின் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வேன் என அவரை மிரட்ட, பயந்து போய் அவர் உன்னை வந்து பார்ப்பதை நிறுத்தினார். ஆனாலும் உன் மீது அக்கறை இருந்தது. உன் வருமானத்திற்கு ஆகுமென்றுதான் இரவில் விற்றுக் கொள்ள தினம் கொஞ்சம் மதுபாட்டில்களை வீட்டிற்குக் கொடுத்து அனுப்பினார்.

உனக்கு உடமைகளென எதுவும் இல்லை. இரண்டு சூட்கேஸ் நிறைய உடைகளும், எனது சில பொம்மைகளும் கொஞ்சமும் குறையாத இளமையும் தான். அதனாலேயே இடம் பெயர்வது சிரமமான காரியமாய் இருந்திருக்கவில்லை. “உன் உடம்பு மட்டுந்தான் அம்மா உனக்குக் கொடுத்துட்டுப் போற பெரிய சொத்து, பத்ரமா பாத்துக்க....” உனக்கே உனக்கான புன்னகையோடு நீ சொல்லியிருக்கிறாய். ஆண்கள் அத்தனை பேராலும் விரும்பப்படும் ஒரு உடல் வாய்ப்பது எளிதானதல்ல. உனக்கு அது வாய்த்திருந்தது. நீ ஊரின் ஆண்களுக்கு பல காலம் விருப்பமானவளாய் இருந்தவள். உன்னைத் தேடி வருகிறவர்களை வஞ்சிக்கவோ, புறக்கணிக்கவோ தெரியாதவள். எல்லோருக்கும் அள்ளிக் கொடுக்க உன்னிடம் காமமும் கொஞ்சமாய் காதலும் இருந்தது. யாரிடமும் நீ காதலை வேண்டி நிற்காத போதும், உன்னைக் காதலித்தவர்களை நீயும் காதலிக்கவே செய்தாய்.

எல்லோருக்கும் ஒரு வாசனை இருப்பது போல் உனக்கும் ஒரு வாசனை இருந்தது. தனித்துவமானது. கடலின் உப்பிலிருக்கும் அடர்த்தியைப் போன்ற தனித்துவம். எனது எல்லாமும் அதன் பிரதிதான். உன்னுடலின் அத்தனை வசீகரங்களையும் சின்னப் பிசிறுகள் கூட மாறாது எனக்குத் தாரை வார்த்திருந்தது ஆச்சர்யம். உன் நினைவு வருகிற பொழுதெல்லாம் உடலின் அசாத்தியமான கண்கள் விழித்துக் கொள்கின்றன.

உனது உடல் பசுமை குறையாத கொடியென அந்த ஊரின் எல்லா வீதிகளிலும் படர்ந்து கிடந்தது. எப்போதும் மலர்ந்திருக்கும் கொடி. அதன் வாசனைக்கு அவ்வூரிலிருக்கும் அத்தனை ஸர்ப்பங்களும் எழுந்தாடின. உன்னை எதிர்கொண்ட பெண்களின் கண்களில் பொசுக்கும் உக்ரமும், பொறாமையும் சேர்ந்தே கசிந்தன. பதிலாய் புன்னகைப்பதின் வாயிலாகவும் வழியச் சென்று பேசுவதன் வாயிலாகவும் அப்பெண்களின் வெக்கையை இன்னும் சில நிமிடங்கள் நீட்டிக்கச் செய்து ரசித்தாய். என்னிடம் எந்த நிர்ப்பந்தங்களையும் நீ வைத்திருக்கவில்லை. ஆண்கள் பூச்சிகளை விடவும் கோழைகள்,

அவர்களிடம் ஒருபோதும் பயப்படாதே என்பது மட்டுந்தான் முதலும் கடைசியுமாய் நீ சொன்ன அறிவுரை.

மிலிட்டரிக்காரனை முதல் தடவையாய் அப்பாவெனக் கூப்பிட்ட நாள் இன்னும் எனக்கு நினைவில் இருக்கிறது. அவனுக்கு உன் மீதிருந்த காமத்தை விடவும் என் மீது அதிகம். அருவருப்பான புழுக்களின் ஊறலை அப்பார்வையில் கண்ட நொடியிலிருந்து அவன் வீட்டிற்குள் இருக்கும் நேரங்களில் எங்காவது ஓடிவிட வேண்டுமெனத் தவிப்பேன். ஒரு வாழ்க்கை முழுவதிற்குமான போகத்தை உன்னுடன் அந்த சில நாட்களிலேயே பார்த்துவிடும் அசுர வெறி இருந்திருக்க வேண்டும் அவனுக்குள். ஒரு மனநோயாளியைப்போல் எப்போதும் உனது அருகிலேயே சுற்றிக் கொண்டிருப்பான். அப்போதெல்லாம் நான் பெரும்பாலும் அணிவது பாவாடைகள் தான், அது எத்தனை ஆபாசமான உடை தெரியுமா? என்னால் இயல்பாக உறங்கவும் முடியாமல் உட்காரவும் முடியாமல் எப்போதும் அவன் கண்கள் என் தொடைகளைத் துளைத்துச் செல்வது போலவே இருக்கும். அந்தக் கண்கள் எப்போதும் உடலெங்கும் ஊர்ந்து பின்பு சில நாட்களில் என் மீது சதாவும் நீந்தியலையும் மீன்களாகிவிட்டன. எனது உடலை சின்னதொரு குளமாக்கி தன் கண்களின் மூலமாய் அவன் நீந்திக் கொண்டிருந்தான்.

நாம் மூவரும் சின்னதாக ஒரு பயணம் போனோம். அதுவும் உனக்கு கடல் விருப்பமென்பதால், தஞ்சாவூரில் இருந்து காரைக்காலுக்குப் போன அந்த நாள் உன் முகத்தில் நான் பார்த்திருந்த சந்தோசத்தை அதற்கு முன் பார்த்ததில்லை. கடலை குழந்தையாக்கி அந்த இரவில் நீ பாடியது நினைவில் இருக்கிறது. நீயும் அவனும் குடித்திருந்தீர்கள். பௌர்ணமிக்கு முந்தைய தினமென்பதால் கடல் பூரிப்பில் பிரம்மாண்ட அலை எழுப்பி நர்த்தனமாடியது. கடலின் நடனம் கண்ட நீயும் எழுந்து ஆடினாய். ஆடை விலகிய பிரக்ஞையோ அது கடற்கரை என்கிற கூச்சங்களோ இல்லாமல் ஆடிய உன்னை மிகுந்த சிரமத்துடன் அறைக்குக் கூட்டி வந்தோம். அன்றிரவு நீங்கள் உடலுறவு கொண்டபோது உண்மையில் நான் உறங்கியிருக்கவில்லை, நான் விழித்திருப்பது உன்னை சங்கடப்படுத்திவிடக் கூடாதென்பதற்காகத்தான் சிரமத்துடன் கண்களை மூடிக் கிடந்தேன். நீ அவனின் கிறுக்குத்தனமான செயல்களைப் பார்த்து சிரிக்கத் துவங்கியதும் தான் அவனுக்குள் சதாவும் உறுமிக் கொண்டிருக்கும் மிருகம் தனது கொடூர முகம் காட்டியது. அவன் உன்னை அடித்தான். உன்னை எத்தனை பேர் வேண்டுமானாலும் அடிக்க முடியும்,

காயப்படுத்தி விடமுடியாது என்பதை அன்றுதான் நான் தெரிந்து கொண்டேன். அவன் அவ்வளவு அடித்தும் நீ அவனைப் பார்த்து சத்தமாக சிரித்தபடிதான் இருந்தாய். ”எப்பப் பாத்தாலும் இதக் கைலயே பிடிச்சிட்டு இருக்கனும்னு நெனைக்கிறியே? ஏன் நாளைக்கே செத்துடுவோம்னு பயமா? உன்னது உங்கிட்டத்தாண்டா இருக்கும். யாரும் வெட்டி எடுத்துட்டுப் போயிட மாட்டாங்க..” நீ இப்படி சொன்னதும் அவன் கோவம் அதிகமாகியது. உன்னை அடிப்பதற்குப் பதிலாக சுவற்றில் போய் முட்டிக் கொண்டான். ஜன்னலைத் திறந்து வெளியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்ற நீ, படுத்திருந்த என்னை எழுப்பி அப்பொழுதே தஞ்சாவூருக்குக் கூட்டி வந்தாய்.

அடுத்த நாள் அவன் வீட்டிற்கு வந்தபொழுது கோவத்தின் எந்தச் சுவடுகளையும் காட்டிக் கொள்ளாமல் நீ உணவளித்தாய். உன்னிடம் மன்னிப்புக் கேட்டவன் இன்னும் சில நாட்களில் மீண்டும் பணிக்குத் திரும்புகையில் அவனுடனேயே வர முடியுமாவெனக் கேட்டான். ’இத்தனை வருடங்களில் மனைவியைக் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டுமனெத் தோன்றாத ஒருவனுக்கு உன்னைக் கூட்டிக் கொண்டு செல்ல வேண்டுமெனத் தோன்றியது முதலில் உன்னை ஆச்சர்யப்படுத்தினாலும் காரணத்தை நீ உடனே புரிந்து கொண்டாய். ‘ஏன் நீ போனதுக்கு அப்பறம் இங்க நான் வேற யார் கூடயாச்சும் போயிருவேன்னு நினைக்கிறியா?” அவன் தடுமாறி சமாளித்தான் ‘ச்சே ச்சே அப்டி இல்லம்மா..”

“அப்பறம்? இத்தன வருசமா பொண்டாட்டியக் கூட்டிட்டுப் போகனும்னு தோணல... ஒரு மாசம் கூட ஆகல என்னயக் கூட்டிட்டுப் போகனும்னு தோணுது... இதுக்கு நான் சரியா வரமாட்டேன்... வேற ஆளப் பாரு...” நீ கோவமாக சொல்லிவிட்டுப் போய்விட்டாய். நான் அங்கு இருப்பதா போய்விடுவதா எனத் தெரியாத குழப்பத்தில் மலங்க மலங்கப் பார்த்துக் கொண்டு நின்றேன். தன் பையில் இருந்து கொஞ்சம் பணம் எடுத்துக் என் கையில் கொடுத்தவன் உன்னிடம் கொடுக்கச் சொல்லிவிட்டுப் போனான்.

ஊருக்குப் போவதற்கு இரண்டு நாட்கள் முன்பாக அவன் மீண்டும் நம் வீட்டிற்கு வந்தபோது அவனுடன் இன்னொரு தடியனும் வந்திருந்தான். இருவரும் ஒரே பட்டாலியனில் வேலை செய்கிறவர்கள். விடுமுறை முடிந்து ஒன்றாக ஊருக்குப் போக இருப்பதால் விருந்துக்கு அழைத்து வந்திருந்தான். அந்தப் பிற்பகல் வீட்டில் என் இருப்பை விரும்பியிராத நீ சினிமாவிற்கு அனுப்பினாய். நான் டிக்கட் கூட எடுக்கவில்லை தெரியுமா? ஆப்ரேட்டர் சீனு மாமாவை உனக்குத்

தெரியும் தானே? நமது வீட்டிலிருந்து இரண்டு தெரு தள்ளி இருப்பவர்... ஆப்ரேட்டர் ரூமிற்கே கூட்டிப்போய்விட்டார். அவர் மடியில் அமர்ந்து கொண்டுதான் முழு படத்தையும் பார்த்தேன். அன்று மட்டுமல்ல அதற்கு முன்பும் கூட சிலமுறை அவரின் மடியில் அமர்ந்து படம் பார்த்ததுண்டு. நான் அவ்வளவு வளர்ந்தும் என்னைக் குழந்தையைப் போல் மடியில் வைத்துக் கொள்வார். பாதிப்படம் அவர் மடியில் உட்கார்ந்திருப்பேன், திடீரென அவசர அவசரமாய் கழிவறைக்கு ஓடுவார். திரும்பி வரும்போது களைத்துப் போனவராய் மறக்காமல் இருவருக்கும் டீ கொண்டு வருவார். ஒரே ஒரு முறை செல்லமாய் அவரின் கன்னத்தில் நான் முத்தமிட்டு இருக்கிறேன்.

நான் படம் முடிந்து வீடு திரும்புகையில் எந்தச் சத்தமும் இல்லாமல் இருண்டிருந்த படுக்கையறையின் மூலையில் நீ சுருண்டு கிடந்தாய். நினைவுகள் இல்லாத உன்னை எழுப்ப எவ்வளவு முயன்றும் முடியவில்லை. விளக்கைப் போட்டபோது அந்த அறை முழுக்க உன் குருதி பரவிக் கிடந்தது. கண்கள் மட்டும் பாதி திறந்திருக்க அப்போதும் இந்த உலகத்தின் அருவருப்பான எல்லாவற்றைக் கண்டும் சிரிப்பவள் போல் உன் வாய் சின்னதாய் புன்னகைத்தபடி இருந்தது. மூச்சு சீராக இருந்ததால் நான் வேகமாக ஓடிப்போய் பக்கத்தில் இருப்பவர்களைக் கூட்டி வந்தேன். நீ முழு ஆரோக்யத்தோடு இருக்கையில் உன்னைத் தொட்டுப் பேச விரும்பிய எல்லோரும் அன்று அருவருப்பாகப் பார்த்தனர். மருத்துவமனையில் உன்னைச் சேர்ந்த பின்பாகத்தான் உன் யோனியின் கிளிட்டோரியஸை அந்த மிருகங்கள் கடித்துத் துப்பியிருந்தது தெரிந்தது. உடல் தான் மூலதனமென நீ சொல்லிக் கொடுத்த அவ்வளவும் அதன்பிறகு என்னை அச்சுறுத்தியது. என் அருகில் வரும் ஒவ்வொரு ஆணும் என் கிளிட்டோரியஸை கடித்துத் துப்பும் வன்மங் கொண்டவனாகவே எனக்குத் தெரியத் துவங்கினான்.

இரண்டாவது நாள் நினைவு திரும்பிய நீ அந்தப் பிற்பகல் நடந்ததைச் சொன்னாய், தற்காத்துக் கொள்ள முடியாத நிலையில் ஒரு பெண்ணின் மீது நிகழ்த்தப்படுக்ம் வன்முறையை விடவும் கொடூரமானது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை. ஆனாலும் நீ கொஞ்சம் தைர்யமானவள் தானே? இரண்டு பேரில் ஒருவனின் குரல் வளையை மட்டுமாவது நீ கடித்துக் கொன்றிருக்கலாம். எந்தப் பிசிறுகளும் இல்லாமல் எங்கோ ஒரு மூலையில் யாரோ ஒரு பெண்ணைப் புணர்ந்தபடி அந்த மிருகங்கள் உல்லாசமாக வாழ்கிறார்கள் என்பதை நினைக்கையில் சத்தியம் தர்மம் எல்லாவற்றின் மீதும் காறி உமிழவேத் தோன்றுகிறது. உன்னைக் குணப்படுத்துவது

மருத்துவர்களுக்கு அத்தனை எளிதான காரியமாய் இல்லை. அங்கிருந்து சென்னை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள், யாரையுமே தெரியாத இந்த நகரில் நாம் ஒவ்வொரு வேளை உணவுக்கும் யாரோ ஒருவரின் கருணையை எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்களானோம். நல்ல வேளையாக சர்ச்சிலிருந்து வந்த சிஸ்டர்கள் நமக்குக் கொஞ்சம் இரக்கம் காட்டினார்கள். அடிக்கொருதரம் உனக்கு உடல்நலமில்லாமல் போனதால் பெரும்பாலும் நீ மருத்துவமனையிலேயேதான் இருந்தாய். அந்த மருத்துவமனைதான் என்றெறைக்குமாய் உன்னை என்னிடம் இருந்து பிரித்துக் கொண்டு போனது. உன்னைத் தகனம் செய்து வந்த நாளிலும் அதன் பிறகு அபூர்வமாய் உன் நினைவு வருகிற நாளிலும் தவறாது ஒன்றை மட்டுந்தான் திரும்பத் திரும்ப யோசிக்கிறேன். ‘அடுத்த பிறப்பில் நான் உன் காதலனாய்ப் பிறக்க வேண்டும். நீ பார்த்திராத அனுபவித்திராத மகத்தான காதலை உணரச்செய்யும் காதலனாய். வேறு எந்த உயிர்களை விடவும் உன்னை அதீதமாய்க் காதலிக்கிறேன் அம்மா….’

முத்தங்களுடன்…

ஆனந்தி.

# பார்வையாளர் சந்திப்பு அறை.

காலை ஆறுமணிக்கெல்லாம் ஆள் எண்ணிக்கைக்காக கதவு திறந்து எழுப்பப்பட்ட போது ஆனந்திக்கு தான் எங்கு இருக்கிறோம் என்பது பிடிபட சில நொடிகள் ஆனது. பின் மெதுவாக வந்து வாசலில் நின்றாள். பரந்த அந்த வளாகம் நேற்று மாலை பார்த்ததை விடவும் தெளிவாக இருந்தது. அவசர அவசரமாக காலைக் கடன்களை முடிக்க வேண்டி விசாரணைக் கைதிகளும் தண்டனைக் கைதிகளும் போய்க்கொண்டிருந்தனர். சிலரின் கைகளில் செங்கல்பொடி, இன்னும் சிலரின் கைகளில் கோபால் பல்பொடி. காலை உணவுக்குப் போக வேண்டிய அவசரம் எல்லோரிடமும். இவளுக்கு அலைய வேண்டியதில்லை. ”சாப்பாடு வாங்கக் கூட நீங்கள் வரவேண்டாம் கொடுத்து அனுப்புகிறேன்” என ஜெயிலர் சொல்லி இருந்தார். இவளோடு வந்து பேசுவதற்கு கூட்டம் கூடும், கூட்டத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடக்க வாய்ப்பிருக்கிறதென்கிற எச்சரிக்கை. மறுபடியும் அறைக்குள்ளேயே படுத்துக் கொள்ள அவளுக்கு விருப்பமில்லை. அந்த வளாகத்திலிருந்த காவலரிடம் செய்தித்தாள் கேட்டாள். ”இங்க அக்யூஸ்ட்டுங்களுக்கான லைப்ரரி ஒன்னு இருக்கு. ஆனா அங்க கூட்டமா இருக்கும். அதோட சென்சார் பண்ணிக் குடுக்கறதால பாதிப் பாதியா வெட்டி இருக்கும். நீங்க கிளினிக் போங்க. அங்க டாக்டருக்கு வாங்கற பேப்பர் வெச்சிருப்பாங்க.” சிரித்தபடி சொன்னவள் “இருங்க தனியாப் போக வேணாம். நான் கூட ஒரு ஆள் அனுப்பறேன்.” ஆனந்தியை நிறுத்திவிட்டு அங்கு சுற்றிக் கொண்டிருந்த ஒரு விசாரணைக் கைதியைக் கூப்பிட்டாள். “இவங்கள கொஞ்சம் கிளினிக் ல போயி விட்டுடு…” அந்தப் பெண்ணுக்கு அதிகமாகப் போனால் இருபது வயதிருக்கும். இந்த வயதில் என்ன செய்துவிட்டு ஜெயிலுக்கு வந்திருப்பாள்? அப்பிராணியான முகம். அவளிடம் விவரம் கேட்கத் தயக்கமிருந்ததால் அமைதியாய் நடந்தாள்.

“என்ன மேடம் நைட்டு சரியா தூங்கலையா?”

ஆமாமென தலையாட்டிவிட்டு ஆனந்தி சிரித்தாள்.

“ரெண்டு நாள் போனா பழகிடும்.”

பொதுவாகச் சொல்லிவிட்டு நடந்தாள்.
“நீ என்ன கேஸ்லம்மா வந்திருக்க?”
ஆனந்தி பதிலுக்கு கேட்டாள்.
“பிராத்தல் தான். பெரும்பாலும் கேசெல்லாம் வராது. இந்த தடவ வேற ஆள்
கெடைக்கலைன்னு கூட்டிட்டு வந்துட்டாங்க மேடம்…”
அந்தப் பெண் சாதாரணமாகச் சொன்னாள்.”
இருவரும் பேசியபடியே கிளினிக் வந்து சேர்ந்தனர். அங்கு தண்டனைக் கைதி
ஒருவரே நர்ஸாக இருந்தார். அவசரத்துக்கு ஏதாவது மருந்து கொடுக்க
ஆறேழு வருடங்கள் தண்டனைக் கடந்தவர்களுக்கு இந்த சலுகை. இவளை
அடையாளம் கண்டு சிரித்தாள். “உடம்பு சரியில்லையா? மருந்து எதும்
குடுக்கட்டா?”
“இல்லைங்க… பேப்பர் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.”
“ஓ சரி வாங்க, வந்து உக்காருங்க….”
அந்த அறையிலிருந்த இரண்டு மர நாற்காலிகளில் ஒன்றில் உட்கார்ந்தாள்.
பெரிய பெரிய பீங்கான் சீசாக்களில் மருந்துகள் அடைத்து
வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையில் மெல்லியதாய் மருந்து வாடையும்,
பினாயில் வாடையும் கலந்து அடித்தது.

அன்றைய தினத்தின் செய்தித்தாளில் மேக்கப் இல்லாத அவள்
ஃபோட்டோவுடன் முதல் பக்கத்திலேயே செய்தி வந்திருந்தது. இதற்கு
முன்பும் சிலமுறை இதேபோல் வழக்குகள் வந்திருக்கின்றன, ஆனால்
அதற்காக அவள் சிறை சென்றதில்லை. கண்கள் அமைதியாக அந்தச்
செய்தியைக் கடந்து மற்ற செய்திகளுக்குள் போனபோது எதிலும்
நாட்டமில்லை. மெறுமனே படங்களைப் பார்த்தாள். பத்து
நிமிடத்திற்குள் பேப்பரை பார்த்து முடித்தபின் அடுத்து என்ன செய்வதென
யோசனை.
”பழைய பேப்பர் இருந்தா குடுக்கறீங்களா?”

நர்ஸ் அந்த மாதத்தில் வந்த சில செய்தித்தாள்களை எடுத்துக் கொடுத்தாள்.
எல்லாவற்றையும் அதேபோல் மேலோட்டமாக புரட்டினாள். பதினைந்து

இருபது நாட்கள் வந்த செய்திகள் பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாய்
இருந்தன. மாவட்ட செய்திகள், உலக செய்திகள் மட்டும் கொஞ்சம் சுவாரஸ்யமாய் இருப்பதாகப் பட்டது. பதினைந்து நாட்களுக்கு முந்தைய ஒரு பழைய மாவட்ட செய்தி அவள் கண்ணில் பட, ஆர்வமாய் வாசித்தாள். "வடலூர் ரத்னா டாக்கீஸில் ஆபாசப் படம் திரையிட்ட ஆப்ரேட்டர் கைது. தியேட்டருக்கு சீல்.' செய்தியை முழுதாக வாசித்தபோது
'ஒரு அர்த்த ஜாமக் குயில்' படத்தினூடாக பிட்டுகளை ஓட்டியிருப்பது தெரிந்தது. செய்தியின் ஒரு ஓரமாக ஆப்ரேட்டரின் ஒடுங்கிய முகம் மங்கலாய் இருக்க அருகில் வைத்து ஒருமுறைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவளை சந்திக்க ஆள் வந்திருப்பதாக ஒரு கைதி வந்து
சொன்னாள்.

"பேர் என்ன சொன்னாங்க?"

"பாபுவாம்."

ஆனந்திக்கு ஆறுதலாய் இருந்தது. செய்திக் கேள்விப்பட்டதும் ஓடிவந்திருக்கிறான். இத்தனை வருடங்களில் பழகிய ஒருவரும் கை கொடுக்க முன்வராதபோது இந்த சில மாதங்களில் இவன் தான் வலிய வந்து
உதவுகிறவனாய் இருக்கிறான். அவன் குறித்து இவள் கொண்டிருந்த வெறுப்புணர்வை தன் கரிசனத்தால் கடந்து சென்றிருக்கிறான். இப்போதைக்குத் தன்னை மீட்க முழு மனதோடு செயல்பட இவனால் மட்டுந்தான் முடியும். செய்தித் தாள்களை நர்ஸிடம் கொடுத்துவிட்டு "ரொம்ப தாங்க்ஸ்ங்க, நான் அப்பறம் வர்றேன்.." என வேகமாக எழுந்து போனாள்.

பார்வையாளர் அறையில் இவளுக்கு முன்பாகவே காத்திருந்தான். நீண்ட தூரப் பயணக் களைப்பில் உறக்கமில்லாத கண்கள் வாடிப்போயிருந்தன. மேக்கப் சரியாக களையாத முகத்தில் கருவளையம்
பெரிதாகத் தெரிந்தது. அவனைப் பார்த்ததும் இறுக அணைத்துக் கொள்ள
வேண்டுமென எழுந்த உணர்வைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். மென்மையாய்ச் சிரித்தவனின் முகம் பார்க்கப் பிடித்திருந்தது. பதினைந்து நிமிடம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்க, இருவரும் கைகளை

பிடித்துக் கொண்டு எதுவும் பேசாமல் அமைதியாய் நின்றனர்.
“எப்பிடியாவது பணம் ரெடி பண்ணிடலாம்னு ட்ரை பண்ணினேன் கடைசி வர
முடியல. சக்தி ஃபோன் பண்ணிச் சொன்னப்போ ரொம்ப கஷ்டமாகிடுச்சு..”
தானும் இந்த நிலைக்கு ஒரு காரணமென்கிற குற்றவுணர்ச்சியால் அவளை
எதிர்கொள்ள முடியாமல் தவித்தான்.
“ச்சே... ச்சே.. இதுல ஃபீல் பண்ண இருக்கு. படம் டைரக்ஷன் பண்ணனும்னு
ஆசப்பட்டது நானு. நீங்க ஹெல்ப் பண்ணீனிங்க. என்னோட கெட்ட நேரம்
சரியா ஃபண்ட் அமையல. மாட்டிக்கிட்டேன்.”
அவள் இயல்பாக எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் சற்று ஆறுதலடைய
முடிந்தாலும் அவளை எப்படி இதிலிருந்து மீட்பது என்பதைச் சுற்றியே அவன்
யோசனைகள் அலைந்தன.
“அதிகபட்சம் ஒரு பத்து நாள். அதுக்குள்ள எப்பிடியும் பணம் ரெடி
பண்ணிடறேன். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கோங்க. நேத்து நைட்டு
கேரளாவுல இருந்து நம்ம புரட்யூசர்ஸ் ரெண்டு பேர் பேசினாங்க. அவங்களும்
கொஞ்சம் பணம் தர்றதா சொல்லி இருக்காங்க. மொத்த பணத்தையும்
கண்டிப்பா நாம திருப்பிக் குடுத்துடலாம்.”
“ம்ம்... இதெல்லாம் முக்கியமில்ல பாபு. வெளில வந்து
எப்பபடியாச்சும் ஆரம்பிச்ச படத்த முடிக்கனும். இத்தன வருசமா நடிகையா
நான் பெருசா போராடல. சில விசயங்கள்ல விட்டுக் குடுத்தேன். பெருசா
வளந்தேன். ஆனா இப்போ ஒரு டைரக்டரா முதல் படம் எடுத்து
முடிக்கிறதுக்குள்ள எவ்ளோ பிரச்சன? இதக் கடந்து போகனும் பாபு.”
வருத்தங்களை விடவும் கோபமே அதிகமாய் வெளிப்பட்டது அவள் குரலில்.
”எல்லாம் நடக்கும்... நீங்க நம்பிக்கையோட இருங்க... இங்க உங்களுக்கு
சிரமம் ஒன்னுமில்லையே. சமாளிச்சுக்குவீங்களா?”
ஆனந்தி சிரித்தாள்.

“வெளில இருக்கறத விட இங்க நிம்மதியா இருக்கேன். ஒன்னும் வருத்தமில்ல. கஷ்டம் வரும்போதுதான மனுஷங்களத் தெரிஞ்சுக்க முடியுது.”

அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டாள். நேசத்தின் வெக்கையை பிரதிபலிக்கும் சூடு. அந்த அறை இன்னொரு முறை நீண்ட மௌனத்தில் இருந்தது. பாதுகாப்பிற்கு நின்றிருந்த பெண் காவலருக்கு இவர்களைப் பார்த்து

சிரிப்பு வந்தாலும் “ஸார், சிசிடிவி கேமரா இருக்கு. கொஞ்சம் டிஸ்டன்ஸ்

மெயிண்டய்ன் பண்ணுங்க. டைம் முடியப் போகுது. ஏதாச்சும் பேசுறதுன்னா

சீக்கிரம் பேசிட்டுக் கிளம்புங்க.”

வேறு எங்கோ பார்ப்பதுபோல் அவள் சொல்ல, இருவரும் நிதானம் கொண்டு கேமராவைப் பார்த்தனர். வாழ்வின் ஒரு பாதி நாட்களில் கேமரா அவர்களைத் தொடர்ந்து பார்த்தபடியேதான் இருக்கிறது. இந்தக் கேமராவிற்கு முன்னால் தங்களிருவருக்கும் என்ன வேஷம்? ஆனந்தி அந்தக் கேமராவையே பார்த்தபடி நின்றாள். பாபுவிற்கு அங்கிருந்து போக மனமில்லை. அவளைத் தனியாக விட்டுச் செல்கிறோமே என நினைக்க முட்டாள்த்தனமாக இருந்தாலும் அப்படி நினைப்பதைத் தவிர்க்க முடியவில்லை. அவளுக்கு நெருக்கமாகச் சென்றவன் “உங்களுக்கு எங்கிட்ட ஏதாவது தகவல் சொல்லனும்னு ஃபோன் பண்ணுங்க. இங்க இருக்கற கன்விக்ட் வார்டர்ஸ் கிட்ட கண்டிப்பா மொபைல் இருக்கும். வெளிலயே என்னோட பொருள் எல்லாத்தையும் வாங்கிட்டாங்க. ஆனாலும் உங்களுக்கு செலவுக்குக் குடுக்கனும்னு ஷூல வெச்சு கொஞ்சம் பணம் எடுத்துட்டு வந்தேன். இந்த போலீஸ்காரம்மா கிட்ட குடுத்திருக்கேன் நீங்க வாங்கிக்கங்க…”

ஆனந்தி சரியெனத் தலையாட்டிவிட்டு போலீஸ்காரியைப் பார்த்தாள். “முடிஞ்சதுங்களா? போகலாமா?” பாபு போலீஸ்காரிக்கு நன்றி சொன்னான். ஆனந்தி தன் செல்லுக்குத் திரும்பிய போது மனம் முழுக்க வீட்டிற்குத் திரும்பிச் செல்லும் நாளை எதிர்நோக்கி நிரம்பியிருந்தது. ”யாருக்கும் சொல்லாத கதை.” தன் படம். தன் குழந்தை. அதைப் பெற்றுப்போட்டுவிட்டால் போதும். அதன்பிறகு செத்துப் போவதென்றாலும் சம்மதம் தான். எல்லாவற்றிற்கும் தேவை பணம். இத்தனை காலம் சம்பாதித்தும் சேர்க்கத் தவறிய அந்த வஸ்துவை மீண்டும் சம்பாதித்துக் கொடுக்க தன்னுடலால் முடியும். இன்னும் அது தன் வனப்பை இழக்கவில்லை என்பதை மற்றவர்களைப் போல் அவளும் நம்பினாள். ஜீன்ஸுக்கும் உள்ளாடைக்கும் இடையில்

பாபு கொடுத்துவிட்டுப் போன பணம் முன்னைவிடவும் அதிகமாக கசங்கிக் கொண்டிருந்தது.

# சில மாதங்களுக்கு முன்.

கேமராவிற்கு முன்னால் ஆனந்தியின் உடல்.

”வாழ்க்கை பேராசை மிக்கது, குறைவான நினைவாற்றலைக் கொண்டது.”

– போர் தொடர்கிறது ( அகஸ்டோ ருவா பாஸ்டஸ். )

மஞ்சள் விளக்கு வெளிச்சத்தின் சூடு அவளின் உடல் முழுக்க இன்னும் பரவிக்கிடக்க அந்த மரவீட்டில் தனக்கென ஒதுக்கப்பட்ட சின்னதொரு அறையில் உடலை சுருட்டிக் கொண்டு படுத்துக் கிடந்தாள். ஒற்றை மரத்தில் சில கட்டைகளை மட்டும் ஊடாகக் கொடுத்து கட்டப்பட்ட வீடுகள். குளிர் நிரம்பிய அந்த மலைக்கிராமத்தில் இதுபோல் இன்னும் சில மரவீடுகள் கொண்ட ரிசார்ட்டுகள் இருக்கின்றன. ஆனால் இந்த ரிசார்ட்டை ஒட்டித்தான் பெரும் சத்தத்துடன் ஆறு ஓடுகிறது. ஆனந்திக்குப் பிடித்தமான இந்த இடத்திற்கு இதற்கு முன்பும் சில படங்களுக்காக வந்திருக்கிறாள். பெரும்பாலும் இரவு படப்பிடிப்பிற்கு அவள் ஒத்துக்கொள்வதில்லை. நாளை இன்னொரு படப்பிடிப்பிற்காக கோட்டயம் போக இருப்பதால் அவசரமாக இந்தக் காட்சிகளை முடித்துக் கொடுக்க சம்மதித்தாள். அவளுக்கு அருகிலிருந்த மூங்கில் அலமாரியில் குடித்துவிட்டு மிச்சம் வைத்திருந்த மது அரைபாட்டிலுக்கும் மேல் இருந்தது. ஐஸ் கட்டிகளை மட்டும் போட்டு சமீபமாய் அப்படியே குடிக்கப் பழகி இருப்பவளுக்கு அதீதமான மதுவின் இருப்பில் உடல் கசந்தது. ”முதிர் வயதுள்ள ஸ்த்ரீகளும் அப்படியே பரிசுதத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்திற்கு அடிமைப்படாதவர்களுமாய் இருக்கவும்.” எப்போதோ படித்திருந்த பைபிளின் வரிகள் மனதின் அடியாழத்தில் நீந்திக் கொண்டிருந்தன.

அவளால் மதுவின்றி வாழ முடியாது. அதுவே அவளின் மீட்பர். உடல் கோளாறுகள் காரணமாய் சமீபமாய் கொஞ்சம் குடிப்பதை குறைத்திருப்பவள் உறங்குவதற்காகவென்றே பிரத்யேகமாய் சில மாத்திரைகளை எடுத்துக் கொள்ளத் துவங்கி இருக்கிறாள். உறக்கம்

பெரும் விலையைக் கேட்டு நின்றது. இன்று தூங்க நேரமிருக்குமோ தெரியவில்லை. அடுத்த ஷாட் ரெடியாகும் வரை கொஞ்சம் அசரலாமென கண்ணை மூடினாலும் சளி நெஞ்சில் இருந்து தொண்டைக்கென ஏறி மூச்சை அடைத்தது. சிலமுறை காறி ஜன்னல் வழியாய் வெளியே துப்பினாள். ஆனாலும் அப்படியே அதே இடததில் இருப்பது போலிருந்தது. படுக்கையிலிருந்து எழுந்து கொண்டவள் ஏணியின் மீதேறி இருளில் ஆற்றையே பார்த்தபடி நின்றாள். நீரின் பெருஞ்சத்தம் வனம் முழுக்க எதிரொலித்துக் கொண்டிருந்தது. நீருக்கு எங்கிருந்து சத்தம் வருகிறது? என அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே "மேடம் ஷாட் ரெடி..." பின்னாலிருந்து ஜோபியின் குரல் கேட்டது. இந்தப் படத்தின் பிரதான உதவி இயக்குனன். பார்க்க மெலிந்து ஒடுங்கிப் போயிருந்தாலும் வலுவானவன். இரவு பகலென தனியாளாக எல்லா வேலைகளையும் செய்யக்கூடியவன் என்பதால் அவன் மீது இவளுக்கு மரியாதை உண்டு. மெதுவாக அவனுக்குப் பின்னாலேயே மரப்படிகளில் இறங்கினாள். கீழே அவளுக்காக காத்திருந்த டச் அப் பாய் வேகமாக வந்து அவளுக்கு நாற்காலி போட்டான். அவள் உட்கார்ந்த்தும் இயந்திரம் போல் முகத்தில் கொஞ்சம் பவுடர் ஒத்தி எடுத்தான். கண்களை மூடியிருந்தவளின் நாசிக்குள் ரோஸ் பவுடரின் பழக்கப்பட்ட வாசனை ஏறிக் கிளர்த்தியது. இந்தப் பவுடரை உடல் முழுக்க பூசிக்கொள்ள வேண்டுமென்கிற முட்டாள்த்தனமான ஆர்வத்தில் தான் சினிமாவுக்கு வந்தாள்.

"ஷாட் ரெடி ஆனந்தி.. சீக்கிரம் வாங்க..."

இயக்குநரின் சத்தம் கேட்க, சிரித்தபடியே எழுந்து கொண்டு ஒருமுறை சோம்பல் முறித்தாள். கேமராவிற்கு மிக அருகில் அந்தக் குளிரிலும் வெறும் லுங்கியுடன் பாபு ஷாட்டிற்குத் தயாராக இருந்தான். பி கிரேட் படங்களில் பிரபலமான நடிகன். ஆறடிக்குக் குறையாத உயரம். முறுக்கேறிய உடல் குளிரைப் பொருட்படுத்தாது திமிறிக் கொண்டிருந்தது. ஆனந்திக்கு அவனைப் பார்க்க பாவமாய் இருந்ததால் திரும்பி டைரக்டரைப் பார்த்தவள்

"டைரக்டர் ஸார் இந்தக் குளிர்லயும் அந்த மனுஷன் வெறும் மேலோடதான் நிக்கனுமா? பாவம் ஸார்..."

சொல்ல, டைரக்டர் சிரித்தபடி

"என்ன செய்றதும்மா ஷாட்டுக்குத் தேவைன்னா இருந்துதான ஆகனும்." என அந்த ஷாட்டை எடுத்து முடிக்கும் ஆர்வத்தில் இருந்தார். ஆனந்தி முடிச்சிட்டிருந்த தன் கூந்தலை அவிழ்த்து விட்டாள். ஜோபி

கடைசி ஷாட்டின் ஆக்ஷன் கண்டினியூட்டி சொன்னான்.

“அவர் உங்கள லெஃப்ட் ஹேண்ட்ல அடிக்கிறாரு, நீங்க இந்த இடத்துல விழறீங்க.. அதுக்கப்பறம் உங்கமேல அவர் விழுந்து புரள்றப்போ உங்க வலது கையை வெச்சு அவரத் தள்ளனும்…”

அவனே அவளக்குப் பதிலாக நடித்துக் காட்டியிருந்தான். கவனமாகப் பார்த்துக் கொண்டவள், ஒருமுறை தான் விழப்போகும் இடம் எல்லாவற்றையும் பார்த்து மனதளவில் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள். டைரக்டரைப் பார்த்து ரெடி என்பது போல் தலையாட்ட அவ்வளவு நேரமும் அமைதியாய் இருந்த பாபு கேமராவிற்கு இடது பக்கமாய் வந்து நின்றான். ரெண்டு ஷாஃப்டி லைட் மட்டும் தான் வைத்திருந்தார்கள். அதனால் இப்பொழுது பெரிய சூடு இல்லை. லைட் வெளிச்சத்திற்கு கூட்டமாய் அப்பியிருந்த பூச்சிகள் தான் அவ்வப்போது தலையைச் சுற்றிப் பறந்து இம்சித்துக் கொண்டிருந்தன.

“சவுண்ட், கேமரா, ஆக்ஷன்.” டைரக்டரின் குரல் கேட்க பாபு காமம் தலைக்கேறிய ஒரு அசலான மிருகமாய் அவள் மீது பாய்ந்தான். அவர்கள் இருவருக்கும் ஒரு போராட்டமே துவங்கியது. ஆனந்தி அந்தக் காட்சியில் சிரமப்பட்டு நடிக்கத் தேவை இருக்கவில்லை. பாபு நிஜமாகவே அவளை கற்பழித்துவிடும் வெறியில் உடலை கீறுவதும் உடையைக் கிழிப்பதுமாய் இருந்தான். முதல் சில நொடிகள் அவன் தீவிரமாக நடிக்கிறானோ என நினைத்தவள் அவன் வெறி கொண்டு இயங்குகிறான் என்பது புரிந்ததும் சமாளிக்க முடியாமல் திணறினாள். டைரக்டர் கட் சொல்லும் வரை சமாளித்துக் கொள்ளலாமென இப்படியும் அப்படியுமாய் உருள, தான் நினைத்ததை விடவும் காட்சி சிறப்பாக வருகிற திருப்தியில் டைரக்டர் இன்னும் கொஞ்சம் போகட்டுமென அமைதியாய் காத்துக் கொண்டிருந்தார். ஆனந்தியால் முடியவில்லை. கையை பாபுவின் லுங்கிக்குள் குடுத்து வேரோடு பிடுங்கி இழுப்பது போல் இழுத்தாள். பாபு அலறியபடி அவளிடமிருந்து விலக முயன்றான். அவ்வளவு எளிதில் விலக முடியாதபடி பிடி வலுவாக அவளின் கைக்குள் இருக்க அவன் அலறியது காட்டின் பெரும் மௌனத்தை சலனப்படுத்தி எதிரொலித்தது. டைரக்டருக்கு இப்பொழுதுதான் விபரீதம் புரிய அவசரமாய் ‘கட்,கட்,கட்” எனக் கத்தினான். தனது பிடியை விட்டவள் அவனைத் தன் மீதிருந்து விலக்கிவிட்டு எழுந்து கொண்டாள். பாபுக்கு கண் மங்கலாகி எதுவும் தெரியாமல் போய்விட்டது. வலி தாளாமல் அலறியவனை யூனிட்டில் இருந்தவர்கள் வந்து தூக்கிக் கொண்டு போனார்கள்.

ஆனந்தி திரும்பி தன் டச்சப் பாயைப் பார்க்க அவன் ஓடிவந்து கப்பில் அவளுக்கு டீ ஊற்றிக் கொடுத்தான். வாங்கிக் குடித்தபடியே நிதானமாக உட்கார்ந்து ஆற்றின் சத்தத்தை மீண்டும் கேட்டாள். ஆறும் ஏதோ வலியில் அலறுவது போலிருந்தது.

ஆற்று நீருக்கு எங்கிருந்து சத்தம் வரக்கூடும்?

ஜோபி அவசரமாக ஓடிவந்தான்.

"என்ன மேடம் இப்பிடி பண்ணீட்டிங்க? இப்போ எப்பிடி ஷூட் பன்றது?" ஆனந்தி சிரித்தாள்.

"ஏன் பேசாம நீ அவனுக்குப் பதிலா டூப் போடேன், மனுஷன் மாதிரியா நடந்துக்கறான். பொம்பளையவே பாக்காத மிருகம் மாதிரி இருக்கான். உங்க டைரக்டருக்கு தியேட்டர்ல ஆடியன்ஸ் பாத்து டெம்ப்ட் ஆகற மாதிரி ஷாட் எடுத்துடனும். அதுக்கு யார் செத்தாலும் பரவா இல்லைன்னு வேடிக்க பாத்துட்டு இருப்பாரு. த்தூ."

காறித் துப்பியவள் தன் வலது தோள்ப்பட்டையைக் காட்டினாள்.

"நாயி எப்பிடி கடிச்சிருக்கான் பாரு...."

பாபுவின் பல் தடம் பட்டு அவளின் தோல் ரத்தமாய் சிவந்து போயிருந்ததைப் பார்க்க ஜோபிக்கும் சங்கடமாய் இருந்தது. என்ன சமாதானம் சொல்வதெனத் தெரியாமல் நிற்கும் போதே டைரகடர் எரிச்சலோடு வந்தார்.

"என்னம்மா சீக்கிரம் முடிச்சு அனுப்பனும்னு தான அவ்ளோ பேரும் கஷ்டப்படறோம். அது புரியாம இப்பிடிப் பன்றியே. ச்சே."

திரும்பி ஜோபியைப் பார்த்தவர்

"இவங்க டூப் தேர்ட் ரூம்ல இருப்பாங்க, அவங்கள ரெடி பண்ணு, கொஞ்சம் நியூட் ஷாட்ஸ் எடுத்துக்கலாம். அதுக்கு முன்னால ஆனந்தியோட ரியாக்ஷன்ஸ் மட்டும் எடுப்போம் கேமரா மேனக் கூப்புடு."

ஜோபி கேமராமேனைக் கூப்பிட ஓடினான். ஆனந்தி எதுவும் பேசாமல் டீயைக் குடித்துவிட்டு கப்பை வைத்தாள். கண்ணாடி பார்த்து ஒரு முறை டச்சப் செய்து கொண்டவள் ரெடியாகி பரந்து விரிந்த அந்த பெட்டில் போய் உட்கார்ந்தாள். கேமரா மேன் இப்பொழுது ஒரு ஷாஃப்டியை ஆஃப் செய்துவிட்டு ஒன்றை மட்டும் ஆன் செய்து வைத்திருந்தார். இது மாதிரி ஷாட்களில் நடிக்கும் போது பல சமயங்களில் அவளுக்கு சிரிப்பு

வந்துவிடும். வெறுமனே முகம் மட்டும் உச்சபட்ச காமத்தை அனுபவிக்கும் பாவத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனந்தியின் இதழ்களும் கண்களும் தனித்துவமானவை என்பதால் பிண்ணனியில் வரும் குரலுக்கும் இவள் முகத்திற்குமே பார்க்கிறவர்களுக்கு உச்சத்திற்குப் போய்விடும். வழக்கமான ரியாக்ஷன்ஸ் இல்லாமல் இன்று ஏதாவது புதிதாக செய்ய வேண்டுமென நினைத்துக் கொண்டாள். கற்பழிக்க வரும் ஒரு ஆணிடம் கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை இழக்க வேண்டும். அப்பொழுது அவனது அதீத ஆண்மையில் தன்னை முழுதாக அவனிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த டைரக்டருக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் பெர்வெர்ஷன் விழித்துக் கொண்டு வெளியே வந்தால் ஒருவேளை அவர் பாபுயை விடவும் கொடூரமானவராய் இருக்கலாமென அச்சப்பட்டாள்.

“ரெடி, ரெடி.,டேக்.” டைரக்டர் சும்மாவேனும் கத்திக் கொண்டிருக்க, கேமரா மேன் மெதுவாக அவரை கூப்பிட்டு “எல்லாம் சரி, இன்னும் ஒரு மணி நேரத்துக்கு பாபு வரமுடியாது யார டூப்பா வெச்சு ஷாட் எடுக்கப் போறீங்க?” டைரக்டர் திரும்பி ஜோபியைப் பார்த்தார். “போயி பாபு போட்டிருந்த லுங்கிய மாத்திட்டு சீக்கிரமா வா.” தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின் உண்மைத்தன்மை புரிந்தும் புரியாமலும் அடுத்து என்ன நடக்கப் போகிறதோவென சுவாரஸ்யத்தோடு ஜோபி அங்கிருந்து போனான்.

லுங்கியில் திரும்பி வந்தபோது பாபுவைப் போன்ற முரட்டுத் தோற்றம் இல்லாது போனாலும் கொஞ்சம் வாட்ட சாட்டமான ஆளாகவே ஜோபியும் இருந்தான். ஆனந்தி அவனைப் பார்த்து சிரித்தாள். ஒரு நிமிடம் யூனிட்டில் இருந்த ஆட்களைப் பார்த்தபோது எல்லோருமே சிரிப்பது போலிருந்தது. படுக்கையில் சாய்ந்து படுத்துக் கொண்டவள் எப்போதும் போல் கண்களை மூடிக்கொள்ளாமல் திறந்தே வைத்திருந்தாள். “ஓகே ரெடி டேக். ஆன்ந்தி ரெடி, ஜோபி ரெடி.” என எல்லோருக்கும் ரெடி சொல்லிவிட்டு டைரக்டர் ஆக்ஷன் சொல்ல ஜோபி அவள் மீது பாய்ந்து புரண்டு கற்பழிக்கத் துவங்கினான். அவன் உடல் கீ கொடுக்கப்பட்ட பொம்மையைப் போல் இயங்கினாலும் உள்ளூர அவன் பயந்து கொண்டிருந்ததால் அவனால் சரியாக செய்யமுடியவில்லை. அவள் அவனை இன்னும் மூர்க்கமாய் நடிக்கச் சொல்லி காதுக்குள் கிசுகிசுத்தாள். அதைக் கேட்டதும் முன்னைவிடவும் பயம் அதிகமாக அவன் வேகம் குறைந்தது. டைரக்டர் எரிச்சலோடு “கட் கட் கட்” எனக் கத்தினார்.

“டே ரேப் இது ரேப் சீன். நீ போயி தடவிக் குடுத்துட்டு இருக்க. இதுல

நடிக்கிறதுக்கு யோசிச்சா நீ எப்பிடி டைரக்டர் ஆகறது? ஒழுங்கா பன்னுடா.” மீண்டும் அந்த ஷாட்டை எடுக்க ஆயத்தமானார்கள். முடிந்த வரை ஆனந்தியின் கண்களைப் பார்க்கக் கூடாதென நினைத்துக் கொண்ட ஜோபி அந்த ஷாட்டில் மிகச் சிறப்பாக நடிக்கத் துவங்கினான். அவளை நிஜமாகவே முத்தமிட்டான். உடலை இறுக்கி அணைத்து நீண்ட காலம் அடைத்துக் கிடந்த வீட்டிலிருந்து வெளியேறும் ஜன்னல் காற்றைப்போல் அவளுக்குள் ஊடுருவியவனை ரசித்தவள் மிகச் சரியாக கேமராவிற்கான உணர்ச்சி வெளிப்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். கண்களை மூடி கழுத்தைப் பின்னால் இழுத்து காமம் பொங்குவது போல் காட்டுவது, பின் உதட்டைக் கடித்து காம வேதனையில் உடலை நெளிப்பதென மிக அழகாக எல்லா உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். உடலிலிருந்து முக்கால்வாசிக்கும் மேல் உடைகள் களைந்து போயிருந்ததை அவள் பொருட்படுத்தியிருக்கவில்லை. முழுமையாக அவனோடு முயங்கிப் போனவளை கேமரா பெரும் பசியுடன் பதிவு செய்தது. திருப்தியோடு டைரக்டர் ‘கட்’சொல்ல ஜோபி அவசரமாக அவளில் இருந்து பிரிந்தான். லுங்கியைப் பிளந்து வெளியேறும் மூர்க்கத்துடன் நீண்டிருந்த அவன் குறியை அப்போதைக்கு ஆனந்தி மட்டுமே கவனித்திருக்க நல்ல வேளையாக லைட்மேன் லைட்டை ஆஃப் செய்திருந்தார். காதலைத் தேக்கி வைத்திருக்கும் ஒருவனோடு நிகழ்ந்த மகரந்தசேர்க்கை அது. அவளது இதயத்தின் சுவரெங்கும் துளிர்த்திருந்த நேசத்தின் நீர்த்துளிகள் கடலாகப் பொங்கியது.

ஆனந்தி ஓய்வெடுக்கப் போக வேண்டும். அவளுக்கு வழக்கமாக் டூப் போடும் பெண் உடலில் ஒரு டர்க்கி டவல் மட்டும் கட்டியிருந்தாள். கடும் குளிருக்கு ஈடு கொடுக்க முடியாத உடலின் ரோமங்கள் புல்லரித்துப்போய் எழுந்து நின்றன. நெற்றியில் இன்னுமே கூட சந்தனம் அழிந்திருக்கவில்லை. ஆனந்தியின் நிழலைப் போல் அவளது எல்லாப் படப்பிடிப்பு தளங்களிலும் வருகிறவளுடன் அதிகம் பேசியதில்லை. அவளுக்கு தமிழ் சரியாக பேச வராது, ஆனந்திக்கு மலையாளம் சரியாக பேச வராது. அதனால் இருவரும் சிரித்துக் கொள்வது ஓரிரு வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வது என்கிற அளவிலேயே இருப்பார்கள். அவளோடு நடிப்பதற்கு பாபு தயாராகி வந்திருந்தான். ஆனந்தியைப் பார்த்து முறைத்தவன் கேமராவிற்கு அருகில் போய் உட்கார்ந்து கொண்டான். கால்களை அருகருகே வைக்க முடியாத அளவிற்கு இன்னும் வலி இருந்ததால் கொஞ்சம் அகட்டியே நின்றிருந்தான். ஆனந்தி தனக்கு டூப் போடும் பெண்ணைப் பார்த்து புன்னகைக்க, பதிலுக்கு அவள் காற்றில் அசைந்தாடும் இளம்

நெல்வயலைப் போல் அழகானதொரு புன்னகையைத் தந்தாள். எல்லாம் தயாராகி ஷாட்டிற்காக மேலாடையை விலக்கி அரை நிர்வாணமாய் அவள் படுக்கையில் வந்து படுத்தாள். கீழே அணிந்திருந்த பூப்போட்ட ஜட்டி பெருத்த அவளின் உடலுக்குப் பொருத்தமாக இல்லை. பாபு அந்த வலியையும் மீறி அவனுக்குள்ளிருந்த பழையை மிருகத்தை எழுப்பி அவளோடு புணரக் கிடந்தான். அவள் செயற்கையாய் சில சத்தங்களை எழுப்ப இருவரும் மூர்க்கமாக உருண்டு கொண்டிருந்தனர். அவ்வப்போது கேமரா பொஷிசன் மாறுகிற பொழுதெல்லாம் ஜோபி மறக்காமல் பாபுவின்ன் மீதும் அந்தப் பெண்ணின் மீதும் ஸ்ப்ரே அடித்தபடியே இருந்தான்.

மிச்சமிருந்த சரக்கிலிருந்து கொஞ்சத்தை ஊற்றிக் கொண்டு அவள் ஆற்றை நோக்கி இருந்த ஜன்னலருகில் நிற்க, கீழே ஆற்றின் எதிர்ப்புறத்தில் ஒரு பெரிய யானையும் குட்டியானையும் நிதானமாக நீர் அருந்திக் கொண்டிருந்தன. யானையை இதுமாதிரியானதொரு சூழ்நிலையில் இதற்கு முன் பார்த்திராதவளுக்கு அந்தக் கணம் அற்புதமானதாய் இருந்தது. மரங்களுக்குப் பின்னால் எங்கோ ஒளிந்து கொண்டிருந்த நிலா மெதுவாக நகர்ந்து வந்து யானைகளுக்கு மேல் எட்டிப்பார்த்தது. நிலா வெளிச்சம் பட்ட யானைகளின் உடல் பிம்பம் நீரில் மிளிர்ந்தது. தீட்டி முடிக்கப்பெறாத ஒவியம் போல் அந்த யானைகள் எந்தவிதமான சலனமுமில்லாமல் மிக அமைதியாய் ஆற்றங்கரையிலேயே உட்கார்ந்திருக்க, இவளும் அவற்றைப் பார்த்தபடியே உட்கார்ந்தாள். அந்த இருட்டில் எப்படியும் யானையின் கண்களைப் பார்த்துவிட வேண்டுமென விரும்பியவளுக்கு அது சாத்தியப்படவே இல்லை. பெரிய யானை ஒருமுறை வாலை ஆட்டிக் கொண்டதைப் பார்க்க வினோதமாயிருந்த்து. எதற்காக யானைகள் வாலை ஆட்டுகின்றன? எச்சரிக்கை உணர்வா? அல்லது சந்தோசமா? அவள் அந்த வாலையேப் பார்த்துக் கொண்டிருக்கையில் குட்டியானை தனது துதிக்கையால் பெரிய யானையின் வயிற்றில் தடவிக் கூப்பிட்டது. இரண்டு யானைகளும் மெதுவாக அங்கிருந்து நடந்தன. அவளுக்கு ஜோபியின் நறுமணம் தன்னைச் சுற்றி படர்ந்து விரிவது போன்று இருந்தது. அவசரமாக கையிலிருந்த மதுவைக் குடித்துவிட்டு இன்னொரு கிளாஸ் ஊற்றினாள். தன்னை விட வயதில் ரொம்பவும் சிறியவன், அவனுடனா? ச்சே ச்சே. தன் மீது எழுந்த வெறுப்பில் கிளாஸில் இருந்த மதுவை முன்னைவிடவும் வேகமாகக் குடித்தாள். இப்பொழுது ஜோபி ஒரு ஆணாக மட்டுமே அவளுக்குத் தெரிந்தான். எல்லோரையும் போல ஒருவன், வயதால் எல்லாம் பிரித்துப் பார்க்க முடியாத ஒருவன்.

பின்னிரவு படப்பிடிப்பு முடிந்தபொழுது எல்லோரும் சோர்வுடன் களைந்து செல்ல குளிருக்கு சால்வையைப் போர்த்திக் கொண்ட ஆனந்தி டச்சப் பாயிடம் இருந்து தன் செப்பலை வாங்கிப் போட்டுக் கொண்டு நடந்தாள். கோட்டயத்திற்கு இவளுக்கு முன்பாகவே சக்தி போய்விட்டாள். இவளுக்குத் தேவையான எல்லாமும் இந்நேரம் அங்கு தயாராகி இருக்கும். அலுப்போடு சக்தி உடலை நெட்டி முறிக்க, பாபு தயக்கத்துடன் வந்தான்.

”ஸாரிம்மா... ரொம்ப ரூடா நடந்துக்கிட்டேன்...” மன்னிப்புக் கேட்டான். குரல் மன்னிப்புக் கேட்டாலும் உடல் விறைப்போடிருந்தது. இயல்பிலேயே அவன் அப்படித்தானென்றால் எத்தனை பரிதாபத்திற்குரியவன்? வெறுமனே அவனைப் பார்த்து சிரித்தபடி இவளும் மனிப்புக் கேட்டுவிட்டு ஜோபியைத் தேடினாள். யூனிட்டில் எப்போதுமில்லாத கவனிப்பு அன்று ஜோபிக்கு. அவனுமே நிதானப்பட்டவனாய் இருக்கவில்லை, வழக்கத்திற்கு மீறின உற்சாகத்தில் சுற்றியவன், ஆனந்திக்கு டூப் போட்ட பெண்ணின் உடைகளை எடுத்துக் கொடுத்து அனுப்பிவிடப் போயிருந்தான். .

நிதானமாக தனது மரவீட்டிற்கு படியேறிப்போனவளின் பின்புறங்களை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த பாபு அன்றும் அவளுடன் உறங்க முடியாது போன ஏக்கத்தில் கண்கள் கலங்கிப் போயிருந்தான். முரட்டு மான்கொம்புகள் தன் பின்புறத்தை முட்டித் துளைப்பது போல் தோன்றியதில் திரும்பிப் பார்த்த ஆனந்திக்குத் தெரிந்ததெல்லாம் பாபுவின் கனல் போன்ற கண்கள் மட்டும் தான். நீரருந்திய யானையிடம் இவள் பார்க்க விரும்பிய கண்களாகவோ அந்த வனத்தின் ஏதோவொரு மூலையில் ஏதோவொரு மிருகத்தை வேட்டையாத் துரத்திக் கொண்டிருக்கும் கறுஞ் சிறுத்தையின் கண்களாகவோ தான் அந்தக் கண்கள் நெருப்பாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன. ஒரு மனிதனின் உடல் பற்றி எரிகிறதை அதிகமும் பிரதிபலிப்பது கண்களாகத்தான் இருக்கின்றன. அவன் பார்க்க தன் உடலைத் திருப்பி சேலை விலகிய தன் மார்புகள் ஒளிர நின்றாள். அவளுக்கு எந்தத் தயக்கங்களும் இல்லை. தன் உடலின் சின்னதொரு கனலைக் கூடத் தாங்க்கூடியவனல்ல அவன். ஒரு பெண்ணுடன் முரட்டுத்தனமாய் அத்துமீறி உறவு கொள்ள நினைக்கும் ஒருவனால் எந்த ஒரு பெண்ணுடனும் உறவு கொள்ள முடியாது. உடல் மகத்தான கதவுகளுக்குப் பின்னாலிருக்கும் வனம். அந்தக் கதவுகளை வன்முறையால் உடைத்துச் செல்ல நினைக்கும் ஒருவன் அந்தக் கதவுகளில் தன் வாழ்க்கை முழுக்கவும் மோதி மோதி சுக்கு நூறாய் நொறுங்கிப் போகிறான். பாபு அது மாதிரி நொறுங்கிப்

போகிறவர்களில் ஒருவன். இத்தனை தூரத்திலும் கூட மூச்சுவிடுவதில் துடிக்கும் ஆனந்தியின் மார்புகளைப் பார்த்தவன் அவளை நெருங்கிச் செல்லும் துணிச்சலற்று அவசரமாக தன் அறைக்குத் திரும்பி நடந்தான். எதிரில் வந்த ஜோபியைப் பார்த்தும் வெறுப்பில் உடல் பற்றி எரிந்தது. "மேடம் கூப்ட்டிங்களா?" என தயக்கத்தோடு படியேறிய ஜோபியை இழுத்து தனது அக்குளுக்குள் அணைத்துக் கொண்ட ஆனந்தி பாபு பார்க்கும்படி அழுந்த முத்தமிட்டாள். ஜோபியின் காது நரம்புகள் சிலிர்த்துக்கொள்ள அவள் அக்குளுக்குள் ஆயிரம் முத்தங்களை கொட்டும் வெறியுடன் அவளோடு பிணைந்தான். கீழே நின்று உடல் கொதிக்க பார்த்துக் கொண்டிருந்த மிருகம் எதுவும் செய்ய முடியாத ஏமாற்றத்தில் சிலமுறைக் காறித் துப்பிவிட்டு இருளுக்குள் வேகவேகமாய் நடந்து மறைந்தது.

# பாபுவின் தனிமை.

படப்பிடிப்பு முடிந்து ஊர் திரும்பிய பின்னும் பாபுவுக்கு கோவம் குறைந்திருக்கவில்லை. ஆனந்தியின் மீதான வெறுப்பு கசந்த வேரென அவன் உடல் முழுக்க கிளைவிட்டுப் பரவியது. வன்மத்தை என்ன செய்தாலும் கொலை செய்யவோ அழிக்கவோ கடக்கவோ முடியாது. அதற்கு உடன்பட வேண்டும், அல்லது அதைக் கையில் எடுக்க வேண்டும். ஆனந்தி தன் உடலால் வெகு எளிதாக நிகழ்த்திவிட்ட வன்மத்திற்கு முன்னால் எதுவும் செய்ய முடியாது நொறுங்கிப் போனவன், கூடிய விரைவில் அதைக் கையிலெடுத்துவிட வேண்டுமென நினைத்துக் கொண்டான். எஜமானனாய் அல்ல, அடிமையாய் மண்டியிட வேண்டுமென விரும்புகிறாளோ? அதுதான் விருப்பமென்றாலும் காமம் தீரும் மட்டிலும் தீர்ந்த பின்னுமே கூட என்றென்றைக்குமாய் அவளின் முன்னால் மண்டியிட்டு நிழலென பணிந்து கிடக்கத் தயாராகவே இருக்கிறான். ஆனால் எந்த வாய்ப்புகளையும் அவனுக்காக விட்டுவைத்திருக்கவில்லை. அவளிடம் பிரமாதமாய் சொல்லிக் கொள்ள ஒன்றுமில்லைதான், ஆனாலும் அருகில் செல்லும் போது தன்னை மீறி புலன்களைக் கிளர்த்தும் ஒரு மாயம் இருக்கிறது. எதையும் அசட்டையாக நினைக்கும் அந்தப் பார்வை, தனக்கு முன்னால் ஆண் எப்போதும் ஒன்றுக்கும் ஆகாதவனே என்பது போல் அவளுக்குள்ளிருக்கும் செருக்கு.

“பாபு... அவளா விருப்பப்பட்டா மட்டுந்தான் அவள நோண்ட முடியும், சும்மா அத்துமீறி எதுவும் செஞ்சிடலாம்னு நெனச்சிடாத...” ஷூட்டிங் முடிந்து கிளம்பும் போது அந்தப் படத்தின் டைரக்டர் அன்பாகச் சொல்லி அனுப்பினான். நம்பிக்கையின் தானிய மணிகளை தொடர்ந்து அவள் பொருட்டு விதைத்துக் கொண்டிருந்தவனுக்கு அடுத்த முறை அவளுடனான சந்திப்பு வரையிலும் காத்திருக்க விருப்பமில்லை. ஆனந்திக்கு சில பரிசுகளை அனுப்பிக் வைத்தான். அவள் அதனை வாங்கிக் கொண்டாளா? இல்லையா? இன்னும் படப்பிடிப்பில் தான் இருக்கிறாளோ? எந்தப் பதிலும் இல்லாமலிருந்தது. அவள் எண்ணுக்கு அழைத்தான்.

“ஹலோ...”

சக்தி தான் இணைப்பில் வந்தாள். ஆனந்தியின் உதவியாளினி... அவளது எல்லா சமயங்களிலும் அவளைப் பாதுகாக்கும் திருநங்கை.

”நான் பாபு பேசறேன்...”

’ம்... சொல்லுங்க...’ பாபுவுக்கு பதட்டமாக இருந்தது. கேட்கலாமா? வேண்டாமா? ஃபோனை கட் செய்ய முடியாமல் தயங்கியபடியே

“நான் அவங்களுக்கு கொஞ்சம் கிஃப்ட்ஸ் அனுப்பி இருந்தேன். கிடைச்சதா?”

“ஓ அது நீங்கதானா? யாரோ அவங்களோட ரசிகர் அனுப்பி இருப்பாங்கன்னு நெனச்சோம்... ஆனந்திம்மா இன்னும் ஷூட்டிங்ல தான் இருக்காங்க. ஊருக்குப் போனதும் கண்டிப்பா பிரிக்க சொல்றேன்.” பாபுவிற்கு அதற்கு மேல் பேசத் தோன்றவில்லை. “

சரிங்க சக்தி... நான் அப்பறமா பேசறேன்...”

இணைப்பைத் துண்டிக்கப் போனான்...

”ஏதாச்சும் பரிசு குடுக்கறதுன்னா நீங்க நேர்லயே வந்து கொடுக்கலாமே? எதுக்கு கூரியர் எல்லாம்? அவங்கள நேர்ல பாக்க அவ்ளோ பயமா?”

பாபு அவசரமாக மறுத்தான், “ச்சே ச்சே அப்பிடி எல்லாம் இல்ல.... ஒரு சின்ன மிஸ் அண்டர் ஸ்டேண்டிங்... அதனாலதான்....”

“ஓ....சரி சரி... ஆனந்தியம்மா கிட்ட நான் விசயத்த சொல்றேன்...” சக்தியின் சிரிப்பில் இந்த முறை கேலி இருக்க “சரிங்க தாங்க்ஸ்...” பாபு அவசரமாக இணைப்பைத் துண்டித்தான்... கடைசியாக சக்தி ‘மாதர் சோத்’ என மெல்லிய குரலில் சொன்னது மட்டும் காதில் கேட்டிருக்க அவனுக்கு வெறுப்பில் முகமெல்லாம் வியர்த்துப் போயிருந்தது.

இவள் எதற்கு தன்னை மாதர் சோத்தெனத் திட்டினாள்? ஒரு பெண்ணை அவளின் விருப்பம் தாண்டி அடைவதுதான் தனக்கு என்றெறைக்குமாய் விதிக்கப்பட்டிருக்கிறதோ? அவனுடல் மிருக பிம்பம். மிருகங்களின் அதீத கவுச்சி வாடை சுவாசமெங்கும் நிறைந்திருக்கிறது. நாவினடியில் எப்போதும் தாபத்தைத் ருசிக்கக் காத்திருக்கும் உமிழ்நீர் சுரந்தபடி இருக்கும். செய்ய முடியாத எல்லாவற்றையும் செய்வதாய் கேமரா அவனை இயக்கிக் கொண்டிருந்தது. கன்னட, மலையாளப் படங்களில் நடிக்கும் போது, அந்தப் படங்களின் நாயகிகள் முதல் புணர்ச்சிக்கு இத்தனைத் தயங்குவதில்லை. மிக எளிய விலைகளுக்கு இணங்குகிறவர்களாய் இருந்தார்கள். ஆனந்தி மட்டும் விதிவிலக்கு.

**“bitch….”**

நூறாய் ஆயிரமாய் வார்த்தைகளால் அவளை சுக்கு நூறாய்க் கிழித்துப் போடவேண்டும். தன் முன்னாலிருக்கும் எல்லாமும் ஆனந்தியாக உருமாறி நிற்க, அத்தனையையும் புணர்ந்து விடும் வெறியுடன் நிர்வாணமாகி சுக்கு நூறாய் உடைத்துப் போட்டான். மது அவனுக்குள்ளிருந்த வன்மத்தை தேவைக்கு அதிகமாகவே தூண்டிக்கொண்டிருந்தது. குடிதான் அவனை ஆரம்பம் முதலாய் சிதைத்துப் போட்டது. வன்முறையின் எல்லா அடையாளங்களையும் அதன் வழியாகவே தான் பார்க்கத் துவங்கியிருந்தான். இப்பொழுது வன்மம் தாபம் எல்லாமும் அவளின் மீதுதான். மகிழ்ச்சியற்ற தன் இதயத்தின் குழாய்களெங்கும் மதுவால் நிரப்பிக் கொண்டவன் பின்னிரவில் அயர்ந்து உறங்கிப் போனான்.

# கோட்டயம்.

கோட்டயத்தில் படப்பிடிப்பிற்கு வந்து சேர்வதற்குள் அதீதமாய்க் களைத்துப் போயிருந்தாள். சதாவும் வாகனங்களிலேயே உறங்கி பழகியவளுக்கு சில நேரங்களில் வீட்டில் படுக்கையறையில் படுத்திருக்கும் போதும் சாலைகள் அவளைக் கடந்து செல்லும் சத்தங்கள் கேட்கும். கனவில் வாகனங்கள் தலைகீழாய் வந்து போகும். ஜூன் மாதத்து மழை வெளியே அடித்து பெய்தபடி இருக்க கோட்டயத்திலிருந்து வாகமன் செல்லும் சாலையில் இருக்கும் ஒரு சிறிய கிராமத்தில் படப்பிடிப்பிற்கு தயாராகி இருந்தது. முந்தைய இரவில் குடித்திருந்த மதுவின் அடர்த்தி குறையாமல் அடிக்கடி குமட்டல் எடுத்தபடி இருக்க எச்சிலைத் துப்பிக் கொண்டிருந்தாள். படப்பிடிப்பு ஒரு பழைய தார்வாட் வீட்டில். ஊர் ஆட்கள் சிலருக்கு எப்படியோ விசயம் தெரிந்து அந்த மழையிலும் ஒளிந்து நின்று வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். எல்லோரும் நாற்பதைத் தாண்டியவர்கள். ஊரின் பெரிய மனிதர்கள் என்று நம்பக்கூடிய தோற்றம். ஒவ்வொருவரின் கண்களுக்குள்ளும் எரிந்தடங்க முடியா காமம் கனன்று கொண்டிருப்பதைக் கண்டவளுக்கு ஒரு நொடி தான் பெரும் பசி கொண்ட மிருகங்களுக்கு மத்தியில் நிற்கிறோமோ என அச்சம் வந்துவிட்டது. சிறுநீர் கழிப்பதற்காக எழுந்து வீட்டிற்குள் போனாள். நூறு வருடங்களைத் தாண்டிய வீடு என்பதன் அடையாளமாய் சில பழைய ஓவியங்கள் சுவரெங்கும் தொங்கிக் கொண்டிருந்தன. இருளில் முண்டு உடுத்திய கிழவியொருத்தி தேக்கு மேசைகளை துடைத்துக் கொண்டிருந்தாள். அவளது அன்றாட வேலையாய் இருக்கக் கூடும், அவளிடம் எந்த உனர்ச்சிகளும் இல்லை. கழிப்பிடத்திற்கு வழி கேட்டாள். இடது பக்கமாய் கையைக் காட்டிய கிழவி அதற்கு மேல் அவளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மேசையைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

“ஆனந்தி நீங்க வீட்டுக்குப் பின்னால இருக்கற குளத்துல குளிக்கிறீங்க, அந்தப் பையன் மறைஞ்சிருந்து பாக்கறாரு… முதல்ல உங்களோட மிட் ஷாட் ஒன்னு எடுத்துடலாம்… அப்பறம் க்ளோஷ் அப்ஸ் எடுத்துக்கலாம்… ஓகேவா?”

அவள் சரியெனத் தலையாட்டினாள். இதழோரத்தில் சின்னதாய் எட்டிப் பார்த்த புன்னகையைக் கவனித்த டைரக்டர் “என்னாச்சு? எனி கன்ஃப்யூசன்?” ஆனந்திக்கு சிரிப்பு கொஞ்சம் அதிகமாக இல்லையென்று மட்டும் தலையாட்டினாள். அவனும் சிரித்தான். பாதி மார்பை வெளிக்காட்டியபடி சற்றே லூசான மார்புக்கச்சை. மெல்லிசான புடவை உடலில் நிற்க மறுத்து நழுவியபடி இருந்தது. அதன் ஒரு நுனியை கவனமின்றி பிடித்திருந்தாள். லேசான வெயில் பிரம்மாண்டமான பறவையைப் போல் அவர்களைப் போர்த்தியிருக்க சற்றுத் தள்ளி நின்ற இளைஞனின் முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது.

”டைரக்டர் ஸார்…” ஆனந்தி ஷாட்டிற்கு தயாராக எழுந்து கொண்டாள். “சொல்லுங்க மேடம்…” டைரக்டர் அவளுக்கு அருகில் வந்தார். ”இவ்ளோ தூரத்துல குளிக்கிற ஒரு பொம்பளையைப் பாத்து எப்பிடி ஒருத்தருக்கு மூட் வரும்? அந்தப் பையன் பக்கத்துல நின்னு பாக்கற மாதிரியே ஷாட் வெக்கலாமே?” சந்தேகத்தோடு கேட்டாள்.

“இல்ல மேடம், லாங் ஷாட் வெய்க்கும் போது அந்தப் பையனோட எடத்துல ஆடியன்ஸே பார்த்த மாதிரி ஃபீல் ஆகிடறான். மறஞ்சிருந்து பாக்கறதுதான் நம்ம ஆட்களுக்கு பெரிய காமத் தூண்டுதலா இருக்கு. மத்தவங்கள விடுங்க, எனக்கே கூட அப்பிடிப் பாக்கும் போதுதான் உடம்பு பயங்கரமா சிலுத்துக்கும்”

மிக முக்கியமானதொரு உண்மையைச் சொல்லும் அக்கறை அவரிடம்.

“ஓ … பாவம் ஸார் ஆம்பளைங்க… தூரத்துல இருந்து பாத்து பாத்து அடக்கி வெச்சு, பாதிப் பேர் கை வேலைலயே காலத்த ஓட்டிடறாங்க…. அசலான பெண் சுகம்னா என்னன்னு கூட தெரியாமயே செத்துப் போயிடறாங்க… ஹம்ம்ம்ம்….”

அவள் விளையாட்டாகச் சொல்லவில்லை. ஆழ்மனதில் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் பெர்வெர்ஷனை கேலி செய்கிறாள் என்பது தெளிவாகவே அந்த டைரக்டருக்குப் புரிந்தது. இவளுக்கு என்ன பதில் சொல்லலாம்? காட்சியை மாற்றலாமா? வெறுமனே சிரித்தான்.

“நீங்க சொல்றது புரியுது மேடம், ஆனா ஆடியன்ஸுக்கு இப்பிடி எடுத்தாத்தான புடிக்குது…”

“ச்சே.. ச்சே… நான் சும்மாதான் கேட்டேன்… நீங்க சீரியஸா எடுத்துக்காதிங்க…” சேலை நுனியை நழுவவிட்டபடி ஆனந்தி குளத்தில் இறங்கினாள்.

**“bloody slut… எனக்கு suggestion சொல்றா. பெரிய மயிருன்னு நெனப்பு…..”**

வாய்க்குள் முனகிய வார்த்தைகளை சத்தமில்லாமல் அப்படியே விழுங்கிக் கொண்டு “ஓகே… ரெடி… ரெடி… டேக்..” எனக் கத்தினான். கிளாப் அசிஸ்டெண்ட் கேமரா உதவியாளனிடம் என்ன லென்ஸ்? என்ந்த இடத்திருந்து கிளாப் அடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருந்தான். ”டேய் ஷைலண்ட் ஷாட் தாண்டா… நம்பர் மட்டும் குடு. என்ன ஷாட் எடுக்கறோம்? எங்க நின்னு நம்பர் குடுக்கனும்னு கூட தெரியல. இந்த லட்சணத்துல வாயி மயிரு வேற?..” டைர்கடர் சத்தமாக கத்துவதைக் கேட்ட ஆனந்திக்கு அது கிளாப் அசிஸ்டெண்ட்டுக்காக சொல்லப்பட்டதல்ல என்பது நன்றாகவே தெரியும். அந்தக் காட்சியில் நடிப்பதற்காக நின்றிருந்த இளைஞன் அவனுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் போய் மறைந்து நின்றான். அவனின் முகத்தில் கூடுதல் வியர்வைக்காக ஸ்ப்ரே அடித்தார்கள். ஆனந்தி குளிப்பதைப் பார்க்க நேர்ந்தால் நிஜமாகவே அவனுக்கு காமம் அரும்புமா? டைரக்டர் திரும்பி அவனைப் பார்த்தான். சொல்லிக் கொடுத்ததை சரியாக செய்ய நினைக்கும் பதட்டத்தோடு நின்றிருந்த அவனைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. ஆனந்தி குளிப்பதை அங்கிருந்த எல்லாக் கண்களும் அப்போது ரகசியமான காமத்துடன் தான் பார்த்துக் கொண்டிருந்தன. உடையைக் களையத் தயங்காத ஒரு பெண்ணை அந்தரங்கமாய் ரசிக்க முடிந்தவர்களுக்கு அவளோடு வெளிப்படையாய் பேசிப் பழக துணிச்சலோ விருப்பமோ இல்லை.

“கட்…. டேக் ஓகே…” மைக்கை ஆஃப் செய்த டைரக்டர் திரும்பி கேமரா மேனைப் பார்த்து சிரித்து “பாருங்க ஸார் இவ்ளோ குடிச்சும் தேவ்டியா உடம்ப எவ்ளோ ஃபிட்டா வெச்சிருக்கான்னு… இதுவர ஒரு நூறு பேர் கூடயாச்சும் படுத்திருப்பா?” கேமரா மேன் சத்தமாக சிரித்தான்.

குளத்திலிருந்து எழுந்து வந்த ஆனந்தி ஒரு டர்க்கி டவலை சுற்றிக் கொண்டு சக்தியிடம் சிகரெட் கேட்டாள். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டவள் “சக்திம்மா கொஞ்சம் அப்பிடியே உடம்ப துடைச்சு விடுங்க…” சூழல் பற்றின எந்த பிரக்ஞைகளுமில்லாமல் சேலையை விட்டுவிட்டு வெறும் ஜாக்கெட் பாவாடையுடன் நின்று புகைத்துக் கொண்டிருந்தாள். புகை உடலின் வெகு ஆழத்திற்குள் சென்று திரும்பிக் கொண்டிருந்தது.

“ஆனந்திம்மா… அந்த பாபு வீட்டுக்கு ஏதோ கிஃப்ட்ஸ் அனுப்பி இருக்காராம்.”

“ம்....”

“பிரிக்க சொல்லட்டுமா?”

ஆனந்தி சிரித்தாள்.

“சக்திம்மா பொம்பளையக் காசு கொடுத்து அடைய நினைக்கிறான், இல்ல அத்துமீறி வன்முறையா அடஞ்சிட நினைக்கிறான்... அவனால என்னய இல்ல யாரையும் நேசிக்க முடியாது. அவன் மனுஷனில்ல. வெறும் சதைப்பிண்டம். எதையும் பிரிக்க வேணாம்... அடுத்த தடவ பாக்கும் போது திருப்பிக் குடுத்துடலாம்....”

ஆனந்தி வாயிலிருந்த சிகரெட்டிலிருந்து கடைசியாய் ஒருமுறை ஆழமாய் புகையை உள்ளிழுத்துவிட்டு அதனைத் தூக்கிப் போட்டாள். உடலுக்குள் சென்ற புகை வெளியேறாமல் ரத்தக் குழாய்களெங்கும் பரவிப் படர்ந்தது இதமாய்.

# அஸ்ஸாமில் பாபுவின் கடைசி தினங்கள்.

சுதந்திர தினம் முடிந்த சில நாட்களுக்குப்பின் ஒரு மாலை. அஸ்ஸாமின் எல்லையோர மாவட்டமான ஷிராங்கில் தொடர்ந்து மூன்றாவது நாளாக பணியிலிருந்த பாபுவின் உடலில் குளிருக்கு நரம்புகள் சுருண்டு கொண்டன. முறுக்கேறியதனால் இருக்கலாம். தனிமை நீண்ட மௌனத்தின் அடையாளமாய் அவன் காதுகளுக்குள் நிசப்தத்தை நிறைத்திருந்தது. அந்த சிறிய கிராமத்தில் குறைவான வீடுகள் தான். கேம்ப்பிலிருந்து பதினெட்டு கிலோமீட்டர் தொலைவு. ஊரை மூடியிருந்த இறுக்கத்தினூடாக எல்லோருக்குள்ளும் அச்சம் நிரம்பியிருந்தது. எந்நேரம் வேண்டுமானாலும் நக்சல் போராளிகளின் தாக்குதல் இருக்கலாமென்கிற அச்சம். இந்த மலை பிரதேசத்தை மற்றவர்கள் தெரிந்து வைத்திருந்ததை விடவும் அவர்கள் நுட்பமாய் தெரிந்து வைத்திருந்தனர். இதனை வெறும் மலையாக அல்லாமல் தங்களின் அரசியல் இருப்பிற்கான உரிமையாய் நினைத்திருந்ததால் ஏராளமான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவர்களால் தொடர்ந்து போராட முடிந்தது. எல்லையோர மாவட்டங்களெங்கும் அனேகமாய் விளைந்திருக்கும் தேயிலைத் தோட்டங்களுக்குள் நக்சல் போராளிகளின் குருதியும் கலந்திருக்கிறது. முதலாளிகளும் அரசியல்வாதிகளும் அவர்களின் குருதியில் தான் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அவர்களின் சுரண்டல்களிலிருந்து துண்டித்துக் கொள்ளவே அவர்களின் இந்தப் போராட்டம்.

எல்லைப் பாதுகாப்பு படையினரின் ஜீப் ஒன்றை சமீபத்தில் குண்டு வைத்து தகர்த்திருந்ததால் கொஞ்சம் பதட்டமான பகுதியாகத்தான் இருந்தது. ஊரிலிருந்த பாதிக்கும் மேலான இளைஞர்களை நக்சல்களாய் இருக்கக்கூடுமென சந்தேகத்தின் பேரிலும், பாதுகாப்பு கருதியும் கைது செய்து வைத்திருந்தனர். சிலர் ஷிராங்கிலிருந்த ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்தனர், இன்னும் சிலரை கௌஹாத்திக்கு அனுப்பி இருந்தனர். ஊரிலிருக்கும் அத்தனை பேரிலும் நக்சல்களின் சாயல்களையே பார்க்கும் அச்சத்தில் எல்லைப்

பாதுகாப்புப் படையினர் ஈவு இரக்கமின்றி அவர்களிடம் நடந்து கொண்டனர். பாபுவுக்கு இந்தப் போராட்டங்கள் குறித்த அக்கறையில்லை. யாரோ எதற்காகவோ போராடுகிறார்கள். இங்கு காவலுக்கு நிற்பதன் மூலம் தன் குடும்பம் கொஞ்சம் வசதியான வாழ்க்கை வாழ்கிறது அவ்வளவுதான். விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் கைதிகளின் மீது அபரிமிதமான அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டதை ரசிக்கத் துவங்கிய போதுதான் தனக்குள்ளிருக்கும் வினோதமான மனிதனைத் தெரிந்து கொண்டான்.

சில நாட்களுக்கு முன்னால் ரோந்து வருகையில் மூன்று இளைஞர்களை எந்த கேள்விகளும் இல்லாமல் தூக்கி வந்திருந்தனர். ஊரில் திடீர் திடீரென இளைஞர்கள் இப்படி காணாமல் போவது வழக்கத்திலிருந்தது. பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எல்லோரின் மீதும் ஏதோவொரு வகையில் வழக்குகள் இருந்தன. பலருக்கு அப்படி வழக்குகள் இருப்பதும் எதற்காக இருக்கின்றன என்பதும் கூட தெரியாது. இளைஞர்கள் மூன்று பேரும் நக்சல்களுக்கு வேவு பார்த்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர். ஆனால் கைது செய்திருப்பதை ஊருக்குள் யாருக்கும் தகவலாகக் கூட சொல்லி இருக்கவில்லை. அன்று இரவு சூடான இரண்டு ரொட்டிகளை மட்டும் கொடுத்துவிட்டு அவர்களின் கைகளைப் பிணைத்து அடைத்து வைத்திருந்தனர். பணி முடிந்து தன் சகாக்களுடன் திரும்பிய பாபுக்கு அவர்களுடன் விளையாடிப் பார்க்கும் ஆசை. நிசப்தத்தைக் கொடூரமாய் கொலை செய்யும் டைப்ரைட்டரின் சத்தம். குளிரைத் தணிக்க ஆளாளுக்கு உள்ளிழுத்து வெளிவிட்ட சிகரெட் புகை, சாம்பல் வளையமென சூழ்ந்திருந்தது.

“யாரு இவங்க மூணு பேரும்?”

ஒரு இரும்புச் சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். அட்மினிஸ்ட்ரேட் அலுவலகத்திலிருந்தவன் வாயிலிருந்து சிகரெட்டை எடுத்துவிட்டு

”இன்னும் விசாரிக்கவே ஆரம்பிக்கலையே…” என்றான்.

பாபுவோடு இன்னும் இரண்டு பேர். எல்லோரின உடையிலும் பனியின் ஈரம். குளிர் எல்லா திசைகளிலிருந்தும் தேடி வந்தது. பாபு தன் சகா ஒருவனை கண்களால் பார்த்து சைகை செய்ய அவன் அந்த மூன்று இளைஞர்களில் ஒருவனின் முதுகில் எட்டி உதைத்தான்.

“துணிய அவுங்கடா…” அந்த வீரனின் குரல் உக்ரமாய் எதிரொலித்தது.

மூன்று பேரும் அவசரமாய் உடைகளைக் களைந்தனர். குளிரில் நடுங்கியபடி கைகள் சிரமத்துடன் பிறப்புறுப்பை மறைக்கப் போராடிக் கொண்டிருந்தன. பாபு விசைத் துப்பாக்கியால் ஒருவனின் கையை விலக்கிவிட்டு அவனின் பிறப்புறப்பைப் பார்த்து சிரித்தான். அங்கிருந்து வீரர்கள் எல்லோரும் சிரிக்க அவமானத்தில் அந்த இளைஞனுக்கு அழுகை முட்டியது. ”ஜி… வேணாம்… ஜி… வேணாம்…” தொண்டையின் அடியாழத்தில் எங்கிருந்தோ தீனமாய் அக்குரல் எழுந்து வர முயன்று தோற்றுப்போனது. பாபு துப்பாக்கியால் அப்படியே அவனைத் திருப்பி அவன் குதத்தில் அடித்தான்.

“ஆஆஆஆஆஆ…” வென இளைஞனின் அலறல். மற்ற இரண்டு பேருக்கும் குலைநடுக்கத்தில் குளிரிலும் வியர்த்துப்போன முகம். பாபு இரண்டாவதாக இருந்தவனைப் பார்த்து

“அவனோடத உருவிவிட்டு வாயில வெச்சுக்கோடா..”

முதலில் அடித்த இளைஞனிடம் துப்பாக்கியால் இரண்டாவது இளைஞனை நகர்த்தினான். அவன் முடியாதென மறுக்க முடியாமல் தடுமாறி நடந்தான்.

“ஜி… அது என்னோட அண்ணன்….”

அங்கிருந்த எல்லோரும் சத்தமாக சிரித்தனர். இந்த சிரிப்பு அவர்களை அங்கிருந்து விடுவிப்பதற்கான சிரிப்பா? குறைந்தபட்சம் இந்த அருவருப்பை செய்யச் சொல்லாமலாவது விடுவார்களா? கையெடுத்து கும்பிட்டபடி பாபுவின் முன்னால் விழுந்தான். குளிர் தாங்காத உடலில் அதிகமானது நடுக்கம். அவன் இடையில் அடித்த பாபு

“பேஹன் சோத்… சொன்னத செய்டா…”

அந்த இளைஞன் வேறு வழியில்லாமல் மெதுவாக தன் சகோதரனின் கால்களுக்குக் கீழாகப் போய் உட்கார்ந்தான். அவர்கள் இருவரும் தங்கள் வாழ்வின் பெரும் அவமானமொன்றை எதிர்கொண்ட வேதனையில் கதறி அழக்கூட முடியாமல் அவமானத்தில் உடல் கொதிக்க இயங்கினர். இதற்கு அவர்கள் கொன்று போட்டிருக்கலாமே? அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த வீரர்களில் ஒருவன் குனிந்து அந்த இருவரில் அண்ணனின் விதைகளைப் பிடித்து வலுவாக கசக்கினான். வலியில் கத்திய அண்ணன் தம்பியை தன் இடையிலிருந்து அவசரமாகத் தள்ளிவிட்டான். கீழே விழுந்த தம்பியின் குறியில் சரியாக இன்னொரு வீரன் துப்பாக்கியால் அடித்தான். இருவரும் அலறித் துடித்தனர்.

மூன்றாவதாக நின்றிருந்த இளைஞன் என்ன உரிமையில் தங்களின் மீது இத்தனை வன்முறையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்கிற ரௌத்ரத்துடனும் அதை வெளிக்காட்ட முடியாத ஆற்றாமையுடனும் துடித்துக் கொண்டிருந்தான். அவன் கால்களுக்குக் கீழ் ஏதோ சுருசுருவென ஏறியது. என்னவென நிதானிக்கும் முன்பாகவே மின்சாரம் அவனுடலைத் தூக்கிப் போட்டது. மூவரும் அந்த சின்னஞ்சிறிய கூடாரத்திற்குள் அலறும் சத்தம் மலைகளெங்கும் எதிரொலித்தன. தனிமை, குளிர், வேட்கை எல்லாவற்றையும் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு அங்கிருந்த வீரர்கள் அவர்கள் மூன்று பேரின் மீதும் தங்களுக்குத் தெரிந்த எல்லா வன்முறைகளையும் நிகழ்த்திப் பார்த்தனர். முதல் சில நிமிடங்கள் வேதனையால் எழுந்த எதிர்ப்பும் அலறலும் கூட அடங்கி சவமெனக் கிடந்தனர்.

மூன்று பேரில் ஒருவன் எதிர்பாராமல் மனதின் ஆழங்களுக்குள் இடறி விழுபவன் போல திடுக்கிட்டான். ஒரு தீனமான குரல் அவனுக்குள்ளிருந்து மௌனமாக எழுந்தது. தன்னைப் பிடித்து இழுக்கும் கைகளை உதறி ஓடிப்போய் துப்பாக்கியைப் பிடுங்கி குழலை வாய்க்குள் திருகி விசையை இழுக்க முடிந்தால்? கண்களை சிரமத்துடன் உயர்த்திப் பார்த்தவனுக்கு சில அடிகள் தள்ளி இருந்த துப்பாக்கி மட்டுமே தெரிந்தது. மூவரும் மயங்கி இருக்கக் கூடுமென வீரர்கள் அவர்களை விட்டு விலகி ஓய்வெடுக்க சென்றிருந்தனர். விழித்துக் கொண்ட இளைஞன் சிரமத்துடன் ஊர்ந்து போய் துப்பாக்கியை எடுத்தான். உடலிலிருக்கும் வலுவால் மற்றவர்களைக் கொல்ல முடியாமல் போகலாம், தன்னைக் கொலை செய்ய முடியும். நாபியின் அடியில் துப்பாக்கியை நிறுத்தி சுடப்போனவன் தன் சகோதரர்களைப் பார்த்தான். மயக்கத்திலேயே இறந்ததாக இருக்கட்டுமென அவர்கள் இருவரையும் சுட்டான். அவர்கள் இனி ஒருபோதும் இங்கு ஜனிக்கத் தேவையில்லை. பிறப்பிற்கான யோனிகள் தேடியோ கலவிக்கான யோனிகள் தேடியோ அலைய வேண்டிய கஷ்டங்களில்லை. தான் அவர்களுக்குக் கொடுப்பது மகத்தான விடுதலையென்ற நிம்மதி. துப்பாக்கி சத்தம் கேட்டு ஓடிவந்த வீரர்கள் அரை உயிராய் நின்றிருந்த இளைஞனை அச்சத்துடன் பார்த்தனர். அவன் கண்களுக்குள் ஒருபோதும் தீர்க்கமுடியாத பகையின் தணல். தன் கபாலம் தெறிக்க தன்னையே சுட்டுக் கொண்டு அவன் வீழ்ந்தபோது அந்த முகாமில் செத்த எத்தனையோ பேரில் சிலராகத்தான் இவர்களும் ஆகிப்போனார்கள்.

பாபுவுக்கு அதன் பிறகு வன்முறையின் விளையாட்டுக்களில் தனித்த ஆர்வம் வந்திருந்தது. கிடைக்கிற அவகாசங்களில் அதுமாதிரியான சாகசங்களுக்குத் தன்னைப் பழக்கிக் கொண்டான். உடலால் நிகழ்த்த முடிந்த மகத்தான சாகசம். 70 வது பட்டாலியனில் காவலராக இருக்கும் அவனும் அவனது சகாவும் அன்று பணி நேரத்திலேயே கொஞ்சம் குடித்திருந்தனர். ”இந்த முறையும் எனக்கு லீவ் இல்ல.... சதாவும் வீட்டப் பத்தியே நெனச்சிட்டு இருக்கறது ரொமப அவஸ்தையா இருக்குடா...”

அவனோடு காவலிருக்கும் சகாவுடன் பகிர்ந்து கொள்ள வீட்டைக் குறித்துதான் நிறைய இருந்தது. ”வீடுங்கறது என்ன மனுஷங்கதான? இங்க இருக்கவங்களோட பழகிக்கோ... முடிஞ்சா இங்க ஒரு குடும்பத்த வெச்சிக்க வேண்டியதுதான்...” அவன் சகா சிரித்தான்.

”சொல்ல ஈசியாத்தான் இருக்கு... செட் ஆகனும்ல...” பாபுவுக்கு குடும்பமென்பது இப்பொழுது நேசத்தை மீறி உடலை இளைப்பாற்றும் ஒன்றாக மாறிப்போயிருந்தது. சில மாதங்களுக்கு முன்பு பணி நேரத்தில் அவன் செய்த ஒரு தவறுக்கு தண்டனையாக தொடர்ந்து பாபுவிற்கான விடுமுறைகள் மறுக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. அந்த அழுத்தமும் குளிரில் சுயமைதுனம் கூட செய்து கொள்ள முடியாதபடி தொடர்ந்து ரோந்து வரக்கூடிய நெருக்கடியிலும் இருந்தான். அவன் சகா பீகாரி. இருவரும் கடந்த இரண்டு வருடமாக ஒரே கேம்ப்பில் தான் இருக்கிறார்கள். தலையெங்கும் காமத்தின் குரல். பல நாட்களாய் பசித்து அழும் அதன் குரலுக்கு செவி சாய்க்காது தவிர்க்கமுடியவில்லை அவனால். மனைவியின் உடல் நீரில் நனைத்தெடுக்கப்பட்ட மெழுகென வளவளப்போடு சதாவும் அவனுக்குள் நிழலாடியது. அவள் அருகாமை இல்லாத அந்நாட்களில் அந்த உடலின் நினைப்பே பெரிதாகி பார்க்கிற எல்லாப் பெண்களின் உடல்களிலும் அவளின் வாசனையையும் அடையாளங்களையும் தேடத் துவங்கியது. அவளுக்கு எழுதும் எல்லாக் கடிதங்களிலும் “உன் பக்கத்துலயே வந்து இருந்துடலாமான்னு இருக்கு.... இந்தக் குளிரும் தனிமையும் ரொம்ப அவஸ்தை.... ஒரு ஆர்வத்துல இந்த வேலைக்கு வந்துட்டேன்... ஆனா ஒவ்வொரு நாளும் நரகவேதனையா இருக்கு. பேசாம எழுதிக் கொடுத்துட்டு வந்து வேற வேலைக்குப் போகட்டுமா?” வீடு திரும்ப நினைக்கும் ஒருவனாகவே வெளிப்பட்டுக் கொண்டிருந்தான். அவள் ‘இன்னும் சில வருடங்கள் போகட்டும்... குழந்தை வளரும் வரை சமாளித்துக் கொள்’ என ஆறுதலையும் மறக்காமல் முத்தங்களையும் அனுப்பிக் கொண்டிருந்தாள். கடந்த முறை விடுமுறைக்குச் சென்றிருந்த போது

தனது பழைய கேமிராவில் அவளை நிர்வாணமாக சில படங்கள் எடுத்திருந்தான். யாருக்கும் தெரியாமல் அதை பிரிண்ட் போட்டு எடுத்து வந்திருந்ததோடு தனிமையில் அந்தப் புகைப்படங்களுடன் தான் மோகித்து மீள்கிறான்.

பழைய சர்ச் ஒன்றில் குளிருக்காக ஒதுங்கி நின்று புகைத்துக் கொண்டிருந்த இருவரும் பள்ளி முடிந்த சிறுமி ஒருத்தி திரும்பி வருவதைப் பார்த்தனர். அந்த சிறுமியின் பிஞ்சு முகத்தில் பாபு சில நொடிகள் தன் மனைவியின் சாயலைப் பார்த்தான். சிகரெட் கையில் சுட்டது. பாபுவுக்குள்ளிருந்த மிருகம் முழித்துக் கொண்டது. அந்த சிறுமிக்கு அதிகமாய்ப் போனால் பதினான்கு வயதிருக்கலாம். இவன் சகாதான் அந்த யோசனையைச் சொன்னான். ”நாம என்ன செஞ்சாலும் இங்க யாரும் கேக்கப் போறதில்ல… இவங்களக் காப்பாத்தனும்னு தான நாம ராப்பகலா கஷ்டப்படறோம்…. இந்த மாதிரி சின்ன சின்ன சலுகைகளக் கூட எடுத்துக்காட்டி எப்பிடி?” அந்தக் குழந்தையைக் காட்டிச் சொன்னான். மூன்று மணிக்கெல்லாம் இருட்டியிருந்த அந்த தினத்தில் லேசான மழைக்குப் பின் ஈரமான சாலையில் அவள் மட்டும் பள்ளி முடிந்து தனியாக நடந்து வந்து கொண்டிருந்தாள். பாபு அவளிடம் இயல்பாகப் போய்ப் பேசுவது போல் பேசியபடியே நடக்க, ஆள் யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்ட அவன் சகா சரியான நேரத்தில் அவளைத் தூக்கிச் செல்வதற்கான சிக்னலைக் கொடுத்தான். பாபுவின் உருவத்தில் பாதியே இருந்த அந்த சிறுமியை எந்த சத்தமும் எழாமல் தூக்கிப் போவதில் அவனுக்கு சிரமங்களில்லை. அவனுக்குப் பின்னாலேயே ஓடிவந்த அவன் சகாவை தூரத்தில் வந்த கிராமவாசிகள் சிலர் கவனித்தனர். தனியாக அவன் ஓடுவதால் வேறு ஏதாவது பிரச்சனையாக இருக்கலாமென அவர்கள் அதனைப் பெரிதாகப் பொருட்படுத்தி இருக்கவில்லை. அந்தப் பகுதி சிறுமிகள் ஒவ்வொருவருக்குள்ளும் அச்சமிருந்தது. எந்த நேரத்திலும் அடையாளம் தெரியாத ஒருவன் தன் மீது எல்லாவிதமான வன்முறைகளையும் செலுத்தக் கூடுமென. பாபு மாதிரி நிறைய பேர் அதற்கு முன்னும் இந்தக் கொடூரத்தை அரங்கேற்றியுள்ளனர். கடைநிலைக் காவலர்களிலிருந்து பெரிய அதிகாரிகள் வரை இதில் எந்த பாரபட்சமும் இல்லை. பாவப்பட்ட சிறுமிகளின் மீது அத்துமீறி நடக்கிற எல்லோரும் ஒரேவிதமானவர்கள் தான். அவர்களில் ராஜஸ்தானி, மராத்தியன், பஞ்சாபி, மதறாசி, மலையாளியென எந்த வித்தியாசமும் இல்லை.

மூன்று நாட்கள் அவளை எங்கு தேடியும் கிடைக்காமல் போக உள்ளூர் போலீஸ்காரர்கள் ஒரு சந்தேகத்தில் தான் பாபுவையும் அவன்

சகாவையும் விசாரித்தார்கள். கிராமவாசிகள் எல்லோரிடமும் விசாரித்ததில் அன்று மாலை எல்லைப் பாதுகாப்புப் படை வீரன் ஒருவன் ஓடியதை அவர்கள் தெளிவாக சொல்லி இருந்தார்கள். பாபுவை விடவும் வயதில் இளையவனான பீகாரி குற்றவுணர்ச்சியில் உண்மையைச் சொல்லி விட்டான். பாபு அப்படி ஒன்று நடந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. கருபாஷா அவுட் போலீஸ் ஸ்டேஷனிற்கு கடும் குளிரப்பிய மாலை நேரத்தில் பாபு கொண்டு செல்லப்பட்ட போது அவர்கள் இரண்டு பேரையும் அந்தப் பகுதியிலிருந்த கிராமவாசிகள் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. போலீஸ்காரர்களின் விசாரணைக்கு பாபு ஒத்துழைக்கவில்லை. கேட்ட கேள்விகளுக்கான பதில்களை பீகாரி இளைஞனே சொல்லிக் கொண்டிருக்க அவன் முதல் குற்றவாளியாக்கப்பட்டான். பாபுவுக்கு திரும்பத் திரும்ப அவன் சகா சொன்ன வார்த்தைகள் தான் எதிரொலித்தன. “இந்த சின்ன சலுகையக் கூட நாம எடுத்துக்கக் கூடாதா?” தேவைக்கு அதிகமாய் எத்தனையோ சலுகைகளை எடுத்துக் கொண்டுவிட்டோம் என்பதை அப்போதும் அவன் உணர்ந்திருக்கவில்லை. தனக்கு உரிமையில்லாத ஒரு உடலின் மீது சலுகையெடுத்துக் கொள்வது எத்தனை பெரிய வன்முறை என்கிற பிரக்ஞைகள் இல்லாமலேயே தான் தண்டனைக் காலத்தைக் கழித்திருந்தான். பணியிலிருந்து விலக்கப்பட்ட பாபு விடுதலைக்குப் பின் ஊர் திரும்பியபோது அவனோடு நிற்பதற்கு ஒருவருமில்லை.

ஊரின் அவமானமாகப் பார்க்கப்பட்ட அவனை யாரும் தங்களோடு சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. ”ஊருக்குத்தான் நான் வேணாம்.... உனக்குமா?” தன் மனைவியிடம் கெஞ்சுகிற தொனியில் கேட்டான். அவள் எந்தப் பதிலும் சொல்லி இருக்கவில்லை. அவளுக்குப் பின்னால் உள் அறையிலிருந்து எட்டிப் பார்த்த மகளைப் பார்த்தவன், “ஏன் பாப்பா அப்பிடி பாக்கற? இங்க பக்கத்துல வா...” அவள் மாட்டேனென தலையாய் ஆட்டினாள். “அப்பா கிட்ட வர்றதுக்கு என்னடா?” அவள் முகம் முன்னை விடவும் கோவமானது. “நீங்க கெட்ட அப்பா... நான் உன் பக்கத்துல வரமாட்டேன்....” பாபுவுக்கு அவமானத்தில் உடல் எரிந்தது. இந்தக் குழந்தைக்கு யார் சொல்லிக் கொடுத்தது? எவ்வளவு யோசித்தும் அன்றைய தினம் அந்தச் சிறுமியுடன் என்ன செய்தோமென அவனால் நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. ”ஏற்கனவே உங்களால ரொம்ப அசிங்கப்பட்டுட்டோம்... எங்கள உயிரோட அவமானப்படுத்தி திரும்ப திரும்ப சாகடிக்காம போயிடுங்க ப்ளீஸ்....” அவன் மனைவி கோவமாகத்தான் சொன்னாள். பாபுவுக்கு கடைசியாக தன் மகளை ஒருமுறை அருகில் கூப்பிட்டுப் பேச வேண்டுமென ஆசையாய்

இருந்தது. இன்னொரு முறை கையை அசைத்து அவளை கூப்பிட்டவனைப் பார்க்க விருப்பமில்லாமல் அந்த சிறுமி வேகமாக ஓடிவிட்டாள். அந்த சில நொடிகள் தன்னிடமிருந்து திமிறி ஓட முயன்று தோற்றுப்போன அஸ்ஸாமிய சிறுமியின் நினைவு வர பாபு அவசரமாக வீட்டை வீட்டு வெளியேறி விட்டான்.

வீட்டிலிருந்து வெளியேறியவன் ஜிப்சிகளைப் போல் அலைந்து திரிந்தான். கடந்த
காலத்தின் மோசமான பிரதிகளை அவனுக்குள்ளிருந்து அழித்துவிடும்
பிரயத்தனங்கள் எதுவும் முற்றிலுமாய் பலித்திருக்கவில்லை.
ராஜஸ்தானத்திலிருந்து குஜராத்தின் வறண்ட தொழிற்சாலைகளிருக்கும்
பகுதிக்கு இரும்பு பாகங்களை ஏற்றி வந்த லாரியில் பயணித்தவன்
தன்னுடன் வந்த நர்த்தகியின் மேல் மையல் கொண்டான். நாட்கணக்கில்
அவள் செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்றான்.
“எதுக்காக பின்னாலேயே வர்ற? இத்தன நாள்ல நீ படுக்கறதுக்கு வேற
யாருமே கெடைக்கலையா?”
அவன் சிரித்தான். “இல்ல நான் உன்னக் காதலிக்கிறேன். இந்த ஊரோட
வெயில் எத்தனை நிஜமோ அத்தனை நிஜமா அத்தனை தீவிரமா.”
”ஆமா ஆமா… காதல் தான்… நீ என்னயக் காதலிக்கிற எண்பத்தி நாலாவது
ஆளு. நான் ஒருவேள உன்னக் காதலிச்சா அறுபத்தஞ்சு… எல்லாம் ஒரு நாலு
தடவ பொறள்றதுக்குத்தான் சரியா வரும்.”
அவன் மறுத்தான்.
“இல்ல… எனக்கு நிஜமா நீ வேணும்… உன் மேல இருந்து வர்ற வியர்வை
வாசனைய கால காலத்துக்கும் நுகர்றவனா நான் இருக்கனும்…”
தன் மெலிந்த மாரையும், அக்குளையும் பார்த்துக் கொண்டவள் தன்னிடம்
அப்படி பிரமாதமாய் ஒன்றுமில்லையே என்கிற சந்தேகத்துடன்
நடுவயதுக்காரனான இவன் கண்களில் தேங்கிக் கிடக்கும் காமத்திற்கு
எல்லாமே இரைதானோ என நினைத்துக் கொண்டாள். விளையாட்டாய்
அவனுக்கு சில முறை ஆசை காட்டினாள், தூண்டி விட்டாள். பின் நாசூக்காய்
ஒதுக்கித் தள்ளி விட்டாள்.
”உன்னோட இருக்கறதுக்கு கொஞ்ச நாளைக்கு அனுமதி…

அபூர்வமான
பொருள் ஒன்ன உனக்குத் தர்றேன்…"
இந்த வியாபாரம் அவளுக்குப் பிடித்தது. இதுமாதிரியான ஒரு ஜிப்சியிடம்
அபூர்வமான பொருள் இருக்கக்கூடும். சரியென சம்மதித்தாள். இலையுதிர்
கால முதிர்ந்த மரமொன்றின் விருட்சத்தின் அடியில் அவளைக் கிடத்தினான்.
கிளைகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆயிரம் கண்கள் கொண்டு மரம் அவர்களை
வேட்கையோடு பார்த்தது. அந்தக் கண்களில் அசைவே இல்லை.
விருட்சங்களில் இருந்து நூறாயிரம் கைகள் நீண்டு அவர்கள் இருவரையும்
தங்களோடு பிணைத்துக் கொள்ளும் மூர்க்கத்தில் இறுக்கின. மூச்சு முட்ட
அவன் காமத்தில் கரைந்து போனாள்.
வறட்சியின் அதீதத்தை பலகாலமாய்த் தெரிந்து வைத்திருந்தவளால்
அவனுடலின் வறட்சியை எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. அவனோடு சில
காலம் சுற்றினாள். ஒரு மலையோர கிராமத்தில் தான் யாருக்கும் காட்டாது
மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அவளிடம் தந்தான்.
"இத வெச்சுக்கோ… உனக்கு தர்றதுக்குன்னு நான் வெச்சிருந்தது இதுதான்…
எனக்குள்ளிருந்த ஏதோவொன்னு உடஞ்சி இப்போ நான் கொஞ்சம் லேசானதா
உணர்றேன்… இனிமே இது எனக்குத் தேவை இல்ல… எப்பவாச்சும் உனக்குத்
தேவைப்படலாம்."
கையிலிருந்த துப்பாக்கியை கவனமாகத் தூக்கிப் பிடித்துப் பார்த்தாள்.
கொஞ்சமும் பிசிறில்லாத வலு. அவன் குறியைப் போல். ஆசையோடு தன்
இடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டவள் வழியனுப்பும் விதமாய்
அவனுக்கு மண் குடுவையொன்றில் பாதுகாத்து வைத்திருந்த ஆட்டின்
கண்ணை திறந்து காட்டினாள்.
"இது உன்கூட இருக்கட்டும்… மந்திரிச்ச ஆட்டோட கண்ணு. மனுஷங்கள

வசியம் பண்ணும்னு கேள்விப்பட்டு பத்திரமா வெச்சிருந்தேன்... இந்தா, எடுத்துக்கோ..."

வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டவன் அவளிடமிருந்து என்றென்றைக்குமாய் விடைபெற்றான். பல சமயங்களில் நம் தவறுகளை சரி செய்யும் பொறுப்பை பிரபஞ்சமே பார்த்துக் கொண்டுவிடுகிறது . மனிதன் செய்ய வேண்டியதெல்லாம் அதற்கு ஒத்திசைவதுதான்.

# வசந்தகாலம்.

”புதியதோர் ராஜியத்தினும் விரும்பப் படுவது ஒரு மடக்கு பழைய மது,
மதுவின் பாதையல்லாத எந்தப் பாதையிலிருந்தும் விலகிக் கொள்வது உன்னதம்;
ஃபெரிதுனின் அரியணையைவிட நூறு மடங்கு மேலானது மதுவின் கடைசிச் சொட்டு,
கைகோஸ்ரவுடைய ராஜ்ஜியத்தினும் மேலானது மதுப்பீப்பாயின் மண்மூடி.”

- ஒமர் கய்யாம்.

“உங்கள ரொம்ப வருசமாவே பாத்துட்டு இருக்கேன் ஆனந்தி, பொதுவா
எல்லாரும் சின்ன வயசுலதான் அழகா இருப்பாங்க. எனக்கென்னவோ நீங்க
இப்போதான் அழகாத் தெரியறீங்க. சின்ன வயசுல உங்க முகத்துல
கொஞ்சம்கூட சோபையே இல்லாம இருக்கும். இப்போ ஒரு கனிவு இருக்கு.”

வசீகரமான இந்த வார்த்தைகளை தனக்கு அருகில் வசிக்கும் ஒருவனிடமிருந்து கேட்ட தினத்தில் ஆனந்தி உற்சாகமாய் இருந்தாள். வீட்டிற்கு வழக்கமாக தண்ணீர் கேன் போட வரும் ஆள் அவர். தன் உடலின் மீதான எந்தவிதமான கோருதல்களும் இல்லாது ஒருவன் அசலாக வெளிப்படுத்திய அன்பு. பல வருடங்களாக அவள் குடியிருக்கும் அந்த வீதியில் எல்லோருமே அவளுக்குத் தெரிந்தவர்கள் தான். அம்மா இறந்து போனதற்குப்பின் உறவுகள் யாருமில்லையென்கிற நிலையில் அந்த வீதியிலிருந்தவர்கள் அவளை அரவணைத்துக் கொண்டனர். அங்கிருந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கு யாரும் அவளைத் தொந்தரவு செய்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்கிற அக்கறை இருந்தது.

பால்யத்தையும் இளமையையும் வெறுத்தாள். அந்நாட்களில் எல்லாம் யாரோ ஒருவன் அவளின் மீது படர்ந்து அவளின் கன்னிமையை ருசிக்கும் ஏக்கத்துடன் எப்பொழுதும் நிழலாகவே தொடர்ந்து கொண்டிருந்த அவஸ்தையை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இருபது வயதிற்குள்ளாகவே ஆரூடம் சொல்லவியலாத திசைக்காய் முகமும் மனமும் பயணப்பட்டிருந்தது. தன் சமவயதுப் பெண்களை விடவும் முதிர்ச்சியடைந்து இருந்தாள். இளமையைக்

கடக்கிற போது வயது சடாரென கூடித்தான் போகிறது. இருபது வயதிற்குப்பின் அவள் பிரபல நடிகையானதும் முதல் இரண்டு வருடங்களைத் தவிர்த்து இந்த எட்டு வருடங்கள் மிக வேகமாக கடந்து போய்விட்டன. அதீத ஒப்பனைகளின் காரணமாய் முகத்தில் விழுந்த சுருக்கங்களும், அவைகளுக்கிடையிலான புதிய உறவுகளும், முன்னைவிடவும் பெரிதாகிப் போன கண்களும் ஒரு நடுத்தர வயது பெண்ணிற்கான தோற்றத்தையே அவளுக்கு இப்போது கொடுக்கின்றன.

"ஆனந்திம்மா... ஷூட்டிங் முடிஞ்சு என்னைக்கு வந்த? ஆயாவத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டியே..."

வாசலில் ஆயாவின் குரல் கேட்டதும், சக்தியை அனுப்பி கதவைத் திறக்கச்
சொன்னாள். ஆயாவுக்கு இவளைப் பார்த்தால் தான் உற்சாகம். வேறு யாரும்
அவளுக்கு மதுவாங்கிக் கொடுப்பதில்லை. ஆனந்தியிடம் எப்போது
கேட்டாலும் கிடைக்கும். ஆயா உரிமையாக வந்து ஷோஃபாவில் உட்கார்ந்து
கொண்டாள். "என்ன ஆயா மெலிஞ்சிட்ட... ஒழுங்கா சோறு துன்றியா இல்லையா?"

"சோத்துக்கெல்லாம் ஒன்னும் கொற இல்ல ஆயா... நான் சரக்கு கேட்டாத்தான் யாரும் கொடுக்கறதில்ல. திங்கிறது உடுத்தறது மாதிரி அதுவும் ஒரு தேவைன்னு சொன்னா யாரும் புரிஞ்சுக்கிறதுல்ல. அதுல ஆம்பளைக்கு ஒரு நாயம். பொம்பளைக்கு ஒரு நாயம்."

ஆனந்தி சிரித்துவிட்டு சக்தியைத் திரும்பிப் பார்த்தாள்.

"சக்திம்மா என்னோட சூட்கேஸ்ல பாட்டில் இருக்கும் எடுத்துட்டு வந்து குடுங்க."

சக்திக்கு இது வழக்கமான நிகழ்வெனத் தெரியுமென்பதால் அமைதியாக உள்ளே போய் எடுத்து வந்தாள். பாதிவரை அதில் ஆனந்தி
குடித்திருக்க, மிச்சத்தை அப்படியே ஆயாவின் கையில் கொடுத்தாள். 'ரெட்
லேபிள்' ஆயாவுக்கு ஆர்வத்தில் கண்கள் விரிந்தன. "எனக்கு இதெல்லாம்
ஒத்துக்காது ஆயா... இத நீ வெச்சுக்க. துட்டு எதுனா குடு... நான் நூறு ரூவா
சரக்கு வாங்கிக்கறேன்..."

ஆனந்தி பாட்டிலை வாங்கிக் கொள்ளாமல் "அதெல்லாம் ஒத்துக்கும்.

கண்டதக் குடிச்சா உடம்பு என்னாகுறது?... நீ இத எடுத்துட்டுப் போ."
ஆயாவுக்கு ஒரே நேரத்தில் சங்கடமாகவும் சந்தோசமாகவும் இருந்தது. அவள்
எழுந்து போனபின் ஆனந்திக்கும் அன்றைய தினத்தின் சந்தோசத்தைக் கொண்டாட விருப்பம். புதன்கிழமை. மொபைலை எடுத்து தன்
தோழியொருத்தியை அழைத்தவள், வழக்கமாக தி.நகரில் சந்திக்கும் பப்பிற்கு
வரச்சொன்னாள்.

அதிக வெளிச்சமற்ற பப்பிற்குள் அவள் நுழைந்தபோது திரளான பெண்களையே சுற்றிலும் பார்த்தாள். அவளுக்கு முன்பாகவே வந்துவிட்ட
அவளது தோழியும் இன்னும் சிலரும் சந்தோசமாய் வந்து கட்டிக் கொண்டனர். பிற்பகலுக்கு மேல் துவங்கும் அந்த பப்பில் பெண்களுக்கான
மது இலவசம் என்பதால் நிறைய கல்லூரி மாணவிகள்
நடுத்தரவர்க்க இல்லத்தரசிகளென கலவையான ஆட்களைப் பார்க்க முடிந்தது. சிலர் குடிக்காமலேயே அந்த சூழலை அனுபவிக்க வேண்டி வந்ததன் பொருட்டு களிப்போடு நடனமாடிக் கொண்டிருந்தனர். சிறிய கண்ணாடிக் கோப்பையில் வைக்கப்பட்ட வோட்காவை ஆர்வத்தோடு எடுத்துக் குடித்த ஆனந்தியும் அவர்களோடு ஆட விரும்பினாள். அபூர்வமாகத்தான் இதுமாதிரி தோன்றும். இந்த வாழ்க்கை இன்னும் தனக்கான ஏராளமான சந்தோசங்களை மிச்சம் வைத்துள்ளதென தோன்றும்
போதெல்லாம் இப்படி ஆடியிருக்கிறாள். இன்றும் அப்படி ஆட விரும்பினாள்.
கூட்டத்திற்குள் நுழைந்து ஆடியவளை அடையாளம் தெரிந்து கொண்ட சிலர்
சிநேகத்தோடு புன்னகைத்தனர். ஒரு இளைஞி அணைத்துக்கொண்டு கழுத்தில்
முத்தமிட்டாள். ஆனந்தியும் சந்தோசமாய் முத்தமிட்டாள். அந்த இளைஞியின்
முத்தச் சூடும் எச்சிலும் பரவசமானதொன்று. ஆண்கள் குறைவாகவே இருந்ததால் அவளுக்கு எந்த சங்கடங்களும் இல்லை. ஆனந்தி உற்சாகமாக
ஆடுவதைப் பார்த்த அவள் தோழிகளும் அவளோடு உற்சாகமாக வந்து ஆடினர்.

மனதின் இடையூறுகள் எதுவுமின்றி பூரண சந்தோசத்துடன்

ஆடிக்கொண்டிருந்த ஆனந்திக்கு உண்மையில் இந்த உலகத்திடமிருந்து என்னதான் வேண்டுமென அங்கிருந்த சிலர் யோசித்தனர். அதை அவள் ஒருவரிடமும் சொல்லி இருக்கவில்லை. அவளுக்குமே தெரிந்திருக்குமா என்பது சந்தேகம். சர்வ வல்லமை பொருந்திய கடவுளுக்கு வேண்டுமானால் ஒருவேளை தெரிந்திருக்கலாம். இந்த மொத்த வாழ்வையும் தனது ஆளுமைக்குள் கொண்டுவந்துவிட வேண்டும். களித்துத் தீர்க்க வேண்டிய சந்தோசங்கள் அவ்வளவையும் பார்க்க வேண்டும். என்பதோடு தான் தேடிக் கொண்டிருப்பது மனிதர்களிடம் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறாள். கீழ்ப்படியாமை என்னும் மனிதனின் ஆதிமுதலான ஒரு பண்பியல்பைக் கொண்டிருந்த அவளால் யாருக்கும் யாதொரு இடைஞ்சல்களும் நேர்ந்ததில்லை. பல சமயங்களில் அவள் தனக்கு மட்டுமேதான் விரோதியாய் இருந்திருக்கிறாள். அல்லது அவளது கீழ்ப்படியாமை அவளை மட்டுமே நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

”எப்டி இருக்கீங்க ஆனந்தி என்னய ஞாபகம் இருக்கா?” இசையின் இரைச்சலை மீறி தான் பேசுவது கேட்க வேண்டுமென்பதற்காக புதிதாக வந்தவன் சத்தமாகக் கேட்டான். ஆனந்தி பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொண்டாள். நிறைய விளம்பரப் படங்களை இயக்கியவன். இண்டஸ்ட்ரியில் நல்ல பெயர் இருக்கிறது. “ஓ.... நல்லா ஞாபகம் இருக்கு. எப்டி இருக்கீங்க?” அவன் பொருட்டு அவள் ஆடுவதை நிறுத்தி இருக்காததால் அவனும் அவளோடு சேர்ந்து மெதுவாக ஆடியபடியே பேசினான். ”ரொம்ப நாள் ஆச்சு உங்களப் பாத்து, முன்ன ஸ்ப்ரிங்க்ல அடிக்கடி பாப்பேன். இப்ப வர்றதில்லயா?” அவள் சிரித்தாள். “கூட்டிட்டுப் போயி செலவு பண்றதுக்கு ஆள் இல்ல....” சத்தமாக பேசியதில் தொண்டை இடறி இருமினாள். அவன் வோட்காவை எடுத்துக் கொடுத்தான். “தாங்க்ஸ்..” மதுவை வேகமாகக் குடித்தவள் மீண்டும் ஆடத் துவங்கினாள். “இனி எப்பவாச்சும் ஸ்ப்ரிங் போகனும்னா என்னயக் கூப்டுங்க. நான் கூட்டிட்டுப் போறேன்...” அவன் முன்னை விடவும் அவளுக்கு நெருக்கமாக வந்து ஆடிக் கொண்டிருந்தான். ஆனந்தி திரும்பி தன் தோழிகளைத் தேடினாள். எல்லோரும் உற்சாகமாய்க் குடித்துக் கொண்டிருந்தனர். அதிகபட்சம் இவன் எங்கு வந்து நிற்பானென நன்றாகவே தெரியும். அதை நேரடியாக கேட்டும் தொலைக்க மாட்டான். “சரி பாக்கலாம்...” அனுப்பி வைத்துவிடும் பொருட்டு சொன்னவள் மெதுவாக நகர்ந்து கூட்டத்திற்குள் செல்ல

முயன்றாள். வழியை மறைத்தபடி ஆடி வந்தவன் “அப்போ இன்னைக்கு டின்னர் என்னோட வரலாமே…?” கண்ணடித்துச் சிரித்தான். ஆனந்திக்கு உற்சாகமானதொரு நாளின் ஆகக் கடைசியான இந்த விளையாட்டு பிடித்திருந்தது. சரியெனத் தலையாட்டினாள். “வெறும் டின்னர் மட்டுந்தானா?...” ஆனந்தியின் குரல் முன்னைவிடவும் சத்தமாகக் கேட்க அவன் சிரித்தபடியே “சரி நான் வெளில இருக்கேன் வாங்க…. பிளாக் கலர் ஸ்கோடா….” கூட்டத்திலிருந்து நகர்ந்து சென்றான். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த அவளின் தோழிகள் தள்ளி நின்று கேலியாக கையசைத்தனர். பதிலுக்கு ஆனந்தியும் கை அசைத்தாள்.

அவனது ஜாகை அந்த பாரிலிருந்து வெகுதொலைவிலிருந்தது. கடற்கரையை ஒட்டிய நவீனமான வீடு. அலைகளின் சப்தம் கண்ணாடித் தடுப்பைத் தாண்டி மென்மையாய் ஊடுருவி நிரம்பியது. இன்னதென்று சொல்லமுடியாத உணர்ச்சிகள், சூழலுக்கு இணங்கும் பக்குவம், நிராகரிக்கும் மனமில்லை. ஒருவேளை அவளுக்குள் இருந்த பாலுணர்ச்சி காரணமா?

தெளிவற்றிருந்தாள். ‘என்னோடு வருகிறாயா?’ என அவன் கேட்ட உடனேயே

சம்மதம் தெரிவித்திருந்தவள் இவள்தான். அங்கிருந்த மதுபோத்தலில் இருந்து

கொஞ்சத்தை ஊற்றிக் கொண்டு குடித்தாள். ஏற்கனவே குடித்திருந்த

போதையை மீறி புதிதாக இறங்கியது போல் தொண்டை எரிந்தது. அவளது

எண்ணமெல்லாம் அறையைத் தன்னுள் அடக்கிய இறைச்சலும்
வெளிச்சமுமான வெளியுலகினைப் பற்றியதாக இருக்க, அவன் முதலில்
அவள் பேசட்டுமென எதிர்பார்த்திருந்தவன் போல, அவளையேப்
பார்த்துக்கொண்டிருக்கிறான். குடித்துக் கொண்டிருக்கும் அவளது
ஆடைகளை களையும் எண்ணமெதுவும் இல்லை. அவளருகில் வந்து
இன்னொரு சுற்று மதுவை ஊற்றிக் கொடுத்துவிட்டு நெற்றியில்
முத்தமிட்டான். “உன்ன ரொம்ப நேசிக்கிறேன். நீ இந்த வீட்ல
என்னோடயே இருந்தா சந்தோசப்படுவேன்.” என மெல்லிய குரலில்
முணுமுணுக்கிறான். இவளிடத்தில் அதற்கான பதிலில்லை. இதற்கு முன்

எத்தனையோ பேர் எத்தனையோ முறை கேட்டிருக்கிறார்கள். இவனே கூட

கேட்டிருக்கிறான். ஏன் ஒரு பெண் எப்போதும் யாரோ ஒரு
தனிமனிதனுக்கு பாத்தியப்பட்டவளாய் இருக்க வேண்டுமென

தவிக்கிறார்கள்.
”உன்னிடத்தில் எனக்கு அப்படியான ப்ரியமில்லை” என சிரித்தபடியே சொன்னாள். அவன் ஏமாற்றத்தோடு பார்த்தான். என்ன ஆனாலும் அவளை அவனுக்குப் புரியாது, இப்போது மட்டுமல்ல, ஒருபோதும் அவளைப் புரிந்து கொள்ள அவனால் இயலாது.
“நீ காதலோடதான் எங்கூட படுக்கனும்னு எந்தக் கட்டாயமுமில்ல. இயல்பா இரு. வழக்கமா வீக் எண்ட்ஸ்ல உன் படுக்கைக்கு கூட்டி வர்ற பெண்கள எப்படி நடத்துவியோ அப்படியே என்னயும் நடத்து.”
அவன் அவளுக்கு அருகில் அமர்ந்து கொண்டான். “இல்ல அவங்களும் நீயும் ஒன்னு இல்ல. நீ சம்மதம்னு சொன்னா இனி இந்தப் படுக்கைல படுக்கற ஒரே பெண் நீ மட்டுந்தான்.”
மதுவை அப்படியே வைத்துவிட்டு எழுந்து கொண்டாள்.
“இந்த மாதிரி முட்டாள்த்தனமா பேசறதுக்குத்தான் கூப்ட்டியா? உன்னயன்னு இல்ல, யாரையும் என்னால காதலிக்க முடியாது. உங்கிட்ட இருந்த மென்மை புடிச்சிருக்குன்னுதான் உங்கூட வர சம்மதிச்சேன். உனக்கு ப்ராப்பர்ட்டியா எல்லாம் இருக்க முடியாது...”
அவன் முகம் வெளிறிப்போனான். “உனக்கு வேண்டியதெல்லாம் அது மட்டுந்தானா? படங்கள்ல நடிக்கும் போதுதான் அப்டின்னா, நிஜத்துலயும் அப்பிடித்தான் இருக்கனுமா?” அவனை அடித்துவிட கை பரபரத்தது. அடக்கிக் கொண்டவள் இதழ்களில் ஆழமாக முத்தமிட்டுவிட்டு
“வாழ்க்கைல பெரும்பாலான நேரம் முட்டாளுங்களோடதான் இருக்கேன். குடிக்கும் போதாவது நிம்மதியா இருக்கனும்... நான் வர்றேன்...”
தனது கைப்பயையும் அலைபேசியையும் தேடி எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறப் போனவளின் கைகளைப் பிடித்து நிறுத்துகிறான். நெருங்கி சென்று அவள் உடைகளை அவசரமாக களைகிறான். அவள் கழுத்திலும் மார்பிலும் முத்தமிடுகிறான். தசைகளின் திரட்சியற்று மிக மெலிந்த அவன் பிடியில் கொஞ்சமும் வலுவில்லை. அவள் அவனது முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ‘குறி’யைத் தவிர ஆண்மைக்கான எந்த அடையாளங்களுமில்லாத

அவனுக்குள் தன்னுடல் மீதிருக்கும் தீவிரமான ஆர்வத்தை களைக்க விரும்பாதவளாய் படுக்கையில் சாய்ந்து கொண்டாள். அவனுடலின் சாம்பல் நிற மினுமினுப்பையும் மிருதுவையும் வருடிக்கொடுக்கிறாள். செருமிக் கொள்கிறான். கண்ணீர் விட்டு அழுகிறான். காதல் வயப்பட்டவன் போல் தன்னைக் காட்டிக்கொள்ள ஏன் இத்தனைப் பிரயத்தனப்பட வேண்டும்? அவளுக்கு வருத்தமாக இருந்தது. அழுதபடி காரியத்தில் இறங்குகிறான். சிறுவன் ஒருவன் தன்னுடலின் மீது விளையாடிக் கொண்டிருக்கும் குறுகுறுப்பை உணர்ந்தவள் சிரித்து அவனைக் காயப்படுத்திவிடக்கூடாதென அமைதியாய் படுத்திருக்கிறாள். 'காண்டம்' அணிந்து கொள்வதற்கு முன்னால் தன் குறியில் அவன் ஸ்ப்ரே அடித்துக் கொண்டது நினைவு வந்தபோது, ஆண்மையை நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்தில் அவன் இயங்கிக் கொண்டிருப்பது புரிந்தது. அத்தனை நேரம் இயங்கியும் சின்னதொரு காதலைக் கூட அவளிடத்தில் அவன் செலவழித்திருக்கவில்லை. உச்சத்திற்குப்பின் அவளுடலில் இருந்து ஒதுங்கியவனின் சிறிய குறி முன்னைவிடவும் சிறியதாய் குறுகிப்போயிருந்ததைப் பார்த்தாள். உள்ளங்கையால் மறைத்துக் கொண்டவன், அவசரமாக எழுந்து கழிவறைக்குள் போனான். திரும்பி வந்து பார்த்தபோது ஆனந்தி அங்கிருந்ததற்கான எந்த அடையாளங்களும் இல்லை. படுக்கை சின்னதாகத்தான் களைந்திருந்தது. தலையனைக்கு அருகில் அவன் உருவிப்போட்ட ஆணுறையை ஜீரோ வடிவத்தில் முடிச்சிட்டு வைத்துவிட்டுப் போயிருந்தாள். வெறுப்பில் ஜன்னல் கண்ணாடியின் வழியாக சாலையைப் பார்த்தான். ஆட்டோவிற்காக நின்றிருந்த ஆனந்தி இவனைத் திரும்பியே பார்த்திருக்கவில்லை.

# இடைவெளி.

பெரிய வெறுமையான தன்னுடைய வீட்டில் தனியாக இருக்க ஆனந்திக்குப் பிடிக்கவில்லை. படப்பிடிப்புகள் தொடர்ந்து தள்ளிப் போய்க்கொண்டிருந்தன. முதல் சில நாட்கள் வீட்டிலிருந்ததை முழுமையான சந்தோசத்தோடு அனுபவித்தாள். இத்தனை காலம் சம்பாதித்த பணம் தன்னைப் பாதுகாக்குமென்கிற நம்பிக்கை. ஆனாலும் வேலை செய்யாமல் இருப்பது அலுப்பூட்டியது. வேறு படங்களுக்கு ஒப்புக்கொள்ளலாம் என்றால் ஏற்கனவே கொடுத்திருந்த தேதிகளை என்ன செய்வதென்கிற குழப்பம். அவளை வைத்து படம் எடுக்கிற தயாரிப்பாளர்களோ இயக்குநர்களோ ஒருவரும் இவளிடம் பேசவில்லை. இவளே அழைத்தபோதும் பேசாமல் தவிர்த்தனர். இந்தப் புறக்கணிப்பும் அமைதியும் எரிச்சலூட்டியது. இண்டஸ்ட்ரிக்கு வெளியில் யாரிடமாவது விசாரிக்கலாமென யோசித்த போதுதான் கோட்டயத்திலிருக்கும் அவளுக்கு நெருக்கமான விநியோகஸ்தர் ஒருவரின் நினைவு வந்தது. விசாரித்தபோது இவள் படங்களை வெளியிடுவதில் பிரச்சனை என்று மட்டும் தகவலாகச் சொன்னார்.

கேரளாவில் இவளுக்கு ரசிகர்கள் இல்லாத ஊரில்லை. அப்படி இருக்க எப்படி சடாரென இவளை முற்றிலுமாக ஒதுக்க முடியும்? ஆனந்தி மலையாள சினிமாவின் அடையாளமாக மாறியிருந்த போதும் தன் ஜாகையை சென்னையை விட்டு மாற்றியிருக்கவில்லை. இரத்தமும் சதையுமாய் இந்த ஊர் மட்டுந்தான் அவளுக்குள் எல்லா நினைவுகளையும் சேமித்து வைத்திருந்தது. இப்போது மலையாளிகள் கைவிடப்போகிறார்கள் என்கிற நிலையில் கூட இங்கிருக்கும் இண்டஸ்ட்ரி ஆதரிக்குமா என்பது சந்தேகமே. எல்லோருக்குமே இவள் மறைமுகமான அச்சுறுத்தல். பெரிய முதலீடு தேவைப்படாத இந்தப் படங்களை எடுக்க நிறைய பேருக்கு விருப்பம் தான். சமூகம் சார்ந்த தயக்கம் இருந்ததாலேயே சில பெரிய தயாரிப்பாளர்கள் எடுக்காமல் தவிர்த்திருந்தனர்.

மாத்ரூபூமியிலிருந்து அவளை நேர்காணல் எடுக்கக் கேட்டு ஒரு பத்திரிக்கையாளன் அழைத்திருந்தான். அபூர்வமாகவே இவளது நேர்காணல்கள் பத்திரிக்கைகளில் வந்திருக்கின்றன. மீடியாவிலிருந்து

தன்னை விலக்கி வைத்துக் கொள்ளவே எப்போதும் விரும்புகிறாள். பத்திரிக்கைகளின் ஃபோட்டோக்களுக்கு போஸ் கொடுப்பதும், தான் ஒன்று சொன்னால் அவர்கள் ஒன்றை எழுதி வைப்பதும் மன அழுத்தத்தைத் தவிர வேறெதையும் பெரிதாக தருவதில்லை. ஆனால் இப்போதிருக்கும் சூழலில் இந்த நேர்காணலை அவளால் தவிர்க்கமுடியவில்லை. எதன் பொருட்டெனெ விசாரித்தாள். கேரளாவில் அவளுக்கு இருக்கும் செல்வாக்கு குறித்து என்று மட்டும் பொதுவாகச் சொன்னான். தொலைபேசி வழியாக நீண்ட அந்த பேட்டியில் அவள் இதுமாதிரி நடிப்பதன் காரணமாய் கேரள சமூகத்தை ஆபாசத்திற்குரிய ஒன்றாக மாற்றிக் கொண்டிருப்பதான கோவம் மட்டுமே துவக்கத்திலிருந்து அவனிடம் வெளிப்பட்டது.

”ஆனந்தி, இந்தப் படங்கள எல்லாம் நீங்க உங்க குடும்பத்தோட உக்காந்து பாப்பிங்களா? இது மாதிரி எல்லாம் நடிக்க ஏன் சம்மதிக்கிறீங்க?”

”நான் ஏன் என் குடும்பத்தோட உக்காந்து பாக்கனும்? நடிக்கிறது என்னோட வேலைங்க. இப்பிடி நடிக்காத அப்பிடி நடிக்காதன்னு சொல்றதுக்கு யாருக்கும் உரிமை இல்ல.”

“ஆனா உங்க படங்கள் பெரிய அளவுல ஆண்கள் மத்தியில செக்ஸ் வெறியத் தூண்டுதே. இதனால கற்பழிப்புகளும் பெண்கள் மீதான வன்முறைகளும் அதிகமாகி இருக்கு தெரியுமா?”

”ஓ ... அப்போ இந்தப் படங்கள் எல்லாம் வர்றதுக்கு முன்னால அங்க கற்பழிப்பே இல்லையா? பெண்கள் கொடுமைப்படுத்தப்படவே இல்லையா? நீங்க சொல்றது சுத்த நான்சென்ஸா இருக்கு.”

ஆனந்தியால் அவன் கேள்விகளுக்குப் பொறுமையாக பதில் சொல்ல முடியவில்லை. அவள் குரலில் வெளிப்பட்ட கோபம் அவனிடமும் எதிரொலித்தது.

“உங்க படங்களால வெகுஜன மலையாளப் படங்களோட வியாபாரமே முடங்கிடுச்சு. வெறும் உடம்பக் காட்டி கலாப்பூர்வமான ஊடகத்த சிதைக்கிறது தப்புன்னு தோணலையா?”

“இதுதான் கலாப்பூர்வமான விசயம்னு தீர்மானிக்கிறதுக்கு நீங்க யாருங்க? நெருக்கடியோட வர்ற ஒருத்தன என் படம் லேசாக்குது. அதை மத்த படங்கள் செய்யலைங்கறது என்னோட தப்பா என்ன?”

“ஓ ... எல்லோரையும் சந்தோசப்படுத்தனும்னா அதுக்கு சினிமா தேவை இல்ல, மசாஜ் பார்லர் போதும். நீங்க அதைத்தான் செஞ்சுட்டு

இருக்கீங்க."

"நல்லது மிஸ்டர். உங்களுக்கு ஒருவேள இது மசாஜ் பார்லரா தெரிஞ்சா அது என்னோட தப்பில்ல."

ஆனந்திக்கு அவனோடு தொடர்ந்து உரையாடப் பிடிக்கவில்லை. கேள்விகளை விரைந்து முடிக்கச் சொன்னாள்.

"ஓகே மேடம். நீங்க திரும்பவும் மலையாள சினிமாவுக்கு வரக்கூடாதுங்கறதுல இங்க எல்லோருமே தீவிரமா இருக்காங்க. நீங்க மலையாள சினிமா இண்டஸ்டரிக்கு ஏதாவது சொல்ல விரும்பறீங்களா?"

கோவத்தைத் தவிர எதுவும் எழாத கணத்தில் செய்தியாய் எதைச் சொல்ல?
காறித் துப்பலாமா? அல்லது சாபமிடலாமா? இல்லை இத்தனை ஆண்டுகள்
தனக்கு சோறு போட்ட தொழில். அடக்கிக் கொண்டு,

"பத்து வருசத்துக்கும் மேல முட்டாளுங்க நெறஞ்ச ஒரு இண்டஸ்ட்ரில வேல பாத்துட்டோமேன்னு வெக்கப்படறேன்..."

வார்த்தைகளை முடிக்கும் முன்பாகவே தொலைபேசியை வைத்துவிட்டாள்.
எதற்காக தன் மீது இத்தனை வெறுப்பு? வன்முறையைத் தூண்டுகிற எதையும் செய்யவில்லை. இருந்தும் அறிவார்ந்த சமூகம் தன்னைக் கொடூரமாக புறக்கணிக்கிறது. அவர்கள் தங்களுக்கிருக்கும் நியாயவாதங்களைக் கொண்டு தனது உரிமைகளை சிதைக்கும் விதமாய் வலிமையானக் கோட்டைகளை எழுப்ப நினைக்கிறார்கள். பயந்து ஒளிந்து கொள்ளாமல் சண்டையிடவே நினைத்தாள். யாரை எதிர்த்து சண்டையிடுவது? அவள் எதிரி யாரோ ஒரு தனிமனிதனல்ல, பெரிய தொழிலை நம்பிய கூட்டம். அந்தக் கூட்டத்தில் ஒருவர் கூட இவளுக்கு ஆதரவாயில்லை என்பதை நினைத்து வருத்தப்பட்டாள். தனது வாழ்வின் இந்த நிலை குறித்து எதையும் யோசிக்க முடியாமல் அவளால் தொடர்ந்து மௌனமாய் இருக்கமுடியவில்லை.

கையிலிருந்த பணம் தீரும் நிலை. சக்தியிடம் சொல்லி மேனேஜரை வரச்சொல்லியிருந்தாள். நீண்ட நாட்களுக்குப் பின் சேமிப்பைக் குறித்தும் கையிருப்பைக் குறித்தும் அக்கறை வந்தபோது

வாழ்வின் இளமையான பருவம் அவளை விட்டுப் போயிருந்தது. அவளுக்கு நகைகளிலோ பொருட்களிலோ எந்தவிதமான ஆர்வங்களும் இல்லை, அதனால் அதை சேர்த்து வைத்திருக்கவுமில்லை. வங்கியிலிருந்து சில ஸ்டேட்மெண்ட்களை எடுத்து வந்திருந்தவன் அவளிடம் கொடுத்துவிட்டு அமைதியாக எதிரில் உட்கார்ந்தான். ஆகக் கடைசியாய் கையிருப்பை பார்த்து அதிர்ச்சியாகிப் போனாள். மொத்தமாக இருபது லட்சங்களுக்கும் குறைவான பணமே இருந்தது. பத்து வருடங்களுக்கும் மேலாக இரவும் பகலுமாய் உடல் தேய நடித்து சேர்த்தது இவ்வளவுதானா?

“என்னங்க இது? இவ்ளோதான் இருக்கா?”

“ஆமா மேடம்…”

“என்ன சொல்றீங்க? இவ்ளோ நாள் சம்பாதிச்சதெல்லாம் என்னாச்சு? எங்க போச்சு?”

“எங்கயும் போகல மேடம். உங்ககிட்ட உதவி கேட்டு வந்த எல்லோருக்கும் குடுத்தீங்க, யாருக்கு எவ்ளோ குடுக்கறோங்கற கவனம் கூட இல்ல. எத்தன பேருக்குக் குடுக்கறம்னும் யோசிக்கிறதில்ல. இந்தாங்க…”

ஒரு ஃபைலை அவளிடம் நீட்டினான். அவன் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகான அவளது மொத்த வரவு செலவு கணக்குகள். ஒவ்வொரு நாளும் அவள் செலவு செய்த எல்லாவற்றிற்குமான கணக்குகள் எழுதப்பட்டிருந்தது. சிலருக்கு உதவி செய்யச் சொல்லி பணம் கொடுக்கச் சொன்னது உண்மைதான். ஆனால் அது தன்னை முழுமையாய் காலி செய்துவிடாது என உறுதியாய் நம்பியிருந்தாள். வழக்குகளுக்கான செலவுகள் என எழுதப்பட்டிருந்த தொகைகளைப் பார்த்து மலைத்துப் போனாள். முப்பது நாற்பது லட்சங்களை அந்த வழக்குகள் விழுங்கியிருந்தன.

“கோர்ட்டுக்கு இவ்ளோ பணமா செலவாகி இருக்கு.?”

“என்ன மேடம் இப்பிடி கேக்கறீங்க? ஆறு கேஸ் மேடம். திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திண்டிவனம், சேலம், தர்மபுரின்னு ரெண்டு வருசம் இதுக்கு அலைஞ்சு இருக்கீங்க. ஷூட்டிங் டேஸ் எல்லாம் ஸ்பாயில் ஆகுது சீக்கிரம் முடிக்கச் சொல்லுங்கன்னு நீங்க சொன்னதால ஜட்ஜுக்கும் ஆப்போசிட் பார்ட்டிக்கும் பணம் கொடுத்துதான் எல்லாத்தையும் முடிச்சிருக்கோம். இல்லைன்னா அந்த கேஸ்லாம் முடிஞ்சிருக்குமா என்ன?”

தன் மீது அவள் சந்தேகப்பட்டிருக்க கூடுமென்கிற ஆதங்கத்தில் அவன் குரலுயர்த்தினான்.

“இத்தன வருசம் உங்களுக்கு மேனேஜரா இருந்து என்ன மேடம்

சம்பாதிச்சிருக்கேன், ஒரு டிவிஎஸ். சேம்ப் வெச்சிருந்தேன். அத மாத்திட்டு ஒரு பைக் வாங்கி இருக்கேன். வேற என்ன இருக்கு சொல்லுங்க?”

ஆனந்தியால் அவனைப் பார்க்க முடியவில்லை. அவனை மட்டுமல்ல தன்னைச் சுற்றியிருந்த யாரையும் பார்க்கமுடியவில்லை.

“ஃபைல்ஸ் எல்லாத்தையும் வெச்சுட்டு போங்க... நான் அப்பறம் கூப்டறேன்...”

தன் மடியிலிருந்த ஃபைலை டேபிளில் போட்டுவிட்டு பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டாள். இந்த சிகரெட் உட்பட எல்லாவற்றிற்கும் எழுதப்பட்டிருந்த கணக்குகள் இப்போது எரிச்சலூட்டின. தான் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பது தெரிந்தும் அவளால் எதுவும் பேச முடியவில்லை. முட்டாள்த்தனம் எந்த துணிச்சலான எதிர்வினைகளையும் செய்யவிடாதபடி முடக்கிப் போட்டிருந்தது. மேக்கப் மேன். அந்த மேக்கப் மேனின் மகன் திருமணத்திற்கு ஐந்து லட்சமா கொடுக்கச் சொன்னோம்? யோசித்துப் பார்த்தாள். இல்லையென்றுதான் உறுதியான நினைவு. ஆனால் சரியான கணக்கும் அவரின் கையொப்பமும் இருந்தது. எல்லோரும் தான் ஏமாற்றி இருக்கிறார்கள். யாரும் விதிவிலக்கில்லை.

அவள் வாழ்க்கைக்கான செலவுகளைத் தவிர்த்து அவள் பெரிதாக செலவு செய்திருக்கவில்லை. ஆனாலும் இப்போது எதுவுமில்லாதவளாக இருந்தாள். தன் வாழ்க்கை துவங்கிய இடத்திற்கு வந்துவிட்டது போன்ற அச்சம் மனமெங்கும். கொந்தளிப்பிற்குப்பின் அமைதி, மீண்டும் கொந்தளிப்பு, மணிக்கணக்காக. இந்த ஆவேசத்தின் முடிவில் புரிந்து கொள்ள முடிந்த ஒரு உண்மை, தானொரு முட்டாள். நிகழ்காலத்திலிருந்து தப்பித்து கடந்த காலத்திற்குள் குதிக்கப் பார்க்கிறாள். ஏற்கனவே ஒன்றாகப் பலமுறை மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்தில் அவளுடன் கூடச் செல்ல முடிகிறவர் இப்போது ஒருவருமில்லை.

# குரூரம் நிரம்பிய அறை.

பாபுவின் உடலெங்கும் இன்னும் அந்தச் சிறுமியின் வியர்வை வாசனை நிரம்பியிருந்தது. இருளின் சமன் குலைத்து விளக்கைப் போட்டபோது அவள் படுக்கையில் அசைவற்றுக் கிடந்தாள். கன்னத்தில் தட்டி எழுப்பிப் பார்த்தான். அவளிடம் சலனமில்லை. எழுந்திருக்கவில்லை. கண்கள் எல்லா ரகசியங்களையும் விழுங்கிக் கொண்டு அமைதியாய் மூடியிருந்தன. ”பாப்பா… எந்திரிம்மா.. பாப்பா..” அவன் கைகள் அச்சத்தில் குளிர்ந்து போயிருந்தன. அந்தச் சிறுமியின் உடலில் ஆங்காங்கே இவன் கையின் நகத்தடங்கள். ஆதூரத்தோடு முத்தமிட்டதில் இன்னும் மிச்சமிருந்த எச்சில் வாசனை. “அம்மா, வலிக்கிது, பயமா இருக்கு, ப்ளீஸ் விடுங்க அங்கிள்…” என அவள் அச்சத்தோடு எழுப்பிய முனகல்கள் தான் அவனுக்குள்ளிருந்த மிருகத்தை மேலும் மேலும் தூண்டி வெறியூட்டின. அச்சப்படுகிறர்களின் ஓலத்தில் உடல் எழும்பும் வினோத மிருகம் அவன். இருளில் அவள் மொழியற்ற ஒரு குரலில் கதறியபோது அவன் தானிருந்த இடம் எல்லாவற்றையும் மறந்து போனான். அஸ்ஸாமில் பழைய சர்ச் ஒன்றிற்குப் பின்னால் ஈரமான களிமண் நிலத்தில் தன் உடலுக்குக் கீழ் கிடத்திய சிறுமியாக மட்டுமே இப்போது இவளும் தெரிந்தாள். இந்தச் சிறுமிக்கு முன்பும் பணிநீக்கம் செய்யப்பட்ட இத்தனை வருடங்களில் அவன் வதை செய்த குழந்தைகள் அத்தனை பேரிலும் அவன் அந்த அஸ்ஸாமியச் சிறுமியையே உணர்ந்தான். சமயங்களில் அப்படிக் கிடப்பது மிருதுவான சிறுமி ஒருத்தியின் சவத்துடன் பிணைந்திருப்பது போன்ற உணர்வையே கொடுக்கும்.

நண்பனின் வீட்டுத் திருமணத்திற்காக மயிலாடுதுறை போயிருந்தான். பெரும்பாலும் இறுக்கமானவனாய் இருப்பவன் இதுமாதிரியான சூழல்களில் தான் தன்னை மறந்து எல்லோரிடமும் இயல்பாக பேசுகிறவனாக மாறிவிடுகிறான். சுற்றிலும் சந்தோசமான ஆட்கள் நிறைந்திருக்கையில் தன்னையும் அவர்களில் ஒருவனாய் நினைப்பான். மாலை ஆட்டமும் பாட்டமுமாய் இருந்தபோது கூட அவனுக்குள் எதுவும் தோன்றவில்லை. எப்போதும் போல் குழந்தைகள் சூழ விளையாடிக் கொண்டிருந்தான். டின் டின் கதையையும், ஷெர்லாக் ஹோம்ஸின் துப்பறியும் கதையையும் அவன் சொல்லச் சொல்ல தூக்கம்

மறந்து கேட்ட குழந்தைகளுக்கு அந்த இரவு முழுக்க கதைகளால் நீண்ட சந்தோசம். தூங்கி வழிந்த குழந்தைகள் ஒவ்வொருவரும் அம்மாவையும் அப்பாவையும் தேடிப் போய்விட கடைசியாக இவள் மட்டுந்தான் இவன் தோளிலேயே சாய்ந்து உறங்கிப் போயிருந்தாள்.

அவள் உறவினர்கள் யாரையும் தெரியாதென்பதால் தன் அறையிலேயே உறங்கட்டுமென படுக்க வைத்திருந்தான். சின்ன விக்ரகம் ஒன்று உறங்குவது போல் அக்குழந்தை திவ்யமான உறக்கத்திலிருந்தாள். உறங்கும் போதும் ஒளிவீசும் முகம். பத்தோ பதினொன்றோ வயதிருக்கலாம். தூக்கத்தில் சில முறை அம்மாவைத் தேடி முனகியவள் மீண்டும் புரண்டு படுத்துக் கொண்டாள். பாபு அவளுக்கு பக்கத்திலேயே படுத்துக் கொண்டான். விளக்கை அணைக்க தயக்கமாய் இருந்ததால் அப்படியே விட்டுவிட்டான். கண்களை மூடிக்கொண்ட போது மிருதுவான குழந்தையின் கால் அவன் வயிற்றில் விழுந்தது. வாயில் சின்னதாய் எச்சில் கோடு வழிய அந்தக் குழந்தை ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். கண்களைத் திறந்து பார்க்க விரும்பாதவனாய் ஒரு கையால் அந்தக் காலை மட்டும் நகர்த்திப் போட்டான். அந்தக் கால் அவன் உடலிலிருந்து நகர்ந்த பின்னும் அதிலிருந்த சூட்டை உணர முடிந்தது. தலை முழுக்க வெட்டுக் கிளிகள் மூளையைக் குடைந்து வெட்டுவது போலிருக்க, வினோதமான சப்தங்கள் காதுகளில் எதிரொலித்தன.

சத்தத்தை நீண்ட நேரம் பொறுக்க முடியாதவனாய் எழுந்து கொண்டு வெளியேறி வந்தான். கல்யாண மஹாலில் அப்போதும் சிலர் ஏதோ வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் தூக்கிக் கொண்டு போய் குழந்தையை கொடுத்துவிடலாமென நினைத்த போதே காதுக்குள் மீண்டும் சப்தம் கேட்டது, கிளிகள் மூளையை வெட்டின. தண்ணீர் குடித்துவிட்டு வந்தவன், கதவை அடைத்துத் தாளிட்டான். படுக்கையில் வந்து படுத்துக் கொண்ட போது அவன் கைகள் எந்தக் கட்டுபாடுகளும் இல்லாது இயங்கத் துவங்கின.

உடலின் எந்த மூர்க்கத்தையும் அதுவரை எதிர்கொண்டிராத அந்த சின்னஞ் சிறிய பூ மிக விரைவிலேயே தனக்கு நடப்பது என்னவெனத் தெரியாமல் அவனிடம் கசங்கிப் போனாள். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவள் எழுப்பிய எந்தச் சத்தமும் அந்த அறையைத் தாண்டி வெளியே எட்டியிருக்கவில்லை. கடவுள் கண்ணை மூடிக்கொண்டுவிட்ட அந்த சில நிமிடங்களில் மனிதர்களோடு மனிதனாய் வாழும் ஏராளமான குரூர மிருகங்களில் ஒன்று தன் வேட்டையை நிகழ்த்தி முடித்திருந்தது. எந்த எதிர்ப்புகளுமில்லாமல் கெஞ்சுதல்களை மட்டுமே தன் இறுதி மூச்சு வரையிலும் அந்தச் சிறுமி

எழுப்பி அடங்கிப் போயிருந்தாள். களைப்பேதும் இல்லாமல் தனித்துப் படுத்தவனுக்கு படுக்கையில் கசிந்திருந்த குருதித் தடத்தைப் பார்த்ததும் வியர்த்துப் போனது.

அவ்வளவு நேரமும் என்ன நடந்ததெனப் புரியாமல் சில நொடி அப்படியேக் கிடந்தவன் சலனமற்றுக் கிடந்த சிறுமியின் உடலைப் பார்த்ததும் சத்தமாய்க் கத்த நினைத்தான். அப்போதே விடிவதற்கான நேரம் நெருங்கி விட்டிருந்ததால் இறுக்கமாக வாயை மூடிக் கொண்டுவிட்டான். திருமண வீடு கோலாகலமாக தயாராகிக் கொண்டிருந்தது. தண்ணீரை எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தபோது அடங்கிக் கிடந்த மூச்சு சடாரெனத் திரும்பியது. மயக்கத்தில் இருந்திருக்கிறாளெனத் தெரிந்து சற்று ஆசுவாசமடைந்தான். அவளுடலை நீரால் முழுமையாய்த் துடைத்துவிட்டவன், குருதிக்கறையின் தடத்தை மறைக்க படுக்கையை அவசரமாய் மாற்றினான். சில மணி நேரங்களுக்கு முன்பு எப்படி உறங்கினாளோ அதேபோல் அந்தச் சிறுமி இப்போது கிடந்தாள். அந்த அறையில் தான் இருந்ததற்கான எல்லா அடையாளங்களையும் அழித்துக் கொண்டவன் விடிவதற்கு முன்பாகவே மஹாலை விட்டுக் கிளம்பிவிட்டான்.

காருக்குள் ஏசியை மீறி அச்சத்தில் புழுக்கமாய் இருந்தது. நண்பனின் எண்ணிலிருந்து அழைப்பு வந்தபோது மொபைலை எடுக்க அச்சப்பட்டான். ”ஹலோ....” தொண்டை வறள வாத்தைகள் தடுமாறி நின்றன, “ என்னாச்சு பாபு சொல்லாமயே கிளம்பிட்டீங்க?” நடந்த அசம்பாவிதத்தின் எந்தச் சுவடுகளையும் அவர்கள் தெரிந்திருக்கவில்லை. ஆழமாக மூச்சை இழுத்துக் கொண்டவன் “ஸாரி நண்பா. அவசரமா காலைல ஒரு மீட்டிங். அதான் ராத்திரி பத்து மணிக்கெல்லாம் அங்கிருந்து கிளம்பிட்டேன்.” வலுவானதொரு பொய்யைச் சொன்னதன் மூலம் முந்தைய இரவு நடந்த அத்தனை கொடூரங்களில் இருந்தும் தன்னைக் காத்துக் கொண்டதாய் ஆறுதல் கொண்டான். “இன்னொரு நாள் அவசியம் வர்றேன். உங்க தம்பிக்கு விஷ் பண்ணினேன்னு சொல்லுங்க.” இணைப்பைத் துண்டித்தபோது எந்த மாற்றமும் இல்லாமல் இயல்பான விடியல் சாலையின் மீது நிரம்பியிருந்தது. கண்கள் கலங்கிப் போயிருந்தன. குற்றவுணர்ச்சியும் அவமானமும் அரித்துத் தின்ண, தன்னை அருவருப்பான ஜீவனாய்ப் பார்த்தான். புழுக்களால் தின்ணப்பட்ட தன்னுடலை கூறுபோட்டு எரித்துவிடும் அளவிற்கு வெறுத்தான். இனி ஒருபோதும் தனக்குள்ளிருக்கும் அந்த மிருகம் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென ஆத்திரம் தீர கையால் காரின் டோரில் குத்தினான்.

# பாஸ்டர்ட்ஸால் ஆன உலகம்.

தடுமாறிக் கொண்டிருந்த இந்த நாட்களைக் கடந்து செல்வதற்குள் ஆனந்திக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அவள் எரிச்சலடைகிறாள். வயதாகிக் கொண்டிருப்பதும், காலம் ஓடிக்கொண்டிருப்பதும் கசப்பான உண்மைகளாய் உள்ளுக்குள் பொங்குகின்றன. மகிழ்ச்சியாகவும் குதூகலமாகவும் இருக்க மனம் பரபரத்தது. இத்தனை வருட உழைப்பிற்குப் பின்னும் தன்னிடம் மிஞ்சியிருக்கும் பணம் மிகக் குறைவே என்கிற உண்மை நாளையும் அதற்கடுத்த நாட்களையும் குறித்த அச்சமேற்படுத்தியது. அவளுக்குப் பின்னால் ஒருவருமில்லை. பணமில்லாத மனிதர்களுக்குப் பின்னாலோ முன்னாலோ ஆதரவாக நிற்க யாரும் முன்வருவதில்லை. பிராணிகளில் மனிதன் மட்டுந்தான் சுயநலவாதத்தின் அச்சு அசலான முகம். ஓய்வெடுக்க நேரமில்லாது நடித்துக் கொண்டிருந்த நாட்களில் அவளைச் சுற்றியிருந்த ஒருவர் கூட இப்பொழுது இல்லை. எதிர்பாராததொரு நிலையில் கைவிடப்படுகிறவர்களின் நிலை துயரமானது. அதைக் கடந்து வெளியில் வர நினைக்கிறவர்கள் பலசாலிகளாக, மன உறுதி படைத்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கும் கீழான நிலையிலிருந்து மேலே வந்த தன்னால் இந்த நாட்களின் துயரைக் கடந்து விட முடியுமென ஆனந்தி நம்பிக்கை கொண்டிருந்தாள்.

ஒரு தெலுங்கு படத்தில் ஒரேயொரு காட்சியில் மட்டும் நடிப்பதற்காக கேட்டிருந்தார்கள். இரண்டு நாட்கள் படப்பிடிப்பு. நாளொன்றுக்கு ஐம்பதாயிரம் வீதம் பணம் கிடைக்குமென்பதால் மறுக்காமல் சம்மதித்தாள். ஈ.சிஆரில் தான் படப்பிடிப்பு. சில வாரங்களுக்குப்பின் அவளது வழக்கமான வேலை நாள். அன்று கதாநாயகனோடு அவளுக்குக் காட்சி. கதாநாயகன் கதாநாயகியை தன் மீது மோகங் கொள்ள வைப்பதற்காக இவளுடன் இருப்பது போன்ற கிண்டலான காட்சி. ஒரு கேலிப்பொருளாக தன் உடலை எல்லோருக்கும் விருந்தாக்கத் துடிக்கும் ஒருத்தியாக நாயகனை படுக்கைக்கு அழைக்க வேண்டும். தூரத்திலிருந்து பார்க்கும் நாயகி

கோவத்தோடு வந்து சண்டை போட்டுவிட்டு தன் காதலனின் கற்பிற்கு பங்கமில்லாமல் கூட்டிச் செல்வாள். கதாநாயகனும் கதாநாயகியும் படப்பிடிப்புத் தளத்திற்கு வந்து சேர பதினோறு மணியாகிப் போனது. எட்டு மணிக்கெல்லாம் படப்பிடிப்புத் தளத்திற்கு வந்துவிட்ட ஆனந்தியை அபூர்வமான ஒரு பொருளாகவே எல்லோரும் பார்த்தனர். இயக்குநர் இவளுக்குக் கை கொடுத்தபோது அதில் குறுகுறுப்பை உணர்ந்தாள். ஆண்கள் அவர்கள் எதிர்கொள்ளும் பெரும்பாலான பெண்களிடம் மானசீகமாய் சோரம் போகிறார்கள். பெண்களுக்கு மட்டுந்தான் அந்த வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. ”போதும் ஸார்… நீங்க கையப் பிடிச்சு குலுக்கறதப் பாத்தா ஹேண்ட் ஷேக் பன்ற மாதிரி இல்ல….” ஆனந்தி கேலியாகச் சொன்னதும் அவன் ஏமாற்றத்தோடு கைகளை விட்டான்.

காலை உணவை முடித்தபின் அவளது க்ளோஷப்- ஷாட்களை மட்டும் எடுத்தனர். கடற்கரையை ஒட்டிய ரிசார்ட் அது. காற்றடித்து அடிக்கடி மணல் முகத்தில் படிய மேக்கப் வீணாகிக் கொண்டிருந்தது. கம்பெனி மேக்கப் மேன் அவ்வப்போது டச்சப் செய்துவிட்டுப் போனான். கதாநாயகனுக்கும், நாயகிக்குமாக சேர்த்து ஒரேயொரு கேரவன் மட்டும் வந்திருந்தது. ஆனந்திக்கு சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருக்க, யாரிடம் கேட்பதெனத் தெரியவில்லை. ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்களாக சில பெண்கள் வந்திருந்தனர். அவர்களைக் கூப்பிட்டு கேட்கலாமென்றால் அட்மாஸ்பியர் ஷாட்டுக்காக அவர்கள் கடற்கரையில் போய் நிற்பதும் வருவதுமாய் இருந்தனர். மேக்கப் மேனை அருகில் அழைத்து “டாய்லெட் எதும் இருக்கா?” எனக் கேட்டாள். தெரியாதென இதழ் பிதுக்கியவன் புரடெக்ஷன் மேனஜரை அனுப்பி வைப்பதாக சொன்னான். மூத்திரம் போவதற்கெல்லாமா புரடொக்ஷன் மேனேஜரின் வழிகாட்டுதல் வேண்டும்?

”என்ன மேடம் உங்களுக்கு ஏதாச்சும் வேணும்னா எங்கிட்ட கேக்க வேண்டியதுதான? உங்களப் பாத்துக்கறத்தான் நான் இருக்கேன். எங்கூட
வாங்க.”

புரடக்ஷன் மேனஜர்களுக்கு மட்டுமே இருக்கும் மிகப் போலியான குரல். இவளைப் பார்க்காதது போல் பாவனை செய்தபடியே மொத்த உடலையும் மேய்ந்து அலைந்தன அவன் கண்கள். இதை ரிசார்ட்டில் இருக்கும் யாரோ ஒருவர் செய்திருக்கக் கூடும். இவன் எதற்காக வந்தான்? அவள் சிறுநீர் கழித்துவிட்டு திரும்பி வரும் வரையிலும் அவன் அங்கேயே காத்திருந்தான்.

“நீங்க எதுக்கு ஸார் வெய்ட் பண்ணிட்டு இருந்தீங்க. இங்க இருந்து ஸ்பாட்டுக்கு நானே வந்திருப்பனே.”
“சும்மா ஒரு ஸேஃப்டிக்குத்தான் மேடம்.”
வாய் வரை வந்து நின்ற கெட்ட வார்த்தைகளை துப்பாமல் வேகமாய் நடந்தாள்.
“மேடம். ஹைதராபாத்ல எனக்குத் தெரிஞ்ச புரட்யூசர் ஒருத்தர் பீ கிரேட் படம் பண்ண ரெடியா இருக்காரு. டைரக்டர் மத்த டெக்னீசியன் டீம்மெல்லாம் கூட ரெடிதான். நீங்க ஓகேன்னு சொன்னீங்கன்னா நானே அவர்கிட்ட பேசிடறேன்.”
படுக்கைக்கு அழைப்பதற்கான மறைமுகமான தூண்டில். இவனோடு இல்லாமல் புரட்யூசர் என்ற பெயரில் ரெண்டு தடியன்களையும் கூட்டி வருவான்.
“ஏன் ஸார் படம் பன்றீங்களான்னு டேட்ஸ் கேக்கற இடமா இது? என் மேனேஜரக் கூப்ட்டு பேசச் சொல்லுங்க.”
“அதுக்கில்ல மேடம். நீங்க ஒரு வார்த்த ஓகேன்னு சொல்லிட்டா உடனடியா ஒரு அட்வான்ஸக் குடுத்துட்டு வேலைய ஆரம்பிச்சிடலாம்ல.”
இவனை எப்படித் துரத்திவிடுவது? சினிமாவிற்கு வருகிற எண்பது சதவிகித பெண்களிடம் பயன்படுத்துகிற உத்தியை இத்தனை வருடம் நடிகையாக இருந்த பின்னும் தன்னிடம் பயன்படுத்துகிறானே?
“ஒன்னு பண்ணுங்க ஸார். ஜி.ஆர்.டி. ல ஒரு ரூம் போடுங்க… புரட்யூசரையும் டைரக்டரையும் வந்து பாக்கச் சொல்லுங்க. பேசிக்கலாம்.”
அவன் முகம் பூரிப்பானது. இந்தப் பதிலுக்காகத்தான் காத்திருந்தான்.
“அப்டின்னா இந்த வீக் எண்ட் உங்களுக்கு ஓகே வா மேடம்?”
ஆனந்தி சிரித்தாள்.
“ஓ … கதை பிடிச்சிருந்தா நடிக்கிரேன். எனக்கு ஓகேன்னா உடனே அட்வான்ஸ் அஞ்சு லட்சம் குடுத்துடனும். அப்பறம் படுக்கறதுக்குன்னா அதுக்குத் தனியா காசு குடுத்துடனும். ஒரு பத்தாயிரம் ரூவா செலவு பண்ணிட்டு ஓசிலயே ரெண்டு நாள் ஜாலியா குடிச்சிட்டு உருண்டுட்டுப் போறதுக்கு நான் ஆள் இல்ல.”
அவள் நேரடியாக சொல்லிவிட்டதும் பேசமுடியாமல் நெளிந்தான். இதுமாதிரி நேரங்களில் நடிகையின் உதவியாளராய் இருக்கும் பெண்கள் தான் வருவார்கள். மேற்படி சமாச்சாரங்களை எளிதாகப் பேசிக்கொள்ளலாம். சென்னையில் படப்பிடிப்பு என்பதால் இன்று அவள் சக்தியைக்கூட தன்னுடன் அழைத்து வந்திருக்கவில்லை. அவளை மீண்டும் ஸ்பாட்டில் விட்டுவிட்டு மிக முக்கியமான

வேலையை மறந்துவிட்ட அவசரத்தில் வேகமாக ஓடினான்.

நகரை விட்டு இவ்வளவு தூரம் ஒதுங்கியிருந்துமே கூட இவள் இருப்பதைத் தெரிந்து கொண்டு ரிசார்ட்டுக்கு வெளியே உள்ளூர் ஆட்களின் கூட்டம் கூடியிருந்தது. பாதிக்கும் மேல் பள்ளிக்கூடத்தையும் கல்லூரியையும் கட் அடித்துவிட்டு வந்திருந்த இளைஞர்கள். வெளியே நின்று ஆனந்தியின் பெயரைச் சொல்லி கத்திக் கொண்டிருந்தார்கள். இண்டஸ்ட்ரியிலிருந்து மறைமுகமாக தான் ஒதுக்கப்பட்டாலும் இன்னும் ஏராளமான இளைஞர்கள் தன் மீது மோகம் கொண்டிருப்பதை நினைத்து சந்தோசப்பட்டாள். படப்பிடிப்புத் தளத்திற்கு வரும்போதே ஆனந்தியின் பெயரைச் சொல்லி வெளியே ஆட்கள் கத்திக் கொண்டிருந்ததைக் கேட்ட ஹீரோவுக்கு அவள் மேல் எரிச்சலாக இருந்தது. இரண்டொரு முறை தன் உதவியாளர்களிடம் சொல்லி கூட்டத்தைத் துரத்திவிடச் சொன்னான். வேறு வழியே இல்லாமல் அருகிலிருந்த ஸ்டேஷனுக்கு தகவல் அனுப்பப்பட்டு பாதுகாப்பிற்கு இரண்டு காவலர்கள் வந்தனர். ஆனாலும் கூட்டத்தைத் துரத்தியிருக்க முடியவில்லை. பொறுக்க முடியாமல் ஹீரோ, ”கெஸ்ட் ரோலுக்கு வேற ஆளே கெடைக்கலையா உனக்கு?” கேரவனில் கூப்பிட்டு டைரக்டரைத் திட்டினான். ”ஸாரி ஸார்.. இப்பிடி நடக்கும்னு தெரியாது…” என காலில் விழாத குறையாய் டைரக்டர் அவனை சமாதானப்படுத்தினார்.

ஹீரோவுக்கும் ஆனந்திக்குமான ஷாட். கடற்கரை ஓரத்தில் அவள் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருக்க, ஹீரோ அவளைக் கடந்து போக வேண்டும். மிட் ஷாட்டில் நடந்து வரும் அவனை இவள் இழுத்து அணைக்கும் ஷாட். வேறு ஆளை அவளுடன் வைத்து ரிகர்சல் பார்த்துவிட்டு டேக்கிற்கு ரெடியானார்கள். ஹீரோ பெயருக்கு ஒரு ஹாய் சொல்லிவிட்டு போலியாக அவளைப் பார்த்து சிரித்தான். இவளை விட நான்கைந்து வயது இளையவனாக இருக்க வேண்டும். தெலுங்கில் மூன்று படங்கள் நடித்திருக்கிறான். மூன்றுமே ஃப்ளாப். ஆனாலும் அப்பா புரட்யூசர் என்பதால் இப்பொழுது நான்காவது படம் நடந்து கொண்டிருக்கிறது. ”ரெடி டேக் டேக்…” என துணை இயக்குநர் கத்த ஸ்பாட்டில் பேசிக் கொண்டிருந்த எல்லோரும் அமைதியாகினர். எல்லோரின் கண்களும் அரையும் குறையுமாய் ஆடை விலகியிருந்த ஆனந்தியின் உடலையே மேய்ந்தன. சின்ன ஷாட் என்பதால் அவளும் பெரிதாக கவலைப்பட்டிருக்கவில்லை. ”ஆக்ஷன்” சொன்னதும் இவள் பிடித்து இழுத்ததும் அவள் மேல் வந்து சாய வேண்டிய ஹீரோ

வேண்டுமென்றே அவளைத் தன் பக்கமாக இழுத்தான். டேக் சரியாக வராமல் போக "கட்...கட்...கட்" என டைரக்டர் கத்தினார். ஹீரோ வேண்டுமென்றே செய்கிறான் என்பது தெரிந்துவிட்டதால் வேறு வழி இல்லாமல் "மேடம் பாத்து கரெக்டா பண்ணுங்க மேடம்.." என இவளுக்கு கரெக்ஷன் சொல்லிவிட்டு ஒன்மோர் போகத் தயாரானார்கள்.

**"Back ground ation, sound camra, action"** என டைரக்டர் கத்த ஹீரோ நடந்து வரும் போதே கேமரா அசிஸ்டெண்ட் ஒருவன் அவசரமாக கத்தினான். "ஸார் ஸார்.... லைட் வேரியேஷன் ஸார்...." கேமராவை ஆஃப் பண்ணிவிட்டு வேகமாக கேமராமேன் அந்த அசிஸ்டண்ட்டைக் கூப்பிட்டு ஒரு அறைவிட்டான். "ஓத்தா ஷாட் வெய்க்கிறதுக்கு முன்னால கரெக்ட்டா பாத்து சொல்ல மாட்டியா? ஹீரோ ஸார் வெயில்ல நிக்கிறார்ல... போடா... செட்ல நிக்காத..." அது சின்ன ஷாட் எப்படியும் ஒன்றரை நிமிடத்திற்கு வெளிச்சம் ஒரே மாதிரி இருக்கும் என்கிற நம்பிக்கையில் தான் அவன் எதுவும் சொல்லவில்லை. எதிர்பாராதவிதமாய் மேகம் சின்னதாய் வந்து மறைத்துவிட்டது. ஹீரோ முன்னைவிடவும் எரிச்சல் பட்டான். "யோவ் உயிர வாங்காதிங்கய்யா... வெயில் தாங்க முடியல..." எல்லோரும் அடுத்த டேக்கிற்குத் தயரானார்கள். டைரக்டர் ஆக்ஷன் சொன்னதும் நடந்து சென்ற அவன் சரியாக அவள் இழுப்பிற்கு வந்து அணைத்துக் கொள்வது போல் நெருங்கினான். உடனே அவளிடமிருந்து விலகிக் கொண்டான். வேகமாக டைரக்டரை நோக்கிச் சென்றவன் அவரைக் கூப்பிட்டுக் கொண்டு தனியாக நடந்தான். "யோவ் அவ வாயில இருந்து சிகரெட் நாத்தம்யா... ச்சை... எப்பிடிய்யா நான் கான்சண்ட்ரேட் பண்ணி நடிக்கிறது?" சத்தம் வராமல் கத்தினான். "என்ன எழவுடா இது?" என கடுப்பாகிப் போன டைரக்டர் உதவி இயக்குநர் ஒருவனைக் கூப்பிட்டு அவளிடம் ரகசியமாக விசயத்தைச் சொல்லச் சொன்னார்.

தயங்கி தயங்கி தன்னிடம் வந்த உதவி இயக்குநரைப் பார்த்தவள் 'என்னாச்சு ஸார்?"

"மேடம் நீங்க ஒரு தடவ ஃப்ரஷ் அப் பண்ணிட்டு வந்துடறீங்களா?"

"ஏன்?"

"உங்க மேல இருந்து சிகரெட் ஸ்மெல் வருதாம். ஹீரோ ஸார் அன் ஈசியா ஃபீல் பன்றாரு...."

ஆனந்திக்கு பரிதாபமாக சொல்லும் இவனிடம் கோவப்பட முடியவில்லை. திரும்பி ஹீரோவைப் பார்த்தாள். அவன் மொபைலில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். காலையிலிருந்து ஒரு சிகரெட்

கூட குடித்திருக்கவில்லை என்பது நினைவுக்கு வர எதற்காக அவன் இப்படிச் சொல்கிறான் எனப் புரிந்தது. தன் ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டவள்
“நீங்க சிகரெட் குடிக்காத வேற யாரயாச்சும் வெச்சு ஷூட் பண்ணுங்க… நான் கௌம்பறேன்.”
வேகமாக ரிசார்ட்டின் வாசலை நோக்கி நடந்தாள். உதவி இயக்குநர் போய் இயக்குநரிடம் சொல்ல அவர் பதட்டத்தோடு புரடக்ஷன் மேனேஜரை அனுப்பி வைத்தார். வாசலை அடைவதற்கு முன்பாகவே புரடக்ஷன் மேனேஜர் பதட்டத்தோடு ஓடிவந்தான்.
“மேடம் மேடம்…இருங்க மேடம்…”
அவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.
“என்னய இன்சல்ட் பன்றதுக்குத்தான் வரச்சொன்னீங்களா?”
“ஸாரி மேடம்… உங்களுக்கு இவ்ளோ ஃபேன்ஸ் வந்து வெளிய நிக்கிறதப் பாத்து அந்த ஆளுக்கு காண்டு. அதான் இப்பிடி பன்றான். எங்களுக்காக கொஞ்சம் பொறுத்துக்கங்க மேடம்.”
”என்ன ஸார் தெரியும் அவனுக்கு சினிமாவப் பத்தி? பதினஞ்சு வருசம் பீக்ல இருந்திருக்கேன். இப்பவும் என்மேல இருக்க ரெட் கார்ட கேரளாவுல விலக்கிட்டா அங்க ஸ்டார்ஸ் எல்லாம் தெறிச்சி ஓடுவான். அவ்ளோ ஓப்பனிங் இருக்கு. ஏதோ ஜூனியர் ஆர்டிஸ்ட்ட ட்ரீட் பன்ற மாதிரி ட்ரீட் பன்றீங்க?..”
அவமானம் கரும் புள்ளிகளாய் தன் உடலெங்கும் ஊர்வது போல் விசனப்பட்டாள். ஐம்பாதாயிரம் ரூபாய்க்காக தன்மானத்தை இழந்துவிடுவமோ என வெட்கமாக இருந்தது. புரடக்ஷன் மேனேஜர் வந்த சில நிமிடத்திலயே டைரக்டரும் வந்தார். இரண்டு பேரும் சமாதனங்கள் சொன்னபின் வந்து நடித்துக் கொடுக்க ஒப்புக் கொண்டாள். கோவத்தில் முகம் முன்பைப் போலில்லாமல் வெளுத்துப் போனது. ஒருமுறை டச்சப் செய்துவிட்டார்கள். நடந்த எதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதைப் போல் ஹீரோ இயல்பாக அடுத்த டேக்கிற்கு வந்து நின்றான்.

கேமிராவிற்கு ஃபேவராக நிற்கக் கூட அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. க்ளோ ஷப் ஷாட்டில் அவன் முகம் விகாரமாய் இருந்தது. நடிக்கும் போது சிரிக்கிறேன் என்கிற பெயரில் அவன் செய்த கோணல் சேஷ்டைகளைப் பார்த்தவள் நல்லவேளையாக அவன் நடித்தப் படங்கள் எதையும் பார்த்திருக்கவில்லை என ஆறுதல் கொண்டாள். அவன் ஷாட்டிற்கு ஒன் மோர் கேட்கும் போதெல்லாம் அவனுக்கு கோவம் வந்தது. இரண்டு பேரும் நிற்கும் டூ ஷாட்டில் கூட

ஆனந்தி மிக அழகாக கேமராவிற்கு ஃபேவராக நடித்தாள். அவளோடு இருந்த மூன்று நான்கு ஷாட்களில் நிச்சயம் அவன் அவுட் ஆஃப் ஃபோகஸில் தான் இருக்க வேண்டும். மதிய உணவிற்காக பிரேக் விட்டபோது கேமரா உதவியாளனைக் கூப்பிட்டு தன்னுடைய ஷாட்டை போட்டுக் காட்டும்படி கேட்டாள். மானிட்டரில் ரீவைண்ட் செய்து பார்த்தபோது அவள் நினைத்தது சரிதான். கேமராவிற்கு தனது லுக் எப்படி இருக்க வேண்டும்? எங்கு இருக்க வேண்டுமென்பது கூடத் தெரியாமல் தான் அவன் நடித்திருக்கிறான். அவளோடு சேர்ந்து மானிட்டரைப் பார்த்துக் கொண்டிருந்த உதவி இயக்குநர் “என்ன மேடம் ஹீரோவுக்கு ஃபோகஸ் இல்லன்னு பாக்கறீங்களா?”
ஆமெனச் சிரித்தாள்.
“ஸ்கூல் டிராமால நடிக்கிற நெனப்புலயே இருக்கறவன என்ன மேடம் பன்றது? புரட்யூசர் பையனாச்சே. சகிச்சுக்கிட்டுப் போறோம். ஸ்க்ரிப்ட் பேடை எடுத்துக் கொண்டு அவன் போய்விட, அவளுக்கு அந்தக் காட்சிகளில் தான் சரியாக நடித்திருக்கிறோம் என்கிற திருப்தி.

உணவு இடைவேளை முடிந்து மதியம் ஹீரோயினுக்கும் ஹீரோவுக்குமான காட்சிகளை எடுத்துக் கொண்டிருந்தனர். கடற்கரையின் மாலை நேரத்து வெக்கையில் வியர்த்தது. கடந்த சில நாட்களாக மதிய வேளையில் உறங்கப் பழகியிருந்ததால் கண்கள் தானாகவே சொருகிக் கொண்டன. ஆனாலும் தூங்க அச்சப்பட்டாள். இந்த இடம் அத்தனை பாதுகாப்பானதில்லை. வெளியாட்களை விடவும் அவளோடு இருக்கும் யூனிட் ஆட்கள் தான் பிரச்சனையானவர்கள். சிரமப்பட்டு உறங்குவதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

யார் மூலமாக பரவியதோ மூன்று மணிவாக்கில் இரண்டு பத்திரிக்கைக்காரர்கள் அவளைத் தேடி வந்திருந்தனர். ஏதாவது பிரச்சனை இருந்தாலன்றி அவளிடம் யாரும் நேர்காணல் கேட்டு வருவதில்லை. இரண்டு வருடங்களுக்கு முன் கற்பு குறித்து குஷ்பு கருத்து சொன்னது மாதிரி நீங்களும் கருத்து சொல்ல முடியுமா என ஒரு பத்திரிக்கையாளன் ஃபோனில் கூப்பிட்டுக் கேட்ட போது ”முதல்ல உங்கம்மா , அக்கா , தங்கச்சிங்க கிட்ட கேட்டு பத்திரிக்கைல போடு. அதுக்கப்பறம் எங்கிட்ட வந்து கேக்கலாம்…” என திட்டிவிட்டாள். எல்லாவற்றிற்கும் யாராவது சிலரிடம் கருத்துக் கேட்க வேண்டுமென பத்திரிக்கைக்காரர்கள் நினைப்பது முட்டாள்த்தனம் என்பது கூட அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை. இப்போது பரபரப்பாக பேசிக்கொள்ள பஞ்சாயத்து எதுவும் கிடைத்திருக்காது, அதனால் தன்னைத் தேடி வந்திருக்கிறார்கள். புரடக்ஷன் மேனேஜர் வந்து

விசயத்தை சொன்னபோது

”யாருக்கும் இப்போ இண்டர்வியூ குடுக்கறதா இல்லைங்க. கெளம்பச் சொல்லுங்க எதுன்னாலும் என் மேனேஜர் கிட்ட பேசிக்கட்டும்.”

அவன் தயங்கி நின்றான். “இல்ல மேடம் உங்களுக்கு சப்போர்ட்டிவா நியூஸ் போடத்தான் வந்திருக்காங்களாம்?... கேரளாவுல எல்லோரும் உங்களுக்கு எதிரா இருக்காங்க. நாம சப்போர்ட் பண்ணுவம்னு சொல்றாங்க” அவன் கனிந்து பேசுவதைக் கேட்கையில் இவனே வரச் சொல்லி இருப்பானோ என சந்தேகம் கொண்டாள்.

“ஸார், உங்களுக்குத் தெரியாது. ஏன் வாயக் கௌறி எதையாச்சும் சொல்ல வெச்சிட்டு இவங்க போயி தப்புத் தப்பா நியூஸ் போடுவாங்க. நம்மள நல்லவிதமா ஃபோட்டோ எடுக்கற மாதிரி எடுத்துட்டு அங்க போயிட்டு ரெண்டு பக்கத்துக்கு நான் குளிக்கிற ஃபோட்டோவ போட்டு வெய்ப்பாங்க… வேணாம் ஸார். கெளம்பச் சொல்லுங்க.”

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே பத்திரிக்கைக்காரர்கள் இருவரும் அருகில் வந்துவிட்டனர். புகைப்படக்காரன் அனுமதி கேட்காமலேயே சாதாரணமாக படம் எடுப்பது போல் அவளை எடுக்கத் துவங்கிவிட்டான்.

“ஹலோ யாரக் கேட்டு இப்போ ஃபோட்டோ எடுக்கறீங்க? இண்டர்வியூ தரமாட்டேன்னு சொல்லிட்டன்ல… கெளம்புங்க.”

பத்திரிக்கைக்காரனுக்கு ஆத்திரம் கிளம்பியது. இந்த வாரத்திற்கான அசைண்ட்மெண்ட் இவள். வேறு யாரும் எடுத்துவிடுவதற்கு முன்னால் கவர் ஸ்டோரி எடுத்துவிட வேண்டும். இதைவிட்டால் வேறு சந்தர்ப்பமில்லை. அத்தோடு இருபது கிலோமீட்டர்கள் வெயிலில் பயணித்து வந்திருக்கிறார்கள். வெறுங்கையோடு போனால் அவமானம்.

“மேடம் ஓவரா பண்ணாதிங்க. மொத்த மல்லுவுட்டும் உங்களுக்கு எதிரா இருக்காங்க. கூடவே அங்க இருக்க பத்திரிக்கைகாரங்க வேற. சப்போர்ட் பண்ணலாமேன்னு வந்தா திமிரா பேசுறீங்க…”

“அய்யா சாமி எனக்கு யார் சப்போர்ட்டும் வேணாம்… என் பிரச்ச்னைய எப்பிடிப் பாத்துக்கன்மனு எனக்குத் தெரியும் கெளம்புங்க…”

“என்ன மேடம் இப்பிடி பேசறீங்க? நாங்க பத்திரிக்கைல உங்கள பத்தி இத்தன வருசம் எழுதாமயா இவ்ளோ புகழ் வந்திருக்கு உங்களுக்கு?”

“யோவ் என்னய்யா எழுதினீங்க. நான் குடிக்கிறேன்… பத்து ஆம்பளைங்களோட சுத்தறேன். எப்பப் பாத்தாலும் பான்பராக்கா போட்டுத் துப்பறேன். இதான நீங்க போட்ட நியூஸ். என் மேலெ எவனாச்சும் அவதூறு வழக்குப் போடுவான். பிரச்சனைய எப்பிடிடா

முடிக்கலாம்னு நான் தவிச்சிட்டு இருக்கப்போ என் படம் ஆபாசத்தத் தூண்டுதுன்னு கவர் ஸ்டோரி போடுவீங்க. இப்போ உங்களுக்கு கிண்டறதுக்கு வேற எதுவும் ஊர்ப்பஞ்சாயத்து இல்லைன்னு இங்க வந்திருக்கீங்க."

அவள் ஆக்ரோஷமாகக் கத்திக் கொண்டிருந்த சத்தம் செட்டில் இருந்த எல்லோருக்கும் கேட்டது. சினிமாவில் ஹஸ்கி வாய்ஸில் ஆண்களை வசியம் செய்யும்படி பேசக்கூடியவளிடமா இத்தனை ஆக்ரோஷம்? நிலைமை தீவிரமடைவதை உணர்ந்துகொண்ட புரடக்ஷன் மேனேஜர் "ஸார் கௌம்புங்க. மேடம் தான் சொல்றாங்கள்ல... எதுவா இருந்தாலும் அவங்க மேனேஜர் கிட்ட பேசுங்க போங்க..."

அவர்கள் இருவரையும் மெதுவாக நகர்த்திக் கூட்டிச் சென்றான்.

"ஸார் என்ன ஸார் அந்தம்மாதான் லூசு மாதிரி பேசுதுன்னா நீங்களும் இப்பிடி நடந்துக்கறீங்க? நாங்க பத்திரிக்கைல சினிமா நியூஸ் போட்டாத்தான் உங்களுக்கு விளம்பரம்."

அத்தனை நேரம் பொறுமையாகப் பேசிக் கொண்டிருந்த ஆனந்தியால் ஒரு நிமிடத்தில் அவன் பைத்தியக்காரியாய் ஆக்கிவிட்டதை பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. அவனை இழுத்துப் பிடித்து ஒரு அறைவிட்டாள்.

"தாயோளி... யார்டா லூசு? நீ நெனச்சப்ப எல்லாம் வந்து ஃபோட்டோ எடுக்க, பேட்டி எடுக்க நான் ஸூ ல இருக்க மிருகமா? இல்ல நான் பேட்டி குடுக்காட்டி இந்த வாரம் உன் பத்திரிக்க வராமப் போயிடுமா?"

ஒரு அறையோடு விடவில்லை. அந்தப் பகல் முழுக்க இருந்த ஆத்திரம் இரண்டு மூன்றாய் அறைகளை விட்டாள். செட்டிலிருந்த எல்லோரும் ஓடிவந்து அவளை சமாதானப்படுத்தினர். கூட்டத்திலிருந்து விலகி வேகமாக ஓடிய பத்திரிக்கைக்காரன் தூரத்திலிருந்து இவளை அசிங்க அசிங்கமாய்த் திட்டினான். 'நீ லூசு தாண்டி..." என நூறுமுறை அவன் கத்திய சத்தம் அகோரமாய் எதிரொலித்துக் கொண்டே இருக்க அவளுக்குள் அடங்கிப் போயிருந்த வெறுப்பும் தனிமையும் வன்மமாய் உருண்டு எழுந்தது. எல்லோரும் அவரவர் வேலையைப் பார்க்க சென்றுவிட்டார்கள். தனியாக உட்கார்ந்திருந்தவள் தன்னைச் சுற்றி அவமானத்தின் கண்கள் நூறாய் ஆயிரமாய் கேலி செய்து சிரிப்பதை உணர்ந்தாள். அவன் கொட்டையை நசுக்கி இருக்க வேண்டும், இந்த நாய்கள் வந்து விலக்காமல் போயிருந்தால் அதைத்தான் செய்திருப்பாள்.

"பாஸ்டர்ட்...பாஸ்டர்ட்...பாஸ்டர்ட்...பாஸ்டர்ட்...." எல்லோரையும் வெறுத்தாள். இந்த உலகம் சந்தேகமே இல்லாமல் பாஸ்டர்ட்களால் தான் நிறைந்திருக்கிறதென காறித் துப்பினாள்.

# அறிவித்தல்.

பைத்தியமாகிவிட்டாரா ஆனந்தி? – பேட்டி கேட்டுச் சென்ற பத்திரிக்கையாளருடன் கலாட்டா.

அடுத்த நாள் எல்லா செய்தித் தாள்களிலும் முதல் பக்க செய்தியாக வந்திருந்தது. பிரச்சனையைக் கேள்விப்பட்டதிலிருந்து இவளது சில நண்பர்களே கூட "தப்பு உன்மேல தான் பேசாம மன்னிப்புக் கேட்டுடு" என அறிவுரை கூறினார்கள். அவளால் யாருடைய வார்த்தைகளுடனும் உடன்பட முடியவில்லை. அத்துமீறி நடந்து கொண்ட ஒருவனை அடித்ததில் என்ன தப்பு? அதற்காக ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? அவளுக்கு ஆதரவாக ஒருவர் கூட நின்றிருக்கவில்லை. முன்பின் தெரியாத ஆட்கள் தொடர்ந்து தொலைபேசியின் வழியாய் அவளை ஆபாசமாகத் திட்டியபடி இருந்தனர். இது அத்தனை தூரம் பெரிதுபடுத்தக் கூடிய ஒரு பிரச்சனையா? சம்பந்தப்பட்டது தான் என்பதால் எல்லொரும் ஒரே நேரத்தில் தனக்கு எதிராய் திரண்டிருக்கிறார்களெனப் புரிந்தது. வேறு வழியே இல்லாமல் தனது மேனேஜரைக் கூப்பிட்டு ப்ரஸ் கிளப்பில் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினாள்.

வீட்டிலிருந்து அவளோடு சக்தி மட்டும் காரில் வந்தாள். ஆறுதல் சொல்ல முடியாமல் அமைதியாக இருந்த சக்திக்கு எல்லோராலும் ஆனந்தி கைவிடப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. காரில் பிரஸ் கிளப் போகும் போதுதான் முதல் தடவையாக ஆனந்தி கண் கலங்குவதைப் பார்த்தாள். "ஆனந்திம்மா இதுக்குப் போயி கலங்கிட்டு இருக்கீங்க. விடுங்க."

கணகளைத் துடைத்துவிட்டாள். ஆனந்திக்கு பேச்சே எழவில்லை. அமைதியாக சக்தியின் தோள்களில் சாய்ந்து கொண்டாள்.

பிரஸ் கிளப்பிற்குள் அவள் நுழையும் போது பத்திரிக்கையாளர்களின் சுதந்திரம் முடக்கப்படுவது குறித்து ஒரு மூத்த பத்திரிக்கையாளர் ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தார். ஒரே நாளில் உரிமைகளைப் பெற்றுவிட வேண்டுமென்கிற வெறி இருந்த உரை. அவளைப் பார்த்ததும்

சலசலப்பு. யாரையும் தனியாகப் பார்க்காமல் பொதுவாக ஒரு வணக்கம் வைத்துவிட்டு ஓரமாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.
அவளது மேனேஜர் மன்னிப்பைத் தவிர எதையும் பேச வேண்டாமென தெளிவாக அவளிடம் அறிவுறுத்தி இருந்தான். முடிந்த வரை விரைவில் பேசிவிட்டு அங்கிருந்து நகர்ந்து போக நினைத்தாள். மனதின் ஓரத்தில் இத்தோடு இவர்கள் தன்னை விடப்போவதில்லை என்பதும் உறுதியாகப்
புரிந்தது. வலுவிழந்த மரத்தை வெட்ட கூரில்லாத கத்திகள் தயாராகவே இருக்கும். தான் இப்பொழுது வலுவிலந்த மரம். அடுத்து என்ன
செய்வதென்பது தெரியாதவள். சினிமாவிற்கும், புகழுக்கும் தூரமானமானவள். ஒவ்வொரு நாளும் அனேகமானவர்கள் அதற்காக போட்டியிட்டுக் கொண்டிருக்கும் போது மத்திய வயதை நெருங்கியிருக்கும் தனக்கான இடத்தை நிலைநிறுத்திக் கொள்ள கூடுதலாகக் கொஞ்சம் போராட வேண்டும். அவளைப் பேச அழைத்தனர். தண்ணீர் எடுத்துக் குடித்துக் கொண்டாள்.

”எல்லோருக்கும் வணக்கம். இத்தன வருசமா என்னயப் பத்தி எவ்வளவோ
மோசமா எழுதி இருக்கீங்க. நான் எதுக்காகவும் கோவப்பட்டதில்ல.
ஏன்னா அப்போல்லாம் எனக்கு அதுக்குப் பதில் சொல்றத விட செய்றதுக்கு
நெறய வேல இருந்துச்சு. ஆனா இப்போ நான் ஒதுக்கப்பட்டு இருக்கேன்.
நொறுங்கிப்போன ஒருத்தி கிட்ட வந்து அத்துமீறி நடந்த ஒருத்தர அடிச்சது
என்னோட மிகப்பெரிய தப்புதான். அதுக்காக மன்னிப்புக் கேட்டுக்கறேன்.
இங்க யாருக்கெல்லாம் பேட்டி வேணுமோ சொல்லுங்க இருந்து
கொடுக்கறேன். ஃபோட்டோ எடுக்கனும்னா எடுத்துக்கலாம். துணியோட
போஸ் கொடுக்கறதுன்னாலும் சரி, அவுத்துட்டு அம்மணமா
குடுக்கறதுன்னாலும் சரி எனக்கு ஆட்சேபனை இல்ல. உங்க
பத்திரிக்கை நல்லா விக்கனும் அதுதான் எனக்கு முக்கியம். அப்பறம் நேத்து
ராத்திரி நான் யார் கூடபடுத்தேன். இன்னைக்கு யார் கூட படுப்பேன்னு
இன்வஸ்டிகேசனுக்கு ஆட்கள் வெச்சு சிரமப்படாதீங்க. நான் யார் கூடயாச்சும்

படுத்தா கண்டிப்பா தகவல் சொல்றேன்."
முகத்திலோ குரலிலோ எந்தக் கோபத்தையும் காட்டாமல் பேசிக் கொண்டிருந்த அவளைக் கூட்டம் அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர்.
ஒருவரிடமும் வார்த்தைகளில்லை. தங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் குற்றவுணர்ச்சியைத் தூண்டும் அவள் வார்த்தைகளைத் தொடர்ந்து அவர்களால் கேட்கமுடியவில்லை.
"கடைசியா ஒன்னு சொல்லனும்னு நெனைக்கிறேன். பதினஞ்சு வருசம் சினிமாவுல இருந்திருக்கேன். இனியும் சினிமாவுல தான் இருப்பேன். நடிகையா மட்டுந்தான் இருக்கனும்னு எந்தக் கட்டாயமும் இல்ல. சினிமாவுல எல்லா வேலைகளும் தெரியும். கூடிய விரைவில ஒரு படம் இயக்கப் போறேன். அதுக்கான அறிவிப்பு வரும். எல்லோருக்கும் நன்றி. நான் கடுமையா நடந்துக்கிட்ட அந்த நண்பர் கிட்ட இன்னொரு முறை மன்னிப்புக் கேட்டுக்கறேன்."
அவள் பேசி முடித்துவிட்டுப் போய் உட்கார்ந்த போது, கூட்டத்திலிருந்து சிலர் எழுந்து வெளியே போய்விட்டார்கள். பெரிதாக எதிர்பார்த்து வந்த சுவாரஸ்யங்கள் எதுவும் இல்லை. ஆனாலும் அவள் ஒரு படம் இயக்கப் போகிறாள் என்கிற செய்தி எல்லோருக்கும் ஆச்சர்யமாக இருந்தது. அதன் பிறகு சிலர் மீண்டும் பழைய வேகத்திலேயே பேசினர். ஒருவர் பேச்சினூடே ஆனந்தி இயக்கப் போகும் படத்திற்கு வாழ்த்துக்களைச் சொன்னார்.

அந்த அரங்கத்திலிருந்து வெளியே வந்தபோது அவளை சில புகைப்படங்கள் எடுத்தனர். அவள் அமைதியாக எல்லா கேமிராக்களுக்கும் தன் முகம் தெரியும் படிப் பார்த்துக் கொண்டாள். மேனேஜர் நெருங்கி வந்து காதில் கேட்டான். "எங்கிட்ட கூட ஒரு வார்த்த சொல்லலியே மேடம். டைரக்ஷன் பண்ணப் போறேன்னு. நான் இருக்கேன். நீங்க தைர்யமா புரசீட் பண்ணுங்க..."
அவள் அவனைப் பார்த்து சிரித்தபடியே "நானே இப்பத்தான் முடிவு பண்ணினேன். ரெண்டு மூணு நாள் போகட்டும் பேசறேன்.."
அவனிடம் விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிக்கொண்டாள்.

ஆனந்தி எதுவும் பேசாமல் அமைதியாக தனது மொபைலை எடுத்த நோண்டிக் கொண்டிருந்தாள்.

“என்னாச்சு ஆனந்திம்மா… அமைதியா இருக்கீங்க?”

”ஒன்னுமில்ல சக்திம்மா…. ஒரு வேகத்துல டைரக்ஷன் பண்ணப் போறேன்னு
சொல்லிட்டேன். யார் நமக்கு புரட்யூஸ் பண்ணுவான்னு மொபைல்ல இருக்கற ஆளுங்க எல்லோரையும் பாக்கறேன்…”

சக்தி சிரித்தபடி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

“நம்பிக்கையோட எந்த வேலையச் செய்யனும்னு நெனச்சாலும் நடக்கும்மா..
நீங்க செய்யுங்க. உங்களால முடியும்.”

ஆனந்தியும் ஆமெனத் தலையாட்டினாள்.

“எல்லாம் சரி சக்திம்மா…. கதைக்கு என்ன செய்யலாம்னு குழப்பமா இருக்கு.”

“அடப் போங்கம்மா…. நம்ம கதையவே நூறு படம் எடுக்கலாம். இனி எதுக்கு
தனியா வேற கத?”

சக்தி விளையாட்டாகத்தான் சொன்னாள். ஆனந்தியின் மனதில் அந்த வார்த்தைகள் வலுவாக ஊன்றிப் போயின. தன் வாழ்க்கையை விடவும் சுவாரஸ்யமான கதை எதையும் தன்னால் சொல்லிவிட முடியுமா என்ன?”

காருக்கு வெளியே பார்த்து சந்தோசமாக சிரித்துக் கொண்டாள்.

# தனியறையின் சித்திரங்கள்.

எல்லா சிறைகளும் மனிதர்களின் நினைவுகளைத்தான் தமக்குள் உள்ளடக்கி வைத்திருக்கின்றன. ஒவ்வொரு அறையும், சுவருமே கூட மனிதனின் நினைவலைகளால் ஆனதுதான். ஆனந்தி தனது நினைவுகளையும் தானிருந்த அறைக்குள் தனக்குப் பின்னால் வருபவர்களுக்காக சேமித்துவைத்துக் கொண்டிருந்தாள். தினமும் புதிதாய் சிலர் உள்ளே வருவதும் உள்ளே இருக்கும் சிலர் வெளியேறிப் போவதுமாய் இருப்பதைப் பார்த்தபோது அந்தச் சிறை மாபெரும் விடுதியாகவேதான் தெரிந்தது அவளுக்கு. யாருடனும் பேசாமல் ஒதுங்கி இருக்க அவளுக்கு விருப்பமில்லை. அத்தனை பேருக்கு மத்தியிலும் தனிமையாய் இருக்க நினைப்பது முட்டாள்த்தனம். அந்தப் பெண்கள் எல்லோருக்கும் பசுமையான ஒரு கடந்த காலம் இருக்கலாம், குறைந்தபட்சம் அதைக் கேட்டுக் கொண்டிருந்தால் போதுமென நினைத்துக் கொண்டாள்.

மூன்றாவது நாள் மதிய உணவை முடித்துக் கொண்டபின் வழக்கமாக கிளினிக் சென்று செய்தித் தாள் வாசிப்பதற்குப் பதிலாக விசாரணைக் கைதிகள் இருக்கும் பகுதிக்கு சென்றாள். ஆங்காங்கே சிலர் தாயம் விளையாடிக் கொண்டிருந்தனர். பெரும்பாலானவர்களும் பொதுவாக வைப்பட்டிருந்த டிவியின் முன்னால் உட்காந்திருந்தார்கள். நான்கைந்து அடி உயர மேசையின் வைக்கப்பட்டிருந்த அந்த சின்ன டிவியின் முன்னால் நூற்றுக்கும் அதிகமான பெண்கள் அமர்ந்திருப்பதைப் பார்க்கையில் அப்படி என்ன பார்க்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆர்வம் எழுந்தது அவளுக்கு. அந்த ஹாலின் படிகளில் ஏறியபோது அங்கு காவலுக்கு நின்ற பெண் போலீஸ் ஸ்னேகமாக சிரித்தார்.

“என்ன மேடம் இந்தப் பக்கம்?”

“சும்மா தாங்க… என் செல்லுக்குள்ளயே இருக்க ஒரு மாதிரி இருக்கு. அதான் இந்தப் பக்கமா வந்தேன்…”

“ஓ … இங்க இருக்க பொம்பளைங்கள எல்லாம் தள்ளியே வைங்க… அசந்தா கழுத்த அறுத்துடுவாங்க…”

போலீஸ்காரி விளையாட்டாகச் சொன்னதாகத் தெரியவில்லை. இதழோரத்தில் சிரிப்பிருந்தாலும் அந்த வார்த்தைகளை உச்சரித்ததில் தெரிந்த அழுத்தம் எச்சரிப்பதாகவே இருந்தது. அவளைக் கடந்து ஹாலுக்குள் போன போது பின்னால் உட்கார்ந்திருந்த பெண்களில் சிலர் திரும்பிப் பார்த்தார்கள். அவர்களிடம் எந்தத் தயக்கங்களும் இல்லை. சிலர் லேசாக சிரித்தார்கள். இன்னும் சில அடிகள் முன்னால் நடந்த ஆனந்திக்கு அந்தப் பெண்களோடு அவ்விடத்தில் உட்கார்ந்து கொள்ள முடியுமெனத் தோன்றவில்லை. வெறுமனே நின்றபடி டிவியைப் பார்த்தாள். காட்சிகள் தெரிந்த அளவிற்கு சத்தம் கேட்கவில்லை. கூட்டத்திலிருந்த சிலர் அவள் பெயரை உச்சரிப்பதையும் திரும்பி அவளைப் பார்ப்பதையும் கவனித்தாள். முதல் தினம் இவளை கிளினிக்கிற்கு கூட்டிச் சென்ற பெண் சந்தோசமாகப் பார்த்து கையசைத்தாள். அடையாளம் தெரிந்து ஆனந்தியும் பதிலுக்கு கை அசைத்தாள். அவள் கூட்டத்தை விலக்கி எழுந்து வந்தாள்.

“என்ன மேடம் எங்களை எல்லாம் பாக்க  வந்தீங்களா?”

“ஆமா... சும்மா என்ன செய்றீங்கன்னு பாக்க வந்தேன்... உன் பேர் என்னம்மா சொன்ன?”

”வீட்ல வெச்ச பேரு வைதேகிங்க... மத்தபடி தொழிலுக்குப் போறப்போ அன்னைக்கு என்ன தோணுதோ அதான் பேரு...”

இரண்டு பேரும் பேசியபடியே அந்த ஹாலை விட்டு வெளியே வந்தனர். வைதேகி தன் மடியில் சுருட்டி வைத்திருந்த நிலக்கடலையிலிருந்து கொஞ்சத்தை அவளின் கையில் கொடுத்தாள். வியர்வை ஈரத்தோடு வதங்கிப்போயிருந்த அந்தக் கடலையை உடைத்த போது ஈரத்தில் நெகிழ்ந்து கொடுத்தது. ஒவ்வொன்றாய் உடைத்து வாயில் போட்டுக் கொண்டாள். வைதேகிக்கு அவளிடம் கேட்க நிறைய இருந்தது. ஆனந்தி நடையிலும் பார்வையிலுமே கூட வசீகரிக்கக் கூடியவளாய் இருந்தாள்.

“ஏங்க... எவ்ளோ பெரிய நடிக நீங்க... பிரச்சனைன்னு வந்தப்ப காசக் கொடுத்து சமாளிச்சிருக்கலாம்ல...?”

“ம்... சம்பாதிக்கத் தெரிஞ்ச அளவுக்கு சேத்து வைக்கத் தெரியல வைதேகி. கூட இருந்தவங்க எல்லாரையும் நம்பினேன். வெறுங்கை தான் மிச்சம்.”

வைதேகிக்கு அவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. இத்தனை புகழுக்குப் பின்னாலும் மனதிற்கு நெருக்கமான அசலான மனிதர்களை சம்பாதிக்காமல் போவது துயரம். தனக்கு ஒரு பிரச்சனையென்றால்

உடனடியாக வந்து பார்த்துக் கொள்ள எப்போதும் சிலர் இருக்கிறார்கள். தான் செய்கிற தொழில் தன்னைச் சார்ந்த பெரும்பாலனவர்களுக்கும் தெரியும். ஆனால் ஒரு போதும் அவள் வெளியில் போய்வர சங்கடம் கொண்டதில்லை.

“காசில்லாதவங்களுக்கு ஒரு பிரச்சனைன்னா காசு இருக்கவங்களுக்கு ஆயிரம் பிரச்சன... ஜாமீன் போட்டுட்டீங்களா?”

”வேல நடந்துட்டு இருக்கு வைதேகி.”

இருவரும் பேசியபடியே அந்த பிளாக்கிற்குப் பின்னாலிருந்த துணி துவைக்கும் மேடை நொக்கி சென்றார்கள். துணி துவைக்கும் இடத்தில் தண்ணீரை எடுத்து வர வாளிக்காக இரண்டு பெண்களுக்கு நடுவில் கடுமையான வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. இரண்டு பேரும் மிக மோசமான வசைகளைக் கொட்டிக் கொண்டிருந்ததை அங்கிருந்து வேறு சில பெண்கள் சுவாரஸ்யமாக நின்று ரசித்தனர். வார்த்தைகளால் இரண்டு பேரும் மாறி மாறி தங்களை நிர்வாணப்படுத்திக் கொண்டிருந்தை ஆனந்தியும் சுவாரஸ்யமாகக் கேட்டாள். அந்த வார்த்தைகளில் ஒரு லயமிருந்தது.

“என்ன மேடம் நாரசமா பேசறாங்களேன்னு பாக்கறீங்களா? ரெண்டு பேரும் அக்கா தங்கச்சிங்க...”

ஆனந்திக்கு ஆச்சர்யமாய் இருந்தது. அக்கா தங்கச்சிகள் இரண்டு பேரும் எதற்காக ஒரே நேரத்தில் ஜெயிலில் இருக்க வேண்டும். அதுவும் இத்தனை நாரசமாய் சண்டை போட்டுக் கொள்ளுமளவிற்கு அவர்களுக்குள் என்ன பகை?

“அக்கா தங்கச்சி ரெண்டு பேரும் ஒரே ஆளக் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. சிதம்பரத்துக்குப் பக்கத்துல தான் ஊரு... நாலு வருசம் கூட தாங்கல.., இவங்க ரெண்டு பேரையும் வெச்சு மேய்க்க முடியாம புருஷங்காரன் அப்பப்போ வீட்ட விட்டு ஓட ஆரமிச்சிருக்காரு... அவர் வீட்டுக்கு வர்றப்ப எல்லாம் சண்ட. இவளுங்க ரெண்டு பேரும் பொறுத்துப் பாத்தாளுங்க. ஆள் இனி நாம சொல்றதக் கேக்க மாட்டான்னு தெரிய ஒரு நாள் ரெண்டு பேரும் சேந்தே கழுத்து நெறிச்சுக் கொண்ணுட்டாளுங்க...”

”கொன்னுட்டாங்களா?”

“ஆமா மேடம். வீட்ல ரெண்டு பேரு இருக்கையில வெளில கூத்தியாவத் தேடி போறவன சும்மா விடக்கூடாதுன்னு இப்பவும் சொல்லிட்டு இருப்பாளுங்க...”

”பிடிக்கலைன்னு போறவனா போடான்னு தொறத்தி விட்றுக்கலாமே? எதுக்குக் கொல்லனும்?”

ஆனந்தி அப்பாவியாகக் கேட்டாள்.

“என்ன மேடம் இப்பிடி கேக்கறீங்க? மனசு கொதிக்கிறப்போ புத்தி வேல செய்யுமா? இல்ல புத்தி சொல்றதத்தான் மனசு கேக்குமா? நமக்குப் புடிச்ச ஒருத்தர வெறுத்துட்டா கொல செய்றதுக்கு ஒரு நிமிசம் போதும்…”

இவள் சொல்வது சரிதான். பல சமயங்களில் புத்தி சொல்வதைக் கேட்பதால் தான் மனம் சொல்வதைத் தொடர்ந்து செல்ல முடியாமல் போய்விடுகிறது. பல சமயங்களில் நேரடியாக வெளிப்படுத்த வேண்டுமென நினைக்கிற கோவத்தைத் புத்தி யாரையும் காயப்படுத்தி விடக்கூடாதென கட்டுப்படுத்தி விடுகிறது. இந்தப் பெண்கள் மனம் சொல்வதைத் தொடர்ந்து செல்கிறவர்களாய் இருப்பதால் தான் கோவம் அது வெளிப்படும் கணத்திலேயே முடிந்து விடுவதாக இருக்கிறது. ஆனந்தி யார் யாரின் மீதோ வெளிக்காட்ட முடியாமல் மிச்சம் வைத்த கோவங்களெல்லாம் வன்மமாய் இன்னும் அவளுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவள் வயதோடு சேர்ந்து இப்பொழுது வன்மம் பெருகியிருக்கிறது. வைதேகியும் ஆனந்தியும் அங்கிருந்து நடந்தார்கள்.

“இங்க கன்விக்ட் வார்ட்டர்ஸ் கிட்ட மொபைல் இருக்கும்னு சொன்னாங்க… யார் கிட்ட இருக்கும் எப்பிடி பேசறதும்மா?”

“தேர்ட் பிளாக்ல ஆதி அக்கா கிட்டதான் மேடம் செல்ஃபோன் இருக்கு. ஆனா நாம நெனச்ச உடனே பேசிட முடியாது. முதல்ல நான் போயி அவங்க கிட்ட சொல்லிட்டு வர்றேன். அவங்க எடுத்துத் தயார் பண்ணி வெச்சிட்டு கூப்புடுவாங்க. கக்கூஸ் பக்கமா போயித்தான் பேசமுடியும். வேற எங்கயும் சிக்னல் கெடைக்காது.”

”ஓ … சரி அப்போ நான் இங்க இருக்கேன் போயி கொஞ்சம் சொல்லிட்டு வர்றியா?”

வைதேகி அவளை அங்கிருந்த ஒரு மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு வேகமாக மூன்றாவது பிளாக்கை நோக்கி சென்றாள். அவள் திரும்பி வரும்போது அவளோடு நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும் வந்தாள். ஒரு எல்லைக்கு மேல் அவள் மட்டும் தனியாக நடக்க, வைதேகி அங்கிருந்து கையசைத்து ஆனந்தியைக் கூப்பிட்டாள்.

மூத்திர நாற்றமும் சரியாக அலசப்படாத மலநாற்றமுமாய் சகிக்கவியலாத கவுச்சியடித்த அந்தப் பெரிய கழிவறையின் ஒரு

முனையில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண் தனது இடையிலிருந்து ஒரு அலைபேசியின் வெவ்வேறு பாகங்களை வெளியில் எடுத்தாள். ஆனந்தி மூக்கைப் பொத்திக் கொண்டு அவள் நின்று கொண்டிருந்த இடத்திற்குப் போனாள். வாசலில் வைதேகி காவலுக்கு நின்று கொள்ள அந்தப் பெண் ஆனந்தியிடம் மொபைலைக் கொடுத்தாள். இடையில் செருகிக் கொண்டு வந்திருந்ததால் இன்னுமே கூட முழுக்க வியர்வை நாற்றம் அதில். தனது உடையில் மொபலை துடைத்துக் கொண்டு பாபுவின் எண்களை நினைவில் கொண்டு வந்து அழுத்தினாள். ரிங் ஆனதுமே பாபு இணைப்பில் வந்தான். ஜமீன் குறித்து அவனிடம் விலாவரியாகப் பேச வேண்டும். ஆனால் இந்த நாற்றம் அதற்கு அனுமதிப்பதாய் இல்லை. சுருக்கமாக பேசிவிட்டு மொபைலை அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள். இரண்டு நிமிடங்களுக்குக் குறைவான நேரம் தான். ஆனாலும் ஐம்பது ரூபாய் அதற்குக் கட்டணமாய்க் கொடுக்க வேண்டியிருந்தது.

திரும்பி வரும்போது ரெண்டு நிமிடத்திற்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டுமாவென வைதேகியிடம் கேட்டாள். ”தேவைன்னா செலவழிக்கனுமே மேடம்... இத உள்ளக் கொண்டு வர்றதுக்கு நெறைய கஷ்டப்பனும் சும்மா இல்ல.” ஆனந்திக்குமே அந்த ரகஸ்யம் தெரிந்து கொள்ள ஆசையாய் இருந்தது. எப்படி உள்ளே கொண்டு வருகிறார்கள்? “ஜெயிலுக்கு வர்றதுக்கு மொத நாள் எதுவும் சாப்பிட மாட்டாங்க. வயிறு சுத்தமா இருந்தாத்தான் ஆயி போற பிரச்சன இருக்காது. தண்ணியும் கூட குடிக்க மாட்டாங்க. இப்போ செல்ல தனித்தனியா கொண்டு வந்து சேத்தாங்க இல்லையா, அதே மாதிரி தனித்தனியா குண்டிக்குள்ள வெச்சுதான் எடுத்துட்டு வருவாங்க. வெளிய எடுத்து வெச்சதுல இருந்து உள்ள வந்து சேர்ற வரைக்கும் உயிர் போயி உயிர் வரும்.” சற்று முன் தன் காதில் வைத்துப் பேசியது யாரோ ஒருவரின் குதத்துக்குள் நீண்ட நேரமாய் உறங்கிக் கிடந்த வஸ்து என்பதை நினைக்கையில் அவளுக்கு குமட்டியது. அவளுக்கு வெளியில் தெரிந்திருந்த கதைகளை விடவும் இந்த சிறைச்சாலை ஏராளமானக் கதைகளைக் கொண்டிருந்தது.

இரவு கவிந்ததும் காலை வரையான நீண்ட மணித்துளிகளைக் கழிக்கத் தகுந்த ஒரு மூலையை தனது அறைக்குள்ளேயே தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள். ஏதோவொன்று அடியாழத்தில் இரவுகளில் ஓயாது அலறிக் கொண்டிருக்கும். நீண்ட காலத்திற்குப் பின் பசியில் வயிறு இரைச்சலிட்டதை உணந்தாள். இருட்டுவதற்கு முன்பாக வரும் உணவை நீண்ட நேரம் வைத்து சாப்பிட முடியாதென்பதால் ஏழு

மணிக்கெல்லாம் சாப்பிடப் பழகினாள். மது அருந்துவதை தவிர்த்துவிட்டவள், அந்த தனியறைக்குள் தனக்கு விதிக்கப்பட்ட பசிக்கு சிரமத்துடன் தன்னைப் பழக்கிக் கொண்டாள். மீண்டும் அதிகாலை ஆறு மணி வரை பசியைப் பொறுத்துக் கொள்வது ஒரு வாதைதான். அந்த அறையிலிருந்த காற்றாடியின் பேரிங் பழுதாகி இருந்ததால் அது சுற்றும் சத்தம் தற்கொலைக்கு முயலும் இரும்பு மிருகமென கொடூரமாய் ஓலமெழுப்பியது. இதற்கு முன் எல்லோரும் தீட்டி வைத்திருந்த கோட்டின் மேல் தனது பசியின் கோரமான முகத்தை கோடுகளை ஆவேசமாய் கிறுக்கினாள். பசியடங்கி மயங்கும் வரை தொடர்ந்த கிறுக்கல் மெதுவாக அவளை இலகுவாக்கி உறங்க வைத்தது.

# நிழலுக்குள் ஒளிந்து கொள்பவன்.

மனநல மருத்துவரை சந்தித்துவிட்டு வந்தபின் பாபுவுக்கு கொஞ்சம் மட்டுப்பட்டிருந்தது. வழக்கம் போல் படப்பிடிப்பிற்குச் செல்லவும் மற்ற வேலை கவனிக்கவும் துவங்கிவிட்டான். உடல் முழுக்க துர்நாற்றத்தின் ரேகைகள் நீண்டு கொண்டிருந்த வலி. சில விசயங்களை செய்வதற்குப் பின்னாலிருக்கும் குற்றவுணர்ச்சியில் ஒரு சதவிகிதம் கூட எச்சரிக்கையாக ஏன் முன்பாகவே உரைப்பதில்லை. தற்கொலை செய்து கொள்ளும் தைரியமில்லை. அப்படித் தோன்றும் போதெல்லாம், மருத்துவரின் ஆலோசனைப்படி நடப்பதால் இனி தான் அதுமாதிரி எதுவும் செய்ய மாட்டோம் என உறுதியாய் நம்பினான். படப்பிடிப்புத் தளத்திலும், பத்திரிக்கைகளிலும் தொடர்ந்து ஆனந்தியைக் குறித்தப் பேச்சுகள் உலவிக் கொண்டிருந்ததைக் கேட்டபோது சங்கப்பட்டான். யாருடைய ஆதரவுகளும் இன்றி தன்னை மீட்டுக் கொள்ளப் போராடும் அவளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். ஆனந்தி படம் இயக்கப் போகிறாள் என்கிற செய்தியை கேட்டு சந்தோசப்பட்டான். அவளால் செய்ய முடியும். பிடிவாதமானவள். இல்லையென்றால் இத்தனை தூரம் வளர்ந்து வந்திருக்க முடியாது. ஆனாலும் உள்ளூர அவள் மீதும் அவள் உடல் மீதும் இருந்த

தாபம் அடங்கியதாய் இல்லை. தன் விருப்பத்திற்கு இணங்கவில்லை என்கிற ஈகோவாக இருக்கலாம். அன்று அவளுடன் நடிக்கையில் மிருதுவான அவளுடல் ஒரு சிறுமியின் உடலையே அவனுக்கு நினைவு படுத்தியிருந்தது. தன் ஆளுகைக்குக் கீழிருக்கும் சிறுமியாக அவளைப் பார்த்தவன் வேறு யாரும் காட்டாத எதிர்ப்பை அவள் காட்டியதால் அவள் உடலின் மீது அதீதமான வன்முறைகளை பிரயோகித்தான். பொதுவாக படப்பிடிப்பு சமயங்களில் தான் நடிகனென்பதில் கவனமாக இருப்பான். பெண்கள் விருப்பத்தோடு கூடினாலன்றி அவர்களை வற்புறுத்தி அணுக மாட்டான்.

ஆனந்தியின் கண்களும் முகமும் ஒரு சிறுமியை நினைவுபடுத்தியதாலேயே அவனால் இயல்பாக இருக்க முடியவில்லை.

அவனை முழுமையாக ஆய்வு செய்திருந்த மனநல மருத்துவர் இயன்ற வரை குழந்தைகள் அருகில் இல்லாத சூழலை அறிவுறுத்தி இருந்தார். “ஆனா எனக்குக் குழந்தைகளப் பிடிக்குமே டாக்டர்.?” அப்பாவியாகக் கேட்டான். “அதுதான் பிரச்சனையே. அவங்கள ரொமபப் பிடிக்கிதுங்கறதாலேயே அவங்க
மேல அதீதமான உரிமைகள எடுத்துக்கறீங்க. வன்முறை அளவுக்குப் போகும் போதுகூட அதோட தீவிரம் உங்களுக்கு உரைக்காமப் போயிடுது. ஒரு சாதாரன மனுஷனா உங்கள சுட்டுக் கொல்லனும்னுதான் ஒவ்வொரு தடவையும் நெனப்பேன். ஆனா நான் சைக்காட்ரிஸ்ட்டா இருக்கதால சிரிச்சுக்கிட்டே உங்களோட டிஸ்கஸ் பண்ண வேண்டி இருக்கு.” அந்த மருத்துவர் என்றில்லை. தான் உள்ளுக்குள் யார் என்பது தெரிந்தால் யாராக இருந்தாலும் அதைத்தான் செய்வார்களென்பது நிச்சயம்.

யாரோடும் தன்னைப் பிணைத்துக் கொள்ளாமல் எப்போதும் ஏதாவது
வேலைகளை செய்து கொள்ளப் பழகினான். திரிசூலம் மலைக்குப் பின்னால்
நண்பர்களோடு சேர்ந்து ஒரு சின்ன தோட்டம் உருவாக்கி இருந்தான். சில
குடில்களும் நிறைய செடிகொடிகளுமாய் அந்த இடம் அழகான வனம் போல்
உருவாகி இருந்தது. வேலை இல்லாத நேரங்கள் முழுக்க தனிமையில் அங்கு
கழித்தான். ஓஷோவும் ஜி.கிருஷ்ணமூர்த்தியும் சதா அவனோடு
பேசிக்கொண்டிருந்தனர். தன் நிதானத்தால் தனது பிரச்சனையைக் கடந்து
செல்ல முடியுமென்கிற நம்பிக்கை வந்தபோது மருத்துவரை
சந்திப்பதை நிறுத்திக் கொண்டான்.

புதிய கன்னடப் படங்கள் இரண்டிற்கு ஒப்பந்தமானான். ஒரே மாதிரியான
படங்களில் நடிப்பது சோர்வூட்டுவது போலிருந்தாலும் வேலை இல்லாமல்
வீட்டிலிருக்க அச்சமாக இருந்தது. தனித்திருக்கும் நேரங்களில் எல்லாம்

உள்ளேயிக்கும் குரல் வீர்யத்துடன் அலறும். கன்னடமோ, மலையாளமோ
எந்த மொழிப்படமானாலும் சரி. இதிலிருந்து கொஞ்சம் விலகி வியாபார
சினிமாக்களில் நடிக்கலாமென முயற்சித்த போது மிகச் சிறிய
வேடங்களுக்கே அவனைக் கேட்டனர். நாற்பதைத் தாண்டிய ஒருவனுக்கு
வேறு என்ன வாய்க்கும்? ஒன்றிரண்டு படங்களில் அதுமாதிரி நடித்தும் கூட
அவனுக்குத் திருப்தி இல்லை. ஜூனியர் ஆர்டிஸ்டுகள் ஒருவனாகத்தான்
அவனை நடத்தினார்கள். பி கிரேட் படங்களில் நடிப்பவனென்பதால்
கூடுதலான புறக்கணிப்புகள் இருப்பதைப் பார்க்க முடிந்தது. இனி தேடிப்போய்
வாய்ப்புக் கேட்பதில்லையென ஒரு கட்டத்தில் முடிவெடுத்து விட்டான்.

”வாழ்க்கை பேராசைமிக்கது, குறைவான நினைவாற்றலைக் கொண்டது.”

- போர் தொடர்கிறது.

# ஷின் லி.

சிக்னலுக்காக காத்திருந்த வாகனங்களின் வெளிச்சம் இரவாகிக் கொண்டிருந்த மாலையை வண்ணமயமாக்கியது. ஆனந்திக்கு முக்கியமான வேலைகளென்று எதுவுமில்லை. ஆனால், நடிக்கத் துவங்கிய பிறகு ஏதோவொன்று தன்னிடமில்லாமல் போயிருக்கிறதென தொடர்ந்து தேடியபடியே இருக்கிறாள். பணம் எல்லாவற்றையும் கொண்டு வந்து சேர்க்கவில்லை. குழந்தையைப் போல் விளையாட வேண்டுமெனபது கூட வீடியோ கேம்ஸில் மட்டுமே சாத்தியப்பட்டிருக்கிறது. புதிது புதிதாக நிறைய வீடியோ கேம்ஸ்களை வாங்கி வைத்திருந்தாள். எல்லா விளையாட்டிலும் யாரோ ஒருவன் ஆக இறுதியாய் வெற்றி பெற்றுவிடுகிறான் என்பது அவளே வெற்றி கொண்டுவிடுகிற நிம்மதியைக் கொடுக்கிறது. அவளுக்கென்றிருந்த சின்னஞ்சிறிய உலகில் யாரையும் வெல்லும் நோக்கமில்லை. ஆனால் இலக்குகளில்லாமல் இருப்பதென்பது ஒருவித வதை. இலக்குகள் மறைமுகமாய் வாழ்வின் நித்யமான கணங்களை உணர்த்துகின்றன. **Street fighter** விளையாட்டில் வரும் ஷின் லி அவளுக்கு ஆதர்ஷமானவள். எல்லோரையும் அடித்து எளிதில் வென்றுவிடக் கூடிய அவளின் வலிமை தனக்கும் இருப்பதாக கற்பனை செய்து கொள்வாள்.

சிக்னல் விழுந்து வாகனம் விரைந்தது. அடுத்த திருப்பத்தில் பென்ஸ் பிளாஸா ஹோட்டல். மதன் தன் மகளின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அழைத்திருந்தான். முன்னால் காதலர்களின் வரிசையில் கடைசியாய் அவளைக் காதலித்தவன். பீ கிரேட் படங்களுக்கு கடனாக பணம் கொடுக்கும் தொழில். எத்தனையோ ஆனந்திகளை அவன் பார்த்திருக்கக் கூடும், எதற்காக தன் பின்னால் கிறுக்கன் போல் சுற்றிக் கொண்டிருந்தான்? அவனோடு பேச்சுவார்த்தை இல்லை, இருந்தும் தன்னை மறக்காமல் நினைவு வைத்து அழைத்ததால் போக விரும்பினாள். படப்பிடிப்புகள் இல்லாது ஏற்பட்டுப்போன வெறுமையிலிருந்து சிறிது மீட்டுக் கொள்ளமுடியும் என்கிற எதிர்பார்ப்பும் இருந்தது. புதிய மனிதர்களை சந்திப்பதன் வழி பழைய நினைவுகளைக் கடக்க முயன்றாள்.

மதனின் மனைவிக்கு இவர்கள் இருவருக்குமிருந்த உறவு

தெரியும். இருந்தும் அவள் நேரடியாக எதையும் கேட்டதில்லை. நிச்சயமாய் சபித்திருப்பாள். தனக்குத் தெரிந்த தெரியாத எல்லோரிடமும் சாபம் வாங்கிக் கொள்ளும் வரம் பெற்றவள் அவள். அவளுடனான உறவில் இரண்டு வருடங்களுக்கு தாக்குப் பிடித்தவன் அவன் மட்டுந்தான். ”நீ எப்டி இருக்கியோ அப்டியே இரு... உன்னோட இந்த ஆட்டிடியூட் தான் எனக்குப் புடிச்சிருக்கு.” அவள் இவன் காதலை ஏற்றுக் கொள்ளும் வரை பிடித்துப் போயிருந்த அந்த ஆட்டிடியூட் அதற்குப் பிறகு பிடித்தமானதாக இல்லை. நிழலென அவளை தொடர்ந்தான். படப்பிடிப்பிற்கு செல்லும் அவள் நாள்தவறாமல் தன் யோனியை யாரோ ஒருவனுக்கென ஆள் மாற்றி ஆள் விருந்தளிக்கக் கூடுமென சந்தேகித்தான். தன் மனைவியோடு இருக்கிற கணங்களில் கூட ஆனந்தி யாரோ ஒருவனுடன் இதே போல் தான் புரண்டு கொண்டிருக்கக் கூடுமென அச்சப்பட்டான். அவள் அதுவரையிலுமாக நடித்த உடலுறவுக் காட்சிகளை விடவும் அதிகமாக ஒவ்வொரு தினமும் கற்பனை செய்துகொண்டான்.

ஆனந்தி தன் நிழலையே வெறுப்பவள். யாருடைய நிழலும் தனக்குப் பின்னால் வருவதை விரும்பியிருக்கவில்லை. நேசத்தின் பொருட்டு முட்டாள்த்தனங்களை அனுமதிக்க முடியாதவளாய் அவனை புறக்கணிக்கத் துவங்கினாள். ”உனக்கு எப்போ என்னோட படுக்கனும்னு தோணுதோ படு, சேந்து குடிக்கனும்னா குடி... அதவிட்டுட்டு நான் யாரோட பேசறேன். பேசற எல்லார் கூடயும் படுக்கறானா? இல்லையானு எல்லாம் எட்டிப்பாத்துட்டு இருக்காத. அப்டித்தான் இருப்பன்னா அதுக்கு நான் இல்ல. இனிமே என்னயப் பாக்க வராத.” ஆனந்தி கடைசியாய் அவனிடம் பேசிய வார்த்தைகள் இவைதான். அவனால் அவளை விட்டுப்போகவும் முடியவில்லை. உடனிருக்கவும் முடியவில்லை. அவள் மீதான எல்லா உரிமைகளையும் கொண்டவன் என்கிற எண்ணங்கள் நொறுங்கிப்போனதை ஏற்றுக்கொள்ள முடியாதவனாய்

”உன் ஆட்டிடியூட் தான்டி உன்னோட பிரச்சன. இன்னும் எவ்ளோ நாளைக்கி இப்டி ஆடுவ? படம் எதுவும் கெடைக்காம தனியா வீட்ல இருக்கும் போது தெரியும். த்தா யாரையும் பக்கத்துல சேத்துக்காம தப்புப் பண்ணிட்டமேன்னு...” என கத்தினான். சத்தமாக பேசும்போது அவன் குரல் அதீத பெண்மைத்தன்மை கொண்டிருந்தது. ஆனந்தி அவனருகில் போய் மூர்க்கத்தோடு அணைத்து கழுத்தில் முத்தமிட்டு “நான் தனியாவே இருந்து நாசமாப் போறேன். நீ உன் பொண்டாட்டி எவன் கூடயும் ஓடிடாமப் பாத்துக்க போ...” என தள்ளிவிட்டாள்.

தடுமாறி விழப்போனவன் சமாளித்து நின்றுகொண்டான். ஒருநாளும் தன்னால் அவளை அவமானப்படுத்தவோ காயப்படுத்தவோ முடியாதென்கிற உண்மை கசந்தது. அவசரமாக கையிலிருந்த கடிகாரத்தைக் கழற்றினான். துபாயிலிருந்து அவள் அவனுக்காக வாங்கிவந்து தந்த கடிகாரம். ஆவேசமாய் அவளை நோக்கி எறிந்தான். அவள் விலகிக் கொள்ள கடிகாரம் கீழே விழுந்து சுக்கு நூறாகிப் போனது. ஆனந்தி சிரித்தாள். "நல்லது.... 300 டாலரோட முடியட்டும் உன்னோட லவ்.... அப்டியே ஓடிடு...." வாசல் கதவைத் திறந்து வேகமாக வெளியேறிப் போய்விட்டான். அவன் தன்னை விட்டுப் போனதில் எந்த வருத்தங்களும் அவளுக்கில்லை. விருப்பமில்லாமல் ஒருவனோடு படுக்கும் அவஸ்தை இனி இல்லையென சந்தோசப்பட்டாள்.

இன்று அவனைக் குறித்து யோசிக்கையில் சிரிப்புதான் வருகிறது. பிறந்த நாள் கொண்டாடும் குழந்தைக்குக் கொடுப்பதற்கு எதுவும் வாங்கவில்லை என்பது நினைவுக்கு வர எதிரிலிருந்த சிறிய மாலுக்கு வண்டியைத் திருப்பச் சொன்னாள்.

"ஒரு அஞ்சு நிமிசம் வெய்ட் பண்ணுங்கண்ணே வந்துடறேன்."

ஆனந்தி கைப்பையை எடுத்துக் கொண்டு வேகமாக மாலுக்குள் சென்றாள். இரண்டாவது தளத்தில் ஒரு டாய் ஷாப்பிற்கான விளம்பரப் பலகைத் தொங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்தவள் லிஃப்ட்டிற்காக நின்றாள். எதிரில் வந்த சிலர் அடையாளம் கண்டு ஆச்சர்யமாய்ப் பார்த்தார்கள். எல்லோரையும் பார்த்து சிரித்தால் என்ன? எல்லோருக்கும் கை கொடுத்தால் என்ன? என இவளுக்கும் ஆர்வம். லிஃப்டில் ஏறிக்கொண்டபோது ஆப்ரேட்டர் சந்தோசமாக இவளைப் பார்த்து சிரித்தான். ஆனந்தியும் பதிலுக்கு சிரித்தாள். சட்டைப்பைக்குள் துழாவி ஒரு காகிதத்தை எடுத்தவன் "மேடம் ஒரு ஆட்டோகிராஃப்" என நீட்டினான். அவனிடமே பேனாவும் வாங்கி கையெழுத்துப் போட்டுக் கொடுப்பதற்கும் இரண்டாவது தளம் வருவதற்கும் சரியாய் இருந்தது. லிஃப்டிலிருந்து வெளியேறியவளைத் தொடர்ந்து ஆப்ரேட்டர் வேகமாய்ச் சென்றான்.

"மேடம் ... மேடம்..."

"என்னங்க... அதான் கையெழுத்துப் போட்டுக் குடுத்தனே..."

அவன் சிரித்தபடியே மொபைலை எடுத்துக் காட்டினான். "உங்க கூட ஒரு ஃபோட்டோ எடுத்துக்கலாமா?" அவளுக்குத் தயக்கமாய் இருந்தது. கூட்டம் கூடிவிடுவதற்கு முன்னால் அங்கிருந்து போய்விடவே விரும்பினாள். ஆனாலும் அந்த மனிதனிடமிருந்த ஆர்வத்தை குலைக்க

விரும்பவில்லை. சம்மதித்தாள். ஆப்ரேட்டர் சுற்றிலும் பார்த்தார், ஃபோட்டோ எடுத்துக் கொடுக்க ஒருவருமில்லை. கடையிலிருந்த ஒரு பணியாளை அழைத்து ஃபோட்டோ எடுக்கச் சொன்னார். சந்தோசம் தாங்க முடியவில்லை. மொபைலை பணியாளிடம் கொடுத்துவிட்டு சிரித்தபடி போஸ் கொடுத்தான்.
“ரொம்ப தேங்க்ஸ் மேடம். இதே வேற நடிகைங்கன்னா கையெழுத்துக்கூட போடாம கெத்தாப் போவாங்க. நீங்க எவ்ளோ சிம்பிளா இருக்கீங்க..” அவன் முகத்தில் நிஜமான நன்றி தெரிந்தது.

டாய் ஷாப்பிற்குள் புகுந்த ஆனந்திக்கு என்ன வாங்குவதெனக் குழப்பம். சேல்ஸ் கேர்ள் இவளிடம் நெருங்கி வரத் தயங்கினாள். வேறு செக்ஷனில் இருந்த இளைஞன் ஒருவன் சிரித்தபடி வந்தான். “சொல்லுங்க மேடம் என்ன மாதிரி டாய்ஸ் வேணும்…” சுற்றிலுமிருந்த எல்லாப் பொம்மைகளையும் பார்த்தாள். பார்பியை அவளுக்குப் பிடிப்பதில்லை. மென்மையான பெண்களை பொம்மைகளாகக் கூட அவள் பார்க்க விரும்புவதில்லை. ”வீடியோ கேம்ஸ்ல வர்ற நல்ல ஆக்‌ஷன் ஹீரோயின்ஸ் டாய் ஏதாச்சும் இருந்தா காட்டுங்க. ம்ம்ம் ஷின் லியோட பொம்ம இருக்கா?” அந்த இளைஞன் புன்னகை மாறாமல் ஷின் லியின் பொம்மை ஒன்றை எடுத்துக் கொடுத்தான். இவளுக்கும் பிடித்திருக்க, அதையே பேக் செய்யச் சொன்னாள். தொடைகள் வலுவான, உயரமான ஆண்களுக்கு நிகரான முரட்டுத்தனத்துடன் நிஞ்சாவுடன் இருக்கும் ஷின் லி ஆனந்தியையே நினைவுபடுத்தினாள். பில்லுக்காக பணம் கொடுத்தவள் தற்செயலாகத் திரும்பிய போது அந்தப்பெண் இன்னொரு பெண்ணிடம் ரகசியமாய் ஏதோ குசுகுசுத்துக் கொண்டிருந்தாள்.
“எங்கிட்ட ஏதாச்சும் கேக்கனுமா?” தங்களிடம் தான் கேட்கிறாளா என்கிற ஆச்சர்யத்தில் அந்தப் பெண்கள் இல்லையென தலையை மட்டும் ஆட்டினார்கள். “அப்பறம் எதுக்கு என்னயவே உத்து உத்துப் பாக்கறீங்க? வித்யாசமா பாக்கற மாதிரி நான் இல்லையே…” ஒருமுறை கண்ணாடி கதவில் சரியாக நின்று பார்த்தாள். வீட்டிலிருந்து கிளம்பிய அதே ஆனந்திதான். “சரியாத்தான் இருக்கேன். உங்களுக்கு இருக்க எல்லாம் தான் எனக்கும் இருக்கு… அப்பறம் ஏன் பிச்சக்காரன் காசப் பாத்த மாதிரி பாக்கறீங்க? அசிங்கமா இல்ல.” அந்தப் பெண்கள் இருவருக்கும் சங்கடமாகிப் போக அவர்கள் அந்த இளைஞனைப் பார்த்தனர். “ஸாரி மேடம்… தப்பா எடுத்துக்காதிங்க..” அந்த இளைஞன் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்டான். பார்சலை வாங்கிக் கொண்டவளுக்கு அந்தப் பெண்களின் கண்களிலிருந்த கேலியும்

அருவருப்புணர்வும் நெருடலாகவே இருக்க முறைத்துவிட்டுப் போனாள்.

மனம் இயல்பாயில்லை. எதிர்ப்படும் எல்லோரும் அதே கேலியோடுதான் தன்னைப் பார்க்கிறார்களோ? எல்லோரின் கண்களையும் ஊடுருவிப் பார்க்க முயன்றாள். தன்மீது இவர்களுக்கிருப்பது ஆர்வமா? அல்லது நிர்வாண நடிகை என்கிற கேலியா? இதோ இந்தச் சிறுவன் கூட ஒருவித சிரிப்போடு கடந்து போகிறானே. பதினைந்து வயது இருக்குமா? அதற்குள்ளாகவா பீ கிரேட் படங்களைப் பார்த்திருப்பான். திரும்பி அவனைப் பார்த்தாள். அவள் பின்னுடலின் மீது அவன் கண்கள் இன்னும் நிலைத்திருந்தன. கண்களின் வழியாய் விழித்துக் கொண்டிருந்த சிறுவனின் உடல் முழுக்க தன் பின்புறத்தில் ஊர்ந்து சென்றன. அந்தச் சிறுவனின் கண்களின் வழி தன்னை மோகிக்கும் லட்சக்கணக்கானவர்களை அடையாளம் கண்டு கொண்டாள். ஒதுக்கித் தள்ளுமளவிற்கு இன்னும் மதிப்பிழக்கவில்லை. இந்த உடல். அவனைக் கையசைத்துக் கூப்பிட்டாள். சந்தோசமாக அருகில் வந்தவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ”என் படமெல்லாம் பாத்திருக்கியா?” அவன் ஆமாமெனத் தலையாட்டினான். ”தியேட்டர்ல போயா?” இல்லையென்று தலையாட்டியவன் “அப்பாவோட ஐபேட் ல. அவரு டெய்லி நைட்டு பெட்டுக்குப் போறதுக்கு முன்னாடி உங்க படம் பாப்பாரு… அவர் பாத்துட்டுப் போனதுக்கு அப்பறம் ஐபேட எடுத்து நான் பாப்பேன்…” சந்தோசமாகச் சொன்னான். ”ம்… இந்த வயசிலயே பிட்டுப் படம்…. இவ்ளோ பேர் சுத்தி இருக்கறப்போ என்னய இப்பிடி பாக்கறியே, யாரும் அசிங்கமா பாப்பாங்கன்ன தோணலையா?” ”இல்லையே… நான் மட்டுமா பாக்கறேன். எல்லோருந்தான் பாக்கறாங்க. அதோ பொண்ணுங்க கூட பாக்கறாங்க…” திரும்பிப் பார்த்தாள். ஏதோவொரு வகையில் அந்தத் தளத்திலிருந்தவர்களின் கண்கள் இவளை அணுகிச் சென்றன. அவளுக்குக் கூச்சமாக இருந்தது. கூடவே அந்தக் கண்களில் சிலரிடம் கேலியும் இருப்பதாகத் தோன்ற அந்தச் சிறுவனுக்கு விடை கொடுத்துவிட்டு லிஃப்ட்டிற்குள் ஏறிக்கொண்டாள்.

இப்பொழுது ஆப்ரேட்டரையோ அவளோடு லிஃப்டில் வந்த மற்றவர்களையோ பார்க்கும் ஆர்வமில்லை. தன் கண்களிலிக்கும் சங்கடத்தைக் காட்டிக்கொள்ளாதிருக்க குளிர் கண்ணாடி அணிந்து கொண்டாள். லிஃப்ட் தரையைத் தொட்டபின்பும் ஆப்ரேட்டர் சிரித்தபடியே இருக்க, எரிச்சலுற்றாள். “எதுக்குடா சிரிக்கிற? அதான் அப்பவே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன்ல, போட்டோவும்

எடுத்தாச்சுல்ல. திரும்ப திரும்ப சிரிக்கிற. என்ன நெனச்சிட்டு இருக்க?" அவனிடமிருந்த சிரிப்பு ஒரே நொடியில் மறைந்து முகம் கலவரமானது. "மேடம்... தப்பா நெனச்சு ஒன்னும் சிரிக்கல மேடம்.... சத்தம் போடாதிங்க... வேலைய விட்டு அனுப்பிடுவாங்க... ப்ளீஸ் மேடம்..." எந்தக் கெஞ்சுதல்களையும் கேட்கும் மனநிலையில் இல்லை அவள். பளாரென அறைந்தாள். சுற்றியிருந்த எல்லோரும் ஆப்ரேட்டர் அவளிடம் அத்துமீறி நடந்திருக்கலாமென நினைத்து அவனைத் திட்டினர். எதிர்பாராததொரு கணத்தில் குற்றவாளியாக்கப்பட்ட அவனுக்கு இனி எப்படியும் இந்த வேலை இல்லை என்கிற கலக்கம். முடிந்தவரை கெஞ்சிப் பார்த்தான். "மேடம் நம்புங்க மேடம்... தப்பா நெனச்சு சிரிக்கல மேடம்... ப்ளீஸ் மேடம்..." அவள் விடுவதாய் இல்லை. "அதென்ன சும்மா சும்மா சிரிப்பு. இளக்காரமா இருக்கா? பிட்டுப் படத்துல நடிக்கிறவன்னு... ம்..." இன்னொருமுறையும் அவள் அறைய, ஆப்ரேட்டரின் தன்மானம் அதற்கு மேல் அவளிடம் பொறுமையாய்ப் பேச இடம் கொடுக்கவில்லை. "போடி தேவ்டியா... பெரிய மயிருன்னு நெனப்பு... உன்னயப் பாத்து சிரிக்கத்தான செஞ்சேன், மேலயா கைய வெச்சேன்..."
ஆக்ரோசமாகப் பிடித்து தள்ளிவிட்டு கூட்டத்தை விலக்கிவிட்டு ஓடிவிட்டான். ஆனந்தி கீழே விழவில்லை. அதற்குள் பின்னாலிருந்தவர்கள் பிடித்துக் கொண்டனர். ஆனால் அவன் தள்ளிவிடும் போது அழுத்தமாக மாரைப் பிடித்ததில் வலித்தது. வேறு யார் மீதெல்லாமோ இருந்த கோவத்தை ஒரு அப்பாவியின் மீது காட்டிவிட்டோமே என வருத்தப்பட்டாள். சிலர் அவளுக்கு ஆதரவாக பேசவேண்டி அந்த ஆப்ரேட்டரைத் திட்டிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் ஓடிவந்து குடிக்க தண்ணீர் கொடுத்தான். கூட்டம் தன்னை பச்சாதாபத்தோடு பார்ப்பதும் ஒருவிதமான அருவருப்புதான். உடையை சரிசெய்து கொண்டவள், பார்சலைக் கையிலெடுத்துக் கொண்டு சுற்றி இருந்தவர்களிடம் பொதுவாக நன்றி சொன்னாள். ஃபங்க்ஷன் துவங்கும் நேரத்தை மனதில் வைத்து நடந்தவள் துணைக்கு யாரும் இல்லாமல் இனி வெளியில் வரக்கூடாதென உறுதியான முடிவிற்கு வந்திருந்தாள்.

# தாண்டவம்.

பார்ட்டி ஹால் பிரபலங்களால் நிரம்பி வழிய, யாரோடு சென்று பேசுவதெனத் தெரியாத தயக்கத்தில் ஆனந்தி எல்லோரையும் பார்த்தாள். பெண்கள் கூட்டத்தின் அருகில் போக, சிலர் மென்மையாய் சிரித்தனர். கை கொடுத்தனர். ஆனாலும் இயல்பாக பேசுவதற்கோ தோழமை கொடுக்கவோ யாருமில்லை. மதனைத் தேடினாள். ஒரு பிரபல தயாரிப்பாளருடன் பேசிக்கொண்டிருந்தான். அத்தனை பேர்களுக்கு மத்தியில் சத்தமாகக் கூப்பிடவோ அருகில் சென்று பேசவோ தயக்கம். தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதை விடவும் அவனை யாரும் தவறாக நினைத்துவிடக்கூடாது. தேவதைகளுக்கான வெள்ளை உடையோடிருந்த குழந்தை அதன் அம்மாவோடும் இன்னும் சில குழந்தைகளோடும் அரங்கத்தில் மையமாய் வைக்கப்பட்டிருந்த கேக் ஸ்டாண்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். எல்லோரும் கைதட்டினர். ஒரு குழந்தையை அதன் மகிழ்ச்சியான முகத்துடன் பார்க்க சந்தோசமாய் இருந்தது. தான் என்றுமே அனுபவித்திராத ஒரு மகிழ்ச்சியான தோற்றத்தை அந்தக் குழந்தையின் வடிவில் பார்த்தாள். தன் அடுத்த பிறந்த நாளை இதுபோல் கொண்டாட வேண்டுமென நினைத்தது போது சிரிப்பு வந்தது. அதற்குள்ளாக மதனும் இவளைக் கவனித்துக் கையசைத்தான். பதிலுக்கு ஆனந்தியும் கையசைத்தாள்.

அந்தக் குழந்தையோடு வந்த குழந்தைகள் எல்லாம் பின்னால் நகர்ந்து அங்கு நின்று கொண்டிருந்த ஆளோடு ஒட்டிக்கொண்டன. நீண்ட நேரமாய் அவர்கள் அந்த ஆளோடு விளையாடிக் கொண்டிருக்க வேண்டும். ஆனந்தி குழந்தைகளோடு உருண்டு புரண்டு விளையாடிக் கொண்டிருந்த ஆளைப் பார்த்தாள். பாபு. ஆச்சர்யம். இவ்வளவு குழந்தைத்தனமானவனா இவன்? குழந்தைகளுக்கும் அவனுக்கும் வித்யாசமே இல்லாமலிருந்தது. முரட்டு உடலையும் வயதையும் மீறி குழந்தைகளுக்கான யானைப்பாகனாகவும், ரெட்டை வால் குரங்காகவும் நடனமாடிக் கொண்டிருந்தான். அவனை இப்படிப் பார்க்கப் பிடித்திருந்தது. கை தட்டும் சத்தம் கேட்டு எல்லோரும் கேக் ஸ்டாண்டிற்கு அருகில் வந்துவிட்டனர். மதன் தன் குழந்தைக்கு அருகில் நின்றிருந்தான்.

மதனின் மனைவி கேக்கில் ஏழு மெழுகுவர்த்திகளை ஏற்றியிருந்தாள். ஆனந்தி அங்கு வருவதற்கு முன்பாகவே மது விறியோகம் துவங்கி விட்டிருந்ததால் பாதிக்கும் மேல் விருந்தினர்கள் குடித்திருந்தனர். எல்லோரும் ஒரே நேரத்தில் ஹாப்பி பர்த்டே பாடியதால் வினோதமான ஒலிக்கலவைகளாய் அந்தக் குரல்கள் எதிரொலித்தன. கேக் வெட்டியக் குழந்தை எல்லோருக்கும் சிறிய துண்டுகளைக் கொடுத்தாள். ஆனந்தி அவளுக்கு பரிசுப்பொருளைக் கொடுத்துவிட்டு கன்னத்தில் முத்தமிட்டாள். மதனின் மனைவி ஆக செயற்கையான ஒரு புன்னகையோடு பரிசை குழந்தையிடமிருந்து வாங்கி ஓரமாக வைத்தாள். ஆனந்தியும் பெயருக்கு சிரித்தாள். அங்கிருப்பதா கிளம்பிவிடுவதா எனத் தயக்கம். “ஹாய்…” பாபுஜி தான் கூப்பிட்டான். “ஹாய்…” இவனாவது முன்வந்து பேசுகிறானே. ரகசியமாய் தன்னோடான உறவை விரும்புகிற ஆண்கள் எல்லோருக்குமே தன் குடும்பத்தின் முன்னால் இயல்பாக வந்து பேசுவதற்கு இருந்த தயக்கம், தன்னை அவர்கள் என்னவாய்ப் பார்த்திருக்கிறார்கள் எனப் புரியவைத்தது. அங்கு நின்றிருக்கும் ஒவ்வொருவனுக்குள்ளும் அவள் ஒரு ஆசைநாயகியாக மட்டுமே நிரம்பியிருந்தாள். சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டு புகைக்கத் துவங்கினாள். “எல்லாக் குழந்தைகளும் உங்ககிட்ட இவ்ளோ ஆசையா ஒட்டிக்கிறாங்க. குழந்தைகங்ன்னா அவ்ளோ பிடிக்குமா?” ஆனந்தி புகையை உள்ளிழுத்தபடி கேட்டாள். ”யாருக்குத்தாங்க பிடிக்காது?…” சிரித்தான். கடைசியாக குழந்தைகளுடன் எப்போது விளையாடினோம் என எவ்வளவு யோசித்தும் ஆனந்திக்கு நினைவுக்கு வரவில்லை. ”நடிக்க வந்ததுக்கு அப்பறம் இந்த மாதிரி சின்ன சின்ன சந்தோசமெல்லாம் போயிடுச்சு.” அவள் முகத்தில் ஏமாற்றமான புன்னகை. ”விடுங்க, கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்களுக்கே குழந்தைங்க வந்துடும். எல்லா சந்தோசத்தையும் அந்தக் குழந்தையோட முகத்துல பாத்துக்கலாம்.” அவன் கேலிக்கு சொல்லுகிறானோ என பார்த்தவள், தன்னை ஒரு கணம் குடும்பத் தலைவியாய் நினைத்துப் பார்த்தாள். சிரிப்பை அடக்க முடியவில்லை. ஹாலில் ஓடிக்கொண்டிருந்த இசை சத்தத்தையும் மீறி எதிரொலித்தது சிரிப்பு. தவறாக எதுவும் சொல்லிவிட்டோமோ என சங்கடப்பட்டான்.

“என்னங்க தப்பா எதுவும் சொல்லிட்டனா?”

இல்லையெனத் தலையாட்டிக் கொண்டவள் சிகரெட்டைத் தூக்கிப் போட்டுவிட்டு

“மொத தடவையா என்ன குடும்பப் பொண்ணா பாத்தது நீங்கதான். அத நெனச்சு சிரிப்பு வந்துடுச்சு. அதுசரி உங்களுக்கு கல்யாணம்

ஆகிடுச்சா?”
ஆமென்று தலையாட்டினான்.
“ஆனா என் குடும்பம் என்னோட இல்ல, அதுவொரு பெரிய கதைங்க.... அப்பறம் படம் டைரக்‌ஷன் பண்ணப் போறீங்கன்னு கேள்விப்பட்டேன். எனக்கு
வாய்ப்புக் குடுப்பீங்களா?”
“ஹலோ நான் பீ கிரேட் படம் எடுக்கப் போறதில்ல... கமர்சியல் படந்தான்
எடுக்கப் போறேன்.”
அவனுக்கு முகம் வாடிப்போனது.
“ஏங்க நானெல்லாம் கமர்சியல் படத்துல நடிக்கக் கூடாதா?”
“அய்யய்ய சும்மா சொன்னேன் பாபு. கண்டிப்பா உங்களக் கூப்டுவேன்.” அவன்
தோள்களில் தட்டிக் கொடுத்தாள். அவர்கள் இருவரும் அத்தனை இயல்பாய்
பேசிக்கொண்டிருந்ததை அங்கிருந்த எல்லோரும் கவனித்தும் கவனிக்காமல்
இருந்தனர்.

விநியோகிக்கப்பட்ட மதுவை எடுத்துக் குடித்தவள், “உங்களுக்கு டிரிங்க்ஸ்....” பாபுவிடம் ஒரு குவளையை எடுத்து நீட்டினாள். “இல்லைங்க இன்னைக்கு வேணாம்....” ஆச்சர்யமாய்ப் பார்த்தபடியே குடித்தவளுக்கு கசப்பும் எரிச்சலுமாய் தொண்டை எரிந்தது. மூன்றாவது குவளையை எடுத்துக் குடிக்கும் போது அவள் மொபைல் ரிங் ஆனது. எடுத்துப் பார்த்தாள். மதன். ஒரே ஹாலில் இருந்து கொண்டு எதற்காக மொபைலில் கூப்பிடுகிறான்? அவனைத் தேடினாள். இவள் நின்ற இடத்திலிருந்து சற்றுத் தள்ளி நின்றான். இவளைப் பார்த்து கைகாட்டி அழைத்தான். கையிலிருந்த மிச்ச மதுவை குடித்துவிட்டு அவனிடம் சென்றாள். இசையின் சத்தத்திற்கு கால்கள் தானாக ஆடத் தூண்டின. மெதுவாக ஆடியபடியே நடந்தாள்.

“எங்கூட கொஞ்சம் ரெஸ்ட் ரூம் வரைக்கும் வா. பேசனும்.”
மதன் அவள் கைகளைப் பற்றிக்கொண்டு நின்றான். அவன் கையிலிருந்து
கசிந்த வெப்பம் அவன் அழைத்ததற்கான காரணத்தைப் புரியவைத்தது.
தன் கையை விடுவித்துக் கொண்டவள் “இங்கயே பேசலாம்.
என்னன்னு சொல்லு?” ஏமாற்றத்தோடு அவளைப் பார்த்தான்.
“இல்ல, இங்க வெச்சுப் பேச முடியாது.” அவள் இடையில் கைவைத்து

அழுத்தினான். காமத்தின் போது வெளிப்படும் வியர்வை நெடி அவனிடமிருந்து வெளிப்பட்டது.
“ஓ தடவிக்கிட்டே பேசனுமோ? பத்தடி தள்ளிதான் உன் பொண்டாட்டி நிக்கிறா அவளக் கூட்டிட்டுப் போயி தனியா பேசு.”
அவனை அசிங்கமாக ஏதாவது திட்டவேண்டுமென எழுந்த கோவத்தைக் காட்டிக்கொள்ளாமல் சிரித்தாள். அவள் கையை விட்டவன்,
“அதான் அவன் கூட கொஞ்சிக்கிட்டு நிக்கிறியே. அப்பறம் எப்டி என்கூட வருவ? இந்த சீசனுக்கு இவனா?”
ஆனந்தி பாபுவையும் இவனையும் மாறி மாறிப் பார்த்தாள்.
“நீயெல்லாம் திருந்தவே மாட்டியா? நான் எவன்கூட போனா உனக்கு எங்கடா வலிக்கிது?”
மதன் அவளை விடுவதாக இல்லை. தன்னை புறக்கணித்ததில் அவளோடு கூட வேண்டுமென்கிற வெறி அதிகமானது.
“எவ்ளோ வேணும்னு சொல்லு தர்றேன். இப்போ வா....”
”எனக்கு உன்னால வெல கொடுக்க முடியாது. பேசாம போயிடு. இப்போ நீ எங்கூட தனியா வந்தாலோ நான் உங்கூட தனியா வந்தாலோ அசிங்கம் உனக்குத்தான்.”
மதனுக்கு அவமானத்தில் முகம் சிவந்துபோனது. கோவத்தோடு ஓங்கி அறைந்தான். அவ்வளவு நேரமும் அந்தச் சூழலை சிதைத்துவிடக்கூடாதென அமைதி காத்துக் கொண்டிருந்தவள், மதனை எட்டி உதைத்தாள். அவன் நன்றாக குடித்திருந்ததால் தடுமாறி விழுந்தான். எல்லோரும் அதிர்ச்சியோடு திரும்பி பார்க்க ஆனந்தி எந்தச் சலனமும் இல்லாமல் நடந்து போய் இன்னொரு குவளை மதுவை எடுத்து அவசரமாய்க் குடித்தாள். எல்லோரும் அமைதியானதால் இசையின் ஒலி விகாரமானது. ஆனந்தி யார்மீதும் சிரத்தை கொள்ளாமல் நன்றாகவே ஆடினாள். மதனின் நண்பர்கள் சிலர் ஆனந்தியை வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல முயன்றனர். பக்கத்தில் வந்தவர்களை ஆனந்தி முறைத்துப் பார்க்க ஒருவரும் தொடவில்லை. லயித்து ஆடினாள். ஆடும்போது அவளுக்கு அருகிலிருந்த பொருட்களும் கீழே விழுந்து உடைந்தன. பாபுவிற்கு

அவளருகில் செல்வதா வேண்டாமா என்கிற தயக்கம். ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ இசையை நிறுத்தச் சொல்லி
சத்தமாகக் கத்த, இசை பாதியில் நிறுத்தப்பட்டது. பெண்கள் தங்களுக்குள்
ரகசியமாய்ப் பேசிக்கொண்டதைப் பார்த்தாள். அந்த குசுகுசு
சத்தம் எரிச்சலூட்ட “அப்பிடி என்னதாண்டி பேசுவீங்க குசுகுசுன்னு?
உங்க புருஷனெல்லாம் உத்தமன்னு ஒருத்தியும் நெனச்சுக்காதிங்க. இங்க
எவன் எவ கூட போயிருக்கான், இப்போ போயிட்டு இருக்கான்னு எல்லாம்
தெரியும். இதுல எவன்ல்லாம் எங்கூட படுத்துருக்கான், படுக்கக்
கேட்டிருக்கான்னு சொல்லவா? த்தூ...” பெண்கள் கூட்டம் எரிச்சலோடு மெல்ல
களைந்தது. கேக் வெட்டிய குழந்தை அங்கு நடப்பது எதுவும் புரியாமல்
எல்லோரையும் மிரட்சியோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனந்தி அவளுக்கு
அருகில் போக, மதனின் மனைவி தன் மகளை தூக்கிக் கொண்டு தள்ளி
நடந்தாள். ஆனந்தி மதனின் மனைவியைப் பிடித்து நிறுத்தினாள்.
”எங்க ஓடற? உன் புருஷன் ரொம்ப காஞ்சு போயிருக்கான்னு நெனைக்கிறேன். இப்பவே வந்து படுன்னு கூப்டறான். நீ சரியா கவனிக்கிறதில்லையா?... எனக்கு அவனோட போயி படுக்கறதுல ஒன்னும் ஆட்சேபன இல்ல. பாவம் உனக்குத்தான் அசிங்கம்.” மதனின் மனைவிக்கு அத்தனை பேரின் முன்னால் அவள் அப்படிச் சொன்னது அவமானமாய்ப் போனது. திரும்பி மதனை முறைத்தாள். அவன் ஆனந்தியை அடித்துத் துவம்சம் செய்யும் வெறியோடு வேகமாக வந்தான். அவள் பாதியாய் ஸ்டாண்டில் இருந்த கேக்கைத் தூக்கி அவன் முகத்தில் அடித்தாள். கேக் வழிய நின்ற மதனைப் பார்த்து அவன் மகள் சந்தோசமாக கைதட்டி சிரித்தாள். ”ஆனந்தி தயவு செஞ்சு இங்க இருந்து போயிடு. டீசண்ட்டா நடந்துட்டு இருந்த ஃபங்க்ஷன குடிச்சிட்டு நாசம் பண்ணிட்டு இருக்க...” பின்னாலிருந்து ஒரு பெரியவர் கத்த, திரும்பிப் பார்த்தாள். தெரிந்த ஆள் தான். “ம்ம்ம்... பத்து நிமிசம் பாத்ரூம் வா... செக்ஸ் வெச்சுக்கனும்னு பொண்டாட்டிய பக்கத்துல வெச்சுக்கிட்டு இன்னொருத்திகிட்ட கேக்கறதுதான் டீசண்ட்டா?...” அந்த ஆள் மேற்கொண்டு பேசவில்லை. அவன் முகம் கோவத்திலும் அருவருப்பிலும் கொதித்தது. ”என்ன முறைக்கிற? ம் என்னய்யா முறைக்கிற?” தன் முன்னாலிருந்த டேபிளைத் தள்ளிவிட்டாள். அது

கீழே விழுந்த சப்தம் அகோரமாய் எதிரொலிக்க கீழே இருந்து ஹோட்டல்காரர்கள் ஓடிவந்தார்கள். ”மேடம்.. ஒழுங்கா இங்க இருந்து போயிடுங்க... இதுக்கு மேல பிரச்சன பண்ணினீங்கன்னா போலீஸ்ல கம்ப்ளைண்ட் பன்னுவோம்.” உடலிலிருந்து முக்கால் அடி தள்ளி நின்ற தொப்பையோடு ஒருவன் ஆக்ரோசமாய் கத்தினான். ஆனந்தி கண் இமைக்காமல் அவனைப் பார்த்துவிட்டு நடுஹாலில் உட்கார்ந்து கொண்டாள். “சரி கூப்டுங்க...” அவள் கண்களும், கைகளும் மதுவைத் தேட, பாபு மெதுவாக அவளுக்கு அருகில் வந்தான். ”ஆனந்தி, ப்ளீஸ்... போதும்... போகலாம்...” அவளை எழுப்ப முயன்றான். முதலில் பிடிவாதமாக இருந்தவள், பின் மெதுவாக எழுந்து கொண்டாள். காலுக்கு அருகிலிருந்த சேரை உதைத்தாள். எல்லோரையும் பார்த்த போது உடை களைந்த தன் அரை நிர்வாணத்தின் மீது அவர்களின் கண்கள் ஈக்கூட்டம் போல் மேய்ந்து அலைவதைப் பார்த்து சிரித்தாள். ”என்னதாண்டா இருக்குன்னு பாக்கறீங்க? நான் வேணும்னா இதப் பிச்சுக் குடுத்துடவா?” தன் மார்பைப் பிடித்துக் கத்தினாள். கோபத்திற்கு மாறாய் கேலி நிரம்பிய அந்த வார்த்தைகள் அங்கிருந்தவர்களுக்கு விகாரமாய் காதில் எதிரொலித்தன. பாபுஜி அவளை சாதுர்யமாய் அந்த ஹாலில் இருந்து நகர்த்திச் சென்றான். ஆனந்தி அவனை நிறுத்தி அழுத்தமாக கழுத்திலும் கன்னத்திலும் முத்தமிட்டாள். “ஒரு நிமிசம் இரு.... அவனுக்கு இப்போ நான் உங்கூட படுத்திட்டனோனு சந்தேகம். அவன் ஏன் சந்தேகப்படனும்? பாவம் கண்ணால பாத்து சந்தோசப்படட்டுமே.” மதன் பார்க்க இன்னும் சிலமுறை முத்தமிட்டாள். பாபு ”போதும்... ஆனந்தி போகலாம்...” அவளை சிரமத்தோடு இழுத்துக் கொண்டு சென்றான். இவர்கள் எல்லோருக்கும் இந்த உடலிலிருந்து என்ன வேண்டி இருக்கிறது? பத்து வருடங்களுக்கு முன் தன் உடலில் பார்த்த எல்லாமும் அப்படியேதான் இருக்கின்றன. எந்த மாற்றங்களும் இல்லை. அந்த ஹாலில் இருந்த எல்லா பெண்களிடமும் என்ன இருக்கிறதோ அதுவேதான் தன்னிடமும் இருக்கிறது, பிறகேன் தன்னை அப்படிப் பார்க்கிறார்கள். அங்கிருக்கும் ஒவ்வொருவனின் அம்மணமும் அவளுக்குத் தெரியும். இழுத்து மூச்சை அடக்குவதுபோல் அணைத்தால் பொசுங்கிப் போவார்கள். தனது காமத்தின் சிறு பிசிறைக்கூட சமாளிக்க முடியாத இவர்களுக்கு தன்னுடலைத் தீண்டும் அருகதையில்லை.

கண்ணாடியில் பார்த்த தன் தோற்றம் பிரம்மாண்டமாயிருந்தது. ஆசையோடு அதற்கு பறக்கும் முத்தம் தந்தாள். ”பாபு ஏண்டா எனக்கு முத்தம் குடுக்க மாட்டேங்கற... முத்தம் குடு...” அவனை இழுத்துப்

பிடித்து முத்தம் கேட்டாள். எல்லோரும் பார்க்க அவளை முத்தமிடக் கூச்சப்பட்டான். அவள் விடாப்பிடியாய் அணைத்துக் கொள்ள கன்னத்திலும் இதழ்களிலுமாய் முத்தமிட்டான். அவளுக்குத் திருப்தியாய் இருந்தது. பாபுவோடு லிஃப்டில் இறங்கிப் போனாள். கண்கள் ஓய்விற்காக மூடிக்கொண்டன. வீடுவந்து சேரும் வரை நிம்மதியாய் உறங்கிய ஆனந்தி அந்த மாலையில் அவளுக்கு விருப்பமான ஷின் லியின் உயிரோட்டமான வடிவமாகி இருந்தாள்.

# ஸ்க்ராப் புக்.

போதைக் கொஞ்சமாய்த் தெளிந்தபோது அவள் படுக்கையறையின் ஏ.சி சத்தம் மென்மையாய் எதிரொலிப்பதைக் கேட்டாள். தலை வலிப்பது போலவும் பசிப்பது போலவும் இருக்க மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொள்ள முயன்றாள். சக்தி அவள் கால் மாட்டில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. சிரமப்பட்டு தன் உடைகளை மாற்றிவிட்டிருக்க வேண்டும். ”சக்திம்மா பசிக்கிது.” சக்தி டேபிளில் வைத்திருந்த நூடுல்ஸை எடுத்து வந்து ஊட்டி விட்டாள். “நீங்க சாப்ட்டிங்களா?” சக்தி “ம்…” என்று சொல்லிவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் ஊட்டிவிட்டுக் கொண்டிருந்தாள். “யார் வீட்ல கொண்டு வந்து விட்டாங்க.?”

“பாபு வந்தாரு…” ” மாலை வீட்டிலிருந்து கிளம்பியதிலிருந்து நடந்தவற்றை நினைவுக்குக் கொண்டுவர முயன்றாள். பாதிக்கும் மேல் நினைவிற்கு வரவில்லை. நூடுல்ஸ் கசக்க, பாதியிலேயே போதுமென்றாள். கொஞ்சம் தண்ணீர் குடித்தபோது தொண்டை இதமானது. அதீதமான குடிக்குப் பின்னால் உள்ளே செல்லும் நீர் தேவாமிர்தம். வயிற்றிலிருந்த எரிச்சல் குறைந்து ஆனந்தி இப்பொழுது ஆறுதலாக உணார்ந்தாள். “வெளில போயி எதுக்கும்மா இவ்ளோ குடிக்கனும்? கொஞ்சம் குறச்சுக்கலாம்ல…” சக்திக்கு இவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. தலையணையை எடுத்து முதுகுக்குப் பின்னால் கொடுத்துக் கொண்டு சிரித்தாள். “இன்னைக்கு குடிக்கவே கூடாதுன்னு நெனச்சுத்தான் போனேன்… என் துரதிர்ஸ்டம். ஒருநாள் வெளில தனியா போயிட்டு வர்றதுக்குள்ள மண்ட காஞ்சி போயிடுது சக்திம்மா, அதான் குடிச்சிட்டேன்.” சக்தி அவள் தலையை வருடிவிட்டாள். “வெளில யாருதான் நிம்மதியா போயிட்டு வரமுடியுது. பொம்பளைங்க போனாலும் சரி, எங்கள மாதிரி அரவாணிங்க போனாலும் சரி ஆம்பளைங்களுக்கு எல்லாப் பொம்பளைங்களும் கூப்பிட்டதும் அவங்களோட போயிடற தேவ்டியாளுங்கதான். அவனுங்களால சகமனுஷியா பாக்க முடியாதும்மா.. முக்கால்வாசிப் பேர் காலம் முழுக்க அப்பிடியேதான் வாழ்ந்து செத்துடறான்.” ஆமோதிப்பது போல் அவள் தலையை மட்டும் ஆட்டினாள்.

பெண்களின் உடலை இத்தனை குரூரமாகப் பார்க்குமளவிற்கு அந்த உடலுக்குள்ளிருப்பது என்ன? சதையும் எலும்புகளும் தானே. பிசுபிசுப்பான குருதிதானே. பிறகேன் அவை அசாத்தியமான வன்முறைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது? தன்னைச் சுற்றி எங்கும் தனது உடலின் பிம்பங்களே தெரிவதாக உணர்ந்தாள். அது அவள் உடலாக மட்டுமல்ல, அவளைப் போன்ற பெண்களின் உடல்கள். அரவாணிகளின் உடல்கள். நினைவடுக்குகளில் இருந்து அவ்வளவையும் தூக்கியெறிய முயன்று தோற்றாள். தன் ஸ்க்ராப் புக்கின் நினைவு வர குனிந்து படுக்கைக்குக் கீழ் தேடினாள். வீட்டிலிருக்கும் நாட்களில் எப்போதாவது அந்தப் புத்தகத்தில் ஓவியம் வரைவதோ, செய்தித்தாள்களிலிருந்து சுவாரஸ்யமான செய்திகளை வெட்டி ஒட்டுவதோ அவள் வழக்கம். இன்று தன்னையே வரைய நினைத்தாள். ஸ்க்ராப் புக்கை அவள் கையில் எடுத்ததும், சக்தி சிரித்தபடியே அவளுக்குத் தேவையான பென்சில்களையும், பழைய செய்தித் தாள்களையும்எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனாள்.




வார்த்தைகளாய்த் துப்பிப் போடுவதை விடவும் இந்த வழி அவளுக்கு இலகுவானது. எல்லாவற்றையும் கேலிக்குள்ளாக்குவதன் மூலம் அவற்றைப் பார்த்து சிரிக்கப் பழகியிருந்தாள். புத்தகத்தை எடுத்துப் பழைய படங்களைப் புரட்டினாள். சில சுவாரஸ்யமான செய்தித் துண்டுகளைத் திரும்பப் படிக்கும் போது உற்சாகமாய் இருந்தது. ( கீழே இருப்பது ஆனந்தியின் ஸ்க்ராப் புக்கின் அட்டை.)




கைகள் தானாக புதிய ஓவியங்களை வரையத் துவங்கின. கண்ணாடியின் முன்னால் நின்று தன் நிர்வாணத்தை கோடுகளாக்கிவிடலாமா என யோசித்தாள். கைகள் தடுமாற பென்சில் மெதுவாக காகிதத்தில் ஊர்ந்தது.



முதல் ஓவியத்தைத் தீட்டி முடித்தபோது மாலை அந்த ஷாப்பிங் மாலில் ஒரு சிறுவன் நீண்ட நேரமாய்த் தனது பின்புறங்களைப் பார்த்தபடி நின்றிருந்தது நினைவுக்கு வர, அவசரமாய் உடைகளைக் களைந்து தன் பின்புறத்தையும் ஓவியத்தில் வந்திருக்கும் பின்புறத்தையும் சரிபார்த்தாள். மோசமில்லை. தன்னுடையதை விடவும் அந்த ஓவியத்திற்கு அழகான பின்புறங்கள்தான். உற்சாகமாக அடுத்த ஓவியத்தை வரையலாமென நினைத்தபோது கைகள் வலித்தன. தேநீர் குடிக்கலாமெனத் தோன்றவும் ஸ்க்ராப் புக்கை அப்படியே வைத்து விட்டு எழுந்து வந்தாள். ஹாலில் சக்தி ஷோஃபாவில் சோர்வோடு குனிந்து உட்கார்ந்து தூங்குவதைப் பார்த்ததும் அவளை அந்த நிலையிலேயே வரையவேண்டுமென ஆசையாய் இருந்தது. எத்தனை காதலுக்குரியவள்? இவளும் இல்லாது போனால் அவளை ஆதரித்துக் கொள்ள ஒருவருமில்லை. அவளை எழுப்ப மனமின்றி அங்கயே உட்கார்ந்து அவளை வரையத் துவங்கினாள். கண்களில் சக்தியின் தோற்றம் பிம்பங்கள் என்பதிலிருந்து உருமாறி அழிக்க முடியாத ஓவியமாகிப் போக வேகவேகமாய் ஆனந்தியின் கைகள் அவளைத் தீட்டி முடித்தது. முதுகு வலிக்க அந்த ஓவியத்தைத் தீட்டி முடித்தபோது நிறைவாய் இருந்தது. அவளை எழுப்பிக் காட்டலாமெனத் தோன்றிய ஆர்வத்தை அடக்கிக் கொண்டவள் ஸ்க்ராப் புக்கை அவளுக்கு அருகிலேயே வைத்துவிட்டு எழுந்து உறங்கச் சென்றாள்.



மொபைலில் சில மிஸ்டுகால்களும் குறுஞ்செய்திகளும் வந்திருந்தன. பாபு “நேரமிருந்தால் நாளை சந்திக்கலாமென” ஒரு குறுஞ்செய்தி அனுப்பி இருந்தான். அவனைக் குறித்தான பிம்பம் ஒரே நாளில் மாறிப்போனதில் ஆச்சர்யப்பட்டாள். அவனோடு கொஞ்சம் பேச வேண்டும். **“sure… tell me the time and place.”** என பதில் அனுப்பிவிட்டு படுத்துக் கொண்டாள். கண்ணாடி வழியே உடைந்து தெருவில் விழுந்த ஆனந்தியின் பிம்பம் கொஞ்சமும் சிதையாமல் ஓவியமாய் ஸ்க்ராப் புக்கில் இடம் மாறியிருக்க, நிம்மதியோடு உறங்கிப்போனாள்.

# டூப்ளிகேட்.

சாலிகிராமத்தின் காவேரி தெருவிற்குள் உள்ளொடுங்கி இருந்த பழைய கட்டிடமொன்றில் இருந்தது பாபு சொல்லி இருந்த டப்பிங் தியேட்டர். அவனே கார் அனுப்பியிருந்தான். சில நாட்கள் ஓய்வெடுத்ததின் காரணமாய் உடலில் சதை போட்டிருந்தது. ஜீன்ஸ் சாதாரணமாக உட்காரும் போதே வயிற்றை இறுக்கியதில் மூச்சுவிட சிரமப்பட்டாள். நேற்று நடந்ததில் பாதிக்கும் மேல் நினைவில்லை. காலையில் அலைபேசியைப் பார்த்தபோது இவளை மனநோயாளி எனத் திட்டி நிறைய பிரமுகர்கள் குறுஞ்செய்தி அனுப்பி இருந்தனர். எல்லோருக்கும் மறக்காமல் நன்றி என பதில் அனுப்பினாள். பாபுவிடம் தான் விவரம் கேட்கவேண்டும். வண்டியிலிருந்து இறங்கியபோது அவன் உதவியாளன் வாசலில் இவளைக் கூட்டிப் போவதற்காக காத்திருந்தான். ”அவர எங்க?”

“டப்பிங் ல இருக்காரு மேடம்... வாங்க.” காரை விட்டு இறங்கி நடந்ததில் சுலபமாக மூச்சுவிட முடிந்தது. டப்பிங் தியேட்டரின் மரக்கதவைத் திறந்து உள்ளே சென்ற போது எஞ்சினியரும், உடன் ஒரு டைரக்டரும் இருந்தார்கள். இவளைப் பார்த்த ஆச்சர்யத்தில் டைரக்டர் எழுந்து வந்து கை கொடுத்தார். கண்ணாடி அறைக்குள் மைக்கின் முன்னால் நின்றிருந்த பாபு திரையில் ஒரு பெண்ணிடம் காதல் வார்த்தைகளை அமுத மழையென கொட்டிக் கொண்டிருந்தான். எஞ்சினீயர் “டேக் ஓகே” என்றதும் திரும்பிப் பார்த்தான்.

ஆனந்தி புன்னகையுடன் அவனுக்கு கை அசைத்தாள். பதிலுக்கு கை அசைத்தவன். ஹியர் ஃபோனை கழற்றி மைக் இருக்கும் டேபிளில் வைத்துவிட்டு வெளியில் வந்தான்.

“என்னாச்சு ஆனந்தி? சமீபமா நிறைய பிரச்சனைகள். ஷூட்டிங் வேற போறதில்லையாமே? அந்த டைரக்டர் அக்கறையோடு கேட்டான்.

”எல்லாருக்கும் அரச்சு மெல்றதுக்கு ஏதாச்சும் ஒரு விசயம் வேணும். இருக்கவே இருக்கேன் நான். போராடிப் பாத்தேன். முடியல. பேசிட்டுப் போங்கடான்னு விட்டுட்டேன்.”

“ஓ ....எனிவே டைரக்ஷன் பண்ணப் போறீங்க. இப்பவே

வாழ்த்துக்கள்.”

அவர்களின் உரையாடலில் கலந்து கொள்ளும் ஆர்வத்துடன் வந்துவிட்டிருந்த பாபு அவளுக்கு கைகொடுத்தான். இந்தமுறை அவனிடம் சிநேகம் தெரிந்தது. தனக்காக அவன் பாதியிலேயே வருகிறானோ என்கிற தயக்கத்தில் “உங்களுக்கு வேலை இருந்தா முடிச்சிட்டே வாங்க... நான் வெய்ட் பன்றேன்...” என சொல்லிவிட்டு, ஷோஃபாவில் உட்கார்ந்தாள். ”அப்டியெல்லாம் ஒன்னுமில்ல. ரொம்ப நேரமா பேசினதுல நோஸ் லாக் ஆகிடுச்சு... இதுக்கு மேல நான் பேசினா வாய்ஸ் வித்தியாசம் இருக்கும். அதனால இனி ஹீரோயின் போர்ஷன டப் பண்ணுவாங்க...” அவளுக்கு அருகிலிருந்த ஷோஃபாவில் உட்கார்ந்தான். இவர்களின் உரையாடலுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதைப் போல் சிஸ்டத்தையே நோண்டிக் கொண்டிருந்த எஞ்சினியர் கடைசியாய் இவன் பேசிய டேக்கில் சத்தத்தை ஒருமுறைக்கு இரு முறை சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

”நேத்து கடைசியா என்னாச்சு பாபு. எனக்கு எதுவும் நினைவுல இல்ல. காலைல பாத்தா அசிங்க அசிங்கமா திட்டி யார் யாரோ எஸ்.எம்.எஸ் பண்ணி இருக்காங்க.” அவள் கண்களில் நடந்ததைத் தெரிந்து கொள்ளும் அக்கறை. “அதெல்லாம் விடுங்க ஆனந்தி. தப்பு அவங்க மேலதான்.” அவன் அந்த விசயத்தைப் பேசத் தவிர்த்தான். “அட சும்மா சொல்லுங்க. அவன் என்னய ரெஸ்ட் ரூம் கூப்புட்டான். நான் உதைச்சேன். அதுக்கு மத்தவங்க ஏன் என்னயத் திட்டனும்?” அப்பாவியாகக் கேட்டாள்.

“நிஜமாவே அப்பறம் நடந்ததெல்லாம் உங்களுக்கு நினைவில்லையா?” அவள் இல்லையெனத் தலையாட்டினாள்.

”அந்த ஹாலையே சின்னா பின்னமாக்கிட்டீங்க. ஃபங்ஷன் செலவு இல்லாம டேமேஜஸ்க்கு மட்டும் மதன் ஒரு லட்சம் பே பண்ணினான்.” ஆனந்திக்கு சந்தோசமாய் இருந்தது. “விடுங்க பாபு. அவங்கிட்ட இல்லாத பணமா?.” சிரித்தாள்.

“அது மட்டுமில்ல, அவர வெறுப்பேத்த, எனக்கு ரொம்ப நேரம் முத்தம் குடுத்துட்டு இருந்தீங்க.” பாபு வெட்கப்பட்டான்.

“அட அப்பிடியா? இதான் சாக்குன்னு நீங்க வேற ஒன்னும் பண்ணலியே?” அவர்கள் இருவரையும் சவுண்ட் எஞ்சினியர் ஒருமுறைப் பார்த்து சிரித்தார். பின்பு எழுந்து அவர் மட்டும் வெளியில் செல்ல, டைரக்டரும்

“பேசிட்டு இருங்க, வந்துடறேன்” என பின்னாலேயே சென்றார். இருவரும் ஒரே நேரத்தில் அவரைப் பார்த்து தலையாட்டிக் கொண்டார்கள். ஏ.சி யின் குளிர் மௌன வளையமாய் சூழ்ந்திருந்தது.

“சரி ஆனந்தி விசயத்துக்கு வர்றேன். புரட்யூசர் யாராச்சும் ட்ரை பண்ணினீங்களா?”

”இல்லங்க. ஸ்டோரி ஐடியா இருக்கு. அத ஸ்க்ரிப்ட்டா ரெடி பண்ணனும். அதுக்கப்பறம் புரட்யூசர் பாக்கலாம்னு நெனச்சேன்.”

“ஓ … ஸ்க்ரிப்ட்டெலாம் எழுதிடலாம் விடுங்க. எனக்கு என்ன தோணுதுன்னா நீங்களே சொந்த தயாரிப்புல படத்த எடுத்துடலாமே?”

”அய்யய்யோ எங்கிட்ட அவ்ளோ காசு இல்ல பாபு. பணம் எப்பிடி வேகமா வந்துச்சோ அப்பிடி வேகமா போயிடுச்சு.”

“நீங்க தயாரிப்பாளர்னா பணம் குடுக்க ஆள் நிறைய வருவாங்க. கவலையேப் படாதீங்க. யாராச்சும் ஒரு புரட்யூசருக்குப் படம் எடுக்கனும்னு நெனச்சா உங்களுக்குப் புடிச்ச மாதிரி ஒரு படத்த எடுக்க முடியாது. நீங்க எந்த மாதிரி படத்துல நடிச்சீங்களோ அதேமாதிரி படத்த எடுக்கச் சொல்லுவாங்க. அதுக்காகத்தான் சொல்றேன்.”

அவன் சொல்வது சரியெனத் தோன்றியது. எல்லாத் தயாரிப்பாளருக்கும் இந்த எண்ணம் தான் இருக்கும். அவளால் அந்த மாதிரி ஒரு படத்தில் நடித்து விடமுடியும், எடுக்க முடியாது.

“நீங்க சொல்றது கன்சிடர் பன்றது மாதிரிதான் இருக்கு பாபு. யோசிப்போம். யாராவது ஃபண்ட் பன்ற மாதிரி இருந்தா சொல்லுங்க. பேசிப் பாப்போம்.”

“நிறைய பேர் கேட்டுட்டு இருக்காங்க, நான் உங்க கிட்ட பேசிட்டு சொல்றேன்னு சொல்லி ஹோல்ட் பண்ணி வெச்சிருக்கேன். நல்ல ஆளாப் பாத்து சீக்கிரமா பேசிடலாம். நீங்க ஸ்க்ரிப்ட்ட முடிங்க .”

சரியென சந்தோசமாக சிரித்தாள். தொடர்ந்து என்ன பேசுவதெனத் தெரியாமல் இருவருமே சில நொடிகள் மௌனமாய் இருக்க,

“ஷூட்டிங் இல்லாத டைம்ல என்ன பண்ணுவீங்க?” ஆனந்தியேதான் மௌனம் உடைத்தாள்.

”டிராவல் பண்ணுவேங்க… ரெண்டு நாள் கெடச்சாக் கூட போதும். எனக்குப் பணத்த சேத்து வெச்சுக்கறதுல விருப்பமில்ல. வர்ற காச எல்லாம் செலவு செஞ்சிடுவேன். ஒரே இடத்துல இருக்கப் பிடிக்காது.”

“ஓ…”

“சரி நீங்க ஷூட்டிங் இல்லைன்னா என்ன செய்வீங்க?”

“ஷூட்டிங் இல்லைன்னா வீடு. ஃப்ரண்ட்ஸ் யாராவது கூட்டிட்டுப் போனா பக்கத்துல இருக்க பாருக்குப் போவேன். கொஞ்ச நாளா அதுவும் இல்ல.”

”வீட்லயே இருக்க போர் அடிக்காதா?”

“ம்ஹூம்… வீடியோ கேம்ஸ் இருக்கே. நேரம் காலம் தெரியாம விளையாடுவேன். பொம்மைங்க ஒன்னோட ஒன்னு அடிச்சிக்கிட்டு விழறதப் பாக்கப் பிடிக்கும். கனவுல கூட யார் கூடயாவது சண்ட போடறதுன்னா நானே அனிமேஷன் பொம்மையா மாறித்தான் சண்ட போடுவேன்.”

“ஓ… அவ்ளோ வயலண்ட்டான ஆளா நீங்க?”

“எல்லாருக்குள்ளயும் வயலன்ஸ் இருக்கத்தான செய்யிது. ஏன் உங்களுக்கு வயலன்ஸ் பிடிக்காதா என்ன?”

பாபுவின் கண்கள் பதட்டத்தில் அலைந்தன. பதில் சொல்லத் முடியாமல் உதடுகளும் கன்னமும் துடித்தன.

“இல்ல பிடிக்காது.”

“ஒன்லி செக்சுவல் வயலன்ஸ் தானா?ம்ம்… தப்பா நெனச்சுக்காதிங்க. விளையாட்டுக்கு சொன்னேன்.”

“இட்ஸ் ஓகே… நான் பதிமூணு வருசம் BSF ல வேல செஞ்சேன். **BSF** ஆட்களோட சேந்து நிறையவே அங்க வயலண்ட்டா இருந்தாச்சு, இப்ப அதையெல்லாம் நெனச்சாலே உடம்பு நடுங்குது.”

“ஓ… அதனாலதான் வேல வேணாம்னு விட்டுட்டு வந்துட்டீங்களா?”

“நான் வேணாம்னு சொல்லிட்டு வரல… என்னய துரத்திவிட்டுட்டாங்க.”

அவளை எதிர் கொண்டு பார்க்க முடியாமல் கீழேயே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சூழலும் குளிரும் தான் எதிர்கொள்ள விரும்பாத ஏதேதோ நிகழ்வுகளை அவனுக்கு நினைவு படுத்தியபடி இருக்க உடல் நடுக்கத்துடன் எழுந்து கொண்டான். அவனை சங்கடப்படுத்திவிட்டமோ என ஆனந்தி வருத்தப்பட்டாள்.

“ஸாரி. எனக்கு இதெல்லாம் தெரியாது.”

“இல்ல.. பரவ இல்ல… பரவா இல்ல….” அவன் அதை மட்டுமே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்க கதவைத் திறந்து கொண்டு இப்பொழுது நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் உள்ளே வந்தாள். இவர்கள் இருவரையும் பார்த்து முதலில் ஆச்சர்யப்பட்டாலும் பின் இயல்பாகி சிரித்தாள். ஆனந்தி மட்டும் பதிலுக்கு சிரித்தாள்.

“இஞ்சினியர் ஸார் இல்லைங்களா?”

பாபுஜி இப்பொழுது அவளைக் கவனித்து விட்டான்.

“ஹாய் அனிதா… வாங்க உட்காருங்க. இஞ்சினியரும் டைரக்டரும் வெளில இருக்காங்க. நான் வரச் சொல்றேன்.”

திரும்பி ஆனந்தியைப் பார்த்தான்.

“இவங்க யார்னு தெரியுதா?”

ஆனந்தி வெறுமனே இல்லையென்று மட்டும் தலையாட்டினாள்.

“இவங்கதான் பீ கிரேட் மூவிஸுக்கு லீடிங் டப்பிங் ஆர்ட்டிஸ்ட். உங்களுக்கும் மலையாளத்துல டப்பிங் இவங்கதான்.”

ஆனந்தி எழுந்து கொண்டு அவளுக்குக் கை கொடுத்தாள். இருவரும் அணைத்துக் கொண்டனர். டைரக்டரும் இஞ்சினியரும் உள்ளே வர இப்பொழுது அனிதா மட்டும் கண்ணாடி அறைக்குள் சென்றாள். டைரக்டரும் இஞ்சினியரும் சிஸ்டத்தின் முன்னால் உட்கார்ந்து கதாநாயகிக்கான காட்சியைத் தேடினார்கள். உள்ளே திரையில் காட்சி மாறி கதாநாயகி டீக்கடைக்கு வரும் வாடிக்கையாளர்களை வரவேற்கும் காட்சி ஓடியது. ஒருமுறை அதை ரீவைண்ட் செய்து முதலில் இருந்து போட்டார்கள். ஆனந்தி காட்சியையும் டப்பிங் பேச வசனத் தாளுடன் நிற்கும் அனிதாவையும் பார்த்தாள். கதாநாயகி குண்டானவள். அவள் குரலுக்கு இவள் குரல் எப்படி பொருந்தும்? அதுசரி இந்தப் படங்களில் நடிக்கும் நடிகைக்கு குரலா முக்கியம்? பாபு அந்த அறையை விட்டு வெளியேறத் தயாராய் இருந்தான்.

“ஒரு டென் மினிட்ஸ் மட்டும் இருப்பமா? நான் இதுக்கு முன்னால இவங்க டப்பிங் பேசிப் பாத்ததில்ல. எப்பிடி பேசறாங்கன்னு பாக்கறேன்.”

பாபு சிரித்தான்.

“சரி பாத்துட்டு வாங்க நான் வெளில இருக்கேன்…”

அவன் வெளியேறிப் போக, எஞ்சினியர் தொண்டையைச் செருமிவிட்டு

மைக்கில் “அனிதா பைலட் பாத்தது போதும்மா, டேக் போலாமா?” அவள் ஹியர் ஃபோனை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

“ஓகே ஸார்… ரெடி..”

காட்சி ஓட அதைத் தொடர்ந்து மிகவும் மெல்லிய குரலில் அனிதா பேசத் துவங்கினாள். உடலை மொத்தமாக நிர்வாணமாக்கும் போலியான குரல். கீச்சுக் குரலில் பேசினால் தான் கதாநாயகி வசீகரமானவளென இவர்களை யார் பழக்கப்படுத்தியது? அனிதா இயல்பாக பேசும் போது கூட சகித்துக் கொள்ளலாம் போல். இதை சுத்தமாக சகித்துக் கொள்ள முடியவில்லை. உடலை மீறி கிளர்த்தும் அந்தக் குரலின் மீது உண்மையில் அவளுக்குப் பொறாமையும் இருந்தது. உள்ளே போய் காதும் காதுமாய் அவளை அறைய வேண்டுமென்கிற அளவிற்கு வெறுப்பு. தன் குரலால் படம் பார்க்க வருகிற ஆடியன்ஸுக்கு ப்ளோ ஜாப் செய்து விட முயற்சிக்கிறாளோ? பீ கிரேட் படங்களை யாராவது தடை செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்தால் அதற்கு முக்கியமான காரணம் இவளாகத்தான் இருக்கக் கூடும். **“bloody slut….”**

“சூப்பர்… சூப்பர் அனிதா… கரெக்டா சிங்கிள் டேக்ல அடிச்சிட்ட… சூப்பர். அடுத்த ஷாட் பைலட் பாரும்மா…”

ஆனந்தி அந்த டைரக்டரைத் திரும்பிப் பார்த்து முனகினாள். தன் உடலை மீறி காமத்தைக் கொட்டும் அனிதாவின் குரலை ரசிக்க முடியவில்லை. உடலோடு இந்தக் குரலும் சேரும் போதுதான் பார்க்கிறவனுக்கு காமம் கிளைக்கிறதா? அடுத்த ஷாட்டிற்கான பைலட் பார்த்தாள். வசனமில்லாமல் அந்தப் படுக்கையறைக் காட்சியைப் பார்க்க சுவாரஸ்யமில்லாமல் இருந்தது. ஷாட்டிற்குத் தயாராகி அனிதா தன் மெல்லிய குரலில் மீண்டும் முனக அந்தக் காட்சிக்கு மகத்தான உயிர்ப்பு வந்துவிட்டிருந்தது. அவளது குரலைத் தனியாகக் கேட்கும் போது எப்படி சகிக்க முடியாதோ அப்படித்தான் வெறும் உடலுறவுக் காட்சிகளை மட்டும் பார்ப்பதையும் சகித்துக் கொள்ள முடியாது. என்ன மொழியென்றாலும் தானே தான் இனி டப்பிங் பேசவேண்டும். இவளை டப்பிங் பேசவிடக்கூடாதென நினைத்துக் கொண்டாள்.

# கனவிலிருந்து நிஜத்திற்கு.

எதிர்பார்த்திருந்த எல்லாமும் மிக விரைவாகவே ஆனந்திக்கு நடந்து கொண்டிருந்தது. பாபு தான் உடனிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். மகிழ்ச்சியின் புதிய பக்கங்களை ரசிக்கத் துவங்கியிருந்தவள் தன் வாழ்க்கையைக் கதையாக்க வேண்டுமானால் எங்கிருந்து துவங்குவதென யோசித்துப் பார்த்தாள். பதினைந்து வயதிற்கு முன்பான வயதில் எத்தனை சிரமங்களும் துயரங்களும் இருந்தனவோ அதற்குக் கொஞ்சமும் குறைந்ததில்லை அவள் நடிகையானபின் எதிர்கொண்டவை. வாழ்வின் மகிழ்ச்சியான பக்கங்களிலிருந்தே தனது திரைக்கதையை உருவாக்கி இருந்தாள். நடிகையான முதல் நாள் முதல் படப்பிடிப்பிலிருந்து துவங்கி இருந்தது அவளின் திரைக்கதை. இளமைக் காலத்தை ஃபிளாஷ் பேக் உத்தியில் சொல்ல உத்தேசித்திருந்தாள். பாபு இணைத் தயாரிப்பாளராக இருக்க, ஆனந்தியின் மேனேஜரின் மேற்பார்வையில் ஆனந்தியின் ‘யாருக்கும் சொல்லாத கதை’ படத்தின் வேலைகள் துவங்கியிருந்தன.

பாண்டிச்சேரியில் இருந்த கடற்கரையோர ரிசார்ட் ஒன்றில் ஒரு வெள்ளிக்கிழமைக் காலையில் ஆனந்தியின் படத்திற்கான முதல் முதலீட்டை கடலூர் டிஸ்ட்ரிபியூட்டர் பாபுவின் முன்னிலையில் அவள் கையில் கொடுத்தார். முந்தைய இரவு அதே ரிசார்ட்டின் பரந்து விரிந்த அறையில் அவரோடு கூடிக் களித்திருந்த ஆனந்திக்கு இப்போது அவர் அந்தரங்கமான நெருக்கத்தில் இருந்தார். அதிகாலை வரை உறங்காமல் அவளோடு பிணைந்து கிடந்த களைப்பு அவரின் முகத்திலும் உடலிலும். காலை ஏழு மணியிலிருந்து எட்டு மணிக்குள் நல்ல நேரம் என்பதால் அயர்ச்சியைப் பொருட்படுத்தாமல் எல்லோரும் எழுந்து வந்திருந்தனர். “கூடுதலா உங்களுக்கு எவ்வளவு வேணும்னாலும் கேளுங்கம்மா தர்றேன்…” என ப்ரியத்தோடு சொன்னவர் இப்பொழுது வாங்கியிருக்கும் நாற்பது லட்ச ரூபாயில் ஒரு பாதியை மட்டுமாவது மூன்று மாதத்திற்குள்ளாவது திருப்பித் தர வேண்டுமென்பதைத் தவறாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.

சென்னைக்குத் திரும்பிய ஆனந்திக்கு தனது கதாபாத்திரத்தில் யார் நடித்தால் சிறப்பாக இருக்குமென முன்பே தெளிவான யோனை

இருந்திருந்ததால் பிரபலமான அந்த நடிகையிடம் முன் பணம் கொடுத்துப் பேசச் சொல்லி தன் மேனேஜரிடம் சொல்லி இருந்தாள். பணம் கையிலிருந்ததால் முக்கியமான தொழில் நுட்பக் கலைஞர்கள், நடிகர்களுக்கு முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் போடப்பட்டதோடு தனியாக அலுவலகமும் அவளுக்குத் தயாரானது. பத்திரிக்கைகளில் படம் பற்றிய செய்திகள் அதிகாரப்பூர்வமாக வெளியாக, பழைய நண்பர்கள் நிறைய பேர் மீண்டும் அவளை அழைத்துப் பேசினார்கள். கோடம்பாக்கத்தில் சின்னதாக ஒரு அலுவலகம் பார்க்கப்பட்டு வேலைகள் துவங்கி இருந்தன. மூன்று பேர் உதவி இயக்குநர்களாக அவளிடம் சேர்ந்திருந்தனர். ஆனாலும் நம்பிக்கையான ஒரு ஆள் வேண்டுமென யோசித்த போது அவளுக்கு நினைவுக்கு வந்தவன் ஜோபி. தமிழ் எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும் நன்றாக பேசுவான். நீண்ட கால அனுபவம் கொண்டவன், தன் மீதிருக்கும் ப்ரியத்திற்காக நிச்சயம் சம்மதிப்பான். அலுவலகத்தில் வேலைகள் துவங்கின நான்கு நாட்களுக்குப் பின் அவன் எண்ணுக்கு அழைத்தாள்.

“ஹாய் மேடம்... எப்டி இருக்கீங்க?”

அவன் குரலில் எப்போதுமிருக்கும் உற்சாகம்.

“fine ஜோபி. நீங்க எப்பிடி இருக்கீங்க? வேல என்ன போயிட்டு இருக்கு?”

“நல்லா இருக்கேன் மேடம். ஸ்க்ரிப்ட் முடிச்சிட்டு ட்ரை பண்ணிட்டு இருக்கேன் மேடம்... நீங்க டைரக்ஷன் பண்ணப் போறதா கேள்விப்பட்டேன், ரொம்ப சந்தோசம்...”

”ஆமா ஜோபி. வேலைகள் ஆரம்பிச்சிட்டேன். அது விசயமா பேசலாம்னு தான் கூப்புட்டேன்...”

”ஓ... சொல்லுங்க...”

“உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா நீங்க கோ டைரக்டரா என் படத்துக்கு வொர்க் பண்ணிக் குடுக்க முடியுமா? நீங்க என்ன சம்பளம் எதிர்ப்பாக்கறீங்களோ குடுக்கறேன். ஷூட்டிங் மட்டும் முடிச்சுக் குடுத்துட்டுப் போங்க.... போஸ்ட் புரடக்ஷனெல்லாம் நான் பாத்துக்கறேன்...”

ஜோபியிடம் நீண்ட அமைதி. உடனடியாக பதில் சொல்ல முடியாத தயக்கம். ஆனந்தி அவன் முடியாதென்று சொல்வதை கேட்க விரும்பவில்லை. பணம் கொடுத்தால் நிறைய பேர் வந்து வேலை செய்வார்கள்தான். ஆனால் நம்பிக்கையானவர்களாய் இருப்பார்களா

என்பது சந்தேகம்.

“கொஞ்சம் யோசிச்சு சொல்றனே மேடம்... ஒரு நாலு நாள் டைம் குடுங்க. எனக்கு படம் கமிட் ஆகற மாதிரி இருக்கு. ஒருவேள தள்ளிப்போச்சுன்னா கண்டிப்பா உங்க படம் வேல பாக்கறேன்...”

அவன் கூடிய விரைவில் இயக்குநராக வேண்டுமென்பது ஆனந்திக்கும் முக்கியம்.

“ஒன்னும் பிரச்சன இல்ல ஜோபி.... படம் கெடச்சிட்டா நான் ரொம்ப சந்தோசப்படுவேன்.... நீங்க நாலு நாள் கழிச்சு சொல்லுங்க.”

“சரிங்க மேடம்... பை...”

“பை ஜோபி.”

அவள் சந்தோசமாக அவனுடன் பேசிவிட்டு விடைபெற்றாள்.

அவன் இல்லாத பட்சத்தில் எல்லா வேலைகளும் தெரிந்த ஒரு ஆள் வேண்டுமென்பதால் பாபுவிடமும் சொல்லி வைத்தாள். பாபு தான் எல்லா செலவுக் கணக்குகளையும் பார்த்துக் கொண்டிருந்தான். முக்கியமான நடிகர்களுக்கும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் முன் பணம் கொடுத்த வகையிலேயே இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவாகி இருந்தது. தயாரிப்பு நிறுவனத்தை பதிவு செய்தது, படத்தின் தலைப்பை பதிவு செய்தது, அலுவலகத்திற்கான முன் பணம், அலுவலகத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்கியதென இன்னொரு வகையில் பத்து லட்ச ரூபாய் நெருக்கி செலவாகி விட கையிருப்பில் சொற்பமான தொகையே மிச்சமிருந்தது.

கேமராமேன் சொந்தமாக ஒரு கேனான் **5d** கேமரா வாங்கிவிடலாமென சொல்லி இருந்ததால் இரண்டு மூன்று நாட்களாக பாபு அது விசயமாய் அலைந்து கொண்டிருந்தான். பில் இல்லாமல் வாங்கும் பட்சத்தில் ஒட்டுமொத்தமாக ஐம்பதாயிரம் ரூபாய் வரை குறைவதற்கான சாத்தியமிருந்ததால் அதற்கும் ஒரு முன் பணத்தைக் கொடுத்து வைத்தான். அன்று இரவு அலுவலகம் முடிந்து எல்லோரும் கிளம்பிவிட்ட பின் ஆனந்தியும் பாபுவும் மட்டும் ஹாலில் அமர்ந்து மதுவருந்தினர். ஆனந்திக்கு இந்த புதிய நாட்கள் நிறைவானவையாய் இருந்ததால், காலையில் எட்டு ஒன்பது மணிக்கெல்லாம் அலுவலகம் வந்துவிடுகிறாள். நிறைய படங்களைப் பார்க்கிறாள். குப்பையான சமீபத்திய தமிழ்ப்படங்களை ஒட்டுமொத்தமாக ஏராளமாய்ப் பார்த்தபோது இவற்றை விட நல்ல படத்தை தன்னால் எடுத்துவிட முடியுமென திடமாக நம்பினாள்.

“:ஆனந்தி வேற ஃபைனான்ஷியர்ஸ் கிட்ட பேசனும். நாம பிளான் பண்ணின மாதிரி இன்னும் ரெண்டு மாசத்துல ஷூட்டிங் போகனும்னா அதுக்கு பணம் வேனும். அடுத்து என்ன வேலை நடக்கனும்னாலும் காசில்லாம முடியாது.”

பாபு பணம் குறித்தான கவலைகளுடனேயே மதுவருந்திக் கொண்டிருந்தான்.

“பாத்துக்கலாம் பாபு, கடலூர்க்காரன் கிட்ட இன்னொரு தடவ படுத்தா இன்னும் நாப்பது லட்சம் தராமயாப் போயிடுவான்....”

அவள் கேலியாக சிரித்தாள். அவனால் அந்த வார்த்தைகளைக் கேட்டு சிரிக்க முடியவில்லை. முகத்தில் கொப்பளித்த எரிச்சலை சிரமத்தோடு மறைத்துக் கொண்டு அடுத்த சுற்று மதுவை ஊற்றிக்கொண்டு குடித்தான். தன் இருப்பை முழுக்க காமம் சார்ந்து மாற்றிக் கொள்ள முயலும் அவளோடு எந்த பெயரிலான நட்பைத் தொடர்வதென்கிற குழப்பம். இத்தனைக்கும் அவள் மீது காதலோ, நேசமோ இல்லை. தன்னைப் போலவே மன ரீதியிலான தொந்தரவுகளுக்கு ஆளானவள் என்பதால் தான் இத்தனை தூரம் நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கிறான். தனக்கிருக்கும் பிரச்சனைகளைக் கூட அவளிடம் வெளிப்படுத்தியதில்லை.

“அந்த டிஸ்ட்ரிபியூட்டர் அன்னைக்கு உன் மேல இருந்த கிறக்கத்துல அப்பிடி சொல்லி இருப்பான் ஆனந்தி. எனக்கு பத்து வருசமா தெரியும். காசு விசயத்துல கரெக்டா இருப்பான். மூணு மாசத்துல நாம அவங்கிட்ட வாங்கின பணத்துல ஒரு பாதிய திருப்பிக் குடுத்தம்னா கூடுதலா் அவங்கிட்ட கடன் கேக்கலாம். அதுவரைக்கும் முடியாது.”

ஆனந்தி தன் மேஜைக்குள்ளிருந்து கொஞ்சம் காகிதங்களை எடுத்து அவன் முன்னால் வைத்தாள். என்ன என்பது போல் பார்த்தான்.

“கொஞ்சம் சீன்ஸ் எழுதி இருக்கேன்... படிச்சுப் பாக்கறீங்களா?”

அவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது.

“நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்... நீ என்ன சொல்ற?... இன்னைக்கு கேமராவுக்கு வேற அட்வான்ஸ் குடுத்தாச்சு...”

“என்ன பாபு... நீங்க தான் இந்தப் படத்துக்கு கோ புரட்யூசர்... ஸோர்ஸ் என்னன்னு யோசிங்க... யாரையாச்சும் பாக்கனும்னு சொல்லுங்க போயி பாக்கறேன்... இல்ல படுக்கனுமா போயி படுக்கறேன்... என்னால வேற என்ன செய்ய முடியும்?”

பாபு தன் இயலாமையினால் உருவான கோவத்தை அவளிடம் காட்டியதற்காக வருத்தப்பட்டான். இப்போதிருக்கும் மனநிலையில் அவனால் அந்தக் காட்சிகளை வாசிக்க முடியுமாவென்பது சந்தேகம். சின்னதாக ஒரு சிரிப்போடு காகிதங்களைக் கையில் எடுத்து வாசிக்கத் துவங்கினான். மனம் வார்த்தைகளோடு சேர்ந்து பயணிக்கவில்லை. சொற்கள் தங்களை ரூபாய் நோட்டுகளாய் உருமாற்றிக்கொண்டு இடம் மாறின.

”நாளைக்கு படிக்கட்டுமா?”

“உங்க கிட்ட குடுத்தனே.... போங்க....”

ஆனந்தி பொய்யான கோபத்தோடு காகிதங்களை வாங்கி மீண்டும் மேஜைக்குள் வைத்துக் கொண்டாள். இருவருக்குமிடையில் இணக்கமானதொரு சூழல் உருவாகி இருக்க, மகரந்தத்தின் வாசனை அறையெங்கும் நிரம்பத் துவங்கியது.

“நாம படம் எடுக்கப் போறோம்னு பேச்சு ஆரம்பிச்சப்போ நான் நீன்னு நிறைய பேர் வந்தாங்க... இப்போ ஆஃபிஸ் எல்லாம் போட்டு வேலைய ஆரம்பிச்சிட்டு நின்னா ஒருத்தரும் வாமாட்டேங்கறானுங்க... இத எப்பிடிப் புரிஞ்சுக்கறதுன்னு தெரியல ஆனந்தி...”

ஆனந்தி எழுந்து சோம்பல் முறிப்பதற்காக கைகளைத் தூக்கினாள். இடைக்கு மேலாக தூக்கிக் கொண்ட டாப்ஸும் இடையிலிருந்து இறங்கியிருந்த ஜீன்ஸும் நடுவிலிருந்து நீல நிற உள்ளாடையை அப்பட்டமாக வெளிக்காட்டியது. பாபு அந்த உள்ளாடையையும் அவள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

“என்னாச்சு பாபு... ஊர்ல இருக்கவனுக்கெல்லாம் யோசிக்காம துணிய அவுக்கறா, நம்ம கூட படுக்கறதுக்கு மட்டும் யோசிக்கிறான்னு நெனைக்கிறீங்களா?”

பாபு இல்லையெனத் தலையாட்டியபடியே மது அருந்தினான். ஆனால் ஏதோவொன்றின் பொருட்டு சிரிக்க முயன்றதை முகம் வெளிப்படுத்தியது.

“அப்பறம் எதுக்கு இந்த சிரிப்பு?”

”இதே பேண்டிஸ் தான கடைசியா நாம சேந்து நடிச்சன்னிக்கு போட்டிருந்த... அத நெனச்சேன்... எங்க இன்னைக்கு நான் பண விசயத்தப் பேசறது பிடிக்காம மறுபடியும் கொட்டையப் புடிச்சு நசுக்கிடுவியோன்னு நெனச்சு சிரிச்சேன்.”

ஆனந்தி ஜீன்ஸை விலக்கி உள்ளாடையைப் பார்த்தாள். அத்தனை தெளிவாக நினைவு கொள்ள முடியவில்லை. அவன் அந்த சில நொடிகளில் எப்படி இதைக் கவனித்து இத்தனை நாட்களும் நினைவில் வைத்திருக்கிறான்?"

**"shut up asshole…."**

அவன் முதுகில் ஓங்கி அடிக்க, திரும்பிக் கொண்டு அவள் கைகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டான். அவன் கால்களில் உதைத்தவள், பின்னால் சாய்ந்து விழப்போனவனை இன்னொரு கையால் பிடித்துக் கொண்டாள். பாபு அவள் இடையோடு பிடித்தபோது லூசான ஜீன்ஸ் முன்னைவிடவும் கீழே இறங்கியது. அவள் உள்ளாடையின் மீது கைவைத்து அதை இடுப்பில் இன்னும் கொஞ்சம் ஏற்றிவிட்டான். அவன் கைகளைத் தட்டிவிட்டவள் அணைத்துக் கொண்டு மூர்க்கமாய் முத்தமிட்டாள். முழுமையான மதுரம் உடல் முழுக்க பரவிக் கிளர்த்த பாபு அவள் உடலோடு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிணைந்தான். ஆனந்தி மெதுவாக இப்பொழுது ஒரு சிறுமியாகிக் கொண்டிருந்தாள்,காமத்தின் எந்த சுவடுகளும் தெரியாத சிறுமியாய் அவள் கொஞ்சம் கொஞ்சமாய் உருமாறி அவன் கைகளுக்குள் மிருதுவான சதைப்பிண்டமாய் மாறிப்போனது போல் உணர்ந்ததும் அவசரமாய் தன்னிடமிருந்து பிரித்தான். உடலின் வெக்கை எரிந்து குமிழ்களாய் கொப்பளித்ததில் கண்கள் சிவப்பேறிப் போயிருக்க, பாதியில் விடுவித்துக் கொண்டவனை மீண்டும் இழுத்து முத்தமிட முயன்றாள். பாபுவிற்கு அழவேண்டும் போலானது.

"இல்ல வேணாம் ஆனந்தி… இது வேணாம்… உங்கூட எப்பவும் இது எனக்கு வேணாம்… ப்ளீஸ்… என்னய விட்று…"

தான் கொண்டு வந்த பொருட்கள் எதையும் எடுக்காமலேயே அவசர அவசரமாக கதவுகளைத் திறந்து கொண்டு வெளியேறினான். இன்னும் கொஞ்சம் மதுவிருந்தது, ஆனால் குடிக்க விருப்பமில்லை. ஆனந்தி மிச்சமான மதுவை எடுத்து வைத்துவிட்டு கழிவறைக்குச் சென்றாள். சிறுநீர் வருவதற்கான எந்த அறிகுறிகளுமில்லை. நீண்ட நாட்களுக்குப் பின் காதலோடு ஒருவனை அணுகி அவன் பாதியிலேயே இப்படி நிர்கதியாய் விட்டுப் போன அவசத்தில் ஆனந்தி சோர்ந்து போய் கழிவறைக் கோப்பையின் மீது அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

# விடைபெறுவதற்கு முன்னால்.

இரண்டாவது முறையாக பாபு ஆன்ந்தியைப் பார்க்க ஜெயிலுக்கு வருவதற்குமுன் அவள் அந்த சூழலுக்குக் கொஞ்சம் தன்னை மாற்றிக் கொண்டிருந்தாள். அருவருப்போடு அறிமுகமான ஒருவளுக்கு ஒரு சிறைச்சாலையை சகித்துக் கொள்வதொன்றும் சிரமமான காரியமில்லை. எதிர்ப்படும் எல்லாவற்றையும் எளிதாகக் கடந்து செல்லவோ அதன் மீது வலுவாக பாதங்களை ஊன்றி எழுந்து செல்லவோ பழகிக் கொள்வதுதான் வாழ்தலுக்கான முதல்விதியாய் இருக்கிறது. வைதேகியோடு இன்னும் சிலர் அவளுக்கு சிநேகமாகி இருந்தார்கள். எல்லோருக்குமான கனவை அவள் நடிகையாக அவள் வாழ்ந்து பார்த்திருந்ததால் அவர்களுடன் பழகமுடிவதும் அவர்களைப் புரிந்து கொள்ள முடிவதும் சிரமமான காரியமாய் இல்லை. வைதேகியோடு அவள் ஊரைச் சேர்ந்த மஞ்சுளாவும் சிறையிலிருந்தாள். இருவருக்குமே விபச்சார வழக்குதான். இன்னும் சில நாட்களில் ஜாமீனில் போய்விடுவார்கள்.

“அஞ்சாயிரம் குடுத்தா அப்பவே ஜாமீன் குடுக்கறேன்னு தாங்க்கா சொன்னாங்க… நாந்தான் வேணாம்னு சொல்லிட்டேன். ஒரு பத்து நா உள்ள வந்து இருந்தா செலவில்லாம ஜாமீன் கெடச்சிடும். நம்மளுக்கும் இங்க கஷ்டப்படாம சாப்பாடும் நல்ல ரெஸ்ட்டும் கெடைக்கும்.”

வைதேகி சொல்லும் போதெல்லாம் அவளைப் பார்க்க வெளியில் போக விருப்பமில்லாதவளாகவே தெரிவாள்.

“ஏம்மா உனக்கு உள்ள இருக்கறதுல என்ன அவ்ளோ ஆச?”

“அடப் போங்கக்கா… வெளில இருந்தா ஒரு நா கூட நைட்டு நிம்மதியாத் தூங்க முடியாது. இங்க பாருங்க ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் படுத்து நிம்மதியா தூங்கிடறேன்.” வைதேகி அப்பாவியாகச் சொல்வதை

“ஆமா வெளிய போயி சேந்து தூங்கினா துட்டு வரும். அத சேத்து வெச்சுட்டு இங்கு வந்து தனியாத் தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டுப் போவா…

இல்லடி…”

என மஞ்சுளா கேலியாகச் சொல்லுவாள். மஞ்சுளாவிற்கு எல்லாமே விளையாட்டாய் இருந்தது. இருவருமே திருமணம் செய்திருந்தார்கள். கணவனுக்குத் தெரிந்தேதான் தொழில் செய்கிறவர்களாய் இருந்தார்கள். ஆனந்திக்கு அவர்களும் அவர்களின் வாழ்க்கையும் புதிரும் சுவாரஸ்யமும் நிரம்பியவைகளாய் இருந்தன.

“நீங்க ஏங்க்கா இன்னும் கல்யாணம் செஞ்சுக்கல?”

மஞ்சுளாதான் இரண்டு தினங்களுக்கு முன்னால் கேட்டாள். ஆனந்திக்கு எந்தக் காரணத்தைச் சொல்வதெனக் குழப்பம்.

“எனக்கு பிடிக்கலம்மா?”

“கல்யாணம் பிடிக்கலையா? இல்ல ஆம்பளைங்களயே பிடிக்கலையா?”

“ஆம்பளைங்களப் பிடிக்கும். ஆனா கல்யாணம் பிடிக்கல…”

“அடடா… நாளைக்கு உங்களுக்கு ஏதாச்சும் தேவைன்னா யாரு வந்து உங்கள பாத்துக்குவாங்க? நீங்க வந்த அன்னைக்கு உங்கள வந்து பாத்தாரே அவரு உங்க லவ்வரா?”

ஆனந்திக்கு சிரிப்பு வந்தது. இவள் ஏன் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள இத்தனை ஆர்வமாய் இருக்கிறாள். அவளைக் குறித்து சொல்லவும் யோசிப்பதில்லை. மற்றவர்களைப் பற்றிக் கேட்கவும் தயங்குவதில்லை.

“எனக்கு லவ்வர்னு யாரும் இல்லம்மா… பாபு என்னோட ஃப்ரண்ட். எங்கூட நடிக்கிறவரு.”

”தங்கச்சி இப்பிடி சொல்லிட்டாளேன்னு கோவிச்சுக்காதிங்க. உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன். அவரப் பாத்தா நல்லவரா தெரியிறாரு. பேசாம கட்டிக்கங்க…”

ஆனந்தி வேகமாகத் தலையாட்டினாள்.

“அய்யய்யோ… கல்யாணம் அப்பறம் குழந்தைங்க… குடும்பம் … இதுல எதுவும் எனக்கு ஒத்து வராது. இப்பவே நீ நடிக்கிற படத்த உன் குடும்பத்தோட பாப்பியான்னு கேக்கறானுங்க… நாளைக்கு எனக்கு ஒரு புள்ள பொறந்துட்டா அந்தப் புள்ளையோட என்னாகும்னு யோசிச்சுப் பாரு…”

மஞ்சுளாவிற்கு இதையெல்லாம் யோசிக்கத் தெரியவில்லை. தான் தொழில் செய்வது தன் குடும்பத்திற்குத் தெரியும். ஊரின் பெரும்பாலான

ஆட்களுக்கும் தெரியும். பாப்பா இப்பொழுது ஒன்றாம் வகுப்பு படிக்கிறாள். இதுவரை யாரும் அவளிடம் தன் பொருட்டு எந்த வேறுபாட்டையும் காட்டியதில்லை. அதனால் ஆனந்தியும் திருமணம் செய்துகொள்வதுதான் அவளுக்குப் பாதுகாப்பென உறுதியாய் நம்பினாள். ஓரளவிற்கு மேல் அவளை வம்பாக பேச வேண்டாமென வைதேகி கண்டித்து வைத்தாள்.

“என்னடி.. நம்ம அக்காதான... அதெல்லாம் கோவிச்சுக்கமாட்டாங்க...”

என ஆனந்தியின் முன்னாலேயே அதையும் சொல்லிச் சிரிப்பாள். ஆனந்திக்கு அந்தப் பெண்களுடனேயே இருந்துவிடலாமென விருப்பம். ஜெயிலர் அனுமதிக்கவில்லை.

“ஸாரி மேடம். அந்த பிளாக்ல கூட்டம் பாத்தீங்கள்ல... உங்களுக்கு ஏதாவது ஒன்னு ஆகிட்டா அப்புறம் மீடியாவுக்குப் பதில் சொல்ல முடியாது. நீங்க உங்க செல்லயே இருங்க.”

ஆனந்திக்கு பகல் முழுக்க எந்த மனப்பாரங்களும் இருப்பதில்லை. இரவில் தனியாக இருக்க முடியாமல் அவஸ்தைப்பட்டாள். இந்தப் பெண்களோடு ஏற்ப்பட்ட பழக்கம் குடியிலிருந்து கொஞ்சம் ஓய்வை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. உறங்குவதற்கு சில நாட்கள் காஃப் சிரப்பின் உதவியை நாடினாள். மற்ற நாட்களில் அதிகாலைவரையிலும் உறங்காமலேயேக் கிடந்தாள். அதிகாலை வரை மனம் இதுவரை பயணித்த எல்லா பிரதேசங்களிலும் அலைபாய்ந்து திரும்பும். இத்தனை நாட்கள் ஒரே இடத்தில் அவள் அடைந்து கிடந்து பத்து வருட காலமாகிப் போனதால் இந்த புதிய நிலை அவளுக்கு நினைவுகளுக்குள் வாழ்வதற்குப் பழக்கியது. நினைவுகளின் வழி இத்தனை விசயங்களை மீட்டெடுத்துக் கொள்ள முடியுமா? வேலை மிகுந்திருந்த நாட்களில் அம்மா வெகு அரிதாக நினைவுக்கு வருவாள். இப்பொழுது தினம் நூறு முறையாவது அவளைப் பற்றி நினைக்காமல் இருக்கமுடியவில்லை. தன்னையும் அவளைப் போலவே ஒருநாள் எல்லோரும் கைவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்கிற கனவு இப்பொழுது கசப்பான நிஜமாகி இருக்கிறது.

எல்லா ஏற்பாடுகளையும் தயார் செய்துவிட்டு பாபு அவளைப் பார்க்க வந்திருந்தான். பாதித் தொகையை கட்டிவிட்டதால் நீதிமன்றத்தில் ஜாமீன் கொடுக்க சம்மதித்திருந்தார்கள். பாபுவிற்கு ஆனந்தியிடமிருந்த மாற்றம் நிம்மதியளித்தது. முகத்தில் கவலைகளின் சுவடுகளில்லை. சிரிக்கும் போதுகூட அழுத்தமாக சிரித்தாள்.

”எல்லாம் முடிஞ்சது ஆனந்தி நாளைக்கு நாம போயிடலாம். உங்களுக்கு இங்க சிரமம் இல்லையே?”

ஆனந்தி சின்னதாக சிரித்தாள்.

“பழகிடுச்சு பாபு. இனிமே அடிக்கடி வந்து போகலாம். ஒன்னும் கவலையில்லை.

”விடுங்க ஆனந்தி. வெளில நாம செய்ய வேண்டிய வேல நெறைய இருக்கு. உங்க படத்த எடுத்து முடிங்க. உங்கள விட்டுப் போன எல்லோரும் திரும்பி வருவாங்க.”

தன்னை ஆறுதல் படுத்த அவன் சொன்ன வார்த்தைகள் அடுத்த வேலைகள் குறித்த அவளது கவலைகளைக் கொஞ்சம் குறைத்திருந்தது. மனம் முழுக்க எழுச்சியின் அடங்கிய ஜுவாலையொன்று கனன்று எரிந்து கொண்டிருக்க, அதன் வீர்யத்தில் இனி வாழ்தலுக்கான உந்துதலைப் பெற்றுக் கொள்ள விரும்பினாள். தனக்கு மற்றவர்கள் ஆறுதல் சொல்வதை விடவும் தன்னால் இன்னும் திடமான வார்த்தைகளைக் கூறிக்கொள்ள முடியும். என்றாலும் பாபு இத்தனைக்கு பின்னால் தன்னோடு இருப்பதால் அவன் மீது அலாதியானதொரு அன்பு பிறந்தது. மஞ்சுளா சொன்னதை நினைத்துக் கொண்டாள். பாபுவின் கண்களைப் பார்த்துப் பேச சடாரென ஒரு வெட்கம் வர தலையைக் குனிந்து சிரித்தாள்.

“என்னாச்சு ஆனந்தி?”

“ம்ம்..இங்க ஜெயில்ல ஒரு பொண்ணு நீங்க என் புருஷனான்னு கேக்கறா?”

பாபுவுக்கு அந்தச் சூழலில் அந்த வார்த்தைகளை விளையாட்டாக எடுத்துக் கொள்வதா அல்லது அப்படியே தவிர்ப்பதா என உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத குழப்பம்.

“ஓ நீங்க என்ன சொன்னீங்க..?”

“ஒன்னும் சொல்லலையே. நீங்க ஏன் இவ்ளோ ஆர்வமா கேக்கறீங்க? என்னயக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?”

ஆனந்தி சிரித்துக் கொண்டே கேட்டாலும் விளையாட்டாகக் கேட்டிருக்கவில்லை. அவன் விருப்பங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்கிற ஆசையிருந்தது.

“இவ்ளோ நெருக்கடியிலயும் உங்களுக்கு விளையாட்டு. சும்மா இருங்க

ஆனந்தி. நான் கௌம்பறேன். நாளைக்கு ரெடியா இருங்க..”

பாபு சிரித்தபடியே எழுந்து அவளுக்கு விடைகொடுத்துவிட்டுச் சென்றான். இந்தச் சிரிப்பின் உள்ளர்த்தத்தை எவ்வாறு எடுத்துக் கொள்வது? அவனுக்குத் தன்னை திருமணம் செய்து கொள்ள விருப்பமா? இல்லையா? பாவம், பாபு தன்னைவிடவும் குழப்பவாதியென நினைத்துக் கொண்டாள்.

# வெளியேற்றம்.

பதினெட்டு நாட்களுக்குப்பின் சிறையிலிருந்து விடுதலையான ஆனந்தியை அழைத்துச் செல்ல பாபு வந்திருந்தான். ஆனந்திக்கு உறக்கம் தப்பிப் போயிருந்ததோடு, சரியான உணவுமில்லாமால் கொஞ்சம் மெலிந்து போயிருந்தாள். முகம் சற்று மெலிந்திருந்த போதும் வாடிப்போயிருக்கவில்லை. அவமானத்தின் ரேகைகள் உடல் முழுக்க நீண்டிருந்தன. இழந்த பணத்தை சம்பாதிப்பது குறித்த கவலைகள் வேறு எதிலும் கவனம் செலுத்துவிடாது ஆக்கிரமித்திருக்க, தான் எடுக்க படத்தை எடுத்தால் மட்டுமே இனி தனக்கான அடையாளம் என்பதும் உரைத்தது. எல்லாவரையும் விட துயரமானது அடையாளமற்றுப் போவது. ஆனந்தி ஆயிரத்தில் ஒரு பெயராக கலந்து மறைந்து போய்விடக்கூடாது. பாபு நம்பிக்கையளிக்கும் விதமாய் ஏராளமான விசயங்களைப் பேசியபடியே வந்தான். எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டே ஆம் இல்லையென ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக் கொண்டு வந்த ஆனந்தி,

“எங்கூட படுத்தும் கூட என் மேல அவனுக்கு நம்பிக்கை வரலையே பாபு?”

வேறு வேறு விசயங்களைக் குறித்து இடைவிடாது பேசிக்கொண்டே வந்த பாபுவுக்கு இந்த வார்த்தைகள் கழுத்தை நெறிப்பது போலாகிவிட்டன. உடல் மட்டுமே ஒருவர் மீதான நம்பிக்கையைக் கொண்டு வந்துவிடுமா என்ன? அமைதியாக அவளைப் பார்த்தான்.

“காட்டெரும மாதிரி அன்னைக்கு மட்டும் எத்தன தடவ பொரட்டி எடுத்தான் தெரியுமா? அதுக்குத் தனியா அவங்கிட்ட பணம் கூட வாங்கல. இந்த உடம்பு அவ்ளோ மட்டமா போகிடுச்சா?”

”எல்லாரும் கைவிட்டதுக்கு அப்பறம் ஒருத்தர் மேல யாருக்கும் அக்கறையோ அன்போ இருக்கப் போறதில்ல ஆனந்தி. இது நீங்கன்னு இல்ல, வேற யார இருந்தாலும் இப்பிடித்தான். மனசுல வெச்சுக்காதிங்க விடுங்க...”

அவன் பேசப் பேச அவளுக்கு கோவத்தில் தலை எரிந்தது, இயலாமை வீர்யமான வாதையென உடல் முழுக்க பெருகியோட, காரின்

ஜன்னலைத் திறந்துவிட்டுக் கொண்டாள். தடையற்று பெருகி வந்த கடல் காற்று அவள் கன்னத்தில் வழிந்திருந்த சில துளிக் கண்ணீரை வேகமாய் அடித்துச் சென்றது.

சென்னைக்குள் கார் நுழைந்தபோது புதிய நகருக்குள் வந்து சேர்ந்த மனநிலையிலேயே இருந்தாள். படப்பிடிப்பு முடிந்து வருகிற நாட்களில் இந்த ஊரின் மீதிருந்த ஆர்வமோ நேசமோ இப்போதில்லை. பத்திரிக்கைகளும் தொலைக்காட்சிகளும் ஆனந்தியின் பெயருக்குப் பின்னால் இப்பொழுது புதிய அடையாளத்தை சேர்த்திருக்கின்றன. ஃபிராடு. ஒரு ஃபிராடு எப்படி இருக்கக் கூடுமென்பதகு ஆனந்தியை பிரபலமான உதாரணமாக இனி பொதுமக்கள் நினைத்துக் கொள்ளலாம். கார் அவள் ஃபிளாட்டை அடைந்த போது தெருவில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர். காரை விட்டு இறங்காமலேயே பாபுவின் எண்ணிலிருந்து சக்திக்கு அழைத்தாள். சக்தி ஃபோனை எடுக்கவில்லை. காரை விட்டு இறங்கி தன் ஃபிளாட் நோக்கி நடக்கப் போனவளின் மீது வேகமாக வந்து ஒரு பந்து விழுந்தது. பேட்டிங் செய்து கொண்டிருந்த சிறுவனுக்கு இவன் மீது வலுக்கட்டாயமாக அடிக்க வேண்டுமென்கிற வன்மம் இருக்கப் போவதில்லை. அவன் பாவமாக முகத்தை வைத்திருந்தான்,

“ஆண்ட்டி ஸாரி ஆண்ட்டி. தெரியாமப் பட்டுடுச்சு…”

ஆனந்தி சிரித்தபடியே வேகமாக நடந்தாள். மார்புக்கு சற்று கீழே பட்டிருந்ததால் நல்ல வலியிருந்தது. பாபு வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு அவளுக்குப் பின்னால் சென்றான்.

வீட்டுக் கதவு பூட்டியிருக்க, இரண்டு மூன்று முறை காலிங் பெல்லை அடித்துப் பார்த்தாள். எந்த எதிர்வினைகளும் இல்லை. இதற்குள் பாபுவும் வந்துவிட்டான். சக்தி அவன் எண்ணுக்கு அழைத்தாள். மொபைலை எடுத்துப் பார்த்த பாபு ஆனந்தியிடம் கொடுத்தான்.

“ஹலோ சக்திம்மா எங்க போயிட்டீங்க? நான் இன்னைக்கு வருவேன்னு தெரியாதா உங்களுக்கு?”

“தெரியும்மா… அங்கதான் வந்துட்டு இருக்கேன்…. உங்களுக்குப் புது ஃபிளாட் பாக்கறதுக்குத்தான் அலைஞ்சிட்டு இருக்கேன்.”

”புது ஃபிளாட்டா?”

ஆனந்தி புரியாமல் கேட்டாள்.

“ஆமா … நான் நேர்ல வந்து சொல்றேன். நீங்க அங்க நிக்க வேணாம்.. கார்ல வெயிட் பண்ணுங்க…”

அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

“என்னாச்சு பாபு…. புது வீடு பாத்துட்டு இருக்கேன்னு சக்தி சொல்றாங்க. என்ன பிரச்சன?”

பாபு தனக்கும் தெரியாதென தலையாட்டினான். இருவரும் இறங்கி கீழே வந்தனர். அவளுக்கு காருக்குள் உட்கார்ந்து கொள்ள விருப்பமில்லை. சிறுவர்கள் விளையாடுவதைப் பார்த்தபடியே தெருவின் ஓரத்தில் நின்றிருந்தாள்.

“பாபு சிகரெட் இருக்கா?”

கண்கள் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருக்க அவள் குரல் மட்டும் வெறுமையோடு வெளிப்பட்டது.

“ஒரு டூ மினிட்ஸ் இருங்க வந்துடறேன்…”

பாபு அவளைத் தனியாக விட்டுச் சென்றான். பதினெட்டு நாட்களில் ஒரு சிகரெட்டைக் கூட அவள் குடித்திருக்கவில்லை. மதுவைக் கூட முதல் மூன்று நாட்களுக்குப் பிறகு தவிர்த்துவிட்டாள். எல்லாமும் செலவு பிடிக்கிற விசயமாக இருந்தது ஒரு காரணமென்றால் அந்தத் தனிமையை எந்த வஸ்துக்களும் இல்லாமல் எதிர்கொள்ள விரும்பியதும் ஒரு காரணம். பாபு கொண்டு வந்து கொடுத்த சிகரெட்டை மெதுவாக உள்ளே இழுத்த போது லேசாக தொண்டை எரிந்தது. முதல் இரண்டு இழுப்புகளுக்குப் பின் ஆழமாக உள்ளிழுத்தாள். அவர்களைக் கடந்து போன அந்த ஏரியா போலீஸ்காரன் மெதுவாக தனது இரு சக்கர வாகனத்தை ஸ்லோ செய்துவிட்டு அவளைப் பார்த்து சிரித்தபடி சென்றான். அந்தச் சிரிப்பை ஏற்றுக் கொண்டுவிட்டதைப் போல் புகையை ஊதிவிட்டு ஆனந்தியும் லேசாக சிரித்தாள்.

ஆட்டோவிலிருந்து இறங்கிய சக்தியைப் பார்க்க, அவளும் தன்னைப் போல் வாடிப்போயிருப்பது தெரிந்தது. ”இங்கயே நின்னுட்டீங்களா?”

சக்தி மெல்லிய புன்னகயோடு வந்தாள்.

“என்னாச்சு? எதுக்கு புது வீடு?”

“நீங்க அரெஸ்ட் ஆனதுக்கு அப்பறம் ஃபிளாட்ல இருக்கவங்க எல்லாம் சேர்ந்து மீட்டிங் போட்டாங்க. அதுல அசோசியேஷன் சேந்து உங்கள

காலி பண்ணச் சொல்லி முடிவெடுத்திட்டாங்க. நம்ம ஹவுஸ் ஓனரும் அவங்க சொன்னதுக்கு சம்மதிச்சிட்டாரு. உங்களுக்கு வீடுன்னு நானும் பத்து நாளா தேடிட்டு இருக்கேன். இன்னும் கெடைக்கல…”

ஆனந்திக்கு ஆத்திரமாக இருந்தது.

“எதுக்கு நம்ம வீடு காலி பண்ணனும். இத்தன வருசமா இங்க இருந்திருக்கோம். திடீர்னு போறதுன்னா எங்க போறது? இந்த அசோசியேஷன்ல இருக்கவனெல்லாம் யோக்கியனாமா? ம்,….”

ஆனந்தி சத்தமாகக் கத்தினாள். அமைதியாக இருந்த தெரு முழுக்க அவள் குரல் எதிரொலிக்க, விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அச்சத்தோடு அவளைப் பார்த்தனர். ஃபிளாட்டில் சிலர் தங்களின் வீட்டு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தனர். அசோசியேஷன் தலைவர் வீட்டிலிருந்து இரண்டு கண்கள் மட்டும் அருவருப்போடு இவளை எட்டிப் பார்த்தபடி இருந்தன. பாபுவிடம் இன்னொரு சிகரெட்டை வாங்கி புகைக்கத் துவங்கியவளுக்கு அபார்ட்மெட்டிலிருந்த ரகசியமாக எட்டிப் பார்த்தக் கண்கள் எரிச்சலூட்ட கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து ஆவேசமாக அசோசியேஷன் தலைவர் வீட்டை நோக்கி எரிந்தாள். கல் அந்த வீட்டுச் சுவரில் மோதி கீழே நிறுத்தப்பட்டிருந்த காரில் விழுந்தது.

“பாருங்கோ பைத்தியகாரிச்சி மாதிரி எப்பிடி பன்றான்னு…. இவாள எல்லாம் போலீஸ் வெளில விடாக்கூடாது. மெண்டல் ஹாஸ்பிட்டல்ல லாக் பண்ணிடனும்…” அந்த வீட்டிற்குள்ளிருந்து ஒரு அம்மா கத்துவது கேட்க, ஆனந்தி இன்னொரு கல்லைத் தூக்கி எறிந்தாள். பாபு அவசரமாக அவளை பிடித்து காருக்குள் உட்கார வைக்க முயன்றான்.

“விடுங்க பாபு. இவனுங்க யாரு என்னய வீடு காலி பண்ணச் சொல்ல? அந்த ஐயரு மெட்ராஸுக்கு வந்தே பத்து வருஷம் கூட ஆகல…. ஆந்திராவுல இருந்து பொழைக்க வந்த நாயி. சொந்தமா ஃபிளாட் இருந்தா அசோசியேஷன் தலைவராம்மா இவன்… பாஸ்டர்ட்….”

ஆனந்தி ஆவேசமாகக் கத்த, பாபு வலுக்கட்டாயமாக அவளை காருக்குள் உட்கார வைத்தான்.

“சக்தி நீங்களும் வாங்க. என் வீட்டுக்குப் போயிட்டு பேசிக்கலாம்…”

ஆனந்தியோடு சக்தியும் காருக்குள் ஏறிக்கொள்ள பாபு அங்கிருந்து வேகமாக காரை எடுத்துக்கொண்டு கிளம்பினான். ஆனந்திக்கு எதுவுமே செய்யாமல் அங்கிருந்து போவதில் உடன்பாடில்லை. ஆவேசமாக கைகளால் சீட்டில் குத்தினாள்.

“அவனுங்க மண்டைய உடச்சிட்டு வந்திருக்கனும் பாபு.”

“ஆனந்தி ப்ளீஸ் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆவுங்க... இப்போ இது இல்ல நம்ம பிரச்சன. இதுக்கு மேல நிறைய இருக்கு. அதுல கான்சண்ட்ரேட் பண்ணுவோம்...”

“எப்பிடிங்க பண்றது? எனக்கு இப்போ ஒதுங்கறதுக்கு வீடு இல்ல.. தெருவுல நின்னுட்டு இருக்கேன்... எப்பிடி அமைதியா இருக்கறது?”

உடைந்து சத்தமாக அழுதாள். பாபுவுக்கும் சக்திக்கும் மனம் கனத்துப் போக, பாபு மெதுவாக சாலையின் ஒரு ஓரத்தில் காரை நிறுத்தினான். அவள் இன்னுமே கலங்கி அழுது கொண்டிருந்தாள்.

‘ஆனந்தி ஒரு நிமிசம்.”

அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

“உங்களுக்கு ஆட்சேபனை இல்லாட்டி நீங்க என்னோடயே தங்கிக்கலாம்..”

ஆனந்திக்கு இப்போதைக்கு வேறு மார்க்கமுமில்லை. வெறுமனே சரியெனத் தலையை மட்டும் ஆட்டினாள்.

“ஏற்கனவே நீங்க எனக்காக நிறைய செஞ்சுட்டீங்க பாபு... தேவை இல்லாம நான் இன்னும் தொந்தரவு பன்றனோன்னு தோணுது...”

“அப்பிடி எல்லாம் ஒன்னுமில்ல.. அவ்ளோ பெரிய வீட்ல நான் தனியாத்தான் இருக்கேன். நீங்க வந்து இருக்கறதுல எனக்கு சந்தோசந்தான்...”

சந்தோசமாக காரை ஸ்டார்ட் செய்தான்.

“முக்கியமான திங்க்ஸ மட்டும் ஈவினிங் போயி வீட்ல இருந்து எடுத்துட்டு வந்துடலாம். மத்த பொருள எல்லாம் ரெண்டு நாளுக்கு அப்பறமா எடுத்துக்கலாம்...”

பாபு இருவரிடமும் பொதுவாகச் சொன்னான். ஆனந்தி சரியென்றாள்.

எட்டு மணிக்கு மேலாக நீண்ட அமைதிக்குள்ளிருந்த அப்பார்ட்மெண்ட்டிற்குள் பாபுவின் கார் மறுபடியும் நுழைந்தபோது செக்யூரிட்டியைத் தவிர ஒருவரும் அவர்களைக் கவனித்திருக்கவில்லை. சக்தி வீட்டுக் கதவைத் திறந்து தேவையான பொருட்களை மட்டும் மூட்டைக் கட்டிக் கொண்டாள். ஆனந்திக்கு எதுவுமே செய்யாமல் அங்கிருந்து போகிறோமே என்கிற ஏமாற்றத்தில் மனம் கொதித்தது. வெளியே வந்து பார்த்தாள். பாதிக்கும் மேலான வீடுகளில் எந்தச்

சலனமும் இல்லை. மெதுவாக மொட்டை மாடி செல்லும் படிகக்ட்டுகளில் ஏறினாள். பாபு உள்ளே இருந்து எட்டிப் பார்த்தான்.

“என்னாச்சு ஆனந்தி?”

”ஒன்னுமில்ல பாபு டெரஸ் வரைக்கும் போயிட்டு வர்றேன், ஒரு தம்மடிச்சிட்டு வரேன்…”

பாபு சரியெனத் தலையாட்டிவிட்டு அவளது பெரிய பேக்கில் பொருட்களை திணித்தான். அவளுக்கு அவசரமாக வேண்டியப் பொருட்களை மூட்டை கட்டி பத்து நிமிடங்களுக்கும் மேலாகியும் அவள் மொட்டை மாடியிலிருந்து திரும்பி வந்திருக்கவில்லை. சக்தி ஆன்ந்தியின் எண்ணுக்குக் கூப்பிட்டுப் பார்த்தாள். ரிங் ஆகும் சத்தம் வீட்டுக்குள்ளேயே கேட்க, பாபு

“இருங்க நான் போயி பாத்துட்டு வரேன்..”

என வேகமாக படியேறி வந்தான். அவன் பாதி வழியில் வரும்போதே எதிரில் ஆனந்தியும் வந்துவிட்டிருந்தாள்.

“போலாமா?”

ஆனந்தி உற்சாகமாக கேட்க,

“ஓ …” என உற்சாகமாக சொன்ன பாபு ஆனந்தியின் கால்கள் ஈரமாக இருப்பதைப் பார்த்தான். எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

அப்பார்ட்மெண்ட்டை விட்டு கார் வெளியேறின நொடியில் ஆனந்தி சத்தமாக சிரிக்கத் துவங்கினாள். அவள் சிரிப்பதைப் பார்த்த பாபுவும் சக்தியும் என்னவென்று புரியாமல் சிரித்தனர்.

“என்னாச்சு ஆனந்தி?”

பாபு சாலையைப் பார்த்தபடி கேட்டான்.

ஆனந்திக்கு சிரிப்பு அடங்கவில்லை.

”ஒன்னுமில்ல… மேல தம்மடிக்கலாம்னு போனேன்….”

“ம்…”

”வாட்டர் டேங்க்க பாத்ததும் பிஸ் அடிக்கனும் போல தோணுச்சு…. ஏணில ஏறிப் பாத்தேன். டேங்க் முழுக்க தண்ணி…. தண்ணியப் பாக்கவும் கக்கா போகனும்னு தோணுச்சு?”

பாபு ஆச்சர்யத்தோடு

“அப்பறம்?”

“அப்பறம் என்ன? சுச்சா கக்கா எல்லாம் போயிட்டு வாஷ் பண்ணிட்டு வந்துட்டேன்…”

ஆனந்தி விட்ட இடத்திலிருந்து மீண்டும் அடக்க முடியாமல் சிரிக்க, வாட்டர் டேங்க்கிற்கு மேல் ஜீன்ஸை அவிழ்த்துவிட்டு மலம் கழிக்கும் ஆனந்தியின் தோற்றத்தை ஒரு நிமிடம் கற்பனை செய்து பார்த்துக்கொண்ட பாபு சத்தமாக சிரித்தான்.

# புதிய நம்பிக்கைகள்.

ஒரு மாதத்திற்கும் மேலாக அடைந்து கிடந்த தன் அலுவலகத்திற்கு ஆனந்தி திரும்பியபோது அவளின் மனதிலிருந்த திரைக்கதை புதிய தளங்களுக்குள் தாவிப் போயிருந்தது. தன் கதையை விடவும் சிறையில் தான் பார்த்த பெண்களின் கதைகள் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதினாள். அவற்றை இந்தப் படத்திற்குள் கொண்டு வரவேண்டுமானால் கதையின் தன்மையை மாற்றியாக வேண்டும். ஆனால் அதற்கு தன் படத்தில் நடிக்க சம்மதித்த நடிகை ஒத்துக்கொள்வாளா என்பது தெரிய வேண்டும். உதவி இயக்குநர்கள் யாரும் வந்திருக்கவில்லை. பதினோறு மணிக்கு மேலாக மேனேஜர் மட்டும் வந்தான்.

“ஸாரி மேடம். இங்க எல்லாத்தையும் பேலன்ஸ் பண்ண வேண்டியதா ஆகிடுச்சு. அதான் ஜெயில்ல வந்து பாக்க முடியல.”

“பரவா இல்லங்க. ஒரு முக்கியமான வேல செய்யனும் இப்போ.”

“சொல்லுங்க மேடம்”

”ஸ்க்ரிப்ட்ல கொஞ்சம் சேஞ்சஸ் வரும். என் கதையோட சேத்து இன்னும் மூணு பெண்களோட கதைய வெச்ச நான்கு பெண்களோட கதைகளா படத்த எடுக்கலாம்னு நெனைக்கிரேன். அதுக்கு ஹீரோயின் சம்மதிப்பாங்களான்னு கேக்கனும்”

மேனேஜர் யோசித்தபடி எதையோ சொல்ல முடியாத தயக்கத்தில் உட்கார்ந்திருந்தான்.

“என்னாச்சு? எதும் பிரச்சனையா?”

“இல்ல மேடம் நான் பேசிட்டு சொல்றேன்.”

“சரி அப்பறம் அசிஸ்டென்ஸ நாளைல இருந்து ஆஃபிஸுக்கு வரச் சொல்லிடுங்க. மத்த டெக்னீஷியன்ஸ் கிட்ட எல்லாம் பேசுங்க. இன்னும் ஒரு மாசத்துல கண்டிப்பா வேலைய ஆரம்பிச்சிரலாம்..”

“ஓகே மேடம்.”

மேனேஜர் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

தனித்து விடப்பட்டவளாய் அலுவலகத்தில் பழைய செய்தித்தாள்களை எடுத்துப் புரட்டினாள். அவள் விடுதலையான செய்தி தமிழ், ஆங்கில நாளிதழ்களில் வெளியாகி இருந்தது. எல்லாவற்றையும் வெட்டி வைத்துக் கொண்டாள். வெட்டி வைக்கப்பட்ட செய்தித்தாள்களை ஒட்ட ஸ்க்ராப் புக்கில் இடமில்லை. புதியதாக ஒன்றை தயாரிக்க வேண்டும். மனம் போன போக்கில் கையில் பட்ட எல்லா இதழ்களையும் வெட்டிக் கொண்டே இருந்தவளுக்கு தான் எழுதி வைத்திருந்த திரைக்கதையை எடுத்துப் படிக்க வேண்டுமெனத் தோன்றியது. மேஜைக்குள் பாலித்தீன் கவர் சுற்றி வைக்கப்பட்டிருந்த அந்தக் காகிதங்களை எடுத்துப் புரட்டத் துவங்கிய போது பாதிக்கும் மேலாக சுயபுலம்பல்களே மிகுந்திருந்தன. அனாவசியமெனத் தோன்றிய காகிதங்களை எல்லாம் யோசிக்காமல் கிழித்துப் போட்டவள் தான் எதிர்கொண்டிருந்த புதிய பெண்களின் கதையையும் சிறையின் கதையையும் எழுதி எங்கெங்கு சேர்க்க வேண்டுமெனக் குறித்துக் கொண்டாள்.

சிறிய இடைவெளிக்குப் பின் அலுவலகம் திறக்கப்பட்டிருந்ததால் அருகிலிருந்த சிலர் வந்து விசாரித்துவிட்டுப் போனார்கள். எல்லோருக்கும் நம்பிக்கையான பதில்களைச் சொல்லி அனுப்பினாள். யாரோ ஒருவரின் வீழ்ச்சியும் அழிவும் எப்பொழுதும் முகம் தெரியாத சிலருக்கு சந்தோசமளிக்கக் கூடியதாய் மாறிவிடுகிறது. சதாவும் தங்களுக்குள்ளாகவே புழுங்கிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு யாரோ ஒருவரின் நிர்வாணம் எப்போதும் உந்துதலுக்கு தேவையானதாய் இருக்கிறது. வரிசையாக வந்த தொலைபேசி அழைப்புகள் அவ்வளவிற்கும் பதிலளித்தாள். ஜோபியும் அழைத்தான். நலம் விசாரிப்பதற்காக இருக்குமென முதல் அழைப்பைத் தவிர்த்தாள். இரண்டாவது முறையும் அவன் அழைக்க எடுத்துப் பேசினாள். ”சொல்லுங்க ஜோபி எப்டி இருக்கீங்க?”

”நல்லா இருக்கேன் ஆனந்தி. நியூஸ் பாத்தேன். ரொம்ப சங்கடமா இருந்துச்சு. நேத்து நீங்க ரிலீஸ் ஆகிட்டீங்கன்னு கேள்விப்பட்டதும் உடனே கிளம்பி வந்துட்டேன். இப்போ சென்னைல தான் இருக்கேன். எங்க வந்தா உங்களப் பாக்கலாம்.?”

அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இத்தனை மதிப்பளித்து தனக்காக ஒருவன் வந்திருக்கிறானே என சந்தோசமும்.

“ஓ ... சென்னைலயா இருக்கீங்க... சரி நான் ஆஃபிஸ் அட்ரஸ்

அனுப்பறேன் நேர்ல வந்துடறீங்களா? கோடம்பாக்கத்துலதான் ஆஃபிஸ்.”

“நான் பக்கத்துல தான் இருக்கேன் ஆனந்தி. கோடம் பாக்கத்துல எங்க?”

“யுனைட்டட் இந்தியா காலனி. மீனாட்சி காலேஜ்ல இருந்து ஃபைவ் மினிட்ஸ் வாக்…”

“ஓகே ஆனந்தி, நான் ஒரு பத்து நிமிசத்துல அங்க இருப்பேன். பை.”

தனியாக இருக்கிறோமென்கிற வெறுமை நீங்கி மனம் கொஞ்சம் இலகுவானது. மேஜையை ஒதுங்க வைத்துவிட்டு, ஜன்னல்களை திறந்து வைத்த போது வெளிக்காற்று அலுவலகம் முழுக்க நிறைந்தது. கீழே இறங்கி எதிரில் இருந்த தேநீர்க்கடையில் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு இரண்டு தேநீர் கொண்டு வந்து தருமாறு சொல்லிவிட்டு வந்தாள். ஜோபி அங்கு வந்து சேர்ந்த போது லேசான தூறல் துவங்கியிருந்தது. தேநீரோடு காத்திருந்தவள் அவனுக்கான பிரத்யேகமான புன்னகையை சேமித்து வைத்திருந்தாள். முன்னை விடவும் அழகானவனாய் இருந்தான். தேநீரை உரிமையோடு எடுத்துக் கொண்டு அருந்தத் துவங்கியபோது அந்த நாளின் மிகச் சிறப்பான கணங்களை இருவரும் அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

“என்னயப் பாத்துட்டுப் போறதுக்கா இவ்ளோ தூரம் வந்திங்க ஜோபி?”

“ம்… ஆனா இப்போதைக்கு ஊருக்குப் போற ஐடியா இல்ல.”

“ஏன் இங்கயே படம் பண்ற ஐடியா இருக்கா?”

“இல்ல ஆனந்தி உங்க படத்துக்கு வொர்க் பண்ணலாம்னு இருக்கேன். அதனால உங்க கூட படம் முடியற வரைக்கும் இருக்கப் போறேன்.”

எல்லா நம்பிக்கைகளும் மறைந்து போன நொடியில் இத்தனை நம்பிக்கையோடு வந்து நிற்கும் அவனைப் பார்க்க அவளுக்கு சந்தோசமாய் இருந்தது.

“நிஜமாவே சொல்றீங்க?”

“ஆமா… உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா நான் இங்கயே உங்க ஆஃபிஸ்லயே ஸ்டே பண்ணிக்குவேன்.”

கையிலிருந்த தேநீர்க் கோப்பையை அவன் கோப்பையோடு தட்டிக் கொண்டு சியர்ஸ் சொன்னாள்.

“பெரிய ஹோப் குடுத்திருக்கீங்க ஜோபி. நம்ம கூட நிக்கிறதுக்கு

யாருமே இல்லையேன்னு தவிச்சிட்டு இருந்தேன்... தாங்க்ஸ்...”

“**its my pleasure** ஆனந்தி.”

தேநீர் குடித்து முடித்த பிறகும் கூட படத்தைப் பற்றி அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அவள் ஜெயிலில் இருந்த நாட்களைக் குறித்தும் அங்கு தான் எதிர்கொண்ட பெண்கள் குறித்துமே தொடர்ந்து பேசினாள். இன்று மாலையே தன் பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு இங்கு வந்துவிடுவதாக சொல்லிவிட்டான். இனி கவலையில்லை. வேறு யாரும் இல்லாமல் போனாலும் இந்தப் படத்தை எடுத்துவிட முடியும். பாபு ஒரு பக்கமும் ஜோபி ஒரு பக்கமுமாய் இந்த படத்தைத் தாங்கி நிறுத்துவார்களென்கிற நம்பிக்கை வந்திருந்தது. இருவரும் மதிய உணவிற்காக கிளம்பத் தயாரானபோது மேனேஜர் கூப்பிட்டான்.

“ஹலோ...”

“மேடம் ஹீரோயின் கிட்ட பேசினேன்.”

“சொல்லுங்க ஸார் என்ன சொன்னாங்க?”

”உங்க வாழ்க்கைக் கதைங்கறதால தான் அவங்க நடிக்க சம்மதிச்சாங்களாம்... கதைய மாத்தறதா இருந்தா அவங்களுக்கு இம்பார்ட்டன்ஸ் இருக்காது அதனால முடியாதுன்னு சொல்றாங்க...”

“ஓ...”

ஆனந்திக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரியவில்லை. யோசனையோடு பதில் சொல்லாமல் காத்திருந்தவள் திரும்பி ஜோபியை ஒருமுறைப் பார்த்துக் கொண்டாள்.

“ஒரு அஞ்சு நிமிசத்துல நான் கூப்டறேன் ஸார்..”

சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தாள். ஜோபியிடம் கேட்டு ஒரு முடிவுக்கு வரலாம். கதை முக்கியமா? அல்லது நடிகை முக்கியமா? ஒரு நடிகையின் கதையை படமாக்க முன்வந்து இன்னொரு அரை நிர்வாணப் படத்தை எடுக்க அவளுக்கு விருப்பமில்லை. இதற்கு முன்னும் சிலர் அதைத்தான் செய்திருக்கிறார்கள்.

“ஜோபி..”

“சொல்லுங்க ஆன்ந்தி.”

“முதல்ல நான் என்னோட வாழ்க்கைய மட்டுந்தான் படமா எடுக்கனும்னு நெனச்சேன். ஆனா ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததுக்கு அப்பறம் அங்க பாத்த சில பெண்களோட வாழ்க்கைய சேக்கனும்னு

தோணினதால கதைல கொஞ்சம் மாத்தி இருக்கேன். இப்போ சேஞ்சஸ் இருந்தா நடிக்க மாட்டேன்னு ஹீரோயின் சொல்றா? நமக்கு ஹீரோயின் முக்கியமா இல்ல ஸ்க்ரிப்ட் முக்கியமா?"

ஜோபி சிரித்தான்.

"நீங்களே நடிகை தான் ஆனந்தி. அவங்கள விடவும் இந்தக் கதைல உங்களால நல்லாவே நடிக்க முடியும். அதனால உங்களுக்கு ஆத்மார்த்தமா எந்த விசயத்த படமா பண்ணனும்னு தோனுதோ அதுக்கு இம்பார்ட்டன்ஸ் குடுங்க."

ஆனந்தி சிரித்தாள். அவன் சொல்வது சரியென ஏற்றுக்கொள்வதுபோல் ஆமோதித்து தலையாட்டினாள். மறுபடியும் மேனேஜருக்கு அழைத்தவள்

"நாம வேற நடிகையப் பாத்துக்கலாம் ஸார்… அவங்களுக்கு ஒன் மந்த் டைம் குடுங்க. விருப்பம் இல்லைன்னா அட்வான்ஸ திருப்பித் தந்துடட்டும்."

"ஓகே மேடம்."

மேனேஜரின் குரல் சோபையே இல்லாமல் எதிர்முனையில் ஓய்ந்தது. கமிஷன் விட்டுப்போன வருத்தமாக இருக்கலாம். அலுவலகத்தைப் பூட்டிவிட்டு மதிய உணவுக்காக இருவரும் வெளியில் போக எத்தனித்தார்கள், இப்போதிருக்கும் நிறைபேர் போய்விடலாம், புதிதாக யாரோ சிலர் நிச்சயம் வரவே செய்வார்களென்கிற நம்பிக்கை அவளுக்குள் ஆழமாய் துளிர்விட்டிருந்தது, அவன் அருகில் வரும்போது மெல்லிய பரவசமெழ, கடைசியாக அவனோடு கூடிக்கிளர்ந்த இரவு நினைவுக்கு வர படியிறங்கப் போனவனை பின்னாலிருந்து மென்மையாக அணைத்துக் கொண்டாள். அவன் பதட்டமே கொள்ளாதவனாய் மெதுவாக திரும்பி அவளை ஆழமாக முத்தமிட்டான்.

சத்யா

பாபுவும் ஆனந்தியும் ஒரே வீட்டில்தான் இருக்கிறார்கள். இருப்பினும் இருவருக்குமான அந்தரங்கங்களில் ஒருவர் அனுமதி இல்லாமல் இன்னொருவர் நுழைவதில்லை. தனக்கு அதிகம் பரிட்சயம் இல்லாத நாட்களில் தன்னுடலின் மீது கட்டற்ற மோகம் கொண்டிருந்தவனுக்கு இப்போது அவனோடே

இருந்த போதும், இவளே விருப்பத்தோடு இணங்கத் தயாராக இருந்தும் என்ன வந்தது? அவள் உடலை பொருட்படுத்தியதாகவே அவன் காட்டிக் கொள்வதில்லை. சக்தியைத் தன்னோடு வைத்துக் கொள்ள முடியாதென்பதால் ஆனந்தி தேவைப்படும் போது அழைத்துக் கொள்கிறேனென சொல்லி அனுப்பி விட்டாள். பாபுதான் பெரும்பாலும் அவளுக்கு சமைத்துக் கொடுக்கிறான். தேவையான எல்லாவற்றையும் பார்த்து

பார்த்து செய்கிறான். ஜெயிலுக்குப் போய்விட்டு வந்ததால் தன் மீதான கரிசனமாக இருக்கலாமென நினைத்துக் கொண்டாள். பரிதாபமோ, இரக்கமோ எதுவும் அவன் முகத்திலோ குரலிலோ வெளிப்படாமல் இயல்பாகத்தான் இருந்தான். ஜோபியை அவளோடு பார்க்கும் போது மட்டும் கொஞ்சம் கொஞ்சம் எரிச்சலாவான். ஆனால் அவளிடம் காட்டிக் கொள்வதில்லை. இவள் வம்புக்கென்றே இவனோடு இருக்கையில் ஜோபி எதிர்ப்பட்டாள் அவனோடு

## குழைவாள். பாபு இறுக்கமான கோவத்துடன்

“எதுக்கு சும்மா அவன் கிட்டயே கொழஞ்சிட்டு இருக்க? அசிங்கமா இல்லையா?”

எனக் கேட்பான்.

“உங்கிட்ட கொழஞ்சாத்தான் உனக்குப் பிடிக்கலையே… நீயும் என் கூட படுக்க மாட்ட. நான் யார் கூடயாச்சும் படுக்கனும்னு ஆசப்பட்டாலும் விடமாட்ட… சரியான சாடிஸ்ட்…”

ஆனந்தி கேலியாகச் சொல்லுவாள்.

“யாரு நான் சாடிஸ்ட்டா… வேணும்னே என் முன்னால அவனக் கொஞ்சற. நீதான் சேடிஸ்ட்…”

பாபு கோவமாக சொல்லிவிட்டு போய்விடுவான். சில மணி நேரங்களில் அவனே மீண்டும் வந்து எங்காவது அழைத்துக் கொண்டு போவான். தொடர்ந்து ஃபைனான்ஷியர்கள் நிறைய பேரை அழைத்து வருவது அவளுக்குத் தேவையான மற்ற விசயங்களை செய்துகொடுப்பது எப்போதும் அவள் படம் குறித்தான எண்ணமே அவனுக்குள் ஓடும்.

ஆனந்தி தன் இளவயது கேரக்டரில் நடிக்க நிறைய சிறுமிகளை நடிக்க வைத்துப் பார்த்தாள். திருப்திகரமான ஒரு முடிவுக்கு வரமுடியாதபடி இருந்தது. பாபுதான் நிறைய சிறுமிகளை பி.ஆர்.ஓக்கள் மூலமாக நடிப்புத் தேர்வுக்கு கூட்டிவரச் செய்து கொண்டிருந்தான். தனது பால்யத்தை அந்த சிறுமிகளின் வழியாய் தேடிக் கண்டடைய நினைத்தது அவளது மனம். அச்சம் நிறைந்த மருண்ட கண்களை யாரிடமும் அவளால் காண முடியவில்லை. வெவ்வேறு படங்களில் கேமராவிற்கு முன்னால் நின்று பழகியிருந்ததில் போலியான உணர்ச்சிகளை முகத்தில் கொண்டு வரும் கலையைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் தேர்ந்த நடிகைகளாக அன்றி சிறுமிகளாக இல்லை. அவளைத் திருப்தி செய்ய முடியாத சோர்வில் பாபு தான் நடிக்கும் படத்திற்கான படப்பிடிப்பிற்காக சிக்மகளூர் கிளம்பிப் போய்விட்டான். தற்காலிகமாக சிறுமியைத் தேடும் பணி ஒத்திவைக்கப்பட்டு மற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்க, புதிதாக பணம் கடன் கொடுக்க கேராளவிலிருந்து அவளது முன்னாள் தயாரிப்பாளர்கள் இரண்டு பேர் முன் வந்தனர். இழப்புகளுக்குப் பழக்கப்பட்டுக் கொண்டிருந்த

நாட்களில் இவர்களின் வருகை அவளை ஆறுதல் கொள்ளச் செய்தது.

வேறு கதாநாயகி படத்திற்கு ஒப்பந்தமாகி இருக்க, இரண்டாவது மற்றும் மூன்றாவது முக்கியமான கதாப்பாத்திரங்களில் நடிக்க இன்னும் சில புதிய நடிகைகளை தேர்ந்தெடுத்திருந்தாள். புதிய திரைக்கதை அவளுக்குள் பெரும் நம்பிக்கையை உருவாக்கிவிட்டிருக்க, அதன் வடிவத்திற்குள் ஒத்துப்போகும் முகங்களைத் தேடியடைவது பெரும் வேலையாக இப்போதில்லை. ஒரு ஃபோட்டோ ஷூட்டிற்கு நாள் குறித்தவர்கள் அதற்கான எல்லா வேலைகளையும் முடுக்கிவிட்டிருந்தனர். ஜோபியோடு பழைய உதவி இயக்குநர்களும் வேலையில்; சேர்ந்துவிட்டதால் அலுவலகத்தில் வேலை தீவிரமாய் நடந்து கொண்டிருந்தது. கடைசி நேரம் வரையிலும் ஒரு சிறுமி கிடைக்காமல் தேடிக்கொண்டிருந்தனர். சிக்மகளூரிலிருந்து திரும்பிய பாபு அவனோடு ஒரு சிறுமியை அழைத்து வந்திருந்தான். பதிமூன்று வயது. ஆனந்திக்கு அவளைப் பார்க்கையில் பல வருடங்களுக்கு முன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டது போலிருந்தது. எப்படி அவனால் இத்தனை பொருத்தமான ஒருத்தியைக் கண்டுபிடித்துக் கொண்டு வரமுடிந்தது? பெரிய வேலை ஒன்று முடிந்துவிட்ட திருப்தி எல்லோருக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமியை படம் முடியும் வரை எங்கும் அனுப்ப வேண்டாம் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாமென முடிவு செய்யப்பட்டது. பாபுவுக்கு அதில் உடன்பாடில்லை. கடுமையாக மறுத்தான். அவள் அவனுக்குத் தொந்தரவாக இருந்தால் புதிதாக இன்னொரு வீடு எடுத்துக் கொண்டு தானும் அந்தச் சிறுமியோடு இருந்து கொள்வதாகச் சொன்னாள். வேறு வழியே இல்லாமல் சம்மதித்தான். ஆனந்தி மதுவருந்துவதைக் குறைத்துக் கொண்டிருந்தாள். பாபுவோடு மட்டும் எப்போதாவது இரவுகளில் அதுவும் வீட்டில் குடிப்பதோடு சரி. அவர்கள் இருவரும் சேர்ந்து இருக்கத் துவங்கிய முதல் சில நாட்களிலேயே ஒரு புலனாய்வு பத்திரிக்கையில் கிசுகிசுவைப் போல் "திருட்டுத் தனமாய்க் குடும்பம் நடத்தும் பிட்டு நடிகையும் பிட்டு நடிகரும்." என ஒரு செய்தி போட்டிருந்தார்கள். இவளின் முகம் இல்லாத இவளின் உடலை மட்டும் கொண்ட கோட்டுப் படத்தோடு வந்த செய்தி. ஆனந்தி அந்தக் கிசுகிசுவை ரசித்தாள். அந்த அலுவலகத்திற்கு ஃபோன் செய்தாள் தன் உடலை அடுத்து கிசுகிசு போடும் போது அழகாக வரையவேண்டும் எனச் சொன்னதோடு இந்தக் கோட்டோவியம் போட்டவருக்கு ரெண்டாயிரம் ரூபாய் அனுப்பி வைத்திருப்பதாகச் சொன்னாள். அதன்பிறகு அந்தப் பத்திரிக்கையில் அவளைப் பற்றி

கிசுகிசுக்கள் வரவில்லை.

வாரத்திற்கு ஒருமுறை அந்தச் சிறுமியின் வீட்டிலிருந்து அவளை வந்து பார்த்துச் சென்றார்கள். சிக்மகளூரில் பழக்கடை வைத்திருப்பவரின் மகள். எளிய குடும்பம். படப்பிடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் அவர்களின் கடை. தற்செயலாக ஒரு மாலை நேரத்தில் சாலையைக் கடந்து வந்து கொண்டிருந்த பாபுவுக்கு கடையிலிருந்த இவளைப் பார்த்ததும் ஆனந்தியின் முகச்சாயல் தெரிய உடனடியாக அவர்களிடம் பேசி சம்மதிக்க வைத்திருக்கிறான். எதையும் வேகமாக கற்றுக்கொள்ளக் கூடியவளாய் இருந்தாள். அவளுக்கு நடிப்பு சொல்லித் தரவேண்டுமென நினைத்தபோதுதான் ஆனந்தி தனக்கே இன்னும் சரியாக நடிக்கத் தெரிந்திருக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். முன்பு ஃபிலிமில் படம் பிடிக்கும்போது ஃபிலிம் ரோல் வீணாகக் கூடாதென்பதற்காக அதிகம் டேக் போக சம்மதிக்க மாட்டார்கள். “போதும்மா… ஓகே…ஓகே… க்ளோஸ் ஷாட்ல சரியா பண்ணிக்கலாம். இதுல டீடெய்ல் தெரியாது…” என நன்றாக நடிக்க அவகாசம் தரமாட்டார்கள். இப்பொழுது டிஜிட்டல் என்பதால் எத்தனை டேக்குகள் வேண்டுமானாலும் போகலாம். பத்து நிமிடம் திரையில் வந்தாலும் இந்தச் சிறுமியின் பாத்திரம் வலுவாக இருக்க வேண்டுமென்பது அவளது எண்ணம். பால்யத்தின் துயரமான எல்லா வலிகளையும் நினைவுகளையும் இந்தச் சிறுமியின் கண்கள் வழியாகவும் நடிப்பின் வழியாகவும் தான் வெளியேற்றிக் கடக்க வேண்டும். இருந்த காட்சிகளை ஜோபியிடம் கொடுத்து அவன் வழியாக அந்தச் சிறுமிக்கு நடிப்பு சொல்லிக் கொடுத்தவள் சினிமாவிற்காக அந்தச் சிறுமியின் பெயரையும் மாற்றி ‘சத்யா’ என்று வைத்தாள்.

ஸ்டில் ஷூட்டிற்கு மூன்று நாட்கள் தான் இருந்தன. சத்யாவை எங்கும் அலையாமல் வீட்டிலேயே ஓய்வில் இருக்க வைத்தார்கள். அவள் இப்பொழுது அந்தக் கதையின் மொத்த சாரத்தையும் உள்வாங்கிய குட்டி ஆனந்தியாகத்தான் இருந்தாள். ஆனந்தியின் கடந்த காலம் அவளுக்க்கு எதிரில் எப்போதும் விளையாட்டுத்தனங்களோடு சுற்றிக் கொண்டிருந்ததைப் பார்க்க அவளுக்கே சந்தோசமாக இருந்தது. தான் இழந்த எல்லாவற்றையும் தனது பால்யத்தை நினைவுபடுத்தும் இவளுக்குக் கொடுத்துவிட வேண்டுமென மனம் தவித்தது. சினிமாவில் எல்லோரையும் எதிர்த்து நிற்கும் தைர்யத்தையும் நுட்பத்தையும் மட்டும் இவளுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டால் போதும் தன்னைவிடவும் பெரிய நடிகையாய் அவளை உருவாக்கிவிட முடியும்.

வளசரவாக்கத்திலிருக்கும் ஒரு ஸ்டியோ ஸ்டில் ஷூட்டிற்காக

உறுதி செய்யப்பட அதைப் பார்வையிட்டு வந்த ஆனந்தி அங்கு சின்னதாக ஒரு செட் போடச் சொல்லி இருந்தாள். நள்ளிரவை நெருங்கி வீட்டிற்குத் திரும்பியவள் தன் அறையில் சத்யவைத் தேடினாள். அங்கு இல்லாததால் பாபுவின் அறையில் இருக்ககூடுமென "சத்யா" என சத்தமாகக் கூப்பிட்டாள். எந்தப் பதிலும் இல்லை. பாபு மட்டும் வெளியே எட்டிப்பார்த்தான். "நல்லா தூங்கறா... இரு தூக்கிட்டு வர்றேன்...." கதவை நன்றாகத் திறந்து விட்டவன் வெறும் பாவாடை சட்டையோடு இருந்த அவளை தூக்கிக் கொண்டு வந்து ஆனந்தியின் படுக்கையில் படுக்க வைத்தான். ”சாப்ட்டியா சாப்ட எதாவது செஞ்சு தரட்டுமா?" அலைச்சலில் அவன் குரலும் சோர்ந்து போயிருக்க ஆனந்தி வேண்டாமெனச் சொல்லிவிட்டு உட்கார்ந்தாள். ”சரி நான் தூங்கறேன். காலைல பேசுவோம்..." திரும்பி நடந்த பாபுவின் இடது முழங்கையில் ஏதோ கீறி லேசாய்க் குருதி கசிந்திந்திருந்தது. "என்னாச்சு? கைல... ரத்தம் வருது..." முழங்கையில் தேடி குருதியைத் துடைத்துக் கொண்ட பாபு "காட் ல இடிச்சிக்கிட்டேன்." என சிரித்துவிட்டுப் போய்விட்டான்.

சரியாக உறக்கமில்லாமல் உடலில் வெக்கை கூடிப்போயிருந்தது. உட்காரும் போது குதத்தில் எரிச்சலும் வெக்கையும் அதிகமாகி இருப்பதால் மூலநோயாக அறிகுறியாய் இருக்கலாமென நினைத்துக் கொண்டாள். இப்போதைக்கு மருத்துவரைப் பார்க்கவெல்லாம் நேரமில்லை. தண்ணீர் குடித்துவிட்டு படுக்கப் போனவளுக்கு அசதியை மீறி அந்த செட் எப்படி இருக்க வேண்டுமென ஒரு வடிவம் தேவையாய் இருந்தது. இணையத்தில் தேடலாமென கம்ப்யூட்டரை ஆன் செய்தவள் பழைய படங்களின் ஃபோட்டோக்களை சேமித்தாள். ஒருமுறை புரண்டு படுத்த சத்யா "அங்கிள் ப்ளீஸ் ரொம்ப அழுத்தி தடவாதிங்க அங்கிள் வலிக்கிது..." எனப் புலம்பினாள். அவள் குரலில் காயத்தின் வலி. ஆனந்தி உடல் பதற திரும்பி சத்யாவைப் பார்த்தாள். கால்கள் விலகி படுத்திருந்த அந்தச் சிறுமியின் பாவாடைக்குள் உள்ளாடை எதுவுமில்லை. இருக்கையிலிருந்து எழுந்து கொண்ட ஆனந்தி மெதுவாக அவளை நெருங்கி அவள் உடையை விலக்கிப் பார்த்தாள். சாத்தானின் நகக்கீறல்கள் அந்தச் சிறுமியின் தொடையிலும் யோனி மேட்டிலும். லேசான குருதி கசிந்திருக்க அந்த இடத்தைச் சுற்றிலும் எச்சிலின் ஈரமும் விந்துத் துளிகளின் ஈரமும் துடைக்கப்பட்ட அடையாளங்களோடு வலியை சொல்லத் தெரியாமல் முனகிக் கொண்டிருந்தாள். தன்னிடமிருந்து எதற்காக விலகியிருக்கிறானென்கிற நிஜம் புரிய ஆனந்திக்கு இப்போது வெடித்து அழ வேண்டுமெனத் தோன்றியது. அவனுக்கு தன் மீதல்ல, தன் பால்யத்தின் மீதுதான் காமம். இளமையின் முதல் குருத்தை திண்ணப்

பழகிய மிருகங்களை என்ன செய்தாலும் பசியாற்ற முடியாது. இவனைக் கொன்றொழிக்க வேண்டும். குறைந்தபட்சம் விட்டொழித்து ஓடிவிட வேண்டும். ஆனால் தான் தப்பி ஓடிய பின்னால் இந்த மிருகம் முன்னிலும் கொடூரமாய் மாறிப்போனால்? இத்தனை தூரம் தான் ஓடிவந்ததற்கு காரணம் இந்த வன்முறைதானே. இதை அனுபவித்து சுகம் காண நினைக்கிறவனா ஆத்திரமும் அழுகையுமாய் தனக்குள் எழுந்த அலறலை ஆனந்தி அடக்கிக் கொண்டு எழுந்து அந்த அறையை விட்டு வெளியேறிப் போனாள். பாபுவின் அறை இறுக்கமாக சாத்தப்பட்டிருந்தது.

கடுமையாக சஞ்சலமுற்றபின் உடைந்து நொறுங்கிவிடும் மனதை என்ன செய்தும் ஆற்றுப்படுத்திவிடலாகாது. சமாதானங்களில் அத்தனை எளிதாக துயரங்களை மீட்டெடுத்துக் கொள்ள முடிவதில்லை. சாத்தான்களின் நீண்ட கோரைப்பற்களுக்குள் சிக்கித் தவித்தக் குழந்தைகளின் வதையை எண்ணி ஆனந்தி துயருற்றாள். கொஞ்சமாகவேனும் ஆற்றுப்படுத்திக் கொள்ளக் கேட்ட இசை

அமைதிக்குப் பதிலாக சினத்தையே கிளறியது. எந்த இசையாலும் இந்த வலியைக் கடந்து செல்ல வைக்கவியலாது. அந்த வீட்டிலிருந்த எல்லாமும் அருவருப்பின் வன்மத்தின் அதீத வடிவங்கள். சிதைவை இருப்பாக்கிக் கொண்டிருக்கும் அதனைப் பார்க்க நேர்கிற ஒவ்வொரு நொடியும் உடலைக் கூசச் செய்தது. சேமிப்பிலிருந்த மதுவை எடுத்துக் குடிக்கத் துவங்கினாள் ஹாலில் இருந்த பெரிய தொலைக்காட்சியில் யானியின் இசை ஓடிக்கொண்டிருந்தது. யானியின் தேர்ந்தெடுக்கப்பட்ட இசைத் தொகுப்பு.

பெரும் கூட்டத்தின் மத்தியில் தனது தாயின் பெயரில் யானி உருவாக்கி **felista** இசை பிரபஞ்சத்தின் ஆழ் மௌனத்திலிருந்து துவங்குவது போல் மிக மெதுவாகத் துவங்கி அந்த ஹால் முழுக்க நிறையத் துவங்க, ஆனந்தி மதுவை தம்ளரில் ஊற்றிக் கொண்டு தண்ணீர் கூட சேர்க்காமல் குடித்தாள். “மெதுவா தடவுங்க அங்கிள்.... வலிக்கிது....” சத்யாவின் முனகலும் “என் ஸ்கர்ட்டுக்குள்ள கைவிட்டு அமுக்காதிங்கப்பா வலிக்கிது... ப்ளீஸ்....” அவள் வயதில் ஆனந்தி முனகியதும் மாறி மாறி நினைவுக்கு வர ஆத்திரம் உடலை வதைத்தது. தன் தோற்றத்தில் அவளை நடிக்க வைக்கத்தானே அழைத்து வந்தான், அந்த வயதில் தன் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை அத்தனையையும் இவள் மீது நிகழ்த்துவதன் மூலம் வாழ்வை துயருற்றதாய் மாற்ற நினைக்கிறானா? மங்கிய மஞ்சளான வெளிச்சத்தில் ஏசியின் குளிரை மீறி வியர்வை கசியும் உடலுடன் பாபு சத்யாவின் மீது ஊர்ந்து பரவுவதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த விரல்களைத் தீயிட்டுக் கொழுத்த வேண்டும். இப்படி செய்யச் சொல்லி யோசிக்கிற அந்த மூலையை வெளியே எடுத்துப் போட்டு நசுக்க வேண்டும். அவனின் குறியையும் விதைப்பைகளையும் ஆயிரம் துண்டுகளாக்கி சாக்கடையில் எறிய வேண்டும். வேறு யாரையுமே செய்ய அனுமாதிக்காத ஒன்றை தான் நேசிக்கும் ஒருவன் தன்னிடமே நிகழ்த்தியிருக்கிறான். இதுவெறும் துரோகமா? ஆத்திரத்தில் வேகமாய் தீர்ந்து கொண்டிருந்தது மது. அவனிருக்கும் அறையின் கதவை உடைத்தெறிந்து இப்பொழுதே அவனை வெளியே இழுத்துப்போட்டு துவம்சம் செய்ய வேண்டும். ஆனால் ஆனந்தி தன்னையே பலவீனமாய் உணர்ந்தாள்.

ஆனந்தியை விடவும் அவன் வலுவானவன். ஒருவேளை அவன் முன்னால் வீழ்ந்து போகும் பட்சத்தில் சத்யா அவன் வாழ்வின் ஆகப்பெரிய துயருக்குள் வீழ்ந்துவிடுவாள். என்ன செய்யலாம்? அந்தக் குழந்தையை ஊருக்குத் திருப்பி அனுப்பிவிடலாமா? ஆனால்

அவளுக்குள்ளிருக்கும் இந்த மிருக நினைவுகளிலிருந்து அவளை எப்படி மீட்டெடுப்பது. இனி தன்னை எதிர்கொள்ளும் எல்லோரையும் அச்சத்தோடுதானே பார்ப்பாள். தன்னால் தான் எல்லாம்... குற்றவுணர்ச்சி மிகுந்த மேஜையில் மோதிக்கொண்டாள். கொஞ்சம் கூட வலிக்கவில்லை. **Felista** முடிந்து நைட்டிங்கேல் துவங்கியிருந்தது. முரட்டுப் புல்லாங்குழலின் ஆரம்ப இசை அவளின் வன்மம் எதையும் பொருட்படுத்தாமல் அவளுடலை மீறி எதிரொலித்தது. தற்கொலை செய்துகொள்ளலாம். யாருக்கும் எந்த இழப்பும் பாதிப்பும் இல்லாமல் தன்னையே வதைத்துக் கொள்ள ஆக இறுதியாய் இருக்கும் ஒரே வழி இப்போதைக்கு அதுதான். அறையில் மின்சாரம் தடைபடுவதும் மீண்டும் வருவதுமாய் இருந்தது. தனது டைரியை எடுத்துக் கொண்டவள் போதையில் கைகள் நிலைகொள்ளாத இருளிலும் வெளிச்சத்திலுமாய் மாறி மாறி எழுதினாள். நைட்டிங்கேல் பாதியில் நிற்பதும் பிறகு மின்சாரம் வந்ததும் மீண்டும் முதலிலிருந்து ஓடுவதுமாய் இருந்தது. யானி அவளுக்காக இசைக் சளைக்கவில்லை. இறப்பதற்கு முன்னால் குறைந்தபட்சம் தான் எதிர்கொண்ட துரோகங்களை எல்லாம் கதையாக்கி யாரிடமாவது சேரும்படி செய்துவிடவேண்டும். கைகளில் நிற்க மறுத்து நழுவிய பேனாவை சிரமத்துடன் பிடித்து நிறுத்திக் கொண்டாள். இந்தக் கடிதத்தை வாசிக்கப் போகும் யாரோ ஒருவனுக்கு தனது இறப்பிற்கான அசலான காரணம் அவசியம் தெரிந்தே தீரும். ஆனால் எப்படித் துவங்குவது? கதையென்றா? கடிதமென்றா?

( இனி அவள் கையெழுத்திலேயே அந்தக் கடிதம். )

இதுவரை யாரிடமும் சொல்லாத கதையை உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். நம்பினால் நம்புங்கள், இது ஒரு அதி அற்புதமான கதை. உலகத்தில் இருக்கும் யாருக்குமே சொல்லப்படாத கதை உங்களுக்கு தான் முதன் முதலில் சொல்லப் போகிறது என்பது உங்களுக்கு சிறு படபடப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.. இது இருட்டில் எழுதப்பட்ட கதை என்பது உங்களுக்கு அதிக ஆச்சரியத்தை கொடுக்கலாம்,

ஏனெனில் இந்த கதை எழுதத் துவங்கிய சில நொடிகளிலே மின்சாரம் நின்று விட்டது. அதுவரையிலும் வெளி வராண்டா ஜன்னல் வெளிச்சத்தில் விலிருந்து வந்த இந்த கதையை எழுதிமுடித்துவிட வேண்டுமென்று எண்ணியிருந்தேன்.

மன்னிக்கவும் என் தவறை எடுத்து

தெளிவாக புரியும்படி இல்லாமல் இருக்கலாம்
இல்

அது என்னுடைய தவறல்ல. எழுத்தை பற்றிய

கவலையை விடுங்கள். அப்படி பேசும்

உங்களுக்கும் புரியும்படியான ஒரு கதையை

சொல்லிவிட முயற்சிக்கிறேன்.

நீங்கள் நினைப்பது சரிதான். நான் இருட்டிலிருக்கி
றேன்

விதமாக ஒன்றும் தெரிவதில்லை. இப்பொழுது

என்னுடைய எழுத்து உங்களுக்கு புரியும் என்று நம்புகிறேன்

மின்சாரம் இப்பொழுது வந்துவிட்டது. இன்னமும் உங்க



அவளால் தொடர்ந்து எழுதமுடியவில்லை. தான் செத்துப்போவதால் மட்டும் எல்லாம் சரியாகிவிடப் போகிறதா என்ன? இவளைப் பாதுகாக்க வேண்டுமாயின் வாழவேண்டும். பாபுவின் வன்மத்தை எழுதிவைத்துவிடுவதால் மட்டும் என்ன ஆகிவிடும்? டைரியைத் தூக்கிப் போட்டவள் தனது படுக்கையறையை எட்டிப் பார்த்தாள். சத்யா எல்லா வலிகளையும் மீறி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். “இந்த உறக்கம் தற்காலிகமானது கண்மனி. உன்னைச் சுற்றி வேட்டையாடக் காத்திருக்கும் மிருகத்திடமிருந்து உன்னை மீட்டெடுத்து பிறகுதான் இனி நம் இருவருக்குமே உறக்கம்.” உறங்க முடியவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தவளுக்கு நேரம் குறித்த எந்த பிரக்ஞைகளும் இல்லை.

மிச்சமிருந்த மதுவையும் குடித்து முடித்தபோது அதிகாலையின்

முதல் வெளிச்சம் சிவப்பேறிய அடர்த்தியோடு ஜன்னலுக்கு வெளியே வீதியில் விழுந்திருந்தது. தனது அலைபேசியை எடுத்து சிரமத்துடன் ஜோபியின் எண்ணுக்கு அழைத்தாள். இன்னும் உறக்கத்திலிருந்து விடுபட்டிருக்காதவனாய் “சொல்லுங்க ஆனந்தி?” என முனகினான். “ஒரு டாக்ஸி எடுத்துட்டு வீட்டுக்கு வாங்க...” இணைப்பைத் துண்டித்தவள் தனக்கும் சத்யாவுக்கும் அத்யாவசியமான பொருட்களை மட்டும் எடுத்து வைக்கத் துவங்கினாள். சத்யாவை உறக்கத்திலிருந்து எழுப்பும் விருப்பமில்லை. கார் கீழே வந்திருக்கவேண்டும். ஜோபி மொபைலில் அழைத்தான். அவனை மேலே வரச் சொன்னவள் அவனிடம் பைகளைக் கொடுத்துவிட்டு சத்யாவை உறக்கம் களையாதபடி தன் தோள்மீது போட்டுக் கொண்டு நடந்தாள். வாசல்க் கதவை சத்தம் வராமல் பூட்டிவிட்டு முன்னால் நடந்தவளிடம் “எங்க போறோம் ஆனந்தி?” தயக்கத்தோடு ஜோபி கேட்டான். அவளுமே இன்னும் அதை யோசித்திருக்கவில்லை. ”இப்போதைக்கு ஆஃபிஸ் போவோம் பிறகு பாத்துக்கலாம்....” காரின் பின் சீட்டில் சத்யாவை படுக்க வைத்துவிட்டு அவள் தலையை மட்டும் தனது மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

# வதைபடுதலின் துவக்கம்.

நீண்ட பகலில் ஒருமுறை கூட பாபு அவளை ஃபோனில் அழைத்திருக்கவில்லை. அலுவலகத்திலும் வந்து பார்த்திருக்கவில்லை. இவளே ஒருமுறை அழைத்தபோது அவனது எண் அணைத்துவைக்கப்பட்டிருந்தது. முந்தின இரவு நடந்த எதுவெல்லாம் சத்யாவிற்கு நினைவிலிருக்கிறது? அவளிடம் எப்படி கேட்பது? எது சரி எது தவறென கற்றுக் கொண்டிருக்காத குழந்தையில்லை அவள். பிறகேன் தன்னிடம் எதுவும் சொல்லாமலிருக்கிறாள். உறங்கி எழுந்தபோது அவளிடம் எந்த மாறுதல்களையும் ஆனந்தி பார்த்திருக்கவில்லை. “என்னாச்சு ஆண்ட்டி? நான் வீட்லதான தூங்கிட்டு இருந்தேன். எப்போ ஆஃபிசுக்கு வந்தோம்?” அப்பாவியாகக் கேட்டாள். ”ஒன்னுமில்லாம வீட்ல எனக்கும் அங்கிளுக்கும் சண்ட. அதான் காலைல உன்ன இங்க கூட்டிட்டு வந்துட்டேன்…” ஆனந்தி இறுகிய முகத்துடன் சொன்னாள். “அய்யய்ய… அவரு நல்ல அங்கிள். அவர்கூட ஏன் சண்டபோட்டீங்க? அப்போ அவரும் இங்க வரமாட்டாரா?” சத்யாவின் கண்களில் நடந்த எதையும் நினைவில் வைத்திருக்கும் தடமில்லை. குழந்தைத்தனத்தின் எல்லா வசீரமும் அறியாமையும் பெருகி வழிந்தது. ”ம்ம்… வருவாரும்மா.. நாளைக்கு வருவாரு…” தனக்கு நிகழ்ந்ததை உணராத அந்தக் குழந்தையிடம் இதுதான் நடந்ததெனச் சொல்லி அவளுக்குள்ளிருக்கும் அறியாமையையும், குழந்தைத்தனத்தையும் கொலைசெய்ய விருப்பமில்லை அவளுக்கு. ஆனால் சத்யாவிற்கு எது சரி எது தவறென எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். தனக்கு இன்று நிகழ்ந்திருப்பது என்ன மாதிரியான கொடூரம் என்பதை சில வருடங்களுக்குப் பின்பாகவேனும் அந்தக் குழந்தை உணரவேண்டும். இப்போதிருக்கும் சிதைந்து மனநிலையில் தன்னால் அதைச் செய்ய முடியாதென்பதால் சில நாட்களுக்கு காத்திருப்பதைத் தவிர ஆனந்திக்கு வேறு வழியில்லை.

பிற்பகலுக்குப்பின் சக்தியை அலுவலகம் வரச்சொன்னவள் சத்யாவை அவளின் பொறுப்பில் விட்டுவிட்டு மீண்டும் பாபுவின்

வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது முந்தின இரவு நடந்த அசிங்கத்தின் எந்தச் சுவடுகளுமில்லாமலிருந்த வீடு. அவன் வீட்டிலில்லை. தனது வருகையை உணர்ந்து எங்காவது சென்றிருக்கக் கூடும். ஆனந்தியிடம் திறப்பதற்கு தனியாக ஒரு சாவி இருந்ததால் அவளுக்கு எந்தத் தடையுமில்லை. கதவைத் திறந்து உள்ளே சென்றவள் அத்தனை நாட்களுமிருந்த நெருக்கமான உணர்வுகள் விலகி ஒருவிதமான அந்நியத்தன்மையையே உணர்ந்தாள். எப்போதும் சாத்திவைக்கப்பட்டிருக்கும் அவனது படுக்கையறைக்குள் இந்த உலகத்திற்கு காட்ட விரும்பாத இன்னொரு முகமும் உடலும் ஒளித்துவைக்கப்பட்டிருக்கலாமென நினைத்தாள். அவன் அந்த அறைக்குள் அரிதாகவே பிறரை அனுமதித்தான். சர்வ ஒழுங்குகளோடு இருக்கும் அவ்வறையைக் காணும் எவருக்கும் முதலில் ஆச்சர்யப்படுத்துவது அதன் ராணுவ ஒழுங்குதான். சின்னதாக நீண்டால் கூட நகத்தை நறுக்க வேண்டுமென்பதில் கவனமாய் இருப்பான். தனது அறையில் சின்னதொரு அழுக்கைக் கூட அவன் அனுமதித்ததில்லை. மாசடைவதையும், அழுக்கானவற்றிற்குள் இருப்பதையும் வெறுக்கிறவனாகவே அவனை நினைத்திருந்தாள்.

அந்த அறைப் பூட்டப்பட்டிருந்தது. அதன் திறவுகோலை எவ்வளவு தேடியும் அவளால் கண்டுபிடிக்கமுடியவில்லை. கைக்குக் கிடைத்த எல்லாப் பொருட்களைக் கொண்டும் அந்தக் கதவைத் தகர்த்துச் செல்லும் வெறியோடு அதில் தாக்கினாள். முதலில் சுத்தியலால் பூட்டின் துவாரங்களில் அடித்தவள், பின்பு திருப்புலி கொண்டு சாவித்துவாரத்திற்குள் திருகிப் பார்த்தாள். எல்லா உதைகளையும் வாங்கிக் கொண்டு நிதானமாய் இருந்தது கதவு. சுத்தியலிலிருந்து வெளிப்பட்ட ஒலி அவள் ஆத்திரத்தை இன்னும் அதிகமாக்க ஓங்கி சில முறை உதைத்தாள். எந்தப் பலனுமில்லை. கிச்சனில் அவசரத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த கெரசினில் இருந்து கொஞ்சத்தை எடுத்து வந்து துணியில் நனைத்தவள் சாவித்துவார துளைக்குள் விட்டு எரியவிட்டாள். துணி எரிந்து முடிய மீண்டும் திருப்புலியால் குடைந்தாள். அந்தக் கதவைத் தகர்த்து உள்ளே செல்ல நினைக்கும் அவளின் நீண்ட போராட்டத்தின் முன் எதிர்த்து நிற்கும் திராணியின்றி கதவு திறந்துகொண்டது. இரவு முழுக்க உறங்காத அயர்ச்சியும் நீண்ட நேரம் பூட்டை உடைக்க போராடியதிலும் சோர்ந்து போனவள் மூச்சு வாங்க தண்ணீரைக் குடித்தாள்.

இந்தமுறை அவன் அறைக்குள் செல்வது அச்சமூட்டும் காரியமாய் இருந்தது அவளுக்கு. பார்க்கிற எல்லாவற்றையும்

சந்தேகித்தாள். அவன் படுக்கை, உடைகள் வைக்கப்படிருக்கும் அலமாரிகள், மற்ற பொருட்கள், பாஸ்வேர்ட் வைத்து அணைத்துவைக்கப்பட்டிருந்த மடிக்கணினி எல்லாவற்றையும் தேடிப்பார்க்க வேண்டும். இப்போதைக்கு அவன் வரப்போவதில்லை என்பதால் நிதானமாக ஒவ்வொன்றாய்த் தேடினாள். உடைகள் இருந்த அலமாரியைத் திறந்து ஒவ்வொரு அடுக்குகளாக பார்த்துக் கொண்டு வந்தபோது ஒரு அலமாரியில் அவனது உடைகளுக்கு மேலாக ஒரு சிறுமியின் உள்ளாடைக் கிடந்தது. அதை எடுத்துப் பார்த்ததுமே அது சத்யாவினுடையது என்பது தெரிய, ஆவேசமாக மொத்த உடைகளையும் களைத்து கீழே போட்டாள். அலமாரியின் ரகசிய அறையை இறுதியாகத் திறந்தபோது அதற்குள் ஏராளமான சிறுமிகளின் உள்ளாடைகளிருந்தன. அவ்வளவும் பயன்படுத்தப்பட்டு துவைக்கப்படாத உள்ளாடைகள். கைகளில் வைத்துக் கொள்ள முடியாதளவிற்கு கைகள் நடுங்கின. அவள் நினைத்ததை விடவும் கொடூரமானவனாய் அவன் சேகரிப்பு ஒவ்வொன்றும் வெளிக்காட்டிக் கொண்டிருக்க அவளுக்குள்ளும் உறங்கிக் கிடந்த மிருகம் அவனை வதை செய்யும் ரௌத்ரத்தோடு உறுமத் துவங்கியது. மொத்த உள்ளாடைகளையும் ஒரு பெரிய துணியில் சுற்றி அதன் மேல் கெரசின் ஊற்றி எரித்தாள். பற்றி எரிந்த கொண்ட அந்த உடைகளிலிருந்து சிறுமிகளின் சருமம் கருகும் வாசனை வருவது போலிருக்க ஆன்ந்திக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

அந்த அறையில் சர்வ நிச்சயமாய் இன்னும் ஏராளமான ரகசியங்கள் இருக்கவேண்டும். அவன் மடிக்கணினியை ஆன் செய்ய முடிந்தபோதும் எவ்வளவு முயன்றும் பாஸ்வேர்டை கண்டுபிடிக்க முடியவில்லை. வெறுப்போடு அதைவிட்டு மீண்டும் மேஜை, புத்தக அலமாரி எனத் தேடியபோது புத்தக அலமாரிக்குள்ளிருந்து ஒரு ஹார்ட் டிஸ்க் கிடைத்தது. அவனுக்கு அதிகம் படங்கள் பார்க்கிற வழக்கம் இல்லை. அப்படியானல் இந்த ஹார்ட் டிஸ்க்கில் என்ன இருக்கும்? அதை எடுத்துக் கொண்டு இன்னொரு அறையில் அவள் பயன்படுத்திக் கொண்டிருந்த கணினிக்கு சென்றாள். அதை கணினியில் பிணைத்து ஒவ்வொன்றாகத் தேடிப்பார்த்தபோது பதட்டமாக மனம் அடித்துக் கொண்டது. ஃபோல்டருக்குள் ஃபோல்டரென ஒவ்வொரு முறையும் நான்கைந்து ஃபோல்டர்களைக் கடந்து ஒரு வீடியோவைப் பார்க்கும் படி இருந்தது. முதலில் சிறுமிகள் விளையாடுவது, உடை மாற்றுவது மாதிரியான காட்சிகள். பின் அவர்கள் கழிவறையில் என்ன செய்கிறார்களென்பதை திருட்டுத்தனமாக படம் பிடித்தக் காட்சிகள். அதிலிருந்து நீண்டு இறுதியில் பாபு வெவ்வேறு சிறுமிகளுடன் உறவு

கொண்டதை அவர்களுக்குத் தெரியாமல் படம் பிடிக்கப்பட்ட காட்சிகள். முடிவில்லாமல் நீண்டு கொண்டே சென்ற அந்த வீடியோக்களைத் தொடர்ந்து பார்க்கும் பொறுமையில்லாமல் அலறியடித்துக் கொண்டு எழுந்தாள். சிறுமிகளோடு உறவு கொள்ளும் வீடியோக்களில் எல்லாம் மிகத் தெளிவாக தன் முகமும் அந்தச் சிறுமியின் முகமும் தெரியும்படியே கேமராவை வைத்திருந்தான்.

வெவ்வேறு ஊர்கள் வெவ்வேறு உடல்கள் அவன் இதைத்தேடித்தான் அலைந்து கொண்டிருக்கிறானா? இந்தப் பசி எப்படி அடங்கும்? எப்போது அடங்கும்? மனித இனத்தின எந்த வரையறைக்குள்ளும் வரமுடியாத இவனால் எப்படி இத்தனை நாட்களும் சாத்வீகமாக தன்னோடு சேர்ந்திருக்க முடிந்தது. இன்னும் நிறைய படங்களில் நடிக்க முடிகிறது. அவனுடல் சதாவும் சிறுமிகளின் அருகாமையைத் தேடும் மிருகவுணர்ச்சி கொண்ட பிண்டம். ஆதி காலம் தொட்டு மனிதர்களின் மீது நிகழ்த்தப்பட்ட எல்லா வன்முறைகளையும் பிரயோகிக்கப்பட வேண்டியவன். இப்படியே இந்த ஆதாரங்களை எடுத்துக் கொண்டு போய் காவல் துறையில் அவனை ஒப்படைத்தால் கூட இவன் மீது வழக்குப் பதியப்பட்டு சிறைக்குத்தான் அனுப்புவார்கள். சிறைக்குச் செல்வதென்ன தண்டனையா? குழந்தைகளின் மீது உடல்ரீதியாக வன்முறைகளைத் தொடர்ந்து நிகழ்த்தும் ஒருவனை தண்டிக்க வேண்டுமானால் முதலில் அவனது நினைவுகளை முற்றிலுமாக அழிக்க வேண்டும். அவன் நினைவுகளுக்குள் இந்தக் குழந்தைகளோடு இருந்ததைக் களிப்பாக மட்டுமே பார்த்திருக்கிறான். இதன் வலியை அவனுக்கு எப்படி புரிய வைப்பது? தானும் குழம்பி இன்னும் சில மணி நேரங்களுக்குள் மனநோயாளியாய் ஆகிவிடுவமோ என அச்சம் கொண்டாள்.

பாபுவால் இயல்பாக வீட்டிற்குத் திரும்ப முடியவில்லை. நள்ளிரவுக்கு மேல் அவன் வீடுவந்து சேர்வதற்கு முன்பாக தன்னிலை மறக்குமளவிற்கு குடித்திருந்தான். பழக்கத்தில் கால்கள் வீட்டை நோக்கி அவனை அழைத்து வந்திருந்தன. கதவைத் திறந்து உள்ளே வந்தவன் தனது அறையும் திறக்கப்பட்டு இருப்பதையும் பொருட்கள் களைந்து கிடப்பதையும் பார்த்துவிட்டு ஆனந்தியைத் தேடினான். அவளது அறைக்குள் கணினியின் முன்னால் அமர்ந்திருந்தவள் இவனை பொசுக்கிவிடும் வெறுப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் கால்களுக்குக் கீழ் உடைத்து நொறுக்கப்பட்ட ஹார்ட் டிஸ்க் குப்பையைப் போல் சிதறிக்கிடந்தது. அவளைப் பொருட்படுத்தாமல் ஹாலிலிருந்த எல்லா விளக்குகளையும் போட்டுவிட்டு

தொலைக்காட்சியை ஆன் செய்தான். முந்தைய இரவில் பாதியிலிருந்த யானியின் இசைத்தொகுப்பு மீண்டும் ஓடத் துவங்கியது. உடைகளைக் களைந்துவிட்டு உள்ளாடையுடன் நீரருந்தியவன் ஷோஃபாவில் வந்து உட்கார்ந்து கொண்டான். தனது அந்தரங்கம் அவளுக்குத் தெரிந்தவிட்ட எந்தப்பதட்டங்களும் அவனிடமில்லை. அவளே மனமுவந்து ஆதாரங்களையும் அழித்திருக்கிறாள்.

“நீ மட்டும் வந்திருக்க? சத்யா எங்க?” கொஞ்சமும் பிசிறில்லாமல் சத்தமாய் ஒலித்தது அவன் குரல். உள்ளேயிருந்த ஆவேசம் எதையும் காட்டிக் கொள்ளாமல் எழுந்து வந்த ஆனந்தி அவனுக்கு எதிரிலிருந்த ஷோபாவில் உட்கார்ந்தாள். “நேத்து அவள என்ன செஞ்ச?” பாபு தலையை உயர்த்தி அவளைப் பார்த்தான். போதையில் அவன் தலை தானாகவே இடதும் வலதுமாய் ஆடிக் கொண்டிருந்தது. “இவ்ளோ நேரமா தெரிஞ்சுக்காமயா இருக்க?... சிக்மகளூர்ல அவளப் பாத்த அன்னிக்கி என்ன செஞ்சன்னோ அதத்தான் நேத்தும் செஞ்சேன்... அவ இங்க வந்த இத்தன நாளும் செஞ்சுட்டு இருந்தேன்.” அவளுக்கு சப்தநாடிகளும் ஒடுங்கிப்போனது. அவன் தனக்காக அந்தச் சிறுமியை அழைத்து வரவில்லை. நடிப்புத் தேர்விற்கென இவன் மூலமாக வந்திருந்த எல்லாச் சிறுமிகளுக்குப் பின்னாலும் இப்பொழுது மிக மோசமான காரணங்களை மட்டுமே இவளால் யூகிக்க முடிந்தது. ”பாஸ்டர்ட்... கொஞ்சம் கூட குற்றவுணர்ச்சியே இல்லையா உனக்கு?” இல்லையெனத் தலையாட்டியவன் இன்னும் கொஞ்சம் தண்ணீர் குடித்துக் கொண்டான். “இருந்துச்சு... மொத தடவையா ஒரு பொண்ணு என் உடம்புக்குக் கீழ கதறி அழுதப்போ... பயங்கரமான குளிர்... அஸ்ஸாம்ல... என் உயரத்துல பாதிதான் இருப்பா... அவ அழறப்போ குற்றவுணர்ச்சியா இருந்துச்சு. அதுக்கப்பறம் என்னைய எல்லாரும் ஒதுக்கி வெச்சிட்டதுக்கு அப்பறம் எங்கிட்ட இந்த உடம்பத் தவிர எதுவுமே இல்ல. என் குடும்பத்துக்கு நான் வேண்டாதவனாகிட்டேன், எட்டு வருசம் சர்வீஸ்ல இருந்த வேலைக்கு நான் வேண்டாதவனா ஆகிட்டேன். இனி எதுக்காக என்னயக் கட்டுப்படுத்திட்டு இருக்கனும்னு தோணுச்சு...” ஆனந்திக்கு பாதி புரிந்தும் பாதி புரியாமலும் அவனோடு தொடர்ந்து பேசுவதா அல்லது அடித்துத் துவம்சம் செய்வதா என மனம் படபடத்தது.

“ஒரு ரேப் கேஸ்லதான் என்னய பி.எஸ்.எப் ல இருந்து தூக்கினாங்க. சரி ஊருக்கு வந்து சாதாரண மனுஷனா வாழலாம்னா என் பொண்ணே “அப்பா நீ கெட்ட அப்பான்னு சொல்றா?... அதுக்கப்பறம் நான் பாக்கா

எல்லாக் குழந்தைகளும் என்னய கெட்ட அப்பான்னு சொல்றதாத்தான் எனக்குத் தெரியுது. ஒரு குழந்தையோட இருந்துட்டு வந்த உடனயே ஏண்டா இப்பிடி எல்லாம் நடக்குதுன்னு தலையே வெடிக்கிற மாதிரி இருக்கும். செத்துடலாம்னு தோணும். இனிமே சின்னக் குழந்தைகளுக்குப் பக்கத்துலயே போகக் கூடாதுன்னு கூட நெனப்பேன். ஆனா அடுத்து யாராவது ஒரு குழந்த என்னோட ரொம்ப ஆசையா வந்து விளையாடறப்போ நான் என்ன செய்றேன்னு எனக்குத் தெரியாது... நாந்தான் முன்னயே சொல்லி இருக்கனே எனக்குக் குழந்தைங்கன்னா பிடிக்கும்னு...." ஆனந்திக்கு அவனைப் பார்க்க அருவருத்தது. எழுந்து போய் முகம், உடலென சகட்டுமேனிக்கு அடித்தாள். அவள் அடிப்பதைப் பொருட்படுத்தாமல் ரிமோட்டை எடுத்து சத்தத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினான். அவளுக்குக் கைகள் வலித்தன. யானியின் **tribiute** ஐக் கேட்டுக் கொண்டே அவன் "உன்னால அதிகப்பட்சமா என்னயக் கொல்லத்தான் முடியும். அத செஞ்சிடு. நானே என்னய சாவடிச்சிக்க முடியாம ரொம்பக் கஷ்டப்படறேன்." அவளால் அவனைத் தொடர்ந்து அடிக்க முடியவில்லை. கைகள் வலித்தன. "நாயே நாயே நல்லவன் மாதிரி கூட இருந்து ஏமாத்திட்டியேடா... த்தூ..." மீண்டும் அடித்தாள். "ஏமாத்திட்டனா? உங்கூட இருந்ததுக்கும் உன்மேல கரிசனம் இருந்ததுக்கும் காரணம் நீயும் என்னய மாதிரி ஏதோவொரு வகைல சைக்காலஜிக்கலா பாதிக்கப்பட்டிருக்கன்னுதான்... மத்தவன மாதிரி உங்கூட படுக்கனும்னு இல்ல..."

"நான் மெண்டலா?ம்ம்ம் நான் மெண்டலா...?" மீண்டும் அவனை எட்டி உதைத்தாள்.

"நான் சரியான நேரத்துல உன் வாழ்க்கைக்குள்ள வரலைன்னா நீ கண்டிப்பா அப்பிடித்தான் ஆகி இருப்ப..." அவன் எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். ஆனந்திக்கு வியர்த்தது. கோவமும் வெறுப்பும் முழுக்க ஆக்ரமித்திருக்க அவனது வலிமையான உடலை எதுவும் செய்ய முடியவில்லை என்கிற ஏமாற்றம் இன்னும் துயரடையச் செய்தது. அவன் தன்னை மனநோயாளி என்று சொன்னதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நின்றிருந்தவனின் விதைகளைப் பிடித்து நசுக்கினாள். வேகமாகத் திரும்பியவன் ப்ரியத்தோடு அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "இப்போ நீ விருப்பப்பட்டா நான் உங்கூட கண்டிப்பா படுப்பேன். வீட்டுக்குள்ள வந்ததுல இருந்து உன்மேல சத்யாவோட ஸ்மெல் அடிச்சது. அப்பவே எனக்கு ஒரு மாதிரி தான் இருந்துச்சு. ரொம்ப சிரமப்பட்டு கட்டுப்படுத்திக்கிட்டு இருந்தேன்..."

இவ்வளவுக்குப் பிறகும் அவனுக்குள்ளிருக்கும் மிருகம் விழிப்போடேதான் இருக்கிறதா? அவனைப் பின்புறமாகத் தள்ளிவிட்டாள். கீழே விழுந்தவன் எழுந்து கொள்வதற்கு முன்னால் நேற்று இரவு அவள் குடித்துவிட்டு வைத்துப் போன மதுபாட்டில் காலில் தட்டுப்பட அதை எடுத்து ஓங்கி அவன் மண்டையில் அடித்தாள். பாட்டில் உடைந்தும் கூட நிறுத்தியிருக்கவில்லை. அவள் கண்களும் உடலும் வன்மத்தின் எதிர்விளையாட்டுக்களை இப்பொழுது அவன்மீது நிகழ்த்திக் கொண்டிருக்க முன்பே போதையிலிருந்தவன் தலை முழுக்க பெருகிய குருதியுடன் மயங்கிப் போனான். சில நிமிடங்களுக்குள் அந்த அறை யுத்தகளம் போலாகி கொஞ்சம் கொஞ்சமாய் இயல்பிற்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் தொலைக்காட்சியில் யானியும் அவரது குழுவும் இப்பொழுது Rain must fall ஐ இசைத்துக் கொண்டிருந்தனர்.

உறக்கம் களையாத பெருநகரின் வீதிகளில் அதிகாலை ஒரு பூனைக்குட்டியைப் போல் விழித்துக் கொண்டிருந்தது. ஆனந்தி அலுவலகம் திரும்பி வந்தபோது ஜோபி மட்டுமிருந்தான். இவளுக்காக காத்திருந்திருக்க வேண்டும், முகம் உறக்கமில்லாமல் இருந்தது. களைப்பிலும் சோர்விலும் கூட இவளுக்கான புன்னகை நிறையவே அவனிடம் மிச்சமிருந்தது. ஸ்டில் ஷூட் எடுப்பதற்கான தயாரிப்புகளோடு இருந்தான். எல்லாத் துயரங்களையும் மீறி தூக்கக் கலக்கம் அவளுக்கு. நிறக முடியாதளவிற்கு உடல் அசதி. சத்யவைத் தேடினாள். ஜோபி அவளை சக்தி தன்னோடு கூட்டிச்சென்று விட்டதாய் சொன்னான். உடைகளைக் களையவிட வேண்டுமென அக்கறை கூட இல்லாமல் ஷோஃபாவில் சாய்ந்து படுத்துக் கொண்டாள். கண்களில் எரிச்சல் பொங்க அவனைப் பார்த்தவள்

“ஜோபி எனக்கு ஒரு உதவி பண்ணுவிங்களா?

எனக் கேட்டாள்.

“சொல்லுங்க ஆனந்தி என்ன செய்யனும்?”

“நான் சொல்ற வரைக்கும் நீங்க பாபுவோட வீட்ல இருக்கனும். பாபு எங்கன்னு யார் கேட்டாலும் அவன் டிரிப் போயிருக்கான்னு மட்டும் சொல்லுங்க.”

ஆனந்தி நிதானமாகச் சொல்ல, ஜோபிக்குத் தயக்கமாய் இருந்தது.

“ஏன் என்னாச்சு ஆனந்தி? பாபு இருக்காரில்ல..”

ஆனந்தி ஆமாம் என தலையை மட்டும் ஆட்டினாள். பதிலெதுவும் சொல்லி இருக்கவில்லை. ஜோபி அவளுக்கு அருகில் ஷோஃபாவிற்குக்

கீழ் உட்கார்ந்தான். அவன் கண்களுக்குள் ஊடுருவிப் பார்க்க முயன்றான். அந்தப் பார்வையைத் தவிர்த்தவள் அவனை முத்தமிட்டாள்.

“ஸ்டில் ஷூட்டுக்கான எல்லாம் ரெடி பண்ணியாச்சு. பதினோறு மணிக்கு மேனேஜர் வந்துடுவார். காஸ்ட்யூம்ஸ் வந்துடும். நீங்க இப்போ கொஞ்ச நேரம் தூங்குங்க.”

”ம்…. ஆனா அதுக்கு முன்னால நீங்க உங்க திங்க்ஸ் எல்லாத்தையும் எடுத்துட்டு அங்க போயி செட்டில் ஆகிடனும்.”

ஆனந்தி பாபுவின் வீட்டுச் சாவியை எடுத்துக் கொடுத்த போதுதான், அவள் கைகளில் சின்ன சின்னதாய் காயங்களிருப்பதைப் பார்த்தான். கேட்கத் தயக்கமாய் இருந்தது. எழுந்து கொண்டு போய் தனது பொருட்களை எடுத்துக் கொண்டவன் அவளது கார் சாவியை அவனிடம் கொடுக்கும் போது அவளுக்குத் தயக்கமாக இருக்க தானும் உடன் வருவதாகச் சொன்னாள். ஆனந்திதான் காரை ஓட்டினாள். ஜோபி எதுவும் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். பாபுவோடு அவனுக்கு பிணக்குகளோ வருத்தங்களோ எதுவுமில்லை. ஆனால் திடீரென அவன் மறைந்து போவதாய் நினைத்துக் கொள்ள வற்புறுத்தப்படுகிற போது சங்கடமாய் இருந்தது. அவளாக சொல்லும் வரை நிச்சயமாய் எதையும் தெரிந்து கொள்ள முடியாது. பாபுவின் வீட்டை நெருங்கும் வரை ஆனந்தியும் இறுக்கமாகவே இருந்தாள். அதிகாலை ரேடியோக்களில் பேசும் பெண்களின் குரல் அந்த வேளையில் அவர்களிருவருக்கும் நடுவிலிருந்து மௌனத்தை நிறைத்திருந்தது. ஆனந்தி திரும்பி ஜோபியைப் பார்த்தாள்.

“பாபுவ நான் இன்னும் சாகடிக்கல ஜோபி பயப்படாதீங்க.”

ஜோபி உள்ளிருக்கும் அதிர்ச்சிகளைக் காட்டிக்கொள்ளாமல்

”என்ன பிரச்சன ஆனந்தி? நேத்துக் காலைல இருந்தே ஒரு மாதிரியா இருந்திங்களே…”

“ரொம்ப அன்பா இருக்க எல்லோருக்குள்ளயும் ரொம்ப கொடூரமான ஒரு மிருகம் ஒளிஞ்சிருக்கும் போல ஜோபி. பாபு தனக்குள்ள இருந்த மிருகத்த மறைக்கிறதுக்காக மனுஷ வேஷம் போட்டுட்டு இருக்கற மிருகம்.”

“புரியலங்க…”

ஆனந்திக்கு கண்ணீர் முட்டியது. தனது துயரங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாத வேதனை. முகத்திலிருந்த இறுக்கத்தை சிரமப்பட்டு

மறைத்துக் கொண்டவள்

“தேவ்டியாப் பைய... சின்னக் குழந்தைங்கள சிதைச்சி அத வீடியோவா எடுத்து வெச்சிருக்கான் ஜோபி....”

ஜோபியால் நம்பமுடியவில்லை. இதுமாதிரி நிறைய ஆபாச வீடியோக்களை அவனும் பார்த்திருக்கிறான். ஆனால் பாபுவை அந்த மாதிரி ஒருவனாய்ப் பார்க்க முடியவில்லை. எப்போதும் அவன் முகத்தில் ஒரு சாந்தமும் தெளிவும் இருக்கும். அவனா இப்படி?

“என்ன சொல்றீங்க ஆனந்தி? பாபுவா அப்பிடி?”

“ஆமா... சத்யாவையும் விட்டுவைக்கல அந்த நாயி... ச்சே...”

ஸ்டியரிங்கில் ஓங்கி அடித்துக் கொண்டு கதறியவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் ஜோபி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் தலையைத் தடவிக் கொடுத்தவன்

“சரி பேசாம போலீஸ்ல புடிச்சுக் குடுத்துடலாமே...”

”இல்ல ஜோபி இவன மாதிரி ஆளுங்களுக்கு அதெல்லாம் ஒரு தண்டன இல்ல... இவன நான் கொல்லவும் மாட்டேன். போலீஸ்லயும் புடிச்சுக் குடுக்க மாட்டேன். இவனுக்கு வலின்னா என்னன்னு தெரியனும்.”

கார் பாபுவின் வீட்டின் முன்னால் நிற்க, ஜோபி கதவுகளைத் திறந்து கொண்டு தனது பொருட்களோடு இறங்கினான். தான் இத்தனை தூரம் வந்தது இந்தப் படத்தில் வேலை செய்வதற்காக மட்டுந்தானா? அவள் மீதான ப்ரியங்களை அவள் புரிந்து கொண்டிருக்கிறாள். முத்தமிடலும் கூடுதலும் தன்னை உண்மையில் அவளுக்கு உணர்த்தாமலா போய்விடும். அந்த வீட்டிற்குள் நுழைந்தபோது வினோதமான ஒரு அந்நியத்தன்மையும் வன்முறையின் நெடியையும் உணர்ந்தான்.

“ஜோபி பாபுவோட ரூம் மட்டும் தெறக்க வேணாம். நான் அத லாக் பண்ணி வெச்சிருக்கேன். நான் இருந்த பெட்ரூம நீங்க யூஸ் பண்ணுங்க...”

அவன் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று வைத்து அந்த வீட்டை அவனுக்கானதாய் சரிசெய்து கொடுத்தாள். பொருட்கள் அவ்வளவும் ஒழுங்குகளுடன் இருந்தன. ஹாலில் மூன்று பக்கம் வெள்ளை நிறமும் ஒரு பக்கம் ஆரஞ்சு நிறமுமாய் அடிக்கப்பட்டிருந்த வர்ணம் அந்த வீட்டை இருளிலும் கூட பிரகாசமாய்க் காட்டியது. இடது பக்க சுவரில் பெரிய உருவாக கண்களை மூடிய புத்தர் அந்த வீட்டின் நிசப்த வடிவமாய் இருந்தார். ஆனந்தி இருவருக்குமாக சேர்த்து தேநீர் எடுத்து

வந்தாள். ஜோபி வாசல் கதவையும் ஜன்னலையும் திறந்துவிட்ட போது அந்த நாளின் துவக்க வெளிச்சம் புதிய வாழ்க்கைக்கான பிரகாசமாய் வீட்டிற்குள் நிரம்பியது. தேநீரை வாங்கிக் கொண்டவன் அவளுக்கு நன்றி சொன்னான்.

“நீங்களும் இங்கயே வந்து ஸ்டே பண்ணிக்கங்க ஆனந்தி.”

“இல்ல ஜோபி சத்யா கண்டிப்பா பாபுவக் கேப்பா.. வேற எங்கயாவது இருந்தா அவள சமாளிச்சிடலாம். இப்போதைக்கு ஆஃபிஸ்ல இருந்துக்கறோம்..”

மௌனமாக இருவரும் தேநீரைக் குடித்துமுடிக்க, பாபு என்ன ஆகப் போகிறானென்கிற குழப்பம் அவனுக்குள் முடிவில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது.

“பாபுவ என்ன செய்யப் போறீங்க?”

தேநீர்க் கோப்பையை வைத்தவன் அவளுக்கு அருகில் வந்து உட்கார்ந்தான். அவளுமே தனக்குத் தெரியாது என்பது போல் தலையாட்டினாள்.

”ஏதோ தப்பு செய்றீங்களோன்னு தோணுது ஆனந்தி…:”

“உங்களுக்கு பிரச்சனை வந்துடும்னு பயப்படறீங்களா ஜோபி?”

“ச்சே…ச்சே… அப்டி எல்லாம் இல்லம்மா… அப்டியே பிரச்சன வந்தாலும் கவலப்பட மாட்டேன்.”

ஆன்ந்தி தேநீர்க்கோப்பைகளை எடுத்துக்கொண்டு சென்றாள். ஜோபி ஷோஃபாவில் சாய்ந்து படுத்துக் கொண்டான். இத்தனை சுவையான தேநீரை அவள் தயாரிக்க முடியுமென்பதை அவனால் நம்பமுடியவில்லை. கண்கள் பாபுவின் அறைக்கு எதிர்த்தாற் போலிருக்க, அந்த அறைக்குள் அவன் என்னவாய் இருக்கிறானென பார்க்க ஆர்வம் தூண்டியது. முந்தின இரவு உறக்கமில்லாமல் போனதால் உடல் முழுக்க ஒருவிதமான வெறுமை. செரிமானமாகால் ஏப்பம் வந்துகொண்டிருந்தது.

“என்னாச்சு ஜோபி காலைல இவ்ளோ ஏப்பம்? அல்சர் இருக்கா?”

ஆனந்தி கிச்சனில் ஒழுங்கு செய்தபடியே சத்தமாகக் கேட்டாள். ஜோபி எழுந்து சென்று அவளுக்கு அருகில் கிச்சன் மேடையில் உட்கார்ந்தான். ஒருசில பாத்திரங்களைத் தவிர எல்லாமும் அலமாரியின் அதனதன் ஒழுங்குகளோடு இருந்தன. பெரும்பாலும் கண்ணாடி மற்றும் பீங்கான்

பாத்திரங்க.

“சினிமாவுல இருக்கவனுக்கு தவறாம இருக்கற சொத்து இது. முதல்ல அல்சர் வரும். அப்பறம் ஹேர் லாஸ் ஆகும். கண் பார்வை குறையும். அப்பறம் ஒவ்வொரு பிரச்சனையா வரும்…”

ஜோபி சிரித்தான்.

“நீங்க சீக்கிரமா ஒரு படம் பண்ணிட்டா அப்பறம் எல்லாம் சரியாகிடப் போகுது… உங்களுக்கு சர்வீஸ் பண்ண ரெண்டு பேர் எப்பவும் கூட இருக்கப் போறாங்க…”

பாத்திரங்களை முழுமையாக ஒழுங்கு செய்துவிட்டவள், கியாஸை ஆஃப் செய்துவிட்டு அவனுக்கு அருகில் மேடையில் உட்கார்ந்தாள். கிச்சன் ஜன்னல் வழியாய் கசிந்த வெளிச்சம் அவர்கள் இருவருக்கும் நடுவில் ஊடுருவிச் சென்றது. அந்த வெளிச்சத்தில் கைகளை அலையவிட்டவன்

“நல்ல லைட் ஆனந்தி… இதுல ஷூட் பண்ணினா ஷாட்ஸ் ரொம்பப் பிரமாதமா இருக்கும்.”

”காலைலயேவா?… பேசாம கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுங்க… நானும் ஆஃபிஸ்ல போய்த் தூங்கறேன். இன்னைக்கும் நாளைக்கும் வேல நிறைய இருக்கு.”

“சினிமாக்காரனுக்கு எப்பவும் சினிமாதாங்க. பாக்கற எல்லோருமே நம்மளுக்கு கேரக்டராத் தெரியறதும், இருள் வெளிச்சம் எல்லாத்தையும் ஷாட்ஸா பாக்கறதும் தவிர்க்க முடியுமா என்ன?”

ஆனந்தி திரும்பி ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். வெளிச்சம் இப்பொழுது அவள் முகத்திலும் கசிந்து வழிந்தது. உடலைத் தொந்தரவு செய்யாத வெளிச்சம். கண்ணாடியை பாதி மறைக்கும்படி அவன் திரையை இழுத்துவிட்டான். அந்த வெளிச்சம் முன்னைவிடவும் அழகானதாக ஆகிப்போனது. ஆனந்தி அந்த மெல்லிய வெளிச்சத்தில் இரண்டு நாட்கள் உறங்காத களைப்பையும் மீறி அற்புதமானவளாய் இருந்தாள். ஜோபி அவள் இடையோடு கைகளைப் பிணைத்து கழுத்திலும் இதழ்களிலும் அழுத்தமாய் முத்தமிட்டான். தன் கதவுகளைத் திறந்து அவனுக்கு வழிவிட்டவள் மெதுவாக ஜன்னலில் சாய்ந்து கொண்டாள். காற்றை விடவும் மென்மையாக அவன் கைகள் அவளின் உடலெங்கும் ஊர்ந்து செல்ல மெதுவாக அவனைத் தவிர்த்தவள்,

“காலங்காத்தாலயேவா? இன்னைக்கு வேணாம். ரொம்ப டயர்டா

இருக்கேன். ஷூட் முடிஞ்சதுக்கு அப்பறம் பாக்கலாம்."

மெதுவாக கிச்சன் மேடையிலிருந்து இறங்கி நடந்தாள். அவளுக்குப் பின்னால் இறங்கிக் கொண்ட ஜோபியிடம்

"நீங்க ரிலாக்ஸா கிளம்பி வாங்க ஜோபி... நான் ஆஃபிஸ் கெளம்பறேன்." சொல்லிவிட்டு பாபுவின் அறை சாவியைக் கையோடு எடுத்துக் கொண்டு சென்றாள். அவள் கிளம்பிம் போவதை வாசலில் நின்று பார்த்த ஜோபிக்கு அசதியில் கண்கள் வலித்தன. தான் பார்க்கவே முடியாத ஒருவன் தனது சகாவாக ஒரே வீட்டில் இருக்கப் போகிறானென்பது அவனுக்குமே இப்பொழுது சுவாரஸ்யம். ஷோஃபாவிலேயே மீண்டும் போய்ப் படுத்துக் கொண்டான்.

ஆனந்திக்கு ஒரு வேலையைச் சரியாக செய்யத் துவங்கும் வரை இந்த வேலையை நம்மால் சரியாகச் செய்ய முடியுமாவென்கிற சந்தேகம் எப்போதுமிருக்கிறது. ஸ்டில் ஷூட் துவங்கின முதல் சில நிமிடங்கள் அவளுக்குள் இருந்த தயக்கம் குழப்பம் அவ்வளவும் தானாகவே சரியானது. என்ன மாதிரியான ஃபோட்டோக்கள் வேண்டும் என்பதற்கு நிறைய உதாரணங்கள் எடுத்து வைத்திருந்தாள். அத்தோடு ஒளிப்பதிவாளர், கலை இயக்குநர் எல்லோருக்கும் அதன் பிரதிகளைக் கொடுத்திருந்தாள். எல்லாம் கொரிய, ஹாலிவுட் படங்களின் போஸ்டர்கள், ஸ்டில்கள். அவற்றை உதாரணமாகக் கொண்டே தனது படத்திற்கான அறிவிப்பு ஃபோட்டோக்களையும் வெளியிட விரும்பினாள். அவள் ஸ்டுடியோவிற்குள் நுழையும் போது அதற்கு முன்பாக ஆர்ட் டிப்பார்ட்மெண்ட் ஆட்கள் மட்டும் செட்டின் இறுதி வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஜோபியும் மற்ற உதவி இயக்குநர்களும் முந்தைய தின இரவிலிருந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

“ஜோபி பசங்கள போயி குளிச்சிட்டு வரச் சொல்லுங்க. நீங்களும் ரெடியாகிடுங்க. செட்ட நான் பாத்துகறேன்.”

ஆர்ட் அசிஸ்டெண்ட் ஒருவன் அசதியில் செட்டிற்கு கீழ் விரிக்கபட்டிருந்த தார்ப்பாயிலேயே தூங்கிக் கொண்டிருந்தார். மேனேஜர் வேகமாக வந்து இவளுக்கு வணக்கம் சொன்னான். செட்டிற்கு இடது புறமாக புரடக்ஷன் ஆட்கள் உணவை எடுத்து வந்து இறக்கி வைத்துக் கொண்டிருந்தனர். ஆனந்தி கருப்பு நிற ஜீன்ஸும், ஆரஞ்சு வர்ணத்தில் ஒரு டாப்ஸும் அணிந்திருந்தாள். மேக்கப் இல்லாத முகத்தோடு முதல்முறையாக படப்பிடிப்பிற்கு வந்திருக்கிறாள்.

“ஹீரோயின் எத்தன மணிக்கு வர்றாங்க? கேமராமேன் எப்போ வர்றாரு?”

“மேடம் கேமரா மேன் ஆன் தி வே மேடம். ஹீரோயின் இன்னும் ஒரு மணி நேரத்துல இங்க வந்துடுவாங்க.”

செட் முழுமையாவதற்கு அருகிலிருந்தது. ஆர்ட் டைரகடரைப் பார்க்க முடியவில்லை. ஜோபி சத்தமாக அவளைக் கூப்பிட்டான்.

“பசங்க போயிட்டு வந்துடட்டும் ஆனந்தி. நான் இங்கயே குளிச்சி ரெடி ஆகிடறேன்.”

ஆனந்தி சரியெனத் தலையாட்டினாள். புதிதாக சில செட் ப்ராப்பர்ட்டிகள் வெளியில் குட்டியானை வண்டியில் வந்திறங்கின.

“ஆர்ட் டைரக்டர் எங்க?”

“இப்போதான் மேடம் கிளம்பினாரு. பக்கத்துல தான் வீடு. குளிச்சிட்டு உடனே வந்துடுவாரு.”

“ஓ .... சரி ஸ்டுடியோவுல நல்ல டாய்லெட் இல்ல. ஏசியும் இல்ல. மேக்கப் போட்டா சீக்கிரமா களைஞ்சிடும். நீங்க உடனடியா ஒரு கேரவனுக்கு சொல்லிடுங்க.”

மேனேஜர் சிரித்தான்.

“மேடம் நான் முன்னாலயே சொன்னேன் நீங்க கேக்கல... வெளில எங்கயும் சொல்ல முடியாது. நமக்கு தெரிஞ்சவரோட கேரவன் இருக்கு வரச் சொல்லிடவா?”

“தெரிஞ்சவரோடதா? இல்ல உங்களோடதா?”

மேனேஜர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள், இதுமாதிரி நிறைய உபதொழில்கள் எப்போதும் அவர்களுக்கிருக்கும்.

“ரெண்டு பேரு பார்ட்னர்ஷிப்ல வாங்கி இருக்கோம் மேடம். இப்போதான் பதினஞ்சு நாள் ஆகுது.”

மேனேஜர் தனது மொபைலை எடுத்துக் கொண்டு சென்றான். எல்லா டிப்பார்ட்மெண்ட்டிலிருந்தும் கமிஷன் வந்திருக்க வேண்டும். ஆள் கொஞ்சம் செழிப்பாகவே இருந்தான். சொந்த தயாரிப்பு என்பதால் தனது மேனேஜரோடு சேர்த்து புதிதாக ஒருவரையும் வரவு செலவு கணக்குகளைப் பார்க்க நியமித்திருந்தாள். போதுமான பணம் வந்து சேர்ந்துவிட்டது. எவ்வளவு விரைந்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் படத்தை முடிக்க வேண்டும்.

ஃபோட்டோ பிளட் காரர்கள் ஒரேயொரு செட் லைட் மட்டும் போட்டிருந்ததால் செட்டின் பெரும்பாலான இடம் வெளிச்சமில்லாமலிருந்தது. ஆனந்தி லைட் இருந்த இடத்திற்குக் கீழ் நின்றிருந்தாள். மொபைல் ரிங் ஆக, எடுத்துப் பார்த்தாள். சக்தி.

“சொல்லுங்க சக்திம்மா...”

“பாப்பாவும் நானும் கௌம்பிட்டோம். பதினஞ்சு நிமிசத்துல அங்க வந்துடுவோம்.”

“அவ இங்க வந்ததும் மேக்கப் போட வேணாம். டிஃபன் கொடுத்துட்டு கேரவன்ல தூங்க வெய்ங்க. அவங்க வீட்ல இருந்து யாரும் வந்திருக்காங்களா?”

”அவங்க அப்பா மட்டும் வந்திருக்காரு. எங்களோடதான் வந்திருக்காரு,.”

“சரி பத்ரமா பாத்துக்கங்க.”

அழைப்பைத் துண்டித்துவிட்டு ஆனந்தி செட்டை தனது மொபைலில் சில படங்கள் எடுத்துக் கொண்டாள். சாம்பிளுக்காக எடுத்து வைக்கப்பட்டிருந்த அத்தனை ஸ்டில்களும் பைண்ட் செய்யப்பட்டு அவளிடம் இருந்தன. ஒவ்வொன்றாய்ப் புரட்டிப் பார்த்தவள் எந்த வரிசையில் எடுக்கலாமென இடத்தை வைத்துப் பார்த்தாள். லைட் வெளிச்சத்தின் வெக்கையில் உடை வியர்த்துப் போயிருந்தது. வியர்த்தால் டச்சப் செய்துவிடுவதற்கு இப்பொழுது மேக்கப் மேனோ உதவியாளர்களோ இல்லை. ஆனாலும் இந்த வியர்வை பிடித்துப் போயிருந்தது. போன வேகத்தில் ஜோபி ரெடியாகி வந்திருந்தான். இவளை மாதிரியே கறுப்பு வர்ண ஜீன்ஸும், ஆரஞ்சு வர்ண டிஷர்ட்டும் அணிந்திருந்தவனை ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

‘ஹலோ என்னாதிது? நம்ம ரெண்டு பேரும் ஒரே மாதிரி டிரஸ் பண்ணி இருக்கறதப் பாத்தா யூனிஃபார்ம்னு நெனைக்கப் போறாங்க..”

“அட நெனச்சுட்டுப் போகட்டுமே… இது கோ இன்சிடன்ஸ் தான…”

**“ம்ம்… orange suits you.,…”**

ஆனந்தி அவன் தோளில் தட்டிக் கொடுத்தாள். இருவரையும் ஆச்சர்யமாகப் பார்த்தபடியே வந்த மேனேஜர்

“மேடம் ஒரு அஞ்சு நிமிசத்துல கேரவன் வந்துடும்.”

இருவருக்கும் அந்தரங்கமாக ஒரு சிரிப்பைத் தந்துவிட்டு மெதுவாக நடந்தான்.

“என்னாச்சு எதுக்கு இப்பிடி சிரிக்கிறான்?”

ஆனந்தி மேனேஜரையே பார்த்தாள்.

“விடுங்க ஆனந்தி. அவர் எத வேணும்னாலும் நெனச்சுக்கட்டும். பாருங்க இந்த வாரம் வரப்போற எல்லா மேகசின்லயும் துணை இயக்குநருடன் காதலான்னு உங்களப் பத்தி ஒரு கிசுகிசு வரும்…”

ஆன்ந்திக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை.

“அதுசரி அப்போ இந்த வாரம் நீங்க… வாங்க வேலையப் பாப்போம்.”

ஆல்பத்தைக் காட்டியவள் எதை முதலில் எடுக்கலாமென அவனிடம்

ஆலோசித்தாள். இருவரும் வரிசைப் படுத்திக் கொண்டிருக்க கேமரா மேன் வேகமாக செட்டிற்குள் வந்தார். அவரது உதவியாளர்கள் அவருக்குப் பின்னால் வர ஆனந்திக்கு வணக்கம் சொன்னவர் செட்டின் மையமாக நின்று கொண்டு தனது உதவியாளர்களிடம் எங்கெங்கு லைட் வேண்டுமென குறித்துக் கொடுத்தார்.

லைட் மேன் யூனிட்டிலிருந்து நேற்று இரவே வந்து செட்டிற்குத் தேவையான முக்கியமான லைட்களை எல்லாம் பொருத்தியிருந்தனர்.

“இப்போதைக்கு ரெண்டு பார் லைட், ஒரு ஷாஃப்டி மட்டும் எடுத்துட்டு வரச் சொல்லு. மத்தத எல்லாம் அப்றம் பாத்துக்கலாம்.. ஃபிலடர்ஸ் மாத்தச் சொன்னேன் மாத்தியாச்சா?’

மாத்தியாச்சு ஸார்.,”

”சரி போய் வேலையப் பாருங்க.”

கேமரா டிப்பாட்மெண்ட் ஆட்கள் எல்லாவற்றையும் தயார் செய்யும் அவசரத்தோடு ஓடிக் கொண்டிருந்தனர். ஸ்டில் ஷூட் என்பதால் நல்ல ஃபோட்டோ கிராஃபர் வைத்தே எடுத்துக் கொள்ளலாமென்றுதான் ஆனந்தி நினைத்திருந்தாள். கேமராமேன் தானே எடுத்துத் தருவதாகச் சொன்னார். தனக்கும் படத்தின் மூட் இப்பொழுதே செட் ஆக வசதியாக இருக்குமென்றார். அதனால் சம்மதித்து விட்டாள்.

“பாபு எங்க மேடம்?”

கேமரா மேன் இயல்பாகக் கேட்டார்.

“அஸ்ஸாம் போயிருக்காரு ஸார். கொஞ்சம் பெர்சனல் வேலை போல…”

“ஓ… நாம முதல்ல எத எடுக்கறோம்?”

ஆனந்தி ஆல்பத்தை விரித்துக் காட்டினாள். ஹீரோயின் ஒரு பாத் டப்பில் மதுக்குவளையுடன் இருக்க அவளைச் சுற்றிலும் மாயமாய் அக்னி எரிவது போல் ஒரு ஸ்டில். பாகிஸ்தான் பாடகி நாஸியா ஹசனின் பாடலொன்றின் இறுதி ஷாட் அது. நாஸியாவின் பிரம்மாண்டமான புகைப்படம் மெதுவாக எரியத் துவங்குவதோடு பாடல் முடியும். அதை மாதிரியாய் வைத்து எடுக்க நினைத்தாள். இதை முதலில் எடுத்து முடித்துவிட்டால் பிறகு மேக்கப் போடலாம்.

கேமரா மேன் பாத் டப் வைக்க சரியான இடம் தேடி நடந்தார். ஹீரோ அவளுக்குத் தெரிந்த பெங்களூர் பையன். . நீண்ட நாட்களாக வாய்ப்புத்

தேடிக் கொண்டிருப்பன் என்பதோடல்லாமல் இந்தப் படத்திற்கு அவனும் ஒரு பங்குதாரராக இருப்பதாக வாக்களித்திருந்தான். எல்லோரிடமும் தானாகவே சென்று அறிமுகப்படுத்திக் கொண்டான். இதற்கு முன் சில கன்னடப் படங்களில் அவன் நடித்திருந்தாலும் தமிழ்ப்படங்களில் நடிப்பதுதான் அவனது நீண்ட நாள் விருப்பம். பாபு தான் அவன் இந்தக் கதைக்கு சரியாக வருவானென ஆனந்தியை சம்மதிக்கை வைத்தான். இந்த நிமிடம் இந்த மொத்த செட்டையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டியவன் பாபு. அவனில்லாதது கொஞ்சம் வெறுமையாக இருந்தாலும் அதை ஆனந்தி காட்டிக்கொள்ளாமல் இருக்கவே விரும்பினாள். எல்லோருமே தவறாமல் அவளிடம் கேட்ட கேள்வி. ”பாபுவ எங்க?” எல்லோருக்கும் சிரித்தபடி ஆனந்தி அவன் அஸ்ஸாம் போயிருப்பதைச் சொன்னாள். அவள் மனதிற்குள் பாபுவின் வீட்டை கௌஹாத்தியின் ஒரு சூழலுக்குள் மாறிவிட்ட சிறிய வனமென நினைத்துக் கொண்டாள்.

முதல் ஃபோட்டோ பாத் டப் என சொல்லி இருந்ததால் கதாநாயகி குளிக்காமலேயே கிளம்பி வந்துவிட்டாள். தனக்கு இந்தப்படம் பெரிய பெயர் வாங்கித் தருமென்கிற நம்பிக்கை இருந்ததால் ஆனந்தியின் மீது பெரிய மரியாதை இருந்தது. நேராக செட்டிற்குள் வந்து ஆனந்தியை அணைத்துக் கொண்டாள்.

“ஹலோ மேடம்.”

ஆனந்தி அவளுக்கு ஜோபியை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

“நீங்க கேரவன் ல வெயிட் பண்ணுங்க… இன்னும் ஒரு பதினஞ்சு நிமிஷம் ஆகும் நான் வந்து கூப்டறேன்.”

”பரவா இல்ல மேடம்.. செட்லயே இருக்கேன்.”

ஆர்வமாக அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களை எல்லாம் சுற்றிப் பார்த்தாள். ஆர்ட் டைரக்டர் சிறைச்சாலைக்கான செட் அப்பிற்காக அட்டையில் தயார் செய்து கொண்டிருந்தார். அதனருகில் சென்று இரும்புக் கதவைத் தொடப்போனாள்

“ஹலோ ஹலோ தொடாதிங்க. பெயிண்ட் ஒட்டிக்கும்.”

ஆர்ட் டைரக்டர் யாரோ ஒரு பெண் என நினைத்துக் கத்தினார். ஹீரோயின் வேகமாக பின்னால் வந்துவிட்டு திரும்பி ஆர்ட் டைரக்டரிடம் ஸாரி சொன்னாள். ஹீரோயின் எனத் தெரிந்ததும் ஆர்ட் டைரகடரும் சிரித்தபடி “ஸாரி மேடம்… இன்னும் பெயிண்ட் காயல…” வழிந்தார்.

உதவி இயக்குநர்கள் அவள் எதிர்பார்த்ததைவிடவும் உற்சாகமாக வேலை செய்தனர். பாத்டப்பைச் சுற்றி கேமரா மேன் அழகாக லைட் வைத்திருந்தார். நல்ல வார்ம் டோனிலேயே எடுத்துவிடலாமென அவர் சொல்லியதை ஆனந்தியும் ஏற்றுக்கொண்டாள். சத்யா புதிதாக பார்க்க நேர்ந்த அந்த சூழலுக்குள் உற்சாகமாக ஓடி விளையாட, சக்தி அவளைத் துரத்திப் பிடிப்பதும் ஒரு இடத்தில் உட்கார வைப்பதுமாய் இருந்தாள். ஆனந்தி அவள் ஓடி விளையாடுவதை சந்தோசமாகப் பார்த்தாள். அடுத்த ஜெயில் செட் அப்பிற்கு வர வேண்டிய இரண்டு புதிய நடிகைகளும் வந்திருந்தனர். கதாநாயகிக்கு இணையான பாத்திரம் அவர்களுக்கு. வைதேகியையும், மஞ்சுளாவையும் மனதில் வைத்து அந்தக் கதாப்பாத்திரங்களை உருவாக்கி இருந்தாள். ஜோபி அவர்களை மேக்கப் போடச் சொல்லி அனுப்பி வைத்துவிட்டு நீண்ட நேரமாக டிஃபன் சாப்பிட்ட இடத்திலேயே உட்கார்ந்திருந்த மேக்கப் மேன்களை விரைவுபடுத்தினான்.

பாத் டப் செட்டப்பிற்கான உடையை மாற்றிக்கொண்டு வந்த ஹீரோயினுக்கு ஆனந்தி சத்யாவை அறிமுகப்படுத்தி வைத்தாள். தனது சின்ன வயது கதாப்பாத்திரம் என்பதால் அவளோடு ஹீரோயில் நிறைய ஃபோட்டோக்களை எடுத்துக் கொண்டாள். லைட் வைத்துவிட்டு ஆர்ட்டிஸ்ட் இல்லாமல் சில ஃபோட்டோக்களை கேமராமேன் எடுத்துக் கொடுத்தார். அற்புதமாய் இருந்தன. பாத்டப்பில் தலை இருக்கும் இடத்தில் தலைக்குப் பின்பாக பெரிய மெழுகுவர்த்தி இருந்தால் நன்றாக இருக்குமென ஆனந்திக்குத் தோன்றியது. அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த இடத்தில் ஜோபி ஒரு மெழுகுவர்த்தியை வைத்தான். அவள் சந்தோசமாக அவனைப் பார்த்து சிரித்தாள்.

ஹீரோயினை சாதாரணமாகப் பார்ப்பதற்கும் ஃபோட்டோக்களில் பார்ப்பதற்கும் நிறைய வித்யாசங்களிருந்தன. அவளுக்கு விருப்பமான **in the mood for love** படத்தில் வரும் ஒரு ஸ்டில்லைப் போல் இவளும் எடுக்க நினைத்திருந்தாள். கதாநாயகி படுத்திருக்க, அவளது கால்மாட்டில் படுத்திருக்கும் கதாநாயகன் அவளது வலது பக்கத் தொடையின் மேல் படுத்திருப்பான். முழுக்க சிவப்பு வர்ணத்திலும் பிண்ணனியில் அடர்த்தியான கருப்பு நிறத்திலுமிருக்கும் அதை எடுக்கும் போது கதாநாயகியின் முகத்திலும் தனித்துவமான சில உணர்ச்சி வெளிப்பாடுகளைப் பார்க்க முடிந்தது. அவளிடம் எந்த கூச்சங்களும் இல்லை. அழகாக ஒத்துழைத்தாள். கேமரா மேன் நிறைய ஃபோட்டோக்கள் எடுத்துக் கொண்டார். ஆனந்தி காலையிலிருந்து உட்காரவில்லை. இரண்டு மூன்று முறை ஜோபி அவளை உட்காரச்

சொன்னான், அவள் மறுத்துவிட்டாள். சங்கடங்கள் எதுவுமில்லாமல் உற்சாகமாகவே இருந்தாள்.

மதிய உணவுக்குப் பிறகு சத்யாவுக்கான ஃபோட்டோக்கள் எடுக்க தயாரானது. முழுக்க பசுமையான புல்வெளியில் மலைகள் சூழ்ந்திருக்க ஒரு புத்த துறவியைப் போல் அவள் கண்கள் மூடி அமர்ந்திருக்க வேண்டும். பிண்ணனியின் வர வேண்டிய அவ்வளவையும் ஃபோட்டோஷாப்பில் செய்து கொள்ள ஏற்பாடு. துறவிகளுக்கான உடையில் அவள் வந்தபோது குறும்புகள் மறக்காத குட்டி துறவியாகவேதான் இருந்தாள். வலியைக் கடந்த ஞானம் கொண்டவள் என்பதை உணர்த்தவே இந்த ஃபோட்டோவை எடுக்க விரும்பினாள். சத்யாவிற்கு அதிகம் சொல்லிக் கொடுக்க தேவை இருக்கவில்லை. கேமராவிற்கு முன்னால் தன்னை அழகாக வெளிப்படுத்திக் கொள்ள இயல்பாகவே அவளுக்குத் தெரிந்திருந்தது. சாதாரணமாக அவளைப் பார்த்ததற்கும் இப்பொழுது நடிகையாக பார்ப்பதற்கும் சின்ன மாறுதலை ஆனந்தி உணர்ந்தாள்.

படப்பிடிப்பு முடியும் வரை சத்யா உற்சாகம் குறையாமல் செட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் அப்பா சில நாட்களுக்கு ஊரில் வந்து தன்னோடு இருக்கும்படி கூப்பிட்டபோதும் போக மறுத்துவிட்டாள். சக்தியை அவளுக்குப் பிடித்துப்போனதால் அவளை விடாமல் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தாள். மகளை இப்பொழுது பார்க்க அவருக்குப் பெருமிதமாக இருந்தது. பழக்கூடையில் கசங்கி மங்க வேண்டியதில்லை. அவள் அவளுக்கு விருப்பமான எல்லாவற்றோடும் இனி பயணிக்க முடியுமென்பதே ஆறுதலானதாய் இருந்தது. சந்தோசமாக ஊருக்குத் திரும்பியவருக்கு மேனேஜர் மூலமாக ஆனந்தி கொஞ்சம் பணம் கொடுத்தனுப்பினாள். எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு காலை வரும் போது இருந்த செட் லைட் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. வந்திருந்த நடிகர்கள் எல்லோரும் நிறைவுடன் இருந்தார்கள். ஒரு நடிகைக்கு டைரக்ஷன் என்ன தெரியப்போகிறதென நினைத்திருந்த கேமரா மேன் கூட அவளை இப்பொழுது கொஞ்சம் மதித்தான். இவள் ஆசைக்காக படம் எடுக்க வரவில்லை என்பது புரிந்திருந்தது. ஜோபி இன்னும் அதே உற்சாகத்தோடு எல்லோரையும் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தான்.

“சக்திம்மா நீங்க சத்யாவக் கூட்டிட்டுப் போயிடுங்க. நான் காலைல வர்றேன்…”

சத்யா ஆனந்தி வரும்வரை போக மாட்டேன் என அடம்பிடித்தாள். சக்தி

நிறைய விளையாட்டுக் காட்டி “இன்னும் ஒரு மணிநேரத்துல ஆனந்திம்மா வந்துடுவாங்க..’ என பொய்களைச் சொல்லி அவளைக் கூட்டிப் போனாள்.

மேனேஜரிடம் காலையில் மொத்த கணக்குகளையும் பார்த்துக் கொள்வதாகச் சொன்னவள் ஜோபியோடு கிளம்பினாள். பகல் முழுக்க வேலை செய்த களைப்பு சிறிதுமில்லை. தான் நினைத்ததை விடவும் சிறப்பாக வேலை நடந்திருக்கும் தருப்தி. மதுவருந்த வேண்டும். ஜோபியோடு கொஞ்சம் நேரம் செலவழிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியமாக இன்னொரு வேலை இருக்கிறது. நாற்பத்தி எட்டு மணி நேரங்களாக ஒரு சிறிய அறைக்குள் யாராவது வந்து மீட்டுச் செல்வார்களாவென பாபு காத்திருப்பான். அவனை என்ன செய்யலாமென்பதற்காக தனியாக ஒரு திரைக்கதையை இவ்வளவு வேலைகளுக்கு நடுவிலும் அவள் உருவாக்கியே வைத்திருந்தாள்.

# வதை – 1

பாபுவின் அறை முழுக்க மங்கலான சிவப்பு நிற வெளிச்சம் படர்ந்திருக்க, கைகள் கட்டப்பட்ட நிலையில் தூங்கியும் தூங்காமல் அரை மயக்கத்தில் உட்கார்ந்திருந்தான். வாயில் கட்டப்பட்டிருந்த துணியில் அவன் எச்சில் வழிந்து ஈரமாகி இருக்க வேறு எந்த விளக்குகளையும் போடாமல் ஆனந்தி அவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள். பசி மயக்கத்தில் அவளை அவனால் சரியாகப் பார்க்க முடியவில்லை. தனது அறை இப்பொழுது யாரோ ஒருவருடையதைப் போல் மாறிவிட்டிருந்தது. ஆனந்தி தேர்ந்த வதைக்கூடமாய் அந்த அறையை மாற்றியிருந்தாள். கொஞ்சமாக மதுவருந்தியிருந்தாள். ஹாலில் ஜோபி **passion of Christ** படம் பார்த்துக் கொண்டிருந்தான். கதவை சாத்துவதற்கு முன்பாக வந்த லேசான சத்தம் கொஞ்சம் கொஞ்சமாய் மங்கி இப்பொழுது வேறு கிரகத்திலிருந்து கேட்பது போல் கேட்டது. பாபுவின் குறியிலிருந்து ஒரு டியூப் செருகி அதன் இன்னொரு முனையை கீழே ஒரு பீங்கான் கோப்பையோடு இணைத்திருந்தாள். நீர் எதுவும் குடிக்காமல் பசி மயக்கத்தில் கிடந்தவனால் அந்த கோப்பையை தனது சிறுநீரால் நிரப்ப முடியவில்லை. கோப்பையிலிருந்த சிறுநீரை எடுத்து கழிவறையில் ஊற்றிவிட்டு சுத்தம் செய்தாள்.

ஈரத்துணி கொண்டு உள்ளாடை மட்டுமே அணிந்திருந்த அவனுடலை சுத்தம் செய்துவிட்டாள். அவன் அரக்கு நிற கருவிழி அவள் அசைவுகளுக்கு தகுந்தாற்போல் அசைந்து கொண்டிருந்தது. முழுமையாய் துடைத்துவிட்டவள் வாயிலிருந்த துணியை அவிழ்த்து விட்டாள். அவன் எந்த சத்தமும் எழுப்பவில்லை. ஆனந்தி கைகளைக் கழுவிக் கொண்டு வந்து அவனுக்கான உணவை தட்டில் வைத்துக் கொண்டு அவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள்.

“தண்ணி வேணும்…”

பாபு முனகலாகக் கேட்டான். வாட்டர் பாட்டிலில் இருந்து கொஞ்சமாக குடிக்கக்
குடித்தாள். நீண்ட நேரமாக அடைக்கப்பட்ட வாய்க்குள் காற்றுப் போகாமல்
இப்பொழுது தண்ணீரும் தடுமாற்றத்தோடு இறங்கியது. தண்ணீரைக்

குடிக்க
முடியாமல் தடுமாறினான். வாட்டர் பாட்டிலை தளர்த்திவிட்டு அவன் மாரைத்
தடவி விட்டு இயல்பாக்கினாள். தட்டில் அவனுக்கு விருப்பமான பாஸ்தா.
எளிமையாக செரிக்கக் கூடியதும் இதுதான். வேறு ஏதாவது கொடுத்தால்
அவனுக்கு மலப்பிரச்சனை வரக்கூடுமென்பதால் இதை அவளே
தயாரித்திருந்தாள். ஸ்பூனிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்து ஊட்டினாள்.
பாபுவால் சாப்பிட முடியவில்லை. வேண்டாமென மறுத்து தலையை
அசைத்துவிடாதபடி விடாப்பிடியாக அவனுக்கு உணவைத் தந்து
கொண்டிருந்தாள். இருமல் எழுந்து பாஸ்தாவை வெளியில் துப்பினான்.
வாயையும் உடலையும் துடைத்துவிட்டாள். பாஸ்தா தட்டை ஓரமாக
வைத்துவிட்டு ஆனந்தி இன்னும் கொஞ்சம் மதுவருந்தினாள். பாபுவுக்கு இந்த
அறையின் வெளிச்சம் தலைக்குள் பூச்சிகள் பறப்பது போன்ற உணர்வைக்
கொடுத்தன. ”இந்த லைட்ட ஆஃப் பண்ணிடேன் ஆனந்தி ப்ளீஸ்...” அவள்
முடியாதென சிரித்தாள். பாபுவுக்குத் தன்னை விடுவித்துக் கொள்ள
விருப்பமில்லை, ஆனால் வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் தலையைக்
குனிந்து கொண்டான்.

ஆனந்தி எழுந்து வந்து அவன் வாயை மறுபடியும் துணி கொண்டு
கட்டினாள். அவன் இந்த முறைக் கொஞ்சம் விடாப்பிடியாய் தலையை
அசைத்து தன் எதிர்ப்பைத் தெரிவித்தான். மது அருந்தியிருந்ததால்
அவளுக்குள் இப்போது அசாத்தியமான வலுவும் வன்மமும் மிகுந்திருந்தது.\
தனித்தனியாக கட்டப்பட்டிருந்த அவன் கைகளின் கட்டுக்களை
அவிழ்த்துவிட்டவள் இரண்டு கைகளையும் ஒன்றாக வைத்துக் கட்டினாள்.
அதற்கு மேல் கெரசினில் நனைக்கப்பட்ட துணிகளைக் கொண்டு மெதுவாக
சுற்றத் துவங்க பாபுவுக்கு விபரீதம் புரிந்து அவன் அடித்தொண்டையிலிருந்து
கத்தினான். எந்த மனிதனுக்கும் வலிக்கும் போது அலறுவதை தானே

கேட்க
முடிவது கூடுதலான வலியைத் தரக்கூடியதுதான். அவன் காதுகளில் ஹியர்
ஃபோனை மாட்டியவள் தனது மொபைலி சேமித்து வைத்திருந்த
ஒலிக்கோர்வையை ஆன் செய்தாள். தாமிரத் தகடுகளை சுரண்டும் போது
வரும் கொடூரமான ஒலியை சேமித்திருந்த ஒலிக்கோர்வை அது. அது ஆன்
செய்யப்பட்டதும் சில நொடிகள் கூட பாபுவால் அதைக் கேட்கமுடியவில்லை.
அவன் நரம்புகள் சிலிர்த்து அருவருப்பையும் எரிச்சலையும் கொட்ட
முடியாமல் தவித்து திணறி அவன் உடல் துடித்தது. கண்களைத் திறக்க
முடியாமல் திணறினான். இப்பொழுது கைகளில் மூர்க்கமான வெப்பம் ஏற
அலறியபடியே கணகளைத் திறந்து பார்த்தான். எரிந்து கொண்டிருக்கும்
அவன் கைகளையும் வேதனையில் அலறிக் கொண்டிருக்கும் அவன்
முகத்தையும் ஆனந்தி நிதானமாக தனது இன்னொரு மொபைலில் படம்
பிடித்துக் கொண்டிருந்தாள். துணி முழுமையாக எரிந்து முடிந்து அவன்
விரல்கள் நெருப்பில் கருகிக் கொண்டிருந்தன. சதையும் தோலும் உருகும்
நெடி அந்த அறையைத் தாண்டி ஹாலில் இருந்த ஜோபிக்கும் எட்டியிருக்க
வேண்டும். கதவைத் திறந்து கொண்டு அவசரமாக உள்ளே வந்தான். பாபுவின்
அந்த நிலையையும் அதைப் படமெடுத்துக் கொண்டிருக்கும் ஆனந்தியையும்
பார்த்து அதிர்ச்சியானவனை முறைத்த ஆனந்தி “நீ எதுக்கு உள்ள வந்த?
போடா வெளிய.” கத்தினாள். ஜோபி அவசரமாக கதவைச் சாத்திவிட்டு
ஓடிவிட்டான். அச்சத்தில் நா வறண்டு வியர்த்துப் போனது அவனுக்கு.

காதுகளின் வழியாய் நிறைந்த கொடூரமான ஒலியின் அதிர்ச்சி ஒரு
புறமாகவும் எரிந்து கொண்டிருந்த கைகளில் இருந்து கசிந்த வலியின்
அதிர்ச்சி இன்னொரு புறமாகவும் மூளையை சிதைத்துக் கொண்டிருந்தன.
கனமான ஈரத்துணிகளை அவன் கைகளில் போட்டவள் அவற்றை ரொம்பவும்

அழுத்தமாக சுற்றாமல் வெறுமனே ஒத்தி எடுத்துவிட்டு முதலுதவி செய்வதற்கான மருந்துகளைத் தடவி விட்டாள். பாபுவின் காதுகளுக்குள்ளிருந்த ஹியர் ஃபோனை எடுத்துவிட அவனுக்கு சுவாசம் இயல்பானது. மருந்துகளின் மேல் மெல்லிய துணியால் கடுப்போட்டு விட்டவள் அவனைச் சுற்றி இருந்த எல்லாப் பொருட்களையும் எடுத்து வைத்தபோதுதான் கவினித்தாள், வலியில் மலம் கழித்துவிட்டிருந்தான். கத்தரிக்கோல் எடுத்து வந்து உள்ளாடையை வெட்டி தனியாக எடுத்தவள்
அவன் உட்கார்ந்த நிலையிலேயே இருக்க மலத்தை துடைத்து அவன் கால்கள் அந்த நாற்காலி எல்லாவற்றையும் சுத்தப்படுத்தினாள். பாபு உடல்
முழுக்க மிகுந்த கிடந்த வலியிலும் அவமான உணர்வாலும் கண்களைத் திறந்து கொள்ளும் திராணியின்றி மயங்கிக் கிடந்தான். ஒரு டவலை மட்டும்
அவன் இடையோடு சேர்த்து நாற்காலியில் மடித்துப் போட்டவள் அந்த அறையில் அவனைத் தனித்து விட்டு வெளியேறினாள். அவ்வளவு நேரமும்
சிவப்பு நிறத்தில் எரிந்து கொண்டிருந்த வெளிச்சம் மாறி இப்பொழுது மங்கலான பச்சை நிறத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

ஜோபிக்கு அவளை நேர்கொண்டு பார்க்கும் துணிச்சலில்லை. தனது
அறைக்குள் சென்று உடை மாற்றிவந்தவளை அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அறையிலிருந்து வெளியேறியபின் அவள் முகம்
முன்னைப் போலவே இயல்பாகி இருந்தது. தனக்கான உணவை எடுத்துக்
கொண்டு வந்தவள் "நீ சாப்ட்டியா?" அவன் பதிலுக்குக் காத்திராமல் உட்கார்ந்து சாப்பிட்டாள். அறையில் இன்னும் சதை எரிந்த நாற்றத்தின் மிச்சமிருந்தது. அவன் மிரட்சியோடு அவளைப் பார்த்துக் கொண்டிருக்க, "ரொம்ப ஸ்மெல் இருக்குல்ல.... கொஞ்சம் ரூம் ஸ்ப்ரே அடிச்சு விடேன்..."
அலமாரியிலிருந்த ஸ்ப்ரேவை அவனுக்குக் காட்டினாள். ஜோபி எதுவும் சொல்லாமல் ஸ்ப்ரேவை எடுத்து அடித்துவிட்டான். அவள் சாப்பிட்டு முடிக்கும் வரை இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. பின்னிரவைத்
தாண்டியிருந்ததால் களைப்பில் அவளுக்கு கண்கள் சொருகிக்

கொண்டன.
“சரி தூங்கட்டுமா? ரொம்ப டயர்டா இருக்கு…”
“ஆனந்தி… இந்த சித்ரவத தேவதானா?”
ஜோபி தயங்கி தயங்கி சொல்ல, அவள் இயல்பான முகத்துடன்
“கண்டிப்பா அவனக் கொல்ல மாட்டேன் ஜோபி. ஏதோவொரு வகையில என்
வாழ்க்கைல அவனுக்கு ஒரு முக்கியமான இடம் இருக்கு. ஆனா அவன்
வலிய உணரனும். நான் இத்தோட விடவும் மாட்டேன். உனக்கு என்னோட
இருக்க தயக்கமா இருந்தா உனக்கு வேற இடம் ஸ்டே பண்ண ரெடி
பண்ணித் தர்றேன்…”
அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.
“நான் இங்கயே இருக்கேன் ஆனந்தி. ஒன்னும் பிரச்சன இல்ல.”
சிரமத்தோடு ஜோபி சிரிக்க, ஆனந்தி அழுத்தமாக அவனது இதழ்களில்
முத்தமிட்டாள். அவள் எச்சிலின் ஈரம் கூட இன்னும் அதீத வெக்கையுடன்
இருப்பதாக உணர்ந்தவன் அவளைத் தன்னிலிருந்து விலக்காமல் இறுக்காமக
அணைத்துக் கொண்டான்.

# புதிய வீடும் ஸ்க்ராப் புக்கும்.

சத்யாவோடு ஆனந்தி புதிய வீட்டிற்கு குடியேறியிருந்தாள். முன்னைவிடவும் சிறிய வீடுதான். ஆனால் சத்யா அவளுடனிருப்பதில் அந்த வீட்டிற்குள் ஏராளமான சந்தோசங்கள் பெருகிக் கிடந்தன. தனது ஊர் மொழி எல்லாவற்றையும் மறந்துவிட்டு இந்த புதிய சூழலுக்குள் சத்யா மிக வேகமாக தன்னை மாற்றிக் கொண்டாள். பாபுவைத் தண்டிப்பது மட்டுமல்ல, சத்யாவை பாதுகாப்பதும் இப்பொழுது தனது கடமையென்பதை நன்றாகவே புரிந்து கொண்டிருந்த ஆனந்தி அவளுக்கு எல்லா விசயங்களையும் சொல்லிக் கொடுத்தாள். சத்யாவிற்கு அவள் சொல்லிக் கொடுக்கும் எல்லாமே புதிதாய் இருந்தது. எதற்காக இதையெல்லாம் தான் தெரிந்து கொள்ள வேண்டும்? தன் மீது ப்ரியமிருந்தால் மட்டுந்தான் ஒருவர் தன்னைத் தொட முடியும். அதற்காக ஏன் வருத்தப்பட வேண்டும்? சத்யா என்கிற பெயரோடு பாப்பு என இன்னொரு செல்லப்பெயரும் சத்யாவிற்கு சேர்ந்திருந்தது. ஆனந்தி அவளை பாப்பு என்றுதான் கூப்பிட்டாள்.

“பாப்பு உன்னத் தவிர உன் உடம்ப வேற யாரும் தொடக்கூடாது. அப்பிடி யாராவது தொட்டா நீ என்ன செய்யனும்?”

“சத்தம் போட்டுக் கத்தனும்.”

சத்யா சிரிப்போடும் சோர்வோடும் சொல்லுவாள்.

“ஏன் ஆண்ட்டி இதையெல்லாம் சொல்லிக் குடுக்கறீங்க?”

“இப்பிடி ஒரு குழந்த கிட்ட செய்றது எல்லாம் தப்பும்மா… யாரும் அத செய்யக் கூடாது…”

நீங்க பொய் சொல்றீங்க, இதெல்லாம் விளையாட்டுன்னுதான் பாபு அங்கிள்
சொல்லி இருக்காரு…”

பாபு என்ன சொல்லி குழந்தைகளை தன் பக்கமாய் வசீகரித்துக் கொள்கிறான்
என்பது புரிந்தது. எல்லாவற்றையும் விளையாட்டென சொல்லும் போது குழந்தைகள் வன்முறையின் வீர்யம் தெரியாமல் வீழ்ந்துவிடுகிறார்கள். பாபுவைப் போல் சாந்தமான முகமும் விளையாட்டுக் குணமும் கொண்ட ஒருவனிடம் குழந்தைகள் ஏமாறாமல் இருந்தால் தான் ஆச்சர்யம்.

”அதெல்லாம் விளையாட்டில்லடா… ஆண்ட்டி உன்னோட விளையாடும் போது உன்ன டச் பன்றனா?”

சத்யா இல்லையெனத் தலையாட்டினாள்.

“அந்த மாதிரி விளையாண்டா தான் விளையாட்டு. டச் பண்ணினா தப்பு. சரியா?”

சத்யாவும் சரியெனத் தலையாட்டினாள்.

“அப்போ பாபு அங்கிள் செஞ்சது எல்லாம் தப்பா? அவரு எங்க போனாரு? ஏன் நம்மள வந்து பாக்கறதில்ல?”

இந்த கேள்விகளுக்கு மட்டும் ஆனந்தியால் அத்தனை சாதாரணமாக பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை. முடிந்தவரை வேறு ஏதாவது விசயங்களைச் சொல்லித்தான் சத்யாவை திசை திருப்ப வேண்டியிருக்கும்.

“அங்கிள் ஊருக்குப் போயிருக்காரும்மா… வந்துடுவாரு… நீ ஐபாட் ல ஒரு படம் வரஞ்சியே அத முடிச்சிட்டியா?”

சத்யா இல்லையெனத் தலையாட்டினாள். ஆனந்தி தன் ஐபாடை எடுத்து அவளுக்குக் கொடுத்துவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறிப் போனாள். ஆனந்தியையும் ஜோபியையும் தவிர்த்து பாபுவைக் குறித்தான ரகசியம் வேறு யாருக்கும் தெரியாது. கூடிய விரைவில் அவனை எல்லோரது நினைவுகளில் இருந்தும் அழித்துவிட வேண்டுமென ஆனந்தி நினைத்துக் கொண்டாள். வீடியோ கேம்ஸ் விளையாடி நீண்ட நாட்களாகி இருந்ததோடு ஷின் லியை மறந்தும் போயிருந்ததால் ஆர்வத்துடன் தனது டிவிடி அலமாரியில் வீடியோ கேம்ஸ் டிவிடிக்களைத் தேடினாள்.

ஐபேடில் படம் வரைந்து கொண்டிருந்த சத்யாவுக்கு அது சலிப்பூட்ட ஐபேடை அப்படியே போட்டுவிட்டு ஆனந்தியின் அலமாரிகளில் விளையாடுவதற்கு வேறு என்ன இருக்கிறதெனத் தேடினாள். வீடியோ கேம்ஸையும் கொஞ்சம் பொம்மைகளையும் தவிர்த்து ஒரு குழந்தை விளையாடுவதற்கான எதுவும் அங்கில்லை. அலமாரியை முக்கால்வாசிக்கும் மேல் களைத்துவிட்டு தேடியபோது ஆனந்தியின் ஸ்க்ராப் புக் மட்டும் கிடைத்தது. வித்தியாசமான படங்கள், உடன் ஆனந்தியின் கோணல் மானலான கையெழுத்துக்கள். சத்யாவிற்கு அதைப் பார்க்க உற்சாகமாக இருக்க இதுமாதிரி ஒரு நோட் தனக்கும் வேணும் எனக் கேட்பதற்காக ஆனந்தியைத் தேடி ஹாலுக்கு ஓடினாள். ஆனந்தி ஷின் லியாகி எதிரிகளை அடித்துத் துவம்சம் செய்து

கொண்டிருந்தாள். சத்யா அவளுக்கு அருகில் உட்கார்ந்து கண்கள் விரிய ஷின் லியையும் ஆனந்தியையும் மாறி மாறி பார்க்க பார்க்க ஷின் லீ யிடம் வெளிப்பட்ட மூர்க்கம் ஆனந்தியின் முகத்திலும் வெளிப்பட்டது. ஆனந்தியின் இடையைப் பிடித்து அசைத்தாள். கேமை பாஸ் பண்ணாமலேயே "என்னடா பாப்பு?" ஆனந்தி கண்களைத் திருப்பிக் கேட்டாள்.

"எனக்கும் இது மாதிரி ஒரு நோட் வேணும்..." ஆனந்தியே மறந்து போன அந்த நோட்புக் சத்யாவின் கைகளுக்குள்ளிருந்தது. ஆனந்தி இப்பொழுது பாஸ் வைத்துவிட்டு அந்த ஸ்க்ராப் புக்கை கையில் வாங்கினாள்.

"இது நோட் இல்ல பாப்பு. ஸ்க்ராப் புக். எனக்கு புடிச்ச எல்லாத்தையும் இதுல வெட்டி ஒட்டுவேன். உனக்கு ஒரு நோட்புக் வாங்கித் தர்றேன் நீயும் உனக்குப் புடிச்ச எல்லாத்தையும் ஒட்டிக்கோ."

சத்யா அந்த ஸ்க்ராப் புக்கிலிருந்த படங்களை எல்லாம் காட்டி எதற்காக அதையெல்லாம் ஒட்டியிருக்கிறாள் எனக் கேட்டாள். அதை ஒட்டும் போது ஆனந்திக்குமே காரணம் தெரியாது. பாதிக்கும் மேல் போதையில் விளையாட்டுத் தனமாய் ஒட்டியது. காரணமில்லை என்றும் சொல்ல முடியவில்லை. அவளாகவே ஒரு கதையைச் சொல்லி சமாளித்தாள்.

"இது மாதிரி உங்க கிட்ட வேற புக் இருக்கா?"

ஆனந்தி சத்யாவைத் தூக்கிக் கொண்டு அறைக்குள் சென்றாள். அலமாரிக்கு மேலிருந்த பையிலிருந்த பழைய ஸ்க்ராப் புத்தகங்களையும் வெளியில் எடுத்தாள். தூசியும் அழுக்கும் ஏறிப்போயிருந்த புத்தகங்களை புரட்டும் போது ஆனந்திக்கும் சந்தோசமாக இருந்தது. ஒரு புத்தகத்தில் சில பக்கங்கள் மட்டும் மிச்சமிருக்க

"ஆண்ட்டி ஆண்ட்டி இதுல வேற எதையாச்சும் ஒட்டலாமா?"

"ஓ ... வா... நான் கொஞ்சம் நியூஸ் பேப்பர் கட்டிங்ஸ் வெட்டி வெச்சிருக்கேன். ஒட்டலாம்."

இருவரும் ஸ்க்ராப் புத்தகங்களோடு ஹாலுக்கு வந்தனர். ஆனந்தி அட்டைப் பெட்டிக்குள் சேமித்து வைத்திருந்த நியூஸ் பேப்பர் கட்டிங்ஸ் அவ்வளவையும் வெளியே எடுத்துப் போட்டாள். சத்யா வெறுமனே படத்தை மட்டும் பார்க்க, ஆனந்தி சுவாரஸ்மான செய்திகளை தனியாக ஒதுக்கினாள்.

(ஸ்க்ராப்பில் ஒட்டப்பட்ட சில சுவாரஸ்யமான செய்திகள்.)

**1.**



# மதுரையில் 'பிளையிங் கிஸ்' கொடுத்து பிரசாரம் துவக்கினார் நடிகை

மதுரை, மார்ச் 26–

மதுரையில், தி.மு.க., பிரசாரத்தில் நடிகை குஷ்பு.

**கற்பா – குஷ்பு டென்ஷன்**

(முதல் செய்தித் துண்டை ஒட்டிக் கொண்டவள் அதற்குக் கீழ் இப்படி எழுதிக் கொண்டாள். ) "ஃப்ளையிங் கிஸ் கொடுத்து பிரச்சாரத்தை துவக்கிய நடிகை." ஒரு நடிகையின் பறக்கும் முத்தம் சர்வ நிச்சயமாய் சுவாரஸ்யமானதாய்த்தான் இருக்க முடியும். அதுவும் குஷ்பு. எனக்கே கூட குஷ்புவின் மீது மட்டற்ற காதலிருக்கிறது. ஒரே ஒருமுறையாவது ஆழமாக இதழ்களில் முத்தமிட்டு காதலோடு கொஞ்ச நேரம் அணைத்துக் கொண்டால் போதும். அப்படி இருக்கையில் ஆண்கள் பாவம். அவர்களின் காமம் அதிகமும் பிம்பங்களின் மேலாகத்தான் இருக்கிறது. புகைப்படமோ, வீடியோவோ ஏதோவொரு வகையில் அவர்களுக்கு உடமையில்லாத ஒன்றுதான் அவர்களைத் தூண்டுவதாக இருக்கிறது.

**2.**


குழந்தையை ₹3,000க்கு விற்று செல்போன் வாங்கிய தாய்


REWARD
For
INFORMATION
Leading To The Recovery Of
SHEELA NA GIG Pictured Below
Information to :
Fethard Garda Station (052) 31202
Clonmel Garda Station (052) 22222
WANTED
Sheela na Gig
Stolen on Tuesday 9 th. Jan. 1990
Between 1 a.m and 4 a.m
From
KILTINAN CHURCH, FETHARD
Co. Tipperary

**Sheela Na-Gig**

**The Goddess Displaying Her Parts. This Celtic archetype of the Great Mother appeared in folk and church art by at least 1080 AD, but undoubtedly is of much earlier origin. She may be identical with the war goddess Morrigan , consort to the Dagda . One of her images is found near the ancient goddess shrine of Avebury, where she symbolized fertility; displaying her sexual parts was believed to ward off evil. Carvings of Sheela-na-Gigs may have accompanied the seasonal harvest custom of weaving corn dollies which dates from North European antiquity.**



# நெல்லையில் நமீதாவுக்கு கோயில்?

**திருநெல்வேலி, ஜூலை 12–**

நெல்லையில் நடிகை நமீதாவுக்கு கோயில் கட்டப் போவதாக ஒரு ரசிகர் அவருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் சினிமா நடிகைகளுக்கு ரசிகர்கள் ஆர்வமிகுதியில் கோயில் கட்டவுள்ளதாக அவ்வப்போது கூறி வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் ஈரோட்டில் நடிகை குஷ்புவுக்கு கோயில் கட்டப்பட்டதாக கூறப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. தற்போது தமிழ் சினிமா ரசிகர்களை 'கலங்கடித்து' வரும் நடிகை நமீதாவுக்கு நெல்லையில் கோயில் கட்டப்போவதாக ரசிகர் ஒருவர் அவருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதுகுறித்து நமீதா ஒரு இணையதளத்திற்கு அளித்துள்ள பேட்டியில்,' தமிழகத்தில் எனக்கு அதிகப்படியான ரசிகர்கள் உள்ளனர். அவர்கள் எனக்கு நிச்சயம் அங்கு கோயில் கட்டினாலும் 'ஆச்சர்யப்படுவதற்கில்லை' என பெருமிதத்தோடு தெரிவித்தார். நெல்லை நமீதா ரசிகர் மன்ற நிர்வாகிகள் கூறுகையில், 'நமீதாவுக்கு கோயில் கட்டவுள்ளதாக கூறப்படுவது ரசிகரின் தனிப்பட்ட விஷயம். அதில் ரசிகர் மன்றத்திற்கு எவ்வகையிலும் பங்கு கிடையாது' என்றார்.



நமீதா





# பெண்ணிடம் மதபோதகர் உல்லாசம்

## திருமணம் செய்ய மறுத்ததால் கைது

கும்மிடிப்பூண்டி, நவ. 27–

இளம்பெண்ணிடம் ஆசை வார்த்தை கூறி, பலமுறை உல்லாசமாக இருந்த மதபோதகர், அந்த பெண்ணை திருமணம் செய்ய மறுத்ததால், அவரை போலீசார் கைது செய்தனர்.

கவரைப்பேட்டை அருகே, ஏ.என்.குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் முத்து மகன் பிரபுதாஸ், 28; கிறிஸ்தவ சபையில் மதபோதகர்.

அதே பகுதியைச் சேர்ந்தவர் அருள் மகள் தமிழ்ச்செல்வி, 22; தனியார் மருத்துவமனை செவிலியர். இருவரும், இரண்டு ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.

பிரபுதாஸ்

இடைப்பட்ட காலத்தில், தமிழ்ச்செல்வியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி, அவரிடம் பல முறை பிரபுதாஸ் உல்லாசமாக இருந்துள்ளார். தமிழ்ச்செல்வி கர்ப்பம் தரிக்காமல் இருக்க, கருத்தடை மாத்திரை கொடுத்தும், இரு முறை கர்ப்ப பரிசோதனையும் செய்துள்ளார்.

இந்நிலையில், தற்போது பிரபுதாசுக்கு அவரது குடும்பத்தார், வேறு பெண்ணுடன் திருமண ஏற்பாடுகள் செய்தனர். தன்னை திருமணம் செய்ய மறுத்த அவரை, தமிழ்ச்செல்வி தட்டி கேட்டார். ஆனால், அவரை திருமணம் செய்ய பிரபுதாஸ் மறுத்து விட்டார்.

இதையடுத்து, தமிழ்ச்செல்வி அளித்த புகாரையடுத்து, கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் போலீசார், வழக்கு பதிந்து, பிரபுதாசை கைது செய்தனர்.



# மணமகள் ஓட்டம்; முகூர்த்த மேடையில் வேறு ஜோடி

## ஏமாந்து போன மாப்பிள்ளை போலீசில் புகார்

செய்தித் துண்டுகள் புத்தகத்தின் பக்கங்களை முழுமையாக ஆக்ரமித்துவிட, இருவரும் ஒட்டப்பட்ட காகிதங்கள் காய்வதற்காக அதனை காற்றில் வைத்தார்கள். ஒவ்வொரு செய்திகளுக்குள்ளும் ஒளிந்து கிடக்கும் கதைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு படமாக எடுக்கலாம் போலிருந்தது. குவிக் பிக்ஸ் கையில் கசிந்திருக்க, அதைத் துணி கொண்டு துடைத்துக் கொண்டவள் சத்யாவோடு மீண்டும் வீடியோ கேம் விளையாடச் சென்றுவிட்டாள்.

# வதை 2

ஆனந்தி வீட்டிற்கு வரும்போது முடிந்தவரை ஜோபி அங்கிருந்து வெளியேறியிருக்கவே விரும்பினான். அவளைத் தனது இருப்பு எந்தவிதத்திலும் தொந்தரவு செய்யப் போவதில்லை. பாபுவின் கைகளிலிருந்து காயங்கள் முழுமையாக ஆறியிருக் பாபுவின் கைகளிலிருந்து காயங்கள் முழுமையாக ஆறியிருக்காததால் ஆனந்தி புதிய முயற்சிகள் எதையும் அவனிடம் செய்து பார்த்திருக்கவில்லை. கவனமாக அவன் காயத்திற்காக மருந்துகளைத் தடவுவதும் அவனுக்கான உணவைத் தயாரித்துக் கொடுப்பதையும் தவறாமல் செய்து வந்தாள். ஜோபி பாபுவை பற்றி விசாரிப்பதைக் கூடத் தவிர்த்துவிட்டான். அந்த அறைக்கான சாவியை அவள் தன்னோடே வைத்துக் கொண்டிருந்தாள். அவன் கையிலிருந்த காயத்திலிருந்து உறைந்த குருதியின் நாற்றம் வராமலிருக்க தினமும் இரவு ஒரு முறை தவறாமல் சுத்தப்படுத்தினாள். முதல் நாள் எந்தவித எதிர்ப்புமில்லாமல் சாப்பிட்டதைப் போல் பாபுவால் அடுத்தடுத்த நாட்கள் சாப்பிட முடியவில்லை. கால்கள் கட்டப்பட்டு ஒரே இடத்திலிருந்ததால் முதுகும், முழங்கால்களும் வலியில் பிடித்து இழுத்துக் கொண்டன. இடைக்குக் கீழ் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்ச்சிகள் குறைந்து கொண்டு வருவதை உணர்ந்தான்.

"ஒரே இடத்துல என்னால உக்கார முடியல. கொஞ்சம் கட்ட அவிழ்த்து விடறியா? ப்ளீஸ்...."

சாப்பிடுவதற்கு முன்னால் கேட்டான். அவளுக்கும் அவனைப் பார்க்க பாவமாகத்தான் இருக்கிறது. ஆனால் காயம்பட்டிருக்கும் அவனுக்குள்ளிருக்கும் அசாத்தியமான

வன்மத்தை செயல் படுத்திப் பார்ப்பதற்கான வாய்ப்பளித்துவிடக் கூடாதென்பதால் கவனமாக அதைத் தவிர்த்தாள். அவன் சாப்பிட்டு முடித்தபின் திருட்டுத் தனமாக வாங்கி வந்திருந்த மயக்க மருந்தைக் கொண்டு ஊசி போட்டவள் அவன் மயங்கிவிட்டான் என்பது உறுதியாகத் தெரிந்தபின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு நாற்காலியிலிருந்து இறக்கினாள். சரியான உணவில்லாமல் மெலிந்து போயிருந்துமே கூட அவனை தனியானவளாய்த் தூக்க முடிந்திருக்கவில்லை. ஜோபியை உதவிக்கு அழைத்தபோது ஒரு வாரத்திற்குப்பின் பாபு இப்பொழுது என்ன நிலையிலிருப்பானோ என்கிற பரிதாப உணர்வோடு அவன் உள்ளே வந்தான். இருவருமாகச் சேர்ந்து அவனை பாபுவின் கட்டிலில் கிடத்தினர். மிகச் சுத்தமான அந்தப் படுக்கையில் நிர்வாணமான அவன் உடலை ஈரத்துணியால் துடைத்துவிட்டவள் முன்பைப் போலவே கால்களைக் கட்டிவிட்டாள். கைகளை மணிக்கட்டிற்குக் கீழாக கயிறுகள் கொண்டு கட்டியிருந்தாள். எந்த வெறுப்பும் கோவமும் இல்லாமல் இயல்பாக எப்படி இவ்வளவையும் செய்ய முடிகிறதென ஜோபிக்கு ஆச்சர்யமாக இருந்தது. கொஞ்சமும் முகம் சுளிக் காமல் அவன் மல ஜலங்களையும் சுத்தம் செய்தாள். சுத்தமாக இருந்தபோதும் அந்த அறையில் முரட்டுத்தனமான கவுச்சி நிறைந்திருந்தது. ஒரேயொரு மஞ்சள் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருக்க, ஆனந்தி பாபுவோடு சேர்த்து தன்னையும் தண்டித்துக் கொள்கிறாளோ? என்று யோசித்தான்.

பாபுவுக்கு லேசாக மயக்கம் தெளிவது போலிருக்க ஆனந்தி தனது மொபைலோடு ஹியர்ஃபோனை இணைத்து அதை அவன் காதுகளில் செருகினாள். பறவைகள் கூட்டமாய்க் கூச்சல் போடும் கரைச்சல். இன்னதென்று இல்லாமல் ஏராளமான பறவைகளின் ஒலி. பறப்பதும் கத்துவதுமாய் லட்சம் பறவைகளின் ஒலி. காதுகளுக்குள்

நுழைந்த சத்தம் நரம்புகளின் வழியாய் உடல் முழுக்க இறங்கியது. மயக்கம் முழுமையாய்த் தெளிவதற்கு முன்பாகவே உடல் அந்த அதிர்வின் குரூரம் தாங்கமுடியாமல் துடித்தது. ஜோபி ஆனந்தியிடம் சொல்லிக்கொள்ளாமலேயே அங்கிருந்து போய்விட்டான். வதைபடுவதை அருகில் நின்று பார்க்கும் திராணி அவனுக்குள் இல்லை. பல காலமாய் வெவ்வேறு விதங்களில் வதைபடுதலை எதிர்கொண்ட ஆனந்தி இன்னும் செய்து பார்க்க ஏராளமாக இருக்கிறதென்கிற நிதானத்துடன் இருந்தாள். சில நிமிடங்களுக்குப் பின் அந்த ஒலியை நிறுத்தியவள் மொபைலை எடுத்துக் கொண்டு அங்கு ஒளிர்ந்து கொண்டிருந்த மஞ்சள் விளக்கை அணைத்துவிட்டு அறையை முழுக்க இருளாக வைத்தாள். பாபு கண் விழித்தபோது அவன் கண்களுக்குள் பறவைகளின் சலசலப்பையே உணர்ந்தான். இத்தனை இருளாய் ஒருபோதும் உணர்ந்ததில்லை. வலிக்குப் பிறகு எதிர்கொண்ட இந்த இருள் அவன் இரைப்பைக்குள்ளிருந்த எல்லாவற்றையும் துப்பத் துடித்தது. படுத்திருந்த நிலையில் முடியாமல் தவித்தான். கையிலிருந்த மொபைலில் டார்ச்சை ஆன் செய்தவள் பாபுவின் மூத்திர கோப்பையைப் பார்த்தபோது இந்த முறை அச்சத்தில் மிக அதிகமாகவே சிறுநீர் கழித்திருந்தான்.

பாபுவிற்கு நிதானம் திரும்பிய போது முழுக்க இருள் நிரம்பிய அந்த அறை எங்கு இருக்கிறதெனப் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்னும் இரைப்பையிலிருந்து எழுந்த ஓங்கரிப்பு அடங்காமல் குமட்ட வைத்தது. நான்கைந்து நாட்கள் உட்கார்ந்திருந்ததில் இருந்த முதுகுவலி விலகி ஆறுதலை உணரச் செய்தாலும் தலைக்குள் இன்னும் அதிர்வலைகள் ஓய்ந்தபாடில்லை. நாசியில் பறவைகளின் எச்சங்களை உணர்ந்தான். நாற்றம் வேகமாய்க் குடல்களின் வழி இறங்கி உடல் முழுக்க நிரம்பியது. இருளுக்குள் கோடுகளாய்த் தெரிந்த ஒரு உருவம் அவன் படுக்கையின்

அருகில் வந்து தலையை வருடிக் கொடுத்தது. பாபு அந்த இளைப்பாறுதலில் இருளைப் பார்க்க முடியாமல் மெதுவாக கண்களை மூடிக்கொண்டான். அந்த உருவத்தின் மேல் மிச்சமிருந்த தனக்கு விருப்பமான சிறுமியின் வாசனை இப்பொழுது பறவை எச்சங்களின் நாற்றத்தை மீறி அவனுக்குள் ஊர்ந்து கிளர்த்தியது. அனந்தி அவன் உடல் முழுக்க வருடிக் கொடுத்தாள். தனக்கு அருகில் சத்யாவின் இருப்பையே உணர்ந்த பாபுவின் இடைக்கு மேலாக இருந்த டவல் மெதுவாக உயர்ந்தது. அத்தனை இருளிலும் உயர்ந்து வந்த டவலின் இயக்கத்தைக் கவனித்த ஆனந்தி டவலை விலக்கினாள். நோய்மையை உட்கொண்ட வெக்கையோடு விழித்திருந்த அந்த சிறுவிலங்கை மெதுவாக வருடிக்கொடுத்தவள் அவன் அதை முழுமையாய் அனுபவிக்க அனுமதித்தாள். தன்னுடலில் கசிந்த நாற்றத்தையும் வலியையும் மீறி பாபு அந்த நொடியின் பரவசத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஆனந்தி தனது இன்னொரு கையால் ஹியர் ஃபோனை மீண்டும் அவன் காதுகளுக்குள் செருகி பாதியில் நிறுத்தியிருந்த ஒலியை மீண்டும் தொடர விட்டாள். உச்சத்திற்கு வெகு அருகில் சென்றிருந்த பாபுவின் உடல் சடாரென அந்த அலறல்களை எதிர்கொள்ள முடியாமல் துடித்தது. படுக்கையிலிருந்து எழுந்து கொண்ட ஆனந்தி பிரகாசமான வெளிச்சம் பரவும்படி விளக்கைப் போட்டாள். வினோதமான இந்த வேதனைகளை எதிர்கொள்ள முடியாமல் துடித்தான். அவ்வளவு நேரமும் குமட்டலாய் இருந்தது பீறிட்டு வாந்தியெடுத்தான். மொபைலை துண்டித்து எடுத்துக் கொண்டவள் முழுமையாக அவன் வயிற்றிலிருக்கும் அவ்வளவும் வெளியேறும் வரை காத்திருந்தாள். பாபு மீண்டும் மயங்கிப் போக, பழகிப் போன ஒன்றை செய்கிறவளாய் ஆனந்தி அவனுடலை சுத்தப்படுத்திவிட்டு அடர்த்தியான நீல நிற விளக்கைப்போட்டு விட்டாள். அந்த அறைக்குள்ளிருந்து

வெளியேறும் ஒவ்வொரு நாளும் தனக்குள்ளும் வினோதமான ஒளிகளும் நாற்றமும் கலந்து கொண்டிருப்பது போன்ற அருவருப்பு அவளுக்குள். ஒவ்வொரு முறையும் கொஞ்சம் அதிகமாகவே குடிக்க வேண்டியிருந்தது.

# கம்போசிங்

”யாருக்கும் சொல்லாத கதை" படத்தின் மொத்த முன் வேலைத் திட்டங்களும் வேகமாக நடந்து கொண்டிருந்தன. பாடல்கள் வைக்க தனிப்பட்ட முறையில் அவள் விரும்பியிருக்காத போதும், வியாபாரம் அதைச் செய்யச் சொன்னது. எதை அடிப்படையாகக் கொண்டு பாடல் வைக்கலாம்? ஒரு பெண்ணின் சிதைவை? காமத்தை? வாழ்க்கை எதிர்பாராமல் தரும் வினோத பரிசுகளை? யோசிக்க சலிப்பாக இருந்தாலும் இதிலிருந்து தப்பிக்க முடியாது. இசையமைப்பாளரை புதிதாக அறிமுகம் செய்கிறாள். மறைந்த இசைமேதை ஒருவரின் மகன். பாடல்களுக்கான சூழலைச் சொல்லி மூன்று பாடல்கள் வேண்டுமென்பதையும் பாடலாசிரியரை நீங்களே தேர்வு செய்துகொள்ளுங்கள் என்றும் முழு சுதந்திரம் கொடுத்தாள். கிழக்குக் கடற்கரைச் சாலையிலிருக்கும் ஒரு கெஸ்ட் ஹவுசில் கம்போசிங் துவங்கியது.

பெயருக்கு கம்போசிங் என்றாலும் பாடலாசிரியர் அதிகாலையிலிருந்து குடிப்பவராகவே இருந்தார். குடித்துவிட்டு நீச்சல் குளத்தில் மூழ்கிக் கிடப்பது, பின் எழுந்து சாப்பிடுவதும் பின் மீண்டும் குடிப்பதும் முற்பகல் வரையிலான வேலை. பிற்பகல் கொஞ்சம் உறங்கி எழுந்து கடற்கரையில் ஒரு நடை. பிறகு இரவானதும் நீச்சல் குளத்திற்குள் பாதி உடல் மூழ்க மீண்டும் மதுவருந் தியபடியே கொஞ்சம் பேச்சு . ஆனந்திக்கு இதையெல்லாம் பார்க்க சலிப்பாக இருந்ததால் அவள் பெரும்பாலும் தனது அறையை விட்டு வெளியில் வராமல் இருந்தாள். முதல் நாள் எந்த வேலையும்

நடந்திருக்கவில்லை. மூன்று பாடல்களுக்குமான நோட்ஸ்களை இசையமைப்பாளர் தயாராக வைத்திருந்தான். தனது உபகரணங்கள் அவ்வளவையும் கொண்டு வந்திருந்தவன் பாடலுக்கான சின்ன சின்ன சத்தங்களைக் கூட தனியாக எடுத்து வந்து அவளிடம் போட்டுக் காட்டினான். மாதிரியாக சில வரிகளை ராகத்தோடு சேரும் படி அவனே சொல்லியும் காட்டி னான். அவனிடமிருந்த ஆர்வம் கொஞ்சம் உற்சாகமளித்தாலும் எதிர்ப்பக்கத்தில் எந்தச் சலனமுமில்லாமல் இருந்த பாடலாசிரியரைப் பார்த்து எரிச்சலாகி இருந்தாள்.

இரண்டாவது நாள் காலையிலும் பாடலாசிரியர் மதுவருந்த வெளியே வந்தபோது ஆனந்தி நீச்சல் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தாள். ஒரு நொடி படப்பிடிப்பு நடக்கும் தளம் எதற்கும் வந்துவிட்டோமோ என யோசித்தபடியே அவளுக்கு அருகில் வந்து உட்கார்ந்தவரிடம்

"என்ன ஸார் இப்படி குடிச்சீங்கன்னா உடம்பு என்னாகும்? சீக்கிரமா கிளி செத்துடப் போகுது."

என கேலியாகச் சொன்னாள். முந்தின இரவு போதை விலகாத நிலையில் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவருக்கு ஏமாற்றமாகிப் போனது. சமாளித்துக் கொண்டவர்

“நீங்க ஒரு தடவ சாங்க்கான மூட் எக்ஸ்பிளைன் பண்ணினீங்கன்னா இப்பவே உக்காந்து எழுதலாம் மேடம்.''
"ஓ ... நல்லது. நான் இப்போ தண்ணிக்குள்ள இருக்கட்டுமா இல்ல மேல வந்து சொல்லவா?"

“உங்க இஷ்டம் மேடம்...'' என பாடலாசிரியர் அவள் ஏறிவரக் காத்திருக்கும் ஆர்வத்துடன் சொன்னார்.

அங்கிருந்த பணிப்பெண்ணிடம் இரண்டு பேருக்குமாக தேநீர் கொண்டு வரச் சொன்னாள். நீரிலிருந்து வெளியேறி வந்தவளை பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஜோபி தயாராக வைத்திருந்த பேடையும் காகிதங்களையும்

எடுத்து வந்து கொடுத்தான். பாடலாசிரியர் இவளை ஒரு பொருட்டாகவே நினைத்திருக்கவில்லை. இத்தனைக்கும் டிராக் ஷூட்டும் சின்னதொரு ப்ரேசியரும் மட்டுமே அணிந்திருந்தாள். இந்த உடலை நிறைய படங்களில் பார்த்திருக்கிறோமே என்கிற அசட்டை அவனிடம். இசையமைப்பாளர் கொடுத்திருந்த இசைக்கோர்வையை மூன்று நான்கு முறை ஓடவிட்டார்கள்.

கைகள் அவனுக்கு லேசாக நடுங்கியபடி இருக்க, பேனாவை ஆட்டியபடியே கண்களை மூடிக் கேட்டுக்கொண்டான். மெதுவாக வரிகளை எடுத்துக் கொடுக்கத் துவங்கினான். ஆனந்திக்கு ஆச்சர்யமாக இருந்தது. குடி எந்தவிதத்திலும் அவனுக்குள்ளிருந்த கலைஞனை சிதைத்திருக்கவில்லை. ஒரு மணி நேரத்திற்குள் ஒரு பாடலுக்கான மொத்த வரிகளையும் எழுதிக் கொடுத்துவிட்டான். பாடல் வரிகளை ஒருமுறை அசை போட்டுப் பார்த்தாள். தன் வாழ்வின் முக்கி கணங்களை அழுத்தமாக நினைவுபடுத்தின. எப்படி ஒரு கவிஞனால் இன்னொருவரின் உணர்வுகளுக்குள் இத்தனை ஆழமாக பயணித்துவிட முடிகிறது?

இசையமைப்பாளருக்கும் திருப்தி. பிற்பகலுக்குப் பிறகு ஆனந்தியே இன்னொரு ரெமி மார்ட்டின் வாங்கி வந்து கொடுக்கும்படி சொன்னாள். ஜோபி அதுவரை போட்டு வைத்திருந்த ஷெட்யூலைக் கொண்டுவந்து அவளிடம் பேசினான். கதாநாயகி இடையில் இரண்டு நாட்கள் வேறு ஒரு படத்திற்கு முன்பே தேதி கொடுத்திருக்கிறாள். எப்படியாவது சமாளிக்க வேண்டும். அந்தத் தேதிகளில் தான் முக்கியமான காட்சிகளைத் திட்டமிட்டிருந்தனர். ஆனந்தி இன்னும் பாடல் தந்த அழுத்தத்திலிருந்து வெளிவந்திருக்கவில்லை. அதனால் கால்ஷீட் பிரச்சனையைப் பொருட்படுத்தாமல் " அப்புறம் பாத்துக்கலாம். நீ ஏன் வேல வேலன்னு சீரியஸாவே இருக்க. கொஞ்ச நேரம் நம்ம கவிஞருக்கு கம்பெனி குடு. நான் பாபு

வீடு வரைக்கும் போயிட்டு காலைல வர்றேன்.''

"இன்னைக்கும் போகணுமா?"

"அப்பறம் அவனுக்கு சாப்பாடு யார் குடுப்பா? ஒரு நாளைக்க ஒரு வேளதான் சாப்பாடு குடுக்கறோம். அதையும் நிறுத்திட்டம் செத்துடுவான்.''

கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினாள். அவனும் வாசல் வரை வந்தான். அவளுக்கு சந்தோசமாக இருந்தது. ஒரு நிழலைப் போல் தன்னை இத்தனை நெருக்கமாக ஒருவன் தொடர்கிறானென்பதில் அலாதியானதொரு பாதுகாப்பு உணர்வு தெரிந்தது. இப்பொழுது அவனையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போனால் ரொம்பவே சந்தோசப்படுவான். ஆனால் இங்கு வேலைகள் நின்றுவிடும். வண்டியை ஸ்டார்ட் செய்தபின் ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அதற்காகவே காத்திருந்தவன் போல் சந்தோசமாக அவளுக்கு கையசைத்து விடை கொடுத்தான்.

வழியெங்கும் படத்தின் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. தனது தயாரிப்பு நிறுவனத்திற்கு **'wildcats'** எனப் பெயரிட்டிருந்தாள். இயக்கம் ஆனந்தி என்பதை முதன் முறையாகப் பார்த்த நிறைவு.

ஒரு பக்கம் கதாநாயகியின் எரியும் பாத் டப்பும் இன்னொரு பக்கம் சிறைச்சாலைக்குள்ளிருக்கும் மங்கலான மூன்று உருவங்களும் நடுவில் எதையும் பொருட்படுத்தாமல் அமர்ந்திருக்கும் துறவியைப் போல் சத்யாவின் முகமும் ஒரே போஸ்டரில் வெவ்வேறு விதமான உணர்வுகளைப் பார்ப்பவர்களுக்குத் தந்தன. மற்ற எல்லோரையும் விட சத்யாவின் உருவத்தைப் பெரிதாகத் தெரியும்படி போஸ்டரை ஆனந்தி டிசைன் செய்யச் சொல்லி, இருந்தாள். மொத்த படத்தையும் பார்த்துவிட்ட நிறைவு அவளுக்குள். பாபு வீட்டிற்கு போவதற்கு முன்னால் சத்யாவைப் பார்த்துவிட்டுப் போக வேண்டும். இங்கு வந்து இந்த சில நாட்களில் அவள்

வேகமாக வளர்ந்திருக்கிறாள். எல்லாவற்றைக் குறித்தும் அவளிடம் கேள்விகளிருக்கின்றன. அவள் மீது இவளுக்கிருக்கும் அக்கறையைப் போலவே இவள் மீது அவளுக்கும் இருந்தது. யாருக்கும் சொல்லாத கதை திரைக்கதையை மொத்தமாக சொல்லச் சொல்லிக் கேட்டு அவள் தனக்குப் பிடித்தது பிடிக்காதது எல்லாவற்றையும் சொன்னாள். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் தான் ஆனந்தியின் வயதிற்கு இணையானவள் என்கிற கர்வமும் பெருமிதமும் அவளிடமிருக்கும். குழந்தைத்தனமான அவளின் இந்த விளையாட்டுக்கள் உண்மையில் அவளை முன்னைவிடவும் கொஞ்சம் முதிர்ச்சியானவளாகத்தான் மாற்றியிருந்தன.

முப்பத்தி மூன்று நாட்களில் மொத்தப் படத்தையும் முடிப்பதற் கான படப்பிடிப்பு ஷெட்யூல் போட்டிருந்தார்கள். முழுக்க சென்னையைச் சுற்றித்தான் படப்பிடிப்புத்தளங்கள். ஆனந்திக்கு பார்க்கிற எல்லோருமே தன் படத்தின் கதாப்பாத்திரங்களைப் போல் தெரிந்தனர். ஜோபியை முன்பொருமுறை கேலி செய்ததை நினைத்து இப்பொழுது சிரித்துக் கொண்டாள். ஒரு படத்தை திறமையாக எடுப்பதோடு விற்கவும் தெரிந்தவனாய் ஜோபி இருந்ததால் புரமோஷனுக்கு செய்யும் ஒவ்வொரு வேலையையும் ஃபைனான்ஷியர்களுக்கு அனுப்பி வைத்தான். அவர்களை தயாரிப்பாளர்கள் என்கிற அளவிற்கு உணரவைத்ததில் அவனுக்கு தனித்துவமான பங்குகள் இருக்கின்றன. பாபு இல்லாத வெறுமையை எல்லா இடங்களில் இருந்தும் பூர்த்தி செய்து கொண்டிருந்த ஜோபிக்கு தயாரிப்பு வேலைகள் குறித்தும் தெளிவு இருந்ததால் செலவுக் கணக்குகளைக் குறித்து ஆனந்தி பெரிதாக கவலைப்பட்டிருக்கவில்லை. வெறுமனே தன் படத்தில் வேலை செய்வதற்காக மட்டுமே வந்த அக்கறையல்ல அது. அவன் அருகாமையில் ஒவ்வொரு முறையும் காட்டுப் பூக்களின் நறுமணத்தை உணர்கிறாள். காமம் இவ்வளவு

பழகிப்போன பின்னும்கூட தன்னுடலை அவனால் பூக்க வைக்க முடிந்தது. அவனிருப்பில் தனக்குள் விரியும் வினோத ஸ்பரிசத்தை யாரிடமும் காட்டிக்கொள்ளாமல் சிரமங்கொண்டு அடக்கிக் கொள்கிறாள். எல்லாவற்றையும் விட அவனிடம் காட்டிக் கொள்ளாமல் இருப்பதுதான் சிரமம். பாபுவின் இருப்பைத் தவிர்த்து வாழ்வின் பூர்ணமான ஒரு கணத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற உற்சாகம் இப்பொழுது அவளிடம் இருக்கிறது.

# வதை 3

**Until the last moment**

ஓய்ந்த கடல் அலைகள் மெதுவாக உயிர்ப்பெற்று கசிவதைப் போல் துவங்கி நிறைகிறது பியானோவின் ஒலி. அந்த அறைக்குள் வெளிச்சம் விசுவாசமிக்க ஜீவனாய் தொந்தரவு செய்யாத அலைவரிசையில் நிரம்பிக் கொண்டிருக்க மயக்கத்திலிருக்கும் பாபு மெதுவாக விழித்துப் பார்க்கிறான். அது எல்லாத் துயரங்களிலிருந்தும் அவனை மீட்டெடுக்கும் இசை. யானியின் விரல்களுக்கு மட்டுமே அந்த மந்திரம் இருக்கிறது. ரிதம்ஸ் இப்பொழுது பியானோவோடு இணைந்து வசீகரமான காற்றாய் முன்னை விடவும் உயிர்ப்பான ஒரு தருணத்தை அங்கு உருவாக்க கண் திறந்து பார்க்கிறான். அந்த அறையின் ஒரு மூலையில் ஆனந்தி மிருதுவானவளாய் தூய்மையானவளாய் நின்று கொண்டிருக்கிறாள். தன் காதலி லிண்டாவுக்காக யானி உருவாக்கிய **"reflections o fpassion"** ஆல்பத்தைப் போல் தனக்காக இந்த நாட்களை பரிசளிக்கிறாளா? அவள் மீதான எல்லா கோவங்களையும் மீறி நன்றி சொல்லும் விதமாய் சிரிக்க முயன்று தோற்றுப்போனான். நரம்புகளுக்குள் இசை முடிச்சுகள் கிளை தப்பி ஊறிக் கொண்டிருந்தன. பொருட்படுத்த முடியாத வலிகளுக்கு அப்பால் இந்தக் கணம் விடுதலையை வரச் செய்தது. பாதியிலேயே அவள் அதை நிறுத்தியபோதுதான் இது இன்னொருவிதமான வதையோ என்கிற அச்சம் கொண்டான். தொடர்ந்து இருளும், மங்கலான ஒளியும் அவனை சிதைவுக்குள் ளாக்கியிருந்தது. எதிர்த்து

எதுவும் செய்யும் திராணியற்றுப் போனான். நேற்றைய தினம் வாயிலிருந்த கட்டைக்கூட அவிழ்த்துவிட்டிருந்தாள். ஆனால் பழக்க தோசத்தில் வாய் அதே நிலையிலேயே இருந்தது. இதழ்களைத் தாண்டி வர மறுத்த நாக்கை வெளிக்கொண்டுவர அவனும் முயற்சிக்கவில்லை.

இரண்டு நிமிடங்களுக்கு ஒருமுறை குமட்டல் எடுப்பதும், அதைத் துப்ப முடியாமல் தவிப்பதுமாய் இருந்தான். உருவங்கள் அச்சுறுத்தின. நீர், உணவு, காற்று, வெளிச்சம் எல்லாமும் அச்சுறுத்தியதோடு கொஞ்சம் ஆறுதல் படுத்திய இந்த இசை பாதியில் நின்று போனதில் உடல் முழுக்க நடுக்கம். தனது ஐபேடில் வீடியோவை ஆன் செய்து அவன் பார்க்கும்படி வைத்தாள். தலையைத் திருப்பிக் கொள்ள முடியாமல் அதைக் கண்டிப்பாக பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு. முதல் சில நொடி யானியைத்தான் அந்த வீடியோவில் பார்த்தான். அது எந்த இசைக்கோர்வை என்று நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. சடாரென அந்தக் காட்சி மாறி அக்ரோசமாக சண்டையிடும் விளையாட்டுக் காட்சி ஓடியது. தன்னை விடவும் வலிய ஒருவனைத் தூக்கி கிழே போட்டு அவன் உடலை கொடூரமாக வெட்டி எறிந்தாள். முகத்தில் தெறிக்கும் வேகத்தோடு எதிர்ப்பட்ட குருதியைப் பார்த்ததும் தனது கழுத்து துண்டிக்கப்பட்ட கலக்கத்தில் வேகமாக உடலை சிலுப்பினான். ஐபேட் கீழே விழுந்தது. ஆனந்தி நிதானமாக எடுத்து அடுத்த காட்சியை ஓடவிட்டு மீண்டும் முன்பைப் போல் பார்க்கும்படி வைத்தாள்.

பாபு நடித்த ஒரு உடலுறவுக் காட்சி. வெறுமனே ஒரு பெண்ணோடு அரைநிர்வாண நிலையில் புரண்டு உருளும் காட்சி. பின் அது மறைந்து இப்பொழுது இரண்டு வெள்ளைக்காரர்கள் ஒரு கறுப்பினப் பெண்ணுடன் உடலுறவு கொள்ளும் காட்சி நீண்டது. அருவருப்போடு அதைப் பார்க்க முடியாமல் "இது எடுத்துடு ஆனந்தி. உடம்புல பூச்சி ஊர்ற மாதிரி இருக்கு. தயவ செஞ்சு எடுத்துடு..." அவன் குரல்

யாருக்கும் கேட்காதபடி மங்கிப்போன சத்தத்தோடு கேட்டது. ஆனந்தி பாதியில் நிறுத்தியிருந்த **"until the lastmoment"** ஐ மீண்டும் ஒலிக்க விட்டாள். ஒருபுறம் அவனை ஆறுதல் படுத்தும் இசையும் இன்னொரு புறம் உடலை நசுக்கும் வக்ரமான காட்சியுமாய் சமாளிக்க முடியாமல் திணறினான். பாலுறவுக் காட்சி மாறி இப்பொழுது மிருகங்கள் புணர்கிற காட்சித் துண்டுகள் ஓடின. காதுகளின் வழியாய் ஆன்மாவை சாந்தப்படுத்தும் யானியின் இசைக்கோர்வை. இரண்டும் ஒரே மூளைக்குள் சென்று சேர முடியாமல் துடித்தான். கண்களை இறுக மூடிக்கொண்டான். ஆனந்தி வேகமாக வந்து ஐபேடை எடுத்துவிட்டு அவன் முகத்தில் அறைந்தாள். என்ன ஆனாலும் கண்களைத் திறப்பதில்லை என்கிற தீர்மானத்தோடு இறுக்கமாக மூடியிருந்தான். வலுக்கட்டாயமாக ஒரு கண்ணைத் திறந்து இமைகளுக்கு நடுவில் இரண்டு குச்சிகளை செருகி நிறுத்தினாள். குச்சிகளை எடுக்காமல் கண்களை மூடமுடியாத அளவிற்கு இறுக்கமாக இருக்க, வலியில் அலறினான். அந்த சின்ன இடைவெளியில் இன்னொரு கண்ணையும் திறந்து குச்சியை செருகினாள். மரணத்தைத் தானமாகக் கேட்கும் கருணையோடு அவன் மன்றாடினான்.

"இவ்ளோ சித்ரவத பன்றதுக்கு கொன்னுடேன் ஆனந்தி. இதையெல்லாம் தாங்க முடியல...."

அவன் நாக்குழறி அழுதான். உடல் நீர்மையற்று வறண்டு போயிருந்ததால் அவன் கண்கள் ஈரமாகியிருக்கவில்லை . அவள் தன் வேலை இன்னும் முடியவில்லை என்பது போல் மீண்டும் ஐபேடில் காட்சிகளை ஓடவிட்டு அவன் முன்னால் வைத்தாள். “வன்முறையை மீற வேண்டுமானால் அதைக் கையிலெடுக்க வேண்டுமென” முன்பு தான் நினைத்துக் கொண்டதை இப்பொழுது செயல்படுத்திக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. ஒலித்துக் கொண்டிருந்த இசைக்கோர்வை முடிந்து **"reflections of passion"** துவங்கியது. இது வெறும் இசையல்ல. ஒரு

கலைஞன் தன் காதலிக்காக சேமித்து வைத்து வெளிப்படுத்திய உணர்ச்சிக் குவியல்.

அதை ஏன் தன்னை வதைக்கும் இந்த கொடூர கணத்தில் இப்பொழுது ஒலிக்க விடுகிறாள்? தன் மீது கொண்டிருக்கும் நேசத்திற்கு அவள் தரும் அன்பளிப்பா இது? இந்த வதையும் கூட அவள் காட்டும் ஒருவித ப்ரியம் தானா? தண்டனைகளின் வழியாய் தன்னை மீட்டெடுக்கப் போகிறாளா? அல்லது அடையாளமற்றவனாய் ஆக்கப் போகிறாளா? பிரபஞ்சத்தின் பேரோசையாய் முதல் நோட் முடிந்து அடுத்த நோட் துவங்க கட்டப்பட்டிருந்த அவன் கை விரல்கள் தானாகவே பியானோவின் கருப்பு வெள்ளைக் கட்டைகளை கற்பனை செய்து கொண்டு அசைந்தன. எரிந்த அந்த விரல்களின் துயரம் மறந்து இடைச்செருகலாய் வரும் மவுத் ஆர்கன் இசையின் போது அதற்குத் தகுந்தாற்போல் தலையை ஆட்டினான். இடது வலதாய் குச்சிகள் செருகப்பட்ட கண்களுடன் அவன் தலை வீடியோவைப் பார்த்தபடி நகர்ந்து கொண்டிருந்தது. முன்பொருமுறை தற்கொலை செய்து கொள்ள நினைத்திருந்தவனை மீட்டெடுத்த அந்த இசை அவனது சப்த நாடிகளுக்குள்ளும் புகுந்து மீண்டது. இதற்கு முன்பெல்லாம் ஆன்மாவை இலகுவாக்கிய அதே இசை இன்று வாதையை முன்னை விடவும் முழுமையாய் உணரச் செய்தது.

வாழ்வின் அவமானகரமான எல்லா செயல்களையும் அந்த மவுத் ஆர்கன் இசை இன்னொரு முறை கீறி வெளியேற்ற அந்த இசையைக் கவனிப்பதைத் தவிர்த்து வீடியோவின் பக்கம் கவனத்தைத் திருப்பினான். கொடூரமாக உடல்களை வெட்டிக் கொலை செய்யும் காட்சிகள். வெவ்வேறு படங்களிலிருந்து துண்டு துண்டாக எடுத்து தொகுக்கப்பட்டவை. வன்மத்தை இந்த இசையின் பின்னணியில் பார்த்த போது வெட்டுவதும் வெட்டப்படுவதும் தாமே தான் என்கிற பிரம்மை அவனுக்குள்.

எல்லாவற்றையும் வெறுத்தான். எல்லாம் அருவருப்பூட்டியது. திறந்திருந்த கண்களின் வழி நீண்ட நாட்களுக்குப் பிறகு மெதுவாக கண்ணீர்த் துளிகள் கசிந்து வந்தன. வீடியோ இன்னும் முடியவில்லை. விட்ட இடத்திற்கு வந்து மீண்டும் உடலுறவுக் காட்சிகள். பிறகு உடலுறவுக் காட்சிகளும் உடலைத் துண்டாக்கும் வன்முறைக் காட்சிகளும் மாறி மாறி வந்தன.

இத்தனை நாட்களும் இந்த அறையில் அவன் வதை செய்யப்பட்டதை ஆனந்தி எடுத்த காட்சித் துண்டுகள் அதன் தொடர்ச்சியாய் ஓடத் துவங்க, பாபுவின் கண்களிலிருந்து இடைவிடாது கண்ணீர் வழிந்தபடியிருந்தது. ஒரு பெரிய கண்ணாடியை எடுத்து அவன் முகம் பார்க்கும் படி அவனுக்கு எதிரில் பிடித்தாள். கண்ணாடியில் தன் முகம் கோரமாக பிரதிபலிக்க அச்சத்தோடு அலற முயன்றான். கொஞ்சமும் சத்தமெழுப்ப முடியாமல் முகம் இருண்டது. தலையை வேகமாக ஆட்டினான். ஒரு கண்ணிலிருந்த குச்சி மட்டும் கீழே விழுந்துவிட அந்த கண் வலியிலிருந்து மீண்டு ஆறுதல் கொண்டது.

பாபு வேதனையின் உச்சத்தில் ஐபேடின் மேலேயே மயங்கிப் போனான். ஒரு கண் திறந்திருக்க அவன் மயங்கிக்

கிடந்த நிலை பரிதாபகரமாய் இருந்தது. கண்ணாடியை ஓரமாக வைத்தவள், ஐபேடை அவனிடமிருந்து எடுத்தாள். இசை நிறுத்தப்பட்ட அந்த அறை வன்மத்தின் ஒட்டுமொத்த எச்சிலையும் துப்பிவிட்டு அமைதியாகி இருந்தது. அவனை ஒழுங்கு செய்து படுக்க வைத்தபோது இந்த முறை அவன் கொஞ்சமும் சிறுநீர் கழித்திருக்கவில்லை. பாபு வயிறு ஒட்டிப்போய் விடுதலையை யாசிக்கும் பரிதாபகரமான விலங்கை ஒத்திருந்தான்.

# ஒன்று கூடல்

முக்கிய நடிகர்களுக்கான ஒத்திகைக்கு திட்டமிட்டிருந்தார்கள். கதாநாயகியும் கதாநாயகனும் ஆர்வத்தோடு வர சம்மதித்து இருந்ததால் அதற்கு ஒரு இடம் தேவைப்பட்டது. அவளுக்கு பழக்கமான ஒரு நடிகை வளசரவாக்கத்திலிருக்கும் தனது பிரம்மாண்டமான பங்களாவைத் தர சம்மதித்து இருந்தாள். திருமணத்திற்குப் பின் மும்பையில் செட்டிலாகிவிட்ட அந்த நடிகைக்கு ஆனந்தியின் முயற்சி கேலிக்குரிய ஒன்றல்ல, தன் இருப்பிற்காக போராடும் ஒரு பெண்ணின் போராட்டம் என்பது நன்றாக புரிந்திருந்தது. மூன்று நாட்கள் நடக்க இருந்த மொத்த ஒத்திகையையும் டிஜிட்டல் கேமராவில் படம் பிடித்தார்கள். அங்கேயே அதை திரையிட்டு திருத்தங்களைச் சொன்னாள். ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் ஆச்சர்யம். பெரிய இயக்குநர்கள் கூட இத்தனை நுட்பமாய் வேலை வாங்குவதில்லை. ஒரு நடிகையாக இருந்தும் அவளுக்குள் திறமையான இயக்குநர் ஒளிந்திருப்பதைப் பார்த்து சந்தோசப்பட்டார்கள். ஒவ்வொரு காட்சியையும் ஆனந்தியே ஸ்டோரி போர்டாக வரைந்திருந்தாள். அதனால் ஒவ்வொரு காட்சியும் எவ்வளவு நேரம் இருக்க வேண்டுமெனத் தெளிவாக இருந்தாள். அதன்படி நடிக்கவும் வைத்தாள்.

ஸ்டில் ஷூட் எடுக்கப்பட்ட நாளில் இருந்தே முக்கியமான எல்லாவற்றையும் ஜோபி ஒரு உதவி இயக்குநர் மூலமாக படம் பிடித்துக் கொண்டு வந்தான். அதில் சில காட்சிகளை இணையத்தில் வெளியிட்டிருந்தார்கள். ஆனந்தி ஒரு கதைப்படம் இயக்கப் போகிறாளென்பதன் நீட்சியாய்

அவளின் அரை நிர்வாண உடை கொண்ட ஃபோட்டோக்கள் உலவுவது கொஞ்சம் நின்று போயிருந்தது. அவளால் செய்ய முடியாதென மற்றவர்கள் நினைத்திருந்த ஒன்றை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். எல்லா அவமானங்களையும் தோல்விகளையும் தாண்டிச் செல்ல ஒரு துளி நம்பிக்கையின் மழை போதுமான அவளுக்கு இப்பொழுது துணையாக அவளை நேசிக்கும் சிலரின் ப்ரியங்களும் இருந்தது. தான் இந்த வேலைக்குத் தகுதியானவள் என்பதை எல்லோரையும் விட திடமாக நம்பினாள். அதனால் செய்கின்ற வேலையின் ஒவ்வொரு நகர்விலும் தெளிவும் தீர்மானமும் இருந்தது. செலவுக் கணக்குகளில் அத்தனை சாதாரணமாக அவளை ஏமாற்ற முடியாதென்பதை மேனேஜர் புரிந்நது கொண்டிருந்ததால் மிகக் குறைவாகவே பேசினான்.

சத்யா ஆனந்தியின் சரிபாதி பிரதியாய் இருந்தாள். அவளுக்காக செலவிட்ட நிமிடங்கள் எதுவும் வீண் போயிருக்கவில்லை. அவள் ஒத்திகையில் நடித்ததைப் பார்க்கும் போது இது மாதிரி ஒரு படத்தில் கூட நடிக்க தனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கவில்லை என ஏக்கம் கொண்டாள். தன் உடலை ஆக்ரமித்தவர்களுக்கு தன்னை நடிக்க வைத்துப் பார்க்கும் அக்கறை இல்லாமலே போயிருந்தது துயரம். தன் இளமைக் காலத்தின் நாட்களை அனாயசமான அவள் நடிப்பின் வழி பார்த்தபோது அன்று அச்சத்தோடு ஒடுங்கிக் கொண்டதற்குப் பதிலாக இந்தக் குழந்தையிடம் இருக்கும் ரௌத்ரத்தில் கொஞ்சத்தையாவது வெளிப்படுத்தியிருக்கலாமோ என நினைத்துக் கொண்டாள். எல்லாவற்றுக்கும் பின்னால் வாழ்க்கை மனிதர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் அளிக்காமல் இல்லை. சரியாக பயன்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்கள் சில காலம் கொண்டாட்டத்தின் உச்சத்தில் வைத்திருந்தது. தவறவிட்ட சந்தர்ப்பங்கள் தண்டிக்கவும் தவறவில்லை. சத்யா தனக்கான

சந்தர்ப்பத்தை நிச்சயம் தவறவிடமாட்டாள்.

ஒரேயொரு நாள் ஒத்திகை சத்யாவுக்கு போதுமானதாக இருந்தாலும் அவள் ஆனந்தியோடுதான் இருந்தாள். அவள் நடிப்பு சொல்லிக் கொடுப்பதையும் நடிக்கும் போது முகத்தை தீவிரமாக வைத்துக் கொள்வதையும் அவளிடமே நடித்துக் காட்டினாள். ஆச்சர்யத்தோடு அந்தக் குட்டி முகத்தில் தனது நடிப்பின் சாயல்களைத் தேடிப்பார்த்துவிட்டு பின் செல்லமாக அடிப்பாள்.

"ஆனந்திம்மா நீ பெரிய நடிகைன்னு எல்லாரும் சொல்றாங்க. நீ நடிச்ச படத்த ஏன் எனக்கு காட்ட மாட்டேங்கற?”

ஒத்திகையிலிருந்த எல்லோரும் சத்யா இப்படிக் கேட்டதும் எழுந்து வந்த சிரிப்பை அடக்க சிரமங்கொண்டார்கள். அனந்திக்கும் சிரிப்பு வந்தாலும் காட்டிக் கொள்ளாமல்

"அதையெல்லாம் நீ இப்போ பாக்க வேணாம்டி. பெரிய பொண்ணா ஆனதுக்கு அப்பறம் பாத்துக்கலாம்.''

"ஏன் இப்போ பாத்தா என்ன? "

“பாக்கக் கூடாதுன்னா கூடாது..."

"சரி எப்போ நான் பெரிய பொண்ணா ஆவேன்?"

"அதையெல்லாம் சும்மா குத்து மதிப்பா சொல்லிட முடியாது பாப்பு."

"நீ ஏதேதொ சொல்லி என்னய ஏமாத்தப் பாக்கற? படம் பாக்கறதுக்கு பெரிய பொண்ணா ஆகணுமாம்... பொய் சொல்லி. ஃப்ராடு... திட்டிவிட்டு சக்தியிடம் ஓடினாள்.

"ஆமா சத்யா, ஆனந்தியம்மா ஃப்ராடு.'' ஜோபியும் அவளோடு சேர்ந்து கத்தினான்.

"வெவ்வ்வெவ்வே! அத நீ சொல்லாத.... நீதான் அவள விட பெரிய ஃப்ராடு. வீடியோ கேம்ஸ் விளையாடச் சொல்லித் தர்றேன்னு சொல்லி ஏமாத்தின ஃப்ராடு ! நீங்க எல்லாருமே

ஃப்ராடு!"

சத்யா கோபமாக ஓடினாள். அவள் கோபத்தை சந்தோசமாக ஏற்றுக்கொண்ட எல்லோரும் சிரித்தார்கள். ஜோபி ஆனந்தியிடம் நெருங்கி வந்து "எனக்கே வீடியோ கேம்ஸ் பத்தி ஒண்ணும் தெரியாது. அழுதாளேன்னு சொல்லி ஒரு நாள் சமாதானப்படுத்தறதுக்கு சொன்னேன். அத இன்னும் நியாபகம் வெச்சிருக்கா பாருங்க... என்றான்.

" இந்தக் குழந்த பெரிய கிஃப்ட் ஜோபி. படம் முடியவும் எப்பிடி இவள பிரிஞ்சு இருக்கப் போறேன்னு தெரியல.''

"ம். ஏன் பிரியணும். அவளுக்குத் தெரிஞ்சோ தெரியாமலோ நடிகையாகிட்டா. நல்ல நடிகையா வர்றதுக்கான எல்லாத தகுதியும் அவளுக்கு இருக்கு. அவ இனி நடிகையாதான் இருப்பா. ஆனா எப்பவும் நீங்க நெனச்சதும் பாக்க முடியற தூரத்துல இருப்பா .''

"எப்பிடி சொல்ற ஜோபி?”

“உங்கள விளையாட்டாத் திட்டக் கூட அவளால முடியல. உங்கமேல அவ்ளோ ப்ரியம் இருக்கு.''

அவன் சொல்வது சரிதான். இந்த நாட்களில் தன்னை அவள் அத்தனை எளிதில் பிரிந்து இருப்பதில்லை. எங்கு சென்றாலும் அவளுக்கு நீண்ட விளக்கங்கள் தர வேண்டியிருக்கிறது. எல்லோரையும் விட அவளுக்கு மட்டுமே தான் உரிமையானவள் என உறுதியாய் இருக்கிறாள். ஆனந்தி யாரிடமாவது சிரித்துப் பேசினால் கூட கோவம் வந்துவிடுகிறது. இத்தனை வருட காலத்தில் தனக்கே தனக்கான ஒரு தோழமையென அவளுக்கு ஒருவருமில்லை . தன்னால் சத்யாவுக்கு இருக்க முடிவதில் மனம் களிப்பு கொண்டது.

இரண்டாவது நாள் ஒத்திகையின் போதே ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் நல்ல புரிந்துணர்வு வந்திருந்ததால் அவர்கள் நடிக்கும் போது ஒருவிதமான

அந்நியோன்யம் வெளிப்பட்டது. நடிகையாக இல்லாமல் இன்னொரு நடிகையைப் பார்க்கின்ற சுவாரஸ்யத்தில் ”என்ன ஜோபி போற வேகத்தப் பாத்தா படம் முடியிறதுக்குள்ளயே ரெண்டும் குடும்பம் நடத்த ஆரம்பிச்சிடுவாங்க போல” ஆனந்தி அவனிடம் கிசுகிசுத்தாள். “எது நடந்தாலும் இப்போதைக்கு படத்துக்கு பப்ளிசிட்டிதான். விடுங்க பிரஸ்ஸுக்கு நாமளே நியூஸ் குடுப்போம். அவங்க ரெண்டு பேரும் காதலர்களான்னு தெரியாது. ஆனா அவங்களுக்குள்ள நல்ல நட்பு இருக்கு.” சத்தமில்லாமல் சிரித்தான்.”இப்போதான் புரியுது ஜோபி. கிசு கிசெல்லாம் எங்க இருந்து வருதுன்னு?”

''அட இது இங்க பல காலமா நடக்கற வழக்கம். யோசிச்சுப் பாருங்க அஞ்சு ரூவா பத்து ரூவான்னு கடன் வாங்கி படம் எடுக்கற புரட்யூசர் இந்த மாதிரி மேட்டர் கெடச்சா சும்மா இருப்பாப்ளையா?"

“ம்... ஆனா ஆர்டிஸ்ட்டோட நெலமையவும் யோசிச்சுப் பாக்கணுமே?”

"அடப் போங்க. எல்லாம் முதல் சில தடவ வரும் போதுதான் வருத்தமெல்லாம். அப்பறம் கிசுகிசுவா எழுதாதடா பேரப் போட்டு எழுதுன்னு சொல்ற அளவுக்கு ஜாலியான விசயமாகிடும்.”

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே ஹீரோயின் குறிப்பிட்ட ஒரு வசனத்தை உச்சரிக்க சிரமப்பட்டவளாய் இவளை நோக்கி வந்தாள்.

"சொல்லும்மா...."

"இந்த டயலாக் புரியல மேடம்...''

பள்ளிக்கூட மேடையில் நடிப்புத் தரச் சொல்லிக் கேட்ட சிறுமி போல் இயல்பாக இருந்தாள். ஆனந்தி அந்த வசனத்தையும் அதை எப்படி உச்சரிக்க வேண்டுமென்பதையும் சொல்லிக் கொடுக்க, உதவி இயக்குநரிடமிருந்து கேமராவை வாங்க ஜோபி அதை படம் பிடிக்கத்துவங்கினான்.

பெரும்பாலான காட்சிகளும் ஒத்திகை பார்க்கப்பட்டபின் அவளுக்கு நிறைவாக இருந்தது. ஹீரோ ஊருக்குக் கிளம்புவதற்கு முன்னால் தயங்கி தயங்கி அவளை அழைத்துப் பேசினான்.

"மேடம் நீங்க தப்பா நெனச்சுக்கலைன்னா ஒண்ணு கேக்கட்டுமா?"

”அட சும்மா கேளுங்க ஸார்... எதுக்கு தயக்கம்?"

"ரெண்டு மூணு பேர் கிட்ட வட்டிக்குப் பணம் வாங்கிதான் வேல நடந்துட்டு இருக்குன்னு ஜோபி சொன்னாப்ள.. ஏன் நீங்க சிரமப்படறீங்க? எப்டியும் நான் கொஞ்சம் ஃபண்ட் பண்ணப் போறேன். பேசாம மொத்த பட்ஜெட்டையும் நானே பாத்துக்கறனே. பேனர் உங்களோடதா இருக்கட்டும். என்ன கோ புரட்யூசரா வெச்சுக்கோங்க.''

பெரிய பாரம் குறைந்தது போலிருந்தது ஒரு நிமிடம். இதைச் சொல்ல இவன் ஏன் தயங்க வேண்டும். ஜோபியைத் திரும்பிப் பார்த்தாள். அவன் நெருங்கி வந்தான்.

"அதெல்லாம் ஒத்துக்குவாங்க ஸார். நீங்க கான்ஃபிடண்ட்டா போயிட்டு வாங்க. பிளான் பண்ணின மாதிரி செப்டம்பர் 6 ல ஷூட் போயிடலாம்.'' "ரொம்ப தாங்க்ஸ் மேடம். தாங்க்ஸ் ப்ரோ...''

ஹீரோ இரண்டு பேருக்கும் விடை கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டான். பணம் இனி அவள் செய்யப் போகும் வேலைக்கு எந்தவிதத்திலும் தடையாய் இருக்கப் போவதில்லை. இந்த சில மாதங்கள் சந்திக்க நேர்ந்த எல்லா இடர்களிலிருந்து மீண்டுவிட்ட நிம்மதிப் பெருமூச்சு அவளிடம்.

"தாங்க்ஸ் ஜோபி... எப்படா படம் முடியும்? எப்படா பணத்தத் திருப்பி குடுக்கறதுன்னு தவிச்சிட்டு இருந்தேன். இப்போ எவ்ளோ ரிலாக்ஸா இருக்கு தெரியுமா?”

அவன் எந்த நன்றியையும் எதிர்பார்க்காதவன் போல

எப்போதும் போல் சாதாரணமாக சிரித்தான். படம் பிடிக்கப்பட்ட ஒத்திகைக் காட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை எடிட் செய்து கொண்டு வந்திருந்த பத்து நிமிட வீடியோவை அவளுக்குப் போட்டுக் காட்டினான். ஒரு படத்தின் நீண்ட டிரெய்லர் பார்க்கிற உணர்வு அவளுக்கு. ஸ்டில் ஷட்டிற்காக செட்டில் "ரெடி ரெடி... டேக் போகலாம். கேமரா..... ஆக்ஷன்...'' என தீவிரமான ஆனந்தியின் முகத்தில் துவங்கிய அந்த டிரெய்லர் அங்கிருந்து ஒத்திகைக்கு நகர்ந்து பின் கம்போசிங்கில் கவிஞரும் இசையமைப்பாளரும் பேசிக்கொண்டதற்கு சென்று மீண்டும் ஒத்திகைக்கு வந்து இறுதியில் ஓகே... ஓகே... போதும். சூப்பர் மச்சீஸ்..." என ஹீரோவையும் ஹீரோயினையும் ஆனந்தி ஒரு சேரக் கட்டிப்பிடித்து பாராட்டுகிற காட்சியோடு முடிந்தது.

"யாருக்கும் சொல்லாத கதை"

ஆக்கமும் தாக்கமும் ஆனந்தி.

டைட்டிலை அழகாக வடிவமைத்திருந்தான். அந்த நாளை வாழ்வின் நிறைவான ஒன்றாய் உணர்ந்தவள் எழுந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு மற்ற உதவி இயக்குநர்களுக்கு முன்பாகவே அவனை அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள். ஆனந்தியிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்ட ஜோபி

"இத நைட்டு பாத்துக்கலாம். நான் இப்போ ஆஃபிஸ் போயிட்டு இந்த வீடியோவ யூ டியூப்ல அப்டேட் பன்றேன்." சரியெனத் தலையாட்டினாள். "அப்பறம் மேனேஜர் வருவான். கடலூர் பார்ட்டிக்குக் கொடுக்க வேண்டிய பேலன்ஸ் பணத்த ஹீரோ ஹோட்டல்ல வந்து வாங்கிக்க சொல்லி இருக்காரு. அவனப் போயி வாங்கிக்க சொல்லுங்க. பணத்த அவன் செட்டில் பண்ண வேணாம். நீங்க வாங்கி பத்ரமா வையிங்க. அசிஸ்டெண்ட் மேனேஜர் காலைல வந்துடுவான். அவன் கிட்ட சொல்லி பேங்க்ல டெபாசிட் பண்ணச் சொல்லலாம்."

ஜோபியோடு இன்னொரு உதவி இயக்குநரும் கிளம்பிப்

போய்விட, பங்களாவில் இருந்த பணியாளர்கள் எல்லோருக்கும் நன்றி சொல்லிவிட்டு ஆனந்தியும் அங்கிருந்து கிளம்பினாள்.

# இரவு, மது மற்றும் ஜோபி

தன்னோடு மதுவருந்த அவனை சம்மதிக்க வைப்பதற்குள் படாதபாடு பட்டுவிட்டாள். கெஞ்சியும் கொஞ்சியும் அவள் செய்த எல்லா முயற்சிகளுக்கும் ஜோபி " இருக்கட்டும் ஆனந்தி இன்னொரு நாள் பாக்கலாம்." என்றே சமாளித்தான். "முடியவே முடியாது. இன்னைக்கு நீ என்னோட குடிக்கிற." என கடுமையாக அவன் சட்டையைப் பிடித்து உலுக்கியபின் சம்மதித்தான். ''குடிக்கிறேன். ஆனா ரெண்டு பெக் மட்டுந்தான் சரியா?" ஆனந்தி சரியெனச் சொல்லிவிட்டு இருவருக்குமாக மதுவை ஊற்றினாள். சத்யாவை உறங்க வைத்துவிட்டு வீட்டிலிருந்து கிளம்ப பதினோறு மணிக்கும் மேலாகிவிட்டது. மாலையே ஜோபியிடம் மது வாங்கி வைக்கச் சொல்லி இருந்தாள். அவனோடு மதுவருந்த வேண்டும். இத்தனை நாட்களில் ஒரு முறை கூட அவனோடு மதுவருந்தி யதில்லை . அவனோடு அந்தரங்கமான விசயங்களை நீண்ட நேரம் உரையாடியதில்லை. அவனுக்கு விருப்பமான உணவு, இசை, பெண்கள் எதைக் குறித்தும் கேட்டதில்லை. கேட்க வேண்டுமென நினைத்தாலும் அவன் பட வேலைகள் குறித்த ஏதாவதொரு விசயத்தை பேசத் துவங்கிவிடுவான். இன்று அதற்கு வாய்ப்பளித்துவிடக் கூடாது. இது அவனுக்கான நாள்.

தனக்கு ரொம்பவும் உரிமையான ஒருவனுடன் இருக்கும் பரவசம் அவளிடம். ஜோபி அவளின் அந்த சந்தோசத்தில் பங்கெடுத்துக் கொள்வதில் அந்தரங்கமாய் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டிருந்தான். ஆனால் இரண்டு பெக்குகளோடு முடிந்து போகிற தருணமல்ல அது. இருவரும் கணக்கில்லாமல் குடித்தனர். அவனுக்கு விருப்பமான எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென

அவளுக்கிருந்த ஆர்வத்தை அவன் பெரிதாக நினைக்கவில்லை. ஆனந்தி சலித்துப் போனாள். “நீ ஏண்டா இப்டி இருக்க? ஏதாச்சும் சொல்லேன்?" அதற்கும் பதிலே சொல்லாமல் சிரித்தான். அவள் அவனை தோள்களில் அடித்தாள். மறுப்பைப் பொருட்படுத்தாமல் மதுவருந்தச் செய்தாள். அவன் இவளுக்கு என்ன பிடிக்குமென பதிலுக்கு கேட்டான் . ” எனக்கு எல்லாம் பிடிக்கும். இப்போ நீ கிஸ் பண்ணினா ரொம்பப் பிடிக்கும்." என அவன் முத்தமிட இதழ்களை அவனுக்கு அருகாக கொண்டு சென்றாள். நீண்ட நேரமாகக் காத்திருந்த அந்த நொடியை ஒரு நொடி கூட தாமதப்படுத்தாமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டு முத்தமிட்டான். தகிப்பும் காத்திருப்பும் அவளை முழுமையாய் தனக்குள் ஸ்வீகரித்துக் கொள்ளும் தீவிரத்துடன் அவனை இயங்கச் செய்தது. அந்த இரவில் அவனுடனான உறவு கொடுத்த பரவசம் வேறு எந்த சந்தோசத்தோடும் ஒப்பிட முடியாதது. அவன் ஒருமுறை உறவு கொண்டு ஒதுங்கிவிடுகிறவனாய் இல்லை. நாளை காலையில் இரண்டு பேரில் ஒருவர் தொலைந்து போய்விட்டால் என்ன செய்வதென்கிற பதட்டத்துடன் உறவு கொண்டான். மூர்க்கத்தை மட்டுப்படுத்தி முடிந்தவரை இலகுவாக்கினாள். “மெதுவாடா ஏன் இவ்ளோ வேகம், ஆவேசம்" அவனிடமிருந்து பதிலாக மூச்சுகள் மட்டுமே வெளிப்பட்டன. இயக்கத்தைக் குறைத்திருக்கவில்லை. இதழ்களை அழுத்தமாக சுவைத்து குருதி கசியுமளவிற்கு வலுவாக கடித்தாள். வலி பொறுக்கமுடியாமல் விலகினான். உடல் இன்னும் இளைத்தது. ''என்னாச்சு உனக்கு?" நிர்வாணத்தை மறைத்துக் கொள்ளும் அக்கறையின்றி அவன் தலையை வருடிக் கொடுத்தாள். “எனக்கு பயமா இருக்கு ஆனந்தி!” | “ஏன்? என்ன பயம்?"

“ஒரே வீட்ல ஒரு அறைல பாபுவும் இன்னொரு அறைல அவன பொருட்படுத்தாம நானும் இன்னும் கொஞ்ச நாள்

இருந்தம்னா அவனுக்கு முன்னால நான் மனநோயாளியா ஆகிடுவேன்.''

ஆனந்திக்கு இவனையும் சேர்த்து வதைத்துவிட்டோமே என சங்கடம். அவனை இழுத்து தன் மீது சாய்த்துக் கொண்டவள் உடலை வருடிக் கொடுத்தாள். “இனி உனக்கு அந்தக் கவல இருக்காது. எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்.” மீண்டும் உறவுக்குத் தூண்டினாள். ஜோபிக்கு மட்டுப்பட்டுப் போயிருந்த உணர்ச்சிகள் விழித்துக் கொள்ள முந்தைய தீவிரமில்லாமல் இம்முறை நிதானமாக அவளோடு இயங்கினான். அவள் காதுகளில் முனகினான்.

"உன்னய ரொம்ப பிடிச்சிருக்கு ஆனந்தி." ”எனக்குந்தாண்டா ...'' ” எப்பவும் உன்னோடயே இருக்கனும்னு ஆசப்படறேன்..." "இரு. யார் வேணாம்னு சொன்னாங்க..?" “இந்தப் படம் முடியற வரைக்கும் இல்ல. அதுக்கு அப்பறமும் கூட. வாழ்க்கை முழுக்க."

ஆனந்தி அவன் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டினாள்.

“இரு. நீ எப்பவும் என்கூட இருந்தா எனக்கு சந்தோசந்தான். ஆனா கல்யாணம் பண்ணிக்கனும்னு மட்டும் வற்புறுத்தாத. உனக்குப் புடிச்ச மாதிரி இருக்கலாம். எனக்குப் புடிச்ச மாதிரி தான் நான் இருப்பேன்...''

"ம்ம்... சரி..''

ஜோபி தனக்கே தனக்கான அவளின் ப்ரியங்களை முழுவதுமாக சுகித்து ஓய்ந்து அவள் கால்களுக்குக் கீழாக தலை வைத்து படுத்துவிட்டான். அச்சம், தயக்கம் இப்பொது அவனுக்குள் இல்லை . தனது கடந்த காலம் தனக்குப் பின்னால் வெகு தொலைவு இருப்பதாகவும் எதிர்காலம் பார்வைக்கு வெகு அருகில் இருப்பதாகவும் மனம் பூரிப்பு கொண்டது. அயர்ந்து உறங்கியவனின் மீது படுக்கையறையிலிருந்து பெரிய போர்வை ஒன்றை எடுத்து

வந்து போர்த்திவிட்டுப் போனாள்.

# கடைசி வதையும், வழியனுப்புதலும்

போதையின் எந்த அடையாளமும் ஆனந்தியிடம் இல்லை. உடை மாற்றிக் கொண்டு பாபுவின் அறைக்குள் நுழைந்தாள். வெவ்வேறான வெளிச்சங்களை இந்த நாட்களில் எதிர் கொண்டிருந்த அந்த அறை பாபுவைப் போலவே நோய்மை பீடித்திருந்தது. அவன் கண்களைத் திறந்து வைத்தபடியே தூங்கிக் கொண்டிருந்தான். மழிக்கப்படாத முகத்தில் இடைவெளியின்றி வளர்ந்திருந்த மயிர் அடையாளம் தெரியாமல் அவனை மாற்றியிருந்தது. கழுத்தில் எலும்புகள் துருத்தி வெளித் தெரிந்தன. அவன் முகத்திற்கு நேராக கைகளை அசைத்தபோது கருவிழி கையின் திசையோடு அலைந்ததால் அவன் விழித்து தான் இருக்கிறான் என தெரிந்து கொண்டாள். கட்டப்பட்டிருந்த கைகளையும் கால்களையும் அவிழ்த்து விட்டு அவனை படுக்கையிலேயே வசதியாக உட்கார வைத்தாள். "பாபு! பாபு!"

அவள் கூப்பிட்ட சொற்கள் அவன் காதுகளைத் தாண்டி புலன்களுக்குள் ஊடுருவிச் சென்றதாகவே அவன் காட்டிக் கொள்ளவில்லை. அவன் கண்களுக்குள் ஆனந்தி இப்பொழுது சிவப்பு நிற வெளிச்சமாக மட்டுமே தெரிந்தாள். எந்த உருவத்தையும் பார்க்க முடியாத அவன் கண்களுக்குள் மொபைல் டார்ச்சால் வெளிச்சம் பரப்பினாள். வெளிச்சத்தை உள்வாங்கின அதிர்ச்சிகள் எதையும் காட்டாமல் கண்கள் அப்படியே நிலைக்குத்தியிருந்தன.

ஈரத்துணி கொண்டு அவனைத் தூய்மையாக

துடைத்துவிட்டவள் அவனுக்கு விருப்பமான வெள்ளை நிற சட்டையையும் பழைய காட்டன் பேண்ட்டையும் சிரமத்துடன் அணிவித்து விட்டாள். பாபு எந்த எதிர்ப்புகளையும் காட்டியிருக்கவில்லை . வாய் மட்டும் அடிக்கொருமுறை உணவுக்காக திறந்து திறந்து மூடிக் கொள்வதாக இருந்தது. அவனுக்கென உணவு எதுவும் அன்று தயார் செய்திருக்காததால் வாங்கி வந்திருந்த சிக்கனில் கொஞ்சத்தை பிய்த்து ஊட்டினாள். அவன் உடல் அந்தச் சுவையை அனுமதிக்கவில்லை. வாய் துப்பியது. கொஞ்சம் தண்ணீரை மட்டும் குடிக்கக் கொடுத்தாள். அவன் மீதிருந்த நேசத்தை அவன் செய்த கொடூரங்கள் மீறிச் சென்றிருக்கவில்லை. அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள். எந்த எதிர்வினைகளுமில்லாமல் அப்படியே இருந்தான். கன்னத்தில் சில முறை முத்தமிட்டுவிட்டு கழுத்தை வருடி முத்தமிட்டபோது அவனுக்கு குமட்டியது. சத்தம் எழுப்ப சிரமப்பட்ட முகம் வலியில் கோணியது. தன்னிலிருந்து விலக்கியவள் தேடி எடுத்து யானியின் until the last moment ஐ ஒலிக்க விட்டாள். உடலிலோ முகத்திலோ எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே கிடந்தான். வதை அவன் உடலுக்குள்ளிருந்த வலுவையும் நினைவுகளின் சேகாரங்களையும் துடைத்து எடுத்துவிட்டிருந்தது. பார்க்கின்ற எல்லாமும் கோடுகளாகவும் நிறங்களாகவும் மட்டுமே தெரிந்தன. கைத்தாங்கலாக கூட்டி வந்து ஹாலில் ஷோஃபாவில் உட்கார வைத்தவள் முன்பாக ஜோபியை எழுப்பினாள். புணர்ச்சி முடிந்திருக்காத உணர்வுடன் அவளை மீண்டும் தனக்குள் கிடத்தும் விருப்புடன் கைகளைப் பிடித்து தன்னோடு இழுத்தான். "படவா எழுந்திரிடா..''

அவன் இடையில் அடித்தாள். ஜோபி உறக்கம் விலகாத கண்களுடன் எழுந்து பார்த்தபோது அந்த அறையின் ஏதோவொரு மூலையை வெறித்துப்பார்த்தபடி இருந்த பாபுதனக்கு அறிமுகமில்லாத யாரோ ஒருவனாகத்தான்

முதலில் தெரிந்தான். அடையாளம் தெரிந்து கொண்டதும் ஜோபிக்கு சப்தநாடியும் அடங்கிப் போனது.

"ஆனந்தி..."

திரும்பி அவளைப் பார்த்தான்.

”சீக்கிரமா ரெடியாகிட்டு வா... நாம வெளில போகணும்."

"எங்க ?"

"நீ சீக்கிரம் வா. நான் சொல்றேன்."

ஜோபி முகத்தை மட்டும் கழுவிவிட்டு உடை மாற்றிக் கொண்டு வந்தான். ஆனந்தி கதவைத் திறந்து சாலையைப் பார்த்தாள். நகரம் இன்னும் இருளில் இருந்து விடுபடாமல் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. இரண்டு பேரும் கைத்தாங்கலாக பாபுவை நடக்க வைத்து காருக்கு கூட்டி வந்தனர். பின் சீட்டில் அவனை உட்கார வைத்துவிட்டு திரும்பிய ஜோபி 'எங்க போறோம்?" மீண்டும் கேட்டான்.

"செண்ட்ரல் ஸ்டேஷனுக்கு."

”எதுக்கு ?"

"பாபுவ வழியனுப்பப் போறோம்?"

"எங்க ?"

"எந்த டிரெய்ன முதல்ல பாக்கறமோ அதுல அனுப்பி வெச்சிடலாம். நீ ஏன் இவ்ளோ கேள்வி கேக்கற? கௌம்பு.”

அவள் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். ஜோபி திரும்பி பின்னால் பார்த்தான். பாபுவுக்கு உயிர் இருந்தது. உயிர் மட்டுமே இருந்தது. பரியமான ஒருவர் செய்யும் துரோகத்திற்கு ஒரு பெண்ணால் எத்தனை தண்டிக்க முடியுமென்பதற்கான சாட்சியாய் அவர்கள் இருவரும் தெரிந்தனர். ஜோபி வண்டியை ஸ்டார்ட் செய்தபோது மிரர் வழியாக பாபுவைப் பார்த்தான். இருளுக்குள் பாபுவின் கண்கள் ஆழமாக எதையோ தேடிக் கொண்டிருந்தன.

சென்ட்ரல் ரயில் நிலையம் அதிகாலையின் பரபரப்புகளோடு இயங்கிக் கொண்டிருக்க, பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு பாபுவை மெதுவாக நடக்க வைத்துக் கூட்டிச் சென்றனர். தேவையற்ற கவனங்களைத் தவிர்ப்பதற்காக ஆனந்தி தலையோடு முகத்தையும் மறைப்பது போல் ஒரு துப்பட்டாவை மட்டும் போட்டு மறைத்திருந்தாள். இன்னும் சில நிமிடங்களில் கிளம்பப் போகும் ரயில்கள் குறித்தும் வரப்போகும் ரயில்கள் குறித்தும் அறிவிப்புகள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்க ஆனந்தி முதல் பிளாட்பாரம் நோக்கி ஜோபியை நடக்கச் சொன்னாள். டெல்லி வரை செல்லும் ரயில் அந்த அதிகாலையிலும் பெருங் கூட்டத்தோடு நகரத் தயாராய் இருந்தது. முன்பதிவு இருக்கைகள் எல்லாமும் பயணிகளால் நிரம்பி வழிந்தன. பாபு அசையும் சதைப்பிண்டமாய் அவர்களோடு வந்து கொண்டிருந்தான். இரண்டாம் வகுப்பில் காலியாக இருந்த ஒரு கம்பார்ட்மெண்ட்டில் அவனை ஏற்றிவிட்டு கழிவறைக்கு அருகில் இருக்கும் இருக்கையில் உட்கார வைத்தார்கள். ஜோபி மறக்காமல் கொஞ்சம் பணத்தை எடுத்து பாபுவின் சட்டைப் பையில் வைத்தான்.

"இனிமே பாபுவுக்கு எதுவுமே தேவப்படாது ஜோபி." ஆனந்தி சொன்னதை ஜோபி பொருட்படுத்தியிருக்கவில்லை.

இத்தனை நாட்களும் ரகசிய தோழனாய் இருந்த ஒருவனைப் பிரிய இப்பொழுது வருத்தமாக இருந்தது. ஒரு மனிதனை எல்லோருடைய நினைவில் இருந்தும் அழிப்பதற்கு சில நாட்கள் தனிமைச் சிறை போதுமானதாயிருக்கிறது. ஆனந்தி அவன் நினைவிலிருந்த எல்லாவற்றையும் சேர்த்து அழித்துவிட்டிருந்தாள். அவனைத் தொடர்ந்து காணச் சகிக்காமல் ஜோபி கீழே இறங்கிக் கொண்டான். அவள் அவனைத் தடுத்து நிறுத்தியிருக்கவில்லை. கசங்கியிருந்த சட்டையை சரி செய்துவிட்டு ஒரு குழந்தையை முத்தமிடுவது போல் முத்தமிட்டாள்.

“உனக்கு பின்னால எதுவும் இல்ல பாபு. உங்கூடவே இருந்துடணும்னுதான் ஆசப்பட்டேன். ஆனா இன்னும் கொஞ்ச நாள் நீ என்னோட இருந்தா எனக்குள்ள இருக்க எல்லா வன்மத்தையும் உன்ன வெச்ச எக்ஸ்பிரிமெண்ட் பண்ணி பாத்திருப்பேன். எனக்கு அந்த வலியோ, அவஸ்தையோ வேணாம். ஒருத்தர தண்டிக்கிறது எவ்ளோ பெரிய வேதன தெரியுமா? இவ்ளோ நாளா அத நான் அனுபவிச்சிட்டு இருந்தேன். இனி என்னால முடியாது. போய்ட்டு வா"

பாபு அவள் விடைபெறுதலுக்கான எந்தப் பதில்களையும் தராமல் எதிர் சீட்டையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவனைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென எழுந்த நினைப்பை பொருட்படுத்தாமல் வேகமாக ஸ்டேசனை விட்டு வெளியேறினாள்.

கார் அங்கிருந்து கிளம்பிய சில நிமிடங்களிலேயே சக்தி அழைத்தாள். அவசரமாக வீட்டிற்கு வரச் சொல்லிக் கூப்பிட்டதும் ஆனந்திக்கு பதட்டமாகி விட்டது. ஆனந்தி என்ன விசயமென எவ்வளவு கேட்டும் அவள் சொல்லவில்லை. ஜோபியை வேகமாகப் போகச் சொன்னாள்.

# உயரப்பறத்தல்

விடியலின் முதல் வெளிச்சம் அந்த வீதியின் மரங்களின் வழியாய் கசிந்து விழுந்தபடி இருக்க, சிவப்பு நிற கொன்றை மலர்கள் வீதி முழுக்க உதிர்ந்து கிடந்தன. பதட்டத்துடன் வீட்டிற்குள் நுழைந்த ஆனந்தியை சக்தி ஹாலைத் தாண்டி உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. ஜோபியை ஹாலில் உட்காரச் சொல்லிவிட்டு ஆனந்தியை மட்டும் கூட்டிச்சென்று ஃப்ரிட்ஜிலிருந்து கொஞ்சம் இனிப்புகளை எடுத்து சாப்பிடச் சொன்னாள்.

"என்ன சக்திம்மா அவசரம்னு வரச் சொன்னீங்க? இங்க வந்தா ஸ்வீட் குடுக்கறீங்க. இன்னும் ப்ரஷ் பண்ணக் கூட இல்ல."

"அதெல்லாம் இருக்கட்டும் ஆனந்திம்மா! முதல்ல இத சாப்பிடுங்க.'

ஆனந்தி அந்த இனிப்பில் லேசாகக் கடித்துக் கொண்டாள். சக்தி மிச்சத்தை அவள் கையிலேயே கொடுத்து "அவருக்கும் குடுங்க."ஹாலை நோக்கி நகர்த்தினாள்.

"அட என்ன விசயம்னு சொல்லுங்க." ஆனந்தி இனிப்பை ஜோபியின் வாயில் ஊட்டிவிட, சக்தி அவளை இழுத்துக் கொண்டு சத்யாவின் அறைக்குள் நுழைந்தாள். ஜோபி ஹாலில் இருந்து எட்டிப் பார்த்தான். காலியாக இருந்த படுக்கையைப் பார்த்துவிட்டு ஆனந்தி சத்யாவைத் தேட, இரவு உடையுடன் பாதி உறக்கத்தில் சத்யா அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களிலிருந்து இன்னும் தூக்கம் விலகியிருக்கவில்லை. ஆனந்தியைப்

பார்த்ததும் சந்தோசமாக சிரித்தாள். எழுந்து வரவில்லை . ஆனந்தி புரிந்தும் புரியாமலும் சக்தியைப் பார்க்க,

“பெரிய பொண்ணாயிட்டா ஆனந்திம்மா...”

ஆனந்திக்குள் பொங்கிய உணர்வை இன்னதென்று அவளால் சொல்ல முடியவில்லை. சந்தோசமும், பெருமிதமுமாய் சத்யாவைப் பார்த்தாள். குழந்தையாய் அவளிடம் வந்தவள் இத்தனை சீக்கிரத்தில் பெரியவளாகிவிடுவாள் என்பதை எதிர் பார்த்திருக்காததால் இன்னும் ஆச்சர்யம் விலகியிருக்கவில்லை. வேகமாகப் போய் அவளை வாரி அணைத்துக் கொண்டாள். சத்யாவிற்கு வெட்கமாக இருந்தது. உடலுக்குள் பட்டாம் பூச்சிகள் பறப்பது போன்ற பரவசமிருந்தாலும் சில நிமிடங்களுக்கு முன்னால் கசிந்த சில துளிக் குருதியும் லேசான அடிவயிற்று வலியும் தனக்கு தீங்கு விளைவிக்குமோ என பயந்தாள். ஆனந்தி அவள் நெற்றியில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

"வயிறு எப்பிடி வலிச்சது தெரியுமா? இங்க பாரு ரத்தம் வேற?"

கையில் பிசுபிசுப்பாய் ஒட்டிக் காய்ந்திருந்த குருதியின் எச்சத்தைக் காட்டினாள். ஆனந்தி தன் துப்பட்டாவால் அந்தக் குருதிக் கறையைத் துடைத்துக் கொண்டிருந்தபோதே சக்தி இருவருக்குமாக திருஷ்டி சுற்றினாள்.

"ஏன் ரத்தம் வந்துச்சு? நான் செத்துடுவனா?" சத்யாவின் கண்களுக்குள் உறக்கம் தொலைந்த அச்சமிருந்தது. ஆனந்தி அவள் முதுகை வருடிக் கொடுத்தாள்.

"இல்லடா பாப்பு. நீ பெரிய பொண்ணாக்கிட்ட. பயப்படாத உனக்கு ஒன்னுமில்ல.''

"ஓ இதுதான் பெரிய மனுஷியா ஆகறதா? அப்போ இனிமே நீ நடிச்ச படத்த எனக்குக் காட்டுவியா?"

தூக்கக் கலக்கத்திலும் மறக்காமல் கேட்டவளுக்கு சக்தி மாற்று உடையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

உடையோடு நாப்கினும் இருக்க, ஆனந்தி புரிந்து கொண்டு கதவை சாத்தச் சொன்னாள். சத்யாவிற்கு உள்ளாடைக்குள் வைத்துக் கொள்ளும் அந்த புதிய வஸ்துவைப் பார்க்க வினோதமாய் இருந்தது. எதற்காக ஆனந்தி இதை வைக்கிறாள்? ஆனாலும் இப்பொழுது ஒருவிதமான கதகதப்பை உணர முடிந்ததால் அதை வேண்டாமென சத்யா மறுக்கவில்லை. உடை மாற்ற உதவியபடியே ஆனந்தி

"ம்... ஒரு வாரம் போகட்டும் நான் நடிச்ச படத்தக் காட்டறேன்." - சத்யா ஆனந்தியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

தன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் முதல் விசேஷம். அதுவும் இந்த வீட்டிலேயே நடக்க வேண்டுமென விரும்பினாள். அவளுக்கான

அத்தனை உரிமைகளும் தனக்கே இருப்பதாக நினைத்துக் கொண்டவளுக்கு இனி கூடுதல் பொறுப்பு இருக்கிறதெனத் தோன்றியது.

"அவங்க வீட்ல கூப்ட்டு சொல்லிட்டீங்களா சக்திம்மா?"

"ம். சொல்லிட்டேன். அவங்க மதியமா கிளம்பறாங்களாம்."

உறங்குவதா விழித்திருப்பதா என்கிற குழப்பத்தில் சத்யா அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். சம்பிராதயங்களின் பெயரால் அந்தக் குழந்தையை வருத்த ஆனந்திக்கு விருப்பமில்லை.

"நீ பெட்லயே படுத்துக்க செல்லம்!"

ஆனந்தி அவளை எழுப்பி படுக்கைக்கு அனுப்பினாள். சக்தி 'நீயும் வா' என அவளையும் தன்னோடு பிடித்து இழுத்தாள். தனக்கு ப்ரியமான ஒருத்தனுக்கு விடைகொடுத்துவிட்டு வந்த வருத்தங்கள் எல்லாம் கடந்து போய் புதிய வாழ்விற்கான நம்பிக்கை துளிர்விட்டிருக்கும் ஆனந்தத்தில் அவள் சத்யாவோடு அந்தக் காலையில் விளையாட விரும்பினாள். குறைந்தபட்சம் அவளைக் கதை சொல்ல வைத்து கேட்டுக்

கொண்டிருந்தால் கூட போதும். இனி அவள் பேசுவதை மழலை மொழி என்று சொல்ல முடியாது. சத்யா இப்பொழுது புதிதாக பிறந்திருக்கிறாள். அதன் பரவசத்தை அவளோடே இருந்து அனுபவிக்க வேண்டும். இருவரும் உடலை பாதி மறைக்கும் படி போர்வையைப் போட்டுக் கொண்டு கதை பேசினார்கள். ஜோபி ஹாலில் இருந்தே அவர்கள் இருவருக்கும் விடைகொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

"ஏன் ஜோபி அங்கிள் என்னயப் பாக்காமயே போறாரு?"

"இப்போ நீ பெரிய பொண்ணா ஆகி இருக்க இல்லியா? சடங்கு செய்ற வரைக்கும் ஆம்பளைங்க யாரும் பாக்கக் கூடாது."

"ஓ! எப்போ சடங்கு செய்வ?"

" உங்க அப்பா அம்மா எல்லாரும் வந்ததுக்கு அப்பறம்."

"அவங்களும் வர்றாங்களா? ஏய்ய்ய்ய் !" சந்தோசமாகக் கத்தினாள். ஆனந்தியைக் கட்டிக் கொண்டாள்.. இருவரும் ஒரே வயதிற்குள் புகுந்து இரண்டு பறவைகளாகி குதூகலமாய் பறந்து கொண்டிருந்தனர். ஆனந்தி அவளைக் கதை சொல்லச் சொல்லிக் கேட்டாள். சத்யா முடியாதென தலையாட்டினாள்.

"நீதான் எனக்கு கதையே சொன்னதில்ல. நீ கத சொல்லு..."

ஆனந்தி யோசித்துப் பார்த்தாள். சொல்வதற்கு அவள் நினைவிற்கு உடனடியாக எந்தக் கதைகளும் வரவில்லை .

"நான் நாளைக்கு சொல்லட்டுமா?"

"அதெல்லாம் முடியாது. இப்பவே சொல்லு.." சத்யா விடாப்பிடியாக அடம் பிடித்தாள்.

ஆனந்தி யோசித்துவிட்டு தன் நினைவுகளில் இருந்து தேடி எடுத்து ஒரு கதையைச் சொன்னாள். முன்பு எப்போதோ ஒரு புத்தகத்தில் வாசித்திருந்த கதை. ஆனந்தி சொல்ல சொல்ல சத்யா உம் கொட்டியபடியே வந்தாள்.

"ஒரு ஊர்ல ஒரு குட்டிப் பொண்ணு இருந்தா உன்னய மாதிரியெ. அவளுக்கு தெரியாத கதையே இல்ல. அவ்ளோ கத சொல்லுவா. ஒரு நா அவ தூங்கிட்டு இருக்கும் போது அவளுக்கு ஒரு கனவு. அவ பறவையா மாறி பறந்து போயிடற மாதிரி. அத ஃப்ரண்ட்ஸ் கிட்ட சொல்றா. யாரும் நம்பல. அப்பறம் அம்மா கிட்ட சொல்றா, மிஸ் கிட்ட சொல்றா. யாருமே நம்பல. எல்லாரும் அவள லூசுன்னு சொல்லி சிரிக்கிறாங்க. ஒரு நா அவ தூங்கி எழும் போது அவ உடம்புல சின்னதா ரெண்டு பக்கமும் இறக்கைங்க. அம்மாவுக்கு பயங்கரமான ஆச்சர்யம். பயந்துக்கிட்டு டாக்டரக் கூப்பிடறாங்க. டாக்டர் வந்து பாத்துட்டு 'இவளுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லையேன்னு' சொல்லிட்டுப் போயிட்டாரு. அந்தப் பாப்பாவுக்கு அவ சொன்ன மாதிரியே அவ பறவையே மாறிட்டதுல சந்தோசம். ஆனா அம்மா அவள வெளில் அனுப்ப பயந்தா. வீட்டுக்குள்ளயே இருக்க அந்த பாப்பாவுக்கு கவலையா இருக்கும். அம்மாகிட்ட எவ்ளோ கெஞ் சிப் பாத்தா, அம்மா விடவே இல்ல. அவளோட இறக்கைங்களும் வளந்துக்கிட்டே போகுது. ஒரு நா அவளவிட அவளோட இறக்கைங்க வளந்துடுச்சு. அம்மாவுக்கு அவ ரூமுக்குள்ள வர்றதுக்கே பயம். இந்த தடவ அந்த பாப்பா அம்மா கிட்ட அனுமதி கேக்கல. ஜன்னல் வழியா பறந்து போயிட்டா... பறந்து போயிக்கிட்டே இருக்கா. அந்த ஊரத் தாண்டி, கடலுக்கு மேலப்

பறக்கும் போது பெரிய பொண்ணாகிடறா

ஆனந்தி சொல்லி முடித்த போது சத்யா தனக்கு இறக்கைகள் இருக்கிறதாவெனத் தேடிப் பார்த்தாள்.

”பெரிய பொண்ணாகிட்டா பறக்க முடியுமா? எனக்கு ரெக்க எங்க ?"

அந்த அறையின் ஜன்னல்களும் திறந்தேதான் இருந்தது. அனந்திக்குப் பறக்கவிரும்பும் அவளின் ஆர்வம் மகிழ்ச்சியளித்தது.

"சீக்கிரமா உனக்கும் ரெக்க முளைக்கும் பாப்பு. நீயும் பறக்கலாம்."

அவளை இறுக அணைத்துக் கொண்டாள். அந்த நாளின் பிரகாசமான வெளிச்சம் அறை முழுக்கப் படர்ந்திருக்க, சத்யாவின் அணைப்பில் அயர்ந்து உறங்கும் விருப்பத்தோடு ஆனந்தி அவள் கைகளுக்குள் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.